2740

T.N.L.A Debates

Official Report

Vol VI No 1&2

3,4, June 1985

V211,51 N85
N85.6.14.2
136396

75/86

2840

வெளியீடு 29-11-1985 Issued 29—11—1985

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஜூன் 3, 1985 - தொகுதி VI எண் 1

Monday the 3rd June 1985 - Volume VI No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George, Madras - 600 009

[ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

D
V211,31 N85
N85.6.192
136396
சென்னை-600 008.

## உள்ளடக்கம்

3-6-1985

பக்கங்கள்

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. .. i—vii

Personnel of the Government of Tamil Nadu .. ..

(ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. ix—x

(iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப்பட்டியல் xi—xix

1. இரங்கல் குறிப்புகள் :

முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மறைவு குறித்து .. .. 1—2

2. சட்டமன்ற கட்சிகளுக்கு அரசினர் தோட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த அறைகளை சட்டமன்றச் செயலகம் கையகப்படுத்திக் கொண்டது .. .. 2—30

3. வரவு-செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு:

(அ) கோரிக்கை எண். 20— வேளாண்மை
(ஆ) கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் 30—88
(இ) கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து 30—33

திரு. ஆர். தியாகராசன் 36—44
திரு. ஏ. தங்கராசு 44—49
திரு. தி. அன்பழகன் 49—54
திரு. ந. சிவஞானம் 54—60
திரு. மு. ஜான் வின்செண்ட் 60—65
திரு. மா. சின்னராசு 66—74
திரு. ஏ. எஸ். ரவீந்திரன் 74—81
திரு. க. சோலைராசு 81—85
திரு. அ. பாலுசாமி 85—88

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 89—94

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப் பாகு கழிவு, தொல் பொருள் இயல், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை மற்றும் பயண இசைவுச் சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (நிதி அமைச்சர்)—நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள் இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (மின் துறை அமைச்சர்) மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத்துறை, மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் : (தொழில் துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவனம், மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப் பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமைச்சர்)—கல்வி, ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன் நிவாரணம், (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உட்பட).

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்றுசூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (உணவு அமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு, மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (கைத்தறித் துறை அமைச்சர்)—கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி : (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. என். நல்லுச்சாமி : (வீட்டு வசதித்துறை அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி : (மறு வாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.



20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், மலை வாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன்வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி : (கதர்த் துறை அமைச்சர்)—கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (பொதுப் பணித் துறை அமைச்சர்)—பொதுப் பணித்துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

## THIRU SUNDAR LAL KHURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. DR. M. G. RAMACHANDRAN : (*Chief Minister*)—Public, General Administration, Indian Administrative Service, and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaelogy, Prohibition excluding grant of Liquor permits, Excise and Passports.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : (*Minister for Finance*)—Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-servicemen.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN : (*Minister for Electricity*)—Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. THE HON. THIRU K. A. KRISHNASAMY : (*Minister for Labour*)—Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HON. THIRU R. M. VEERAPPAN : (*Minister for Information and Religious Endowments*)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits.

6. THE HON. THIRU K. RAJARAM : (*Minister for Industries*)—Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. THE HON. THIRU P. U. SHANMUGAM : (*Minister for Local Administration*)—Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. THE HON. THIRU C. ARANGANAYAGAM : (*Minister for Education*)—Education, Official Language, Tamil Development and Culture.

9. THE HON. DR. K. KALIMUTHU : (*Minister for Agriculture*)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

10. THE HON. THIRU C. PONNAIYAN : (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. THE HON. DR. H. V. HANDE: (*Minister for Health*)—Health and Environmental Pollution Control.

12. THE HON. THIRU S. MUTHUSAMY: (*Minister for Transport*)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

13. THE HON. THIRU S. THIRUNAVUKKARASU: (*Minister for Food*)—Food, Price Control and Census.

14. THE HON. THIRU V. V. SWAMINATHAN : (*Minister for Handlooms*)—Handlooms and Textiles.

15. THE HON. THIRU R. SOUNDARARAJAN: (*Minister for Nutritions Meals*)—Nutritious Meals.

16. THE HON. THIRU T. VEERASAMY: (*Minister for Commercial Taxes*)—Commercial Taxes.

17. THE HON. THIRU N. NALLUSAMY : (*Minister for Housing*)—Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control.

18. THE HON. THIRU ANOOR P. G. JAGADEESAN : (*Minister for Rural Industries*)—Rural Industries including Village, Cottage and Small Industries.

19. THE HON. THIRU T. RAMASAMY : (*Minister for Rehabilitation and Employment*)—Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. THE HON. THIRU A. ARUNACHALAM : (*Minister for Adi Dravidar Welfare*)—Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. THE HON. THIRU M. R. GOVENDAN : (*Minister for Backward Classes*)—Backward Classes and Fisheries.

22. THE HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN: (*Minister for Social Welfare*)—Social Welfare including Women and Children Welfare, Beggers Home, Orphanages and Correctional Administration.



23. THE HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY : (*Minister for Khadi*)—Khadi, Bhoodhan and Gramdhan.

24. THE HON. THIRU Y. S. M. YUSUF : (*Minister for Public Works*)—Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. THE HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN : (*Minister for Co-operation*)—Co-operation.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### *பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

### *பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்.

### **மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு.
திரு. செ. செம்மலை.
திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்.
திரு. மு. இராமநாதன்.
திரு. வே. இரா. ஜெயராமன்.

### சட்டமன்றப் பேரவை செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணை செயலாளர்கள்.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.

### குழு அலுவலர்கள்.

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்சி.
திரு. கு. அ. சீனிவாசன், பி.ஏ.

### சார்பு செயலாளர்கள்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. சாலமன் ஜெயபால், பி.எஸ்ஸி., பி.எல்.

### எஸ்டேட் அலுவலர்கள்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. கேசவராம், பி.ஏ.

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. பி. கோதண்டராமன்.

### துணைச் செயலாளர் (பதிப்பாளர்).

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

### தலைமை நிருபர்.

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

* 27–2–85 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
** 11–3–85 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.



தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பட்ட) பெயர்ப்பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அப்துல் சமத், திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி. |
| 2 | அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி. |
| 3 | அரங்கநாயகம், திரு. செ. .. | தொண்டாமுத்தூர். |
| 4 | அரிக்குமார், திரு. இரா. .. | பெரணமல்லூர். |
| 5 | அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.). |
| 6 | அருணாசலம், திரு. எ. .. | வரகூர் (செ.வ.). |
| 7 | அன்பழகன், திரு. க. .. | பார்க்டவுன். |
| 8 | அன்பழகன், திரு. கே. .. | ஓமலூர். |
| 9 | அன்பழகன், திரு. தி. .. | நாட்றாம்பள்ளி. |
| 10 | அன்பழகன், திரு. பொ. .. | இளையான்குடி. |
| 11 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 12 | ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி. | ஆண்டிமடம். |
| 13 | ஆபிரகாம், திரு. ம. .. | ஆலந்தூர். |
| 14 | ஆறுமுகம், திரு. அ. .. | வந்தவாசி. |
| 15 | ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பென்னாகரம். |
| 16 | ஆறுமுகம், திரு. ஆர். எஸ். .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.). |
| 17 | ஆறுமுகம், திரு. எ. எஸ். ஏ., .. | விருதுநகர். |
| 18 | ஆறுமுகம், திரு. செ. .. | மதுராந்தகம். |
| 19 | ஆறுமுகம், திரு. சேலம் மு. .. | சேலம்-2. |
| 20 | ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி. |
| 21 | ஆனந்தன், திரு. மு. ... | உளுந்தூர்ப்பேட்டை. |
| 22 | இரகுபதி, திரு. கோ. .. | காட்பாடி. |
| 23 | இரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம். |
| 24 | இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி. |
| 25 | இரத்தினவேலு, திரு. சே. .. | முசிறி. |
| 26 | இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ.வ.). |
| 27 | இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம். |
| 28 | இராசரத்தினம், திரு. எப். எம். | கொளச்சல். |
| 29 | இராசரத்தினம் என்கிற மணி, திரு. எம். | விழுப்புரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 30 இராசாங்கம், திரு. மு. .. | திருவிடைமருதூர். |
| 31 இராசாம்பாள், திருமதி. த. | தலைவாசல் (செ.வ.). |
| 32 இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி. |
| 33 இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம். |
| 34 இராசு, திரு. வி. கே. .. | அரக்கோணம் (செ.வ.). |
| 35 இராசேநதிரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி. |
| 36 இராமச்சந்திரன் டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி. |
| 37 இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர். |
| 38 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 39 இராமச்சந்திரன், திரு. ச. .. | பன்ருட்டி. |
| 40 இராமச்சந்திரன், திரு. சோ.மா. | அண்ணா நகர். |
| 41 இராமச்சந்திரன், திரு. ப. ந. | பட்டுக்கோட்டை. |
| 42 இராமசாமி, திரு. எஸ்.என். | சாத்தான்குளம். |
| 43 இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 44 இராமநாதன், திரு. மு. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 45 இராமலிங்கம் டாக்டர், கே.பி. | இராசிபுரம். |
| 46 இளங்கோவன், திரு. ஈ.வே.கி.ச. | சத்தியமங்கலம். |
| 47 ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| 48 உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 49 உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 50 எத்திராசன், திரு. கி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 51 கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம். |
| 52 கதிர்வேலு, திரு. மா. .. | இராணிப்பேட்டை. |
| 53 கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 54 கந்தசாமி, திரு. பெ. .. | பொங்கலூர். |
| 55 கல்லன், திரு. கே. .. .. | உதகமண்டலம். |
| 56 கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம். |
| 57 காளிமுத்து டாக்டர், கா. .. | மதுரை கிழக்கு. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 58 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு. |
| 59 கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | அணைக்கட்டு. |
| 60 கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. .. | கும்பகோணம். |
| 61 கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1. |
| 62 குப்புசாமி, திரு. கு. .. | ஒட்டன்சத்திரம். |
| 63 குமர குருபர இராமநாதன், .. திரு. ச. | விளாத்திக்குளம். |
| 64 குமரி அனந்தன், திரு. .. | இராதாபுரம். |
| 65 குமாரதாஸ் டாக்டர், தே. .. | கிள்ளியூர். |
| 66 குருசாமி என்கிற அண்ணாதாசன் திரு. எம். | திருவரம்பூர். |
| 67 கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கைமான் (செ.வ.). |
| 68 கோவிந்தசாமி, திரு. ஆர். .. | குடியாத்தம். |
| 69 கோவிந்தசாமி, திரு. ச. .. | எடப்பாடி. |
| 70 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி. |
| 71 சங்கரலிங்கம், திரு. ச. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 72 சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி. |
| 73 சண்முகம், திரு. என். .. | சோளிங்கர். |
| 74 சண்முகம், திரு. ப.உ. .. | மேல் மலையனூர். |
| 75 சண்முகையா பாண்டியன், திரு. | ஆலங்குளம். |
| 76 சந்திரசேகரன், திரு. ஆ. .. | சோழவந்தான். |
| 77 சந்திரசேகர், திரு. மூ. .. | முகையூர். |
| 78 சம்சுல் ஆலம், திரு. வி.எஸ்.டி. | பாளையங்கோட்டை. |
| 79 சமரசம் டாக்டர், கோ. .. | காவேரிப்பட்டினம். |
| 80 சரோஜா, திருமதி. இரா. .. | உப்பிலியாபுரம், (ஆ.வா ) |
| 81 சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ.வ.) |
| 82 சித்தன், திரு. என்.எஸ்.வி. .. | திருமங்கலம். |
| 83 சிந்தன், திரு. வி.பி. .. | வில்லிவாக்கம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 84 | சிவக்குமார், திரு. ஆ. .. | சமயநல்லூர், (செ.வ.) |
| 85 | சிவக்குமார், திரு. எம். .. | கூனூர் (செ.வ.) |
| 86 | சிவஞானம், திரு. என். .. | திருவோணம். |
| 87 | சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம். (ஆ.வா.) |
| 88 | சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம். |
| 89 | சிவராஜ், திரு. க. .. | ரிஷிவந்தியம். |
| 90 | சின்னக்குழந்தை, திரு. மு. .. | ஆரணி. |
| 91 | சின்னச்சாமி, திரு. ரா. .. | தர்மபுரி. |
| 92 | சின்னசாமி, திரு. வே.கு. .. | பவானிசாகர். |
| 93 | சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 94 | சின்னராசு, திரு. மா. .. | மேட்டுப்பாளையம். |
| 95 | சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவங்கோடு. |
| 96 | சுப்புராயர், திரு. சி. .. | கம்பம். |
| 97 | சுப்புராயன், திரு. கு. .. | திருப்பூர். |
| 98 | சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | திருச்செந்தூர். |
| 99 | சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை. |
| 100 | சுப்பிரமணியன், திரு. வீ. .. | கண்டமங்கலம். (செ.வ.) |
| 101 | சுவாமிநாதன், திரு. வி.வி. .. | புவனகிரி. |
| 102 | செங்காளியப்பன், திரு. ஆர். .. | சிங்காநல்லூர். |
| 103 | செங்கோட்டையன், திரு. கு.ஆ. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 104 | செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை. |
| 105 | செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம். |
| 106 | செல்லமுத்து, திரு. மொ. .. | திருவாரூர் (செ.வ.) |
| 107 | செல்லப்பா, திரு. வி.கோ. .. | கடலூர். |
| 108 | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 109 | சேகர் என்கிற குலசேகரன், திரு. கே.பி. | பொன்னேரி (செ.வ). |
| 110 | சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடனை. |
| 111 | சோலைராசு, திரு. க. | மருங்காபுரி. |
| 112 | சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை. |
| 113 | சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 114 | சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர். |
| 115 | ஞானசுந்தரம், திரு. சா. .. | மன்னார்குடி. |
| 116 | டேனியல்ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம். |
| 117 | தங்கமணி, திரு. மு. .. | மாயூரம். |
| 118 | தங்கமணி, திரு. கே.எம். .. | திண்டிவனம். |
| 119 | தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி. |
| 120 | தங்கராசு, திரு. செ. .. | மங்களூர் (செ.வ.). |
| 121 | தங்கவேல்ராஜ், திரு. ப.ம. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 122 | தங்கவேலு, திரு. வி. .. | வால்பாறை (செ.வ.). |
| 123 | தமிழ்மணி, திரு. .. | திருப்போரூர் (செ.வ.). |
| 124 | தமிழரசன், திரு. கு. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 125 | தனபால், திரு. ப. .. | சங்கரி (செ.வ.). |
| 126 | தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 127 | தியாகராசன், திரு. ர. .. | விருத்தாசலம். |
| 128 | திருஞானம், திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ.வ) |
| 129 | திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 130 | திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை. |
| 131 | தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர். |
| 132 | தீர்த்தராமன், திரு. ப. .. | பாலக்கோடு. |
| 133 | துரை [illegible] என்கிற இராமலிங்கம், திரு. | நெல்லிக்குப்பம். |
| 134 | துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர். |
| 135 | துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 136 துரைராசு, திரு. எஸ். பி. .. | காரைக்குடி. |
| 137 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 138 தெய்வநாயகம், திரு. எ. .. | மதுரை சென்ட்ரல். |
| 139 தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |
| 140 நடராசன், திரு. ஆ. .. | பேரூர். |
| 141 நரசிம்மபல்லவன், திரு. க. | உத்திரமேரூர். |
| 142 நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு. |
| 143 நல்லமுத்து, டாக்டர் க. .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 144 நல்லுச்சாமி, திரு. என். .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 145 நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர். |
| 146 நாராயணன், திரு. எஸ். .. | திருநெல்வேலி. |
| 147 நாராயணன், திரு. பு. கோ. .. | பவானி. |
| 148 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர். |
| 149 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 150 பரமசிவம், திரு. பா. ந. .. | பல்லடம். |
| 151 பரிதி இளம்வழுதி, திரு. .. | பெரம்பூர். |
| 152 பழனி, திரு. த. .. .. | ஆற்காடு. |
| 153 பழனிச்சாமி, திரு. கா. செ. .. | காங்கேயம். |
| 154 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 155 பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி. |
| 156 பாண்டுரங்கன், திரு. மு. .. | கலசபாக்கம். |
| 157 பாப்பா சுப்பிரமணியம், திரு. | குத்தாலம். |
| 158 பாரதி, திரு. ஜி. கே. ஜெ. .. | திருவொற்றியூர். |
| 159 பாரமலை, திரு. க. .. .. | மானாமதுரை (செ.வ.) |
| 160 பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி. |
| 161 பாலகிருஷ்ணன், திரு. வ. .. | சிவகாசி. |
| 162 பாலச்சந்திரன், திரு. வை. .. | பத்மநாபபுரம். |
| 163 பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.). |
| 164 பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம். |
| 165 பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர். |
| 166 பாலன், திரு. சு. .. .. | எழும்பூர். |
| 167 பாலாஜி, திரு. கே. .. .. | காஞ்சிபுரம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 168 பாலுச்சாமி, திரு. ஏ. .. | பரமக்குடி (செ.வ.). |
| 169 பாலுசாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 170 பிச்சை, திரு. மு. .. .. | அருப்புக்கோட்டை. |
| 171 பிரணவநாதன், திரு. அ. .. | கடலாடி. |
| 172 பிரேம்குமார், திரு. ஆ. .. | திண்டுக்கல். |
| 173 புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர். |
| 174 புஷ்பராசு, திரு. த. .. .. | திருமயம். |
| 175 பெரியசாமி, திரு. அ. .. | தாராபுரம் (செ.வ.). |
| 176 பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம். |
| 177 பெருமாள், திரு. தெ. .. | கடையநல்லூர். |
| 178 பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி. |
| 179 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ.). |
| 180 பொன்னுசாமி, டாக்டர், அ. | பெருந்துறை. |
| 181 பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம். |
| 182 பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு. |
| 183 மணவாளன், திரு. .. .. | திருப்பத்தூர். |
| 184 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.). |
| 185 மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 186 மனோகரன், திரு. நாஞ்சில் கி. | புரசைவாக்கம். |
| 187 மனோகரன், திரு. தி.நா.கோ.அ. | திருநாவலூர். |
| | ஜெயங்கொண்டான். |
| 188 மாசிலாமணி, டாக்டர், ந. .. | திருப்பத்தூர். |
| 189 மாதவன், திரு. செ. .. | அந்தியூர் (செ.வ.). |
| 190 மாதையன், திரு. யு. பி. .. | குளத்தூர் (செ.வ.). |
| 191 மாரிமுத்து, திரு. த. .. | திருப்பரங்குன்றம். |
| 192 மாரிமுத்து, திரு. மு. .. .. | வேதாரண்யம். |
| 193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | புதுக்கோட்டை. |
| 194 முகம்மது கனி, திரு. ஜே. .. | பெரியகுளம். |
| 195 முகம்மது சலீம், டாக்டர், த. .. | குளித்தலை. |
| 196 முசிறிபுத்தன், திரு. பி. .. | ஈரோடு. |
| 197 முத்துசாமி, திரு. அ. .. | உசிலம்பட்டி. |
| 198 முத்துராமலிங்கம், திரு. பி.கே.எம். | |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 199 முத்துராமலிங்கம், திரு. பொன். | மதுரை மேற்கு. |
| 200 முத்துவேல், திரு. கே. | முதுகுளத்தூர். |
| 201 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 202 முருகன், திரு. கி. .. .. | செய்யாறு. |
| 203 முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி. |
| 204 முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி. |
| 205 யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 206 ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 207 ரவீந்திரன், திரு. ஏ. எஸ். .. | திருவண்ணாமலை. |
| 208 ராமஜெயம், திரு. ம. நா. .. | வானூர் (செ.வ.). |
| 209 ராமன், திரு. கி. .. .. | ராஜபாளையம் (செ.வ.). |
| 210 ராஜாபாபு, திரு. ஜெ. .. | போளூர். |
| 211. ரெங்கசாமி, திரு. ஆர். .. | கோவில்பட்டி. |
| 212 ரெத்தினராஜ், திரு. எஸ். .. | நாகர்கோவில். |
| 213 லட்சுமி, திருமதி பி. .. | அவினாசி (செ. வ.). |
| 214 வடிவேல், திரு. கு. .. | கரூர். |
| 215 வளர்மதி, திருமதி பா. .. | மயிலாப்பூர். |
| 216 விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார். |
| 217 விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | வீரபாண்டி. |
| 218 வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர். |
| 219 வீரய்யன், திரு. கோ. .. | நாகப்பட்டிணம். |
| 220 வீராசாமி, திரு. தா. ... | ஒரத்தநாடு. |
| 221 வேங்கடரமணன், திரு. டி. ஆர். | தென்காசி. |
| 222 வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஓசூர். |
| 223 வெங்கடாசவம், திரு. அ. .. | ஆலங்குடி. |
| 224 வெங்கடாசலம், திரு. கி. .. | லால்குடி. |
| 225 வெங்கடாசலம், திரு. டி. எம். .. | பர்கூர். |
| 226 வேணுகோபால், திரு. எஸ். .. | டாக்டர் ராதாகிருஷ்ண நகர். |
| 227 வேணுகோபால், திரு. கே. வி. | தள்ளி. |
| 228 வேலு, திரு. ச. வி. கூடலூர் | தண்டராம்பட்டு. |
| 229 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி. |





| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |
| 230 ஜகதீசன், திரு. ஆனூர், பு.கோ. | செங்கல்பட்டு. |
| 231 ஜெகதீசன், திரு. சு. .. | அரவக்குறிச்சி. |
| 232 ஜெயச்சந்திரன், திரு. சா. .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.). |
| 233 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு. |
| 235 பிரான்சிஸ், திரு. ஜி. கே. .. | நியமன உறுப்பினர். |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் .. அமைச்சர்.
2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே அமைச்சர்.
3. மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் .. அமைச்சர்.
4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி .. .. தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1985, ஜூன் 3, திங்கட்கிழமை.

வைகாசி 21, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை ''

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த்தொழிலின் பின் நிற்கின்றது. அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

## 1. இரங்கல் குறிப்புகள்.

### முன்னாள் சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. வி. சுப்பையா அவர்கள் 9–4–1985 ஆம் தேதியன்றும், திரு. டி. சின்னசாமி அவர்கள் 21–4–1985 ஆம் தேதியன்றும் மற்றும் திரு. ஏ. ஜெ. எஸ். பரிசுத்த நாடார் அவர்கள் 14–5–1985 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. சுப்பையா அவர்கள் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. டி. சின்னசாமி அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டுவரை தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி (செ.வ.) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு ஏ. ஒய். எஸ். பரிசுத்த நாடார் அவர்கள் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டுவரை, தஞ்சாவூர், மதுரை மற்றும் இராமநாதபுரம் இந்திய கிறிஸ்துவர் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்கும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையில், மற்றும் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையிலும் தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பெற்று நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். தஞ்சாவூர் நகராட்சி மன்ற உறுப்பினராகவும் தலைவராகவும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்கள் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார்கள். அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவை யின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்திவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌன மாக எழுந்து நின்றனர்.)

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சட்டமன்ற கட்சிகளுக்கு அரசினர் தோட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த அறைகளை சட்டமன்றச் செயலகம் கையகப்படுத்திக் கொண்டது.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இடம்பெற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்களும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதாக் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் இந்த அவையிலே இடம்பெற்றிருந்தபோதிலும் எங்களது சட்டமன்றக் கட்சி அலுவலகங்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவைப் பிரச்சினை அல்ல.

திரு. க. அன்பழகன் : இது அவையிலே இருக்கிற எங்களுடைய பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னோடு சேர்ந்து தனியாக என் அறையில் விவாதிக்க வேண்டிய பிரச்சினையே தவிர, இது பேரவையில் விவாதிப்பதற்குரிய பிரச்சினையல்ல,





திரு. க. அன்பழகன் : என்னுடைய வாதத்தைத் தாங்கள் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முழு அளவிலே நாங்கள் பணியாற்றுகிற வாய்ப்புகள் தடைபட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் பிரச் சினை வேறு, கட்சிப் பிரச்சினை வேறு. இது தனிப்பட்ட கட்சிப் பிரச்சினை. எனது அறையில் நாம் கூடி விவாதிக்கலாம், அவையில் இதை எழுப்ப வேண்டாம். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) இவைகள் எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (கூச்சல் குழப்பம்.)

திரு. க. அன்பழகன் : சபாநாயகரவர்களே, மன்னித்துக் கொள்ள வேண்டும். சபாநாயகர் இங்குள்ள அனைத்துக் கட்சி யினருக்கும் பொதுவாக, நடுநிலையில் இருந்து செயல்பட வேண்டியவர் என்று நாங்கள் கருத வேண்டிய நிலையில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டாம்; கட்சிகளுக்கு இட ஒதுக்கீடு செய்வது அவைக்குள்ளே வராது. சட்டமன்ற அலு வலகம் அவை வகுத்துக் கொடுத்த விதிமுறைகளின்படி செய்ய வேண்டிய பிரச்னை. என் அறையிலே பேச வேண்டியதை அவை யிலே பேசி பிறகு எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டாமென்பதற்காகத் தான் சொல்கிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, சட்டமன்றத்தினுடைய, பேரவையினுடைய செயலாளர் எழுதிய கடிதங்கள் மூலமாக சட்டமன்றப் பேரவை விதிகள் திருத்தப்பட்டிருப்பதன் காரணமாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதங்களைத் தாங்கள் படித்துப் பார்த்தால் தெரியும். திருத்தப் பட்ட விதிமுறைகள் எந்தச் சூழ்நிலையில் நடைமுறைக்கு வந்தது என்பதை சபாநாயகர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்லாமல்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்லிவிடுகிறேன். இந்தப் பேரவைதான் விதிமுறைகளை எனக்கு வகுத்துக் கொடுத் திருக்கிறது. விதிகளைப் பார்க்க வேண்டாமென்றால் வேறு எதைப்பார்ப்பது ? விதிமுறைகளின்படித்தான் எனது செயலகம் செயல்பட்டு வருகிறது.

திரு. க. அன்பழகன் : இந்தச் சட்டமன்றத்தின் செயலாளர் எங்களுக்கு எழுதிய கடிதங்களின்படி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கடிதங்களையும் அவற்றுக்கு நீங்கள் எழுதிய பதில்களையும் நான் படித்தேன். அதைப்பற்றியெல்லாம் விவாதிக்க வேண்டுமென்றால் என் அறைக்கு வந்து கேளுங்கள்; அவையில் வேண்டாம். (குறுக்கீடு)

[1985 ஜூன் 3

திரு. அ. ரகுமான்கான் : இது எங்கள் கட்சியின் மானப் பிரச்சினை; கவுரவப் பிரச்சினை; எங்களுடைய உரிமை பறிக்கப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாருடைய உரிமையும் பறிக்கப்படவில்லை; பறிக்கவும் மாட்டேன்.

திரு. க. அன்பழகன் : சபாநாயகரவர்களே, சட்டமன்றத்தில் 1957 ஆம் ஆண்டு 15 உறுப்பினர்களோடு திராவிட முன்னேற்றக் கழகம் இடம் பெற்ற நாள் முதல், நான்கைந்து பேர்கள் மேல வையில் இடம் பெற்ற நாள்முதல், பாராளுமன்றத்தில் சுமார் 24 பேர்கள் இடம் பெற்றிருந்த நாள் முதல் உறுப்பினராக இருப்பவன் நான் என்ற அந்த உரிமையோடு சொல்ல விரும்பு கிறேன் ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதிகளை மீறி நானோ, எனது செயலகமோ செயல்பட்டிருந்தால் சொல்லுங்கள். விதிகளுக்கு உட்பட்டு செயல்படுவதை அநியாயம் என்று சொன் னால் எப்படி?

திரு. அ. ரகுமான்கான் : விதியிலே இருக்கிறதா? இருந்தால் வாசியுங்கள். அதில் கிடையாது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஃபேக்டைச் சொன்னால் வைண்ட் ஆகிவிடுவீர்கள்.

திரு. க. அன்பழகன் : தங்களுடைய அதிகாரத்திற்கு உட் பட்ட செயலாளர் எங்களுக்கு எழுதிய கடிதமும், அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையும் ஏற்கனவே எங்களைப் புண்படுத்தியிருக் கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனது செயலகத்திற்கு செயலகச் செயலாளருக்குத் தாங்கள் அனுப்பிய கடிதம்கூட முறை யாக இல்லை. அதையும் படித்துப் பார்த்தேன். இதையெல்லாம் இந்த அவை மூலம் நாட்டுக்குச் சொல்ல வேண்டாமென்று கருது கிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. க. அன்பழகன் : அதைப்பற்றியெல்லாம் இங்கே விவாதிக் கலாம் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி இந்த அவை யிலே விவாதத்தில் இறங்க முடியாது. அதற்காகத்தான் நான் என் அறைக்கு வாருங்கள்; விவாதிக்கலாம் என்று சொன்னேன் (குறுக்கீடுகள்).



1985 ஜூன் 3]

திரு. க. அன்பழகன் : இந்த அவையிலேதான் நாங்கள் விவாதிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஆளுகின்ற கட்சி யாக இருந்தபொழுது அங்கே இருந்தீர்கள் (குறுக்கீடுகள்). நான் பேசுவதும்கூட அவைக் கேட்டதால் சொல்கிறேன். அப்பொழுது உங்களுக்கிருந்த எண்ணிக் குறிப்பிலே இருக்காது. அப்பொழுது உங்களுக்கிருந்த எண்ணிக் கைக்கேற்ப அறை எடுத்துக்கொண்டீர்கள். அதற்குப் பிறகு தொடர்ந்து அதில் இருந்து வந்தீர்கள். இன்றைக்கு உங்கள் கட்சியின் சார்பாக 22 பேர்கள் இருக்கிறீர்கள். 22 பேர்களுக்குத் தக்கவாறு ஒரு இடத்தை உங்கள் கட்சிக்குக் கொடுத்திருக் கிறோம்.

இன்னொன்று. உங்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பெற்ற இடத்தை அரசாங்கத்திற்கும் கொடுக்கவில்லை, ஆளுகின்ற கட்சிக்கும் கொடுக்கவில்லை. புதிதாக பல சட்டமன்றக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குழுக்களுக்கு வேண்டுமென்று கேட்டு, எடுத்திருக்கிறோம்.

இன்னொன்று, அரசாங்கத்தினுடைய ஆட்சிமன்றக் குழுவைக் கூட காலி செய்யச் சொல்லியாயிற்று. அவர்கள் கூட ஒரு மாடியை காலி செய்து கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது உங்களுக்குக் கொடுத்த இடம் கூட கிட்டத்தட்ட 900 சதுர அடி இருக்கிறது. 22 பேர்களுக்கு இதற்கு மேல் எப்படிக் கொடுக்க முடியும்?

திரு. க. அன்பழகன் : இப்பொழுது நான் சொல்கிற விளக் கத்தைத், தாங்கள் தயவுசெய்து வெறும் விவாதம் என்று கருதாமல் அதிலே உள்ள உட்பொருளை உணர்கிற முறையில் தாங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதே அவையில் ஏற்கனவே நமது முன்னவரிடத்திலே, மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு ரமணி அவர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் சொல் கிறேன். அரசுக்கும், அமைச்சர்களுக்கும் இதில் சம்பந்தம் இல்லை, சட்டமன்ற அலுவலகத்தைப் பொறுத்த வரை கட்சி உறுப்பினர்களுக்கு நான்தான் இடம் ஒதுக்க வேண்டும். இதை நீங்கள் அவை முன்னவரிடத்திலே சொன்னாலும், அவர் அதைத்தான் சொல்வார். சட்டமன்ற அலுவலகத்தைப் பொறுத்தவரை நான் பாஸ் பண்ணுகிற ஆர்டர்தான் பைனல். (குறுக்கீடுகள்).

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு நியாயத்தை வலியுறுத்துவதற்காகத்தான் இவ்வளவும் பேசுகிறேனே தவிர, இடத்திற்காகக்கூட அல்ல. இந்த முறை கையாளப்பட்டது எப்படி ? ஏற்கெனவே முன்னவரிடத்திலே பேசியதாகச் சொல்லப்பட்ட பொழுது, தங்களிடத்திலும் பேசப்பட்டிருக்கிறது. தாங்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்றுக்கொள்ளவில்லை, அதற்குத்தான் சொன்னேன் ..............

திரு. க. அன்பழகன் : தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் அந்த விதிமுறைகள்................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மூத்த சட்டமன்ற உறுப்பினர், நமது மரபுகளை எல்லாம் காப்பாற்றுகிற முறையில் என்னோடு ஒத்துழைக்க வேண்டியவர்...........

திரு. க. அன்பழகன் : மரபை எல்லாம் மீறி கடிதங்கள் எழுதப்பட்டன, படித்துப் பாருங்கள்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய தலைவரிடம் இருந்து எனது அலுவலகத்திற்கு வந்த கடிதத்தையும் படித்துப் பாருங்கள்.

திரு. க. அன்பழகன் : நீங்கள் எழுதியதற்குப் பிறகுதான் நாங்கள் அப்படி பதில் எழுதினோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பதிலில் என்னென்ன வாசகங்கள் இருக்கின்றன என்று படித்துப் பாருங்கள் (குறுக்கீடு). இதெல்லாம் அவைக் குறிப்பில் வேண்டாம். இப்படி எழுதலாமா ? ஒரு முதலமைச்சராக இருந்தவர் தோற்றுப் போனால் வெளியே போகத்தான் வேண்டும். திரும்ப வந்து நான் முதல் அமைச்சராகத்தான் உட்காருவேன் என்று சொல்ல முடியுமா ?

திரு. அ. ரகுமான்கான் : ஒரு கட்சி இன்றைக்கு ஆளுங் கட்சியாக இருக்கலாம். நாளைக்கு எதிர்க்கட்சியாக ஆகலாம். இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கலாம். நாளைக்கு ஆளுங் கட்சியாக மாறலாம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தமாதிரி பேசாதீர்கள். அந்த வாசகங்கள் எல்லாம் வேண்டாம்...........





திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தயவுசெய்து நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். தாங்கள் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய அளவுக்குப் பெரும்பான்மை வராதபொழுது அவர் முதலமைச்சராக அழைத்து உட்கார வைக்கப்படமாட்டார் கள். அந்த நியதிகூடத் தெரியாமல் அவ்வளவு அறிவற்றவர்களாக நாங்கள் யாரும் இங்கே இல்லை யென்பதை தங்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகத்தான் முன்பே சொன்னேன், என் அறைக்கு வந்து கேளுங்கள், இது அவையில் எழுப்ப வேண்டிய பிரச்னை அல்ல என்று.

திரு. க. அன்பழகன் : எங்களை அம்பலத்துக்குக் கொண்டு வந்துவிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சட்டமன்ற அலுவலகத்தை மதித்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது, அதனால்தான் சொல்கிறேன். இது வேண்டாம். இது மக்களுடைய பிரச்னை அல்ல. கட்சிப் பிரச்னை. இன்னொன்று, இது நீங்களும் நானும் தனியே பேசித் தீர்த்து முடிக்கக் கூடிய பிரச்னை.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் பேச முற்படுகின்றபோதெல்லாம் ஒலிபெருக்கி வேலை செய்யாது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தமாதிரி வழக்கம் இப்போது இல்லை. முந்திய காலத்தில் நடந்திருக்கின்றது. அதை நினைவு கொண்டு சொல்லாதீர்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தின்போது நமது விதிமுறைகளையொட்டி க்ரூப், இன்டிபெண்டெண்ட் என்பதெல்லாம் நடைமுறையில் சரியாக வராது என்ற கருத்தை நான் எடுத்துச் சொல்லி, இந்த அவையிலே இரண்டு பேர்களாக இருக்கின்ற கட்சித் தலைவர்கள் எல்லாம் கூட அலுவல் ஆய்வுக் குழுவிற்கு அழைக்கப் படுவதன் மூலமாகத்தான் அவையில் சுமுகமாகப் பணியாற்ற வாய்ப்பு இருக்கும் என்று நான் தெரிவித்த கருத்தைத் தாங்களும் ஏற்றுக்கொண்டு இந்த அவையில் இருக்கிற திரு. குமரி அனந்தன் அவர்கள், திரு. அப்துல் சமத் அவர்கள் ஆகியோரை சிறப்பு உறுப்பினர்களாகத் தாங்கள் அழைக்கத் தலைப்பட்டீர்கள். இது தங்களது நினைவில் இருக்கும் என்று நான் நம்புகிறேன். அணி என்று சொல்வது [illegible] ஆகிவிடக்கூடாது என்பதற்காகத் தான் நான் அப்போது [illegible] குறிப்பிட்டேன்.

[திரு. க. அன்பழகன்] [1985 ஜூன் 3

அடுத்து, இந்த அவையின் சார்பாக ஏற்கெனவே கடந்த முறை சட்ட மன்றம் இருந்தபோது உருவாக்கப்பட்ட விதி முறைக் குழு உருவாக்கிய அந்த விதிமுறைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக உங்களுடைய சட்டமன்றச் செயலாளர் அவர்கள் எங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் எழுதி யிருக்கிறார்கள். இந்த அவையில் இருக்கின்ற கட்சிகள் குழு, அணி என்று பிரிக்கப்படுகிற முறையில், அது கட்சியா, அணியா என்று பிரிக்கப்படுகிற முறையில்தான் பயன்படுமே தவிர அந்த அணிகளையும், கட்சிகளையும் சபாநாயகர் எப்படி நடத்துவார் என்பதற்கு அந்த விதிகளில் இடம் இல்லை.

மற்றொன்று, இந்த அவையிலே பேசுகின்ற நேரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு விதிமுறைகளை, தங்களுக்கு எப்படி, எப்படி எல்லாம் வாய்ப்பு இருக்கிறதோ அப்படிப் பயன்படுத்த லாம்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விதியைக் கூட அதற்குப் பயன்படுத்தவில்லை. வேண்டுமானால் அவற்றை எடுத்துப் பாருங்கள். (கூச்சல், குழப்பம்) இது முறையா? திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களின் தலைவர் அவர் களைத்தான் கேட்கிறேன்.

திரு. க. அன்பழகன் : காங்கிரஸ் கட்சியின் ஏகபோக ஆட்சிக் காலத்தில் தரப்பட்ட மரியாதை கூட இன்றைக்கு எங்களுக்குத் தரப்படவில்லை. எங்களுடைய மரியாதை பறிக்கப்பட்ட தற்குப் பின்னால் நாங்கள் சட்டமன்றத்தில்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுவதற்கு முன்பு தயவு செய்து யோசிக்க வேண்டும். உறுப்பினர்களுடைய உரிமையை என்னைத் தவிர வேறு யாரும் இதுவரையில் பாது காத்தது கிடையாது. இந்த அவையிலே கூட இப்போது இருக் கிறார் ஒரு தாழ்த்தப்பட்ட உறுப்பினர். நான்கு வருஷங்களாக தரையிலே படுத்திருந்தார் சட்ட மன்ற விடுதியிலே. என் னிடத்திலே ஒருநாள் வந்து சொன்னார், நான்கு வருஷங் களாகத் தரையிலே படுக்கப் போட்டிருந்தார்கள் என்று. நான் சினிமாவிற்குப் போய்விட்டு லேட்டாக வந்தேன். எனவே வெளியே போ என்று சொல்லிவிட்டார்கள், இதற்கு என்ன செய்வது ஐயா என்று என்னை ஐயா என்று சொன்னார். மணி பதினொன்றே முக்கால். 12 மணிக்கு வெளியேற்றித் தருகிறேன் என்று சொல்லி, வெளியேற்றிக் கொடுத்தவன் தான் இந்தச் சபாநாயகர் பாண்டியன். இதை விட ஓர் உறுப்பினரது உரிமைகளை எப்படிக் காப்பாற்றுவது?

அடுத்து என்னுடைய அலுவலகத்தைப் பற்றிச் சொல்கிறேன். சட்ட மன்றத்தை 15—11—1984 அன்று கலைத்தார்கள்,



1985 ஜூன் 3] [பேரவைத் தலைவர்]

(முற்பகல் 10—20)

நான் துணைச் சபாநாயகராக இருந்தேன். 16-ந் தேதி இதே செயலகத்திலிருந்து எனக்கு நோட்டீஸ் வந்தது. என்ன? உங்களுடைய பி.ஏ. எல்லாம் டிஸ்சார்ஜ்ட். இந்த அலுவலகம் செயல்பட்ட முறையைச் சொல்கிறேன். நான் துணைச் சபாநாயகர், இதிலே ஒரு அங்கம். எனக்கு ஃபெசிலிட்டீஸ் வித்ட்ரான். அன்று இரவே வந்தது. இங்கே நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய அலுவலகம் எப்படி சீல் வைக்கப்பட்டதோ அதேபோன்று என்னுடைய அலுவலகத்தை யும் சீல் வைத்தார்கள். விதிமுறைகளின்படி சட்ட மன்றம் செயல்படுகிறது. இது முறை. நான் யாரிடமும் சொல்லவில்லை. அவை முன்னவரிடமும் சொல்லவில்லை. இன்று நீங்கள் பண்ணியதால் சொல்கிறேன். இந்த அளவுக்கு எனக்குப் பண்ண முடியாதா? இது தேவையா? இதுதான் அரசியலா? இதை எல்லாம் அரசியலாக்குவதா?

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தங்களுடைய பண்போடு கூடிய செயலுக்காக ஒரு எதிர்க்கட்சியில் இருக்கிற உறுப்பினர் என்ற முறையில் உங்களுக்கு என்னுடைய பாராட்டு தலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பண்பைப் பாராட்டுகிறேன். அந்தப் பண்பு இல்லாதவர் யாரோ அவர்கள் வருத்தப்படவும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்த விதிகள் 27—2—1985 அன்று..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பண்பை சொல்கிறீர்கள். இந்தச் செயலகத்திற்குத் தலைவர் நான். நீங்கள் சொல்கிற வார்த்தை என்னைத்தான் குறிக்கிறது. நான் என்ன சொல் கிறேன் என்றால் சட்டமன்றச் செயலகத்தின் மீது குற்றஞ் சாட்டுவது நல்லதல்ல. இந்தச் செயலகம் எப்படி நடக்கிறது என்று சொல்லிவிட்டேன். இந்த அலுவலகத்தின் செயல்முறை களைச் சொல்லிவிட்டேன்.

திரு. க. அன்பழகன் : உங்களுடைய பொறுப்பான கடமை களுக்காக உங்களைப் பாராட்டினேன். சில நேரங்களில் நீங் கள் உங்கள் பொறுப்பை நிறைவேற்ற விரும்பினாலும் அது முறை தவறியதாக ஆகிவிடும் என்ற கருத்தின் அடிப்படையில் தெரிவிக் கிறேன். நீங்கள் நல்லவராக இருக்கலாம். எடுக்கிற நட வடிக்கைகளில் தவறு ஏற்படலாம். எழுதப்படும் கடிதங்களில் குறை ஏற்படலாம், விளைவுகள் வேறுவிதமாக இருக்கலாம்.

அடிப்படை உண்மை 27-2-85 அன்று இந்த விதிகள் இந்த அவையில் வைக்கப்பட்டன. இந்த விதிகள், 'ரிப்போர்ட் ஆஃப் தி கமிட்டி ஆஃப் ரூல்ஸ்', 27-ந் தேதி வைக்கப்பட்டது.

[திரு. க. அன்பழகன்] [1985 ஜுன் 3

அன்றைய தினம் இங்கே 'ப்ரோ டெம்' ஸ்பீக்கராக திரு. ப. உ. சண்முகம் இருந்து, அதன் பிறகு தாங்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தாங்கள் இங்கே பொறுப்பை ஏற்றிருக்கிறீர்கள். அப்படி வைக்சப்பட்ட இந்த அறிவிப்பு யார் பெயரால் வைக்கப்பட்டது என்றால் முன்னாள் சபாநாயகர் திரு. இராசாராம் அவர்களுடைய பெயரால்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் விதிகள் குழுத் தலைவர், அதனால்தான் அவர் பெயரால் வந்தது.

திரு. க. அன்பழகன் : விதிகள் குழுத் தலைவராக இருந்தது 'ஆஸ் எ ஸ்பீக்கர்'. அவர் சபாநாயகராக இருந்ததால் விதிக் குழுவுக்குத் தலைவராக இருந்தாரே தவிர அதற்காக நியமிக்கப்பட்டவர் அல்ல; சபாநாயகராக அன்று இல்லாத ஒருவர்-இதற்கு முன்னால் இருந்தவர்—இந்த அவையில் 27-2-85 அன்று, என்றைக்கு அவர் சபாநாயகராக இல்லையோ அன்றைக்கு வைக்கப்பட்டது. எனவே 27-2-85 அன்று திரு. இராசாராம் அவர்கள் சாபாநாயகராக இருக்கக்கூடிய நிலைமை இருக்குமானால் ஒரு வேளை இந்த அவையைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கலாம். 27-2-85-லிருந்து தொடர்ந்து 8-3-85 வரை இந்த அவை கூடவில்லை, இடையிலே அதற்குப் பின்னால் ஆளுநர் உரை என்று கருதுகிறேன். ஆக, 27-2-85 முதல் 8-3-85 வரை இந்த அவை கூடவில்லை.

எனவே பெரும்பான்மையான உறுப்பினர்களுடைய கருத்தில், இந்த விதிகள் பற்றி மறுப்பு எழுதுவதற்குக் கூட தோன்றக்கூடிய சூழ்நிலை இல்லை. எனவே ஒன்று இதை வைத்த முறை சரியானதல்ல. இரண்டாவதாக கடந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்த முடிவு இது. அந்த முடிவு கூட, கடைசியாக எப்படி அறிவிக்கப்பட்டது என்றால் ஜனதாக் கட்சித் தலைவராக இருந்த திரு. இஸ்மாயில் அவர்கள் அதிலே உறுப்பினராக இருந்து, தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். பாராளுமன்றத்தில் இருக்கிற முறைகளை இங்கே 'அடாப்ட்' செய்யலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் செயலாளரிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். என்றாலும் சட்டமன்றச் செயலாளர் எழுதி வைத்த குறிப்பில் திரு. இராசாராம் அவர்கள் சபாநாயகர் என்ற முறையில் கையெழுத்திட்டு அது இந்த அவைக்கு வந்திருக்கிறது. இந்தக் குறிப்புகள் எல்லாம் எழுதியதற்குப் பின்னால் அந்த உறுப்பினர்கள் விவாதிக்கவில்லை. அந்த உறுப்பினர்கள் விவாதிக்கவில்லை என்றால் இந்த அவையிலுள்ள உறுப்பினர்களுக்கு அதுபற்றி அடிப்படையில் விவாதிக்க உரிமை உண்டு. அந்த அடிப்படை இரிமையை வற்புறுத்துவதற்கு முக்கியமான காரணம்........



1985 ஜுன் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகள் குழுவின் அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டது. தாங்கள் இப்படிச் சொல்வது அந்தக் குழு உறுப்பினர்களையே நாம் குறை கூறுவது மாதிரியாகும். Please do not attribute motives.

உங்கள் வாதமெல்லாம் உறுப்பினர்களின் தரத்தையும் குறைக்கிறமாதிரியாக இருக்கிறது. (குறுக்கீடு) சட்டமன்றப் பேரவை தொடர்ந்து வருவது; எல்லாமே அந்தச் சட்டசபையில் பாஸ் செய்வதில்லை.

திரு. க. அன்பழகன் : சபாநாயகர் அவர்கள் நான் சொல்வதை கொஞ்சம் புரிந்து கொள்ள வேண்டும். நான் சொல்வதில் ஒரு மோட்டீவும் இல்லை. ஒரு சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டு அவைக்கு வருவதற்கு முன்னால் பிரொடெம் ஸ்பீக்கர் இருக்கிற நேரத்தில் சபை நடவடிக்கைகளில் நிரந்தரமான இடத்தைப் பெற வேண்டிய விதிமுறைகளை இந்தச் சபையில் வைப்பது எப்படிச் செல்லும்? செல்லாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்குப் பாதகமாக இருந்தால் செல்லாது, உங்களுக்குச் சாதகமாக இருந்தால் செல்லும் என்றால் எப்படி? முறையாக இந்த அவையில் வைக்கப்பெற்று ஏற்றுக்கொள்ளப்பெற்றது எதுவாக இருந்தாலும் செல்லும். நம்மைக் கட்டுப்படுத்தும்.

திரு. க. அன்பழகன் : இந்த விதிமுறைகள் எங்களைக் கட்டுப்படுத்தும் என்பது நியாயமில்லை என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிமுறைகளை வைத்து ஏற்க முடியாது என்றாலும் உங்கள் ஸ்ட்ரங்க்த் என்ன? ஒரு ஆள் போனால் ஒரு ரூம் எடுக்கிறோம், இரண்டு பேர்கள் போனால் டபுள் ரூம் எடுக்கிறோம். நான்கு பேர்கள் போனால் அதற்குத் தக்கபடி எடுக்கிறோம். அதேமாதிரி 22 பேர்களுக்குத் தேவையான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவறா?

திரு. க. அன்பழகன் : தாங்கள் சொல்வதில் தவறு ஒன்றுமில்லை. ஒருவர் போனால் சிங்கில் ரூம், இரண்டு பேர்கள் போனால் டபுல் ரூம் எடுக்கிறார்கள் என்பது எனக்கும் தெரியும், சபாநாயகர் அவர்களுக்கு மட்டும் தெரியும் என்பதல்ல. நாங்களும் அப்படித்தான் எடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் எடுத்ததில்லை.

திரு. க. அன்பழகன் : நாங்கள் எல்லாம் வாடகை கொடுத்து எடுப்பதால் எங்களுக்குத் தெரிகிறது. தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். இடம் அல்ல பிரச்னை. பெரிய இடமா, சிறிய இடமா என்பது பெரிய வாதமல்ல. இதற்காகக் 'கை யாளப்பட்ட முறை, விதிமுறைகளைக் காட்டி, இந்த விதிமுறை கள் காரணமாக நீங்கள் அணி ஆகிவிட்டீர்கள், கட்சி இல்லை என்றால், இந்த அவையில் நாங்கள் 22 பேர்கள் இருந்தால் மேலவையில் ஐந்து பேர்கள் இருக்கிறோம், ஆக 27 பேர்கள் இருக்கிறோம். இந்த அவைக்கு மட்டும் மதிப்பு, மேலவைக்கு மதிப்பு இல்லை என்ற கொள்கை என்றைக்கும் இருந்ததில்லை, என்றைக்குமே மேலவையில் உள்ளவர்கள் மதிக்கப்பட்டார்கள். ஏற்கெனவே இதே அவையில் காங்கிரஸ் கட்சியின் எண்ணிக்கை குறைவாக இருந்த காலத்தில் அவர்கள் தாங்கள் இருந்த இடத்தில் இருக்க வேண்டுமென்று கேட்டபோது அவர்கள் அனுமதிக்கப்பட் டிருக்கிறார்கள். நாவலர் அந்தக் கட்சியின் முன்னவராக இருந்த காலம்தான் அது.

எனவே சபாநாயகர் அவர்களால் அப்படி அனுமதிக்க முடிய வில்லை என்றால் கட்சித் தலைவர்களைக் கூட்டி, பிஸினஸ் அட் வைஸரிக் கமிட்டியைக் கூட்டி அதில் விவாதித்து, கலந்து பேசி முடிவு எடுக்கவேண்டுமே தவிர இவை எல்லாம் அணிகளாக ஆகி விட்டன என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இடம் கிடையாது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு இடம் கிடையாது என்று............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டியில் வராது. ஏற்கெனவே நான் சொன் னேன், இது அவை சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. It is not the business of the House.

பேரவை உறுப்பினர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத் திக் கொடுப்பது பேரவைத் தலைவரும் அவர்கீழ் செயல்படும் செயலகமும்தான்.

இன்னொன்று, மற்ற மாநிலங்களில், பாராளுமன்றத்தில் சபை கலைக்கப்படும்போது எல்லா இடங்களின் பொஸஷனை அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். இதுவரை நாம் அந்த முறையைப் பின்பற்றவில்லை. அதனால்தான் இந்தப் பிரச்னை யெல்லாம். சபை கலைக்கப்பட்டவுடன் என்னிடமிருந்து பொஸ ஷனை எடுத்துக் கொண்டதுபோல்அந்தக் கட்சிகளிடமிருந்து பொஷஸன் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால் இந்தப் பிரச்சினை எழுந்திருக்காது.இப்போது இந்த நிகழ்ச்சிக்குப்பின் ஒரு ரூல் போட வேண்டும். அதாவது எந்தக் கட்சியாக இருந்தாலும் பேரவை கலைக்கப்படும்போது அவரவர்களிடம் உள்ள அறைகளின் பொஸ ஷனை செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும். (குறுக்கீடு) நான்



மேல் சபையை மதிக்கவில்லை என்று சொல்லாதீர்கள். அங்கே பார்ட்டி இருக்கலாம். இந்தப் பேரவை கூடினால்தான் மேல் சபைக்கு அலுவல் தர இயலும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டிய வசதிகளை, அறைகளை இந்தப் பேரவை செயல கமே செய்து வருகிறது.

திரு. க. அன்பழகன் : டெப்டி ஸ்பீக்கர் என்பது ஒரு பதவி. அந்த பதவி காரணமாக தாங்கள் விலகுகிறபோது அதைப்பெற்றுக் கொள்வது என்பது ஒரு முறை. கட்சிகள் என்பது பதவி அல்ல. கட்சிகள் என்பது ஜனநாயகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள். அந்த அமைப்புகளுடைய இடத்தைக் கைப்பற்றியது என்பது காங்கிரஸ் காலத்திலும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகக் காலத்திலும் இல்லை. ஒருவேளை உங்கள் காலத்தில் இப்படி ஏற்பட்டிருப்பது தங்களுக்குப் பெருமையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூல்ஸை என்போர்ஸ் செய்வது நல்ல அட்மினிஸ்ட்ரேஷன் வேண்டுமென்பதற் காகத்தான் You took it as a prestige issue அதனால் தான் இந்த நிலையே ஏற்பட்டது. சாதாரணமாக எம்.எல்.ஏக்கள் உறுப்பினர்களாக இருக்கும் போது சட்டசபை விடுதியில் தங்குகிறார்கள். பதவி போனவுடன் என்னவாகிறது? ஏற்கெனவே இருந்த பெஸிலிட்டீஸை வித்ட்ரா செய்கிறார்கள், இல்லை என்றால் ஒவர் லாக் செய்கிறார்கள். உங்கள் காலத் தில் நடந்தது எல்லாக் காலத்திலும் அதுதான் வழக்கம். சட்ட மன்ற அலுவலகத்திலிருந்து அதைச் செய்வது வழக்கம்.

(முற்பகல் 10.30)

திரு. க. அன்பழகன் : உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை இழப்பார்கள்; அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற 'பெசிலிடிஸ்' சம்பளம் வராது; அலவன்சு தரப்பட மாட்டாது. ஆனால், கட்சிகள் அப்படி அல்ல. கட்சிகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களை காலி செய்யச் சொல்வது நியாயமில்லை. கட்சி களை இந்த அவை மதிக்கின்றதா, இல்லையா என்பதுதான். கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சி என்று பொதுப் படையாகச் சொல்லாதீர்கள். சட்டமன்ற கட்சிகளுக்கு அந்தந்த கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பதான் இடம் இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் விதி.

திரு. க. அன்பழகன் : விதி இருக்கலாம். நாங்கள் அணி என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், தாங்கள் கட்சிக்கு உள்ள அந்தஸ்தை கொடுக்கவில்லை. எதிர்க் கட்சிகளுக்கு கொடுக்கவேண்டிய மரியாதை கொடுக்கப்படவில்லை. மே லவையிலே உள்ள கட்சிகளின் அந்தஸ்து லெஜிஸ்லேச்சருக்குள் வராது என்று சொல்கிறீர்களா?

[1985 ஜூன் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே சட்டமன்றம்
இயங்கினால்தான் மேலவைக்கு அலுவல் தர இயலும்.
எனவே, அந்தவகையில் இப்படி பிரச்சினை எழுவதற்கு இடம்
வேண்டாம் என்பதற்காகத்தான் இதை இங்கே விவாதிக்க
வேண்டாம் என்று சொன்னேன்.

திரு. க. அன்பழகன் : மக்கள் மரியாதை கொடுத்து
நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மக்கள் கொடுத்துள்ள
மரியாதைக்கு ஏற்ப நான் உங்களுக்கு இடம் ஒதுக்கியிருக்
கிறேன்.

திரு. க. அன்பழகன் : மக்கள் கொடுத்துள்ள மரியாதைக்கு
ஏற்ப தாங்கள் இடத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள்.
நான் ஏற்றுக்கொள்கிறேன். நன்றி. மக்களால் அதை
தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கும் தேர்ந்
கள்தான் மேலவை உறுப்பினர்கள். அவர்களும் சேர்ந்துதான் உறுப்பினர்
லெஜிஸ்லேச்சர். கட்சிகள் என்பது சட்டமன்றம் இயங்கு
கின்றபோதுமட்டும் இயங்குவது இல்லை? சட்டமன்றம் இயங்
காதபோதும், இயங்குவதுதான் கட்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நான்
சொன்னேன். கட்சிகள் செயல்பட வேண்டிய இடம் வேறு;
சட்டமன்ற கட்சிகள் செயல்படும் இடம் வேறு.

திரு. க. அன்பழகன் : தயவுசெய்து மன்னித்துக்கொள்ள
வேண்டும்.. சட்டமன்றம் இயங்காதபோதும், இயங்கிக் கொண்
டிருப்பதுதான் கட்சி. பாராளுமன்றத்திலே இன்றைக்கும்
லோக்தள் கட்சி, பாரதிய ஜனதா கட்சிக்கு 2, 3 உறுப்
பினர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுக்கப்
பட வேண்டிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. திராவிட
முன்னேற்றக் கழகத்திற்கு பாராளுமன்றத்திலே கொடுக்கப்
பட்ட இடம் எடுக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
அது ஒரு நீண்ட தொடர்கதை. ஆனால், எடுக்கப்படவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகமும் இன்னும் அங்கே ஒரு அறையை
இரண்டாகப் பங்கிட்டுக்கொண்டு, ஏற்கனவே இருந்த முறைப்
படி, அண்ணா தி.மு.க. வில் முன்பு 2 பேர்கள் இருந்தார்கள்,
இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தில் 2, 3 பேர்கள்
இருக்கிறார்கள். ஆனால், அங்கே தொடர்ந்து இந்த நிலை
நீடிக்கிறது. எப்படியோ அங்கே ஜனநாயகம் நிலவுகிறது.



1985 ஜூன் 3] [திரு. க. அன்பழகன்]

இறுதியாக நான் ஒன்றைத் தங்களுக்குத் தெரிவிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன். தவறான வார்த்தைகள் சட்ட
மன்ற இலாகாவால் பயன் படுத்தப்பட்டு, பலாத்காரமாக
எடுத்துக்கொள்ளப்படும் என்ற முடிவு எடுக்கப்பட்டது.
சட்டமன்றத்தில் எதிர்க் கட்சிகளுக்கும், எதிர் அணிகளுக்கும்
காட்டப்பட வேண்டிய மரியாதை காட்டப்படவில்லை.
அப்படிப்பட்ட ஒரு நடைமுறையை இந்த சட்டமன்ற
அலுவலகம் பின்பற்றி இருக்கிறது. இங்கே தாங்கள் பேசிய
தைக் காண்கிறபோது, இவ்வளவையும் நீங்கள்தான் நடை
முறைப்படுத்த வேண்டுமென்று சொன்னதாக அறிகிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சற்று தாங்கள்
அமருங்கள். சொல்கிறேன். இந்த அலுவலகம் என்னுடைய
தலைமையில்தான் இயங்குகிறது. சட்டமன்றச் செயலகத்தில்
எது நடந்தாலும், அதற்குப் பொறுப்பு நான்தான். தவறு
ஒன்றும் நடக்கவில்லை. நான் இந்த இடத்தில் உட்கார்ந்து
இருப்பதால் ஒன்றும் பேச முடியவில்லை; நீங்கள் சொன்ன
தால் நான் சொல்கிறேன், உங்கள் சட்டமன்ற கட்சி
அறையில் யார் யார் இருந்தார்கள்? என்னென்ன வைத்திருந்
தார்கள்? சொல்லட்டுமா?

திரு. அ. ரகுமான்கான் : நீங்கள் இப்படி பொறுப்பற்ற
முறையில் பேசுவது சரியா? (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொறுப்பற்ற முறை
யில் யார் யார் நடந்துக் கொள்கிறார்கள் என்பது எல்லோ
ருக்கும் தெரியும். பத்திரிகைகளில் எப்படி எல்லாம் எழுதி
னீர்கள் என்பதை நானும் படித்துப் பார்த்தேன். யார்
யாரைத் தாக்கினார்கள் என்று மனசாட்சியைக் கேட்டுச்
சொல்லுங்கள். Everybody is answerable to his concience.
(கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர்
அவர்களே, இதிலே இரண்டு பிரச்சினைகள். ஒன்று அவை
தந்த விதியின் படி தாங்கள் நடத்ததாகக் குறிப்பிடுகிறீர்கள்.
ஆனால் எதிர்க்கட்சி அணியைச் சார்ந்த, திராவிட
முன்னேற்றக் கழகம் உட்பட அவர்கள் அணியைச் சார்ந்த
கட்சிகள், அந்த விதியே தவறானது; அந்த விதியே சட்டத்
திற்குப் புறம்பானது என்று வாதாடுகிறார்கள். இந்த விதி
களைத் திருத்த வேண்டுமென்றால் அதற்கு தனியாக வழி
முறைகள் இருக்கின்றன.

அடுத்து, கட்சிகளுக்கு வசதிகளை ஏற்படுத்தித்தருகிற முழு
உரிமையும் தங்களுடைய ஆளுகையின் எல்லைக்கு உட்பட்டது.
ஆகவே, எத்தனை உறுப்பினர்கள், ஒவ்வொரு கட்சியின் சார்பில்
...

உட்கார்ந்திருக்கிறார்களோ, அந்த உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இடத்தை ஒதுக்குவது உங்களின் ஆளுகைக்கு உட்பட்டது. ஆகவே, விதி தவறானது என்றே வைத்துக் கொண்டாலும்கூட, அந்தந்தக் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஜனநாயக முறைப்படி செயல்பட தேவையான இடம் ஒதுக்கித்தரும் உரிமை தங்களுக்கு இருக்கிறது. அதையும் நீங்கள் தெளிவு படுத்தியிருக்கிறீர்கள். பேரவைத் தலைவரின் நடவடிக்கைகளையும் செயல்களையும் இந்த மன்றத்தின் சார்பாக அவர் செய்ததாக ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, இந்த மன்றத்திலே இருக்கிற ஒரு பிரிவினரே, அந்த நடவடிக்கைகளை—அதாவது இந்த மன்றத்தின் நடவடிக்கைகளை எதிர்த்து இந்த அவைக்குள் பேசுவது என்பதும், அதற்காக அவையினுடைய காலத்தை பயன்படுத்துவது என்பதும் முறைதானா என்று நான் அறிய விரும்புகிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் மேலும் சூடேறி நம்முடைய அவையின் கன்னியத்தை மீறுகிற வகையில் போகாத அளவுக்கு எல்லோரும் நடந்து கொள்ள வேண்டும் என்பது அனைத்துப் பேருடைய ஆசை. அந்த வகையில் நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பாக உங்களுக்கும், உங்கள் மூலமாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மற்றக் கட்சித் தலைவர்களுக்கும் ஒரு வேண்டுகோளாக விடுக்க விரும்புகிறேன். விதி திருத்தம் என்பது எந்த அளவுக்கு எப்படி இருந்தாலும், அதைப்பற்றி வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் செய்துக் கொண்டே போவோமேயானால், எத்தனையோ விபரீதமான விளைவு ஏற்படும். ஆகவே, தங்களுடைய செயலகத்திற்கோ, எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்றவர்களுடைய அந்தஸ்திற்கோ ஏதோ பங்கம் ஏற்பட்டிருக்கிறது என்ற ஒரு கருத்தை மேலும் உண்டாக்கக் கூடாது.

இன்னும் 4½ ஆண்டுகள் நாம் சுமூகமாக இங்கே இருந்து, இந்த அவையை எடுத்துக் காட்டாக நடத்த வேண்டியிருக்கிற காரணத்தால் எல்லோரும் பின்னிப்பிணைந்து அவையாக இருக்கிற காரணத்தால் அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும் என்று பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, இந்த விவாதத்தை மேலும் மேலும் அவையில் தொடர்ந்து கொண்டுபோய், ஒவ்வொருவருடைய ஸ்டாண்டையும் நியாயப்படுத்துவது என்றால், இன்றைக்கு இல்லை—அவர்கள் சொல்வது போல எத்தனை நாட்கள் ஆனாலும் இந்தப் பிரச்சினை முடியாது. ஆகவே, நான் கேட்டுக் கொள்வது எல்லாம், இதை இன்னும் உணர்ச்சி வசப்படுத்தப்பட



பிரச்சினையாக ஆக்காமல், தாங்களும்சரி, எதிர்க்கட்சி அணியிலே இருக்கிற பேராசிரியர் அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும், தங்களுடன், தங்கள் அறையில் கலந்து பேசி, ஒரு சுமூகமான முடிவுக்கு வர வேண்டும்; அவையை சுமூகமான முறையிலே நடத்துவதற்கு எல்லாத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். அதற்கு நீங்கள் தேவையான முயற்சிகளை செய்ய வேண்டும். பேராசிரியர் அவர்களும், மற்றவர்களும் அதற்கு சம்மதம் தெரிவித்து, ஒரு வழிகாண வேண்டும் என்று மிகப் பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

(முற்பகல் 10–40)

திரு. கு. ரமணி: என்னுடைய கட்சிப் பிரச்சினையைப் பற்றியும் எடுத்துக்கூற அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சிப் பிரச்சினையை இங்கே பேச வேண்டாம். இது மக்கள் பிரச்சினையைப் பற்றி பேச வேண்டிய இடம். நம்மைப் பற்றி பேசுவதற்கா நாம் இங்கே இருக்கிறோம்?

திரு. கு. ரமணி: நான் சொல்லப் போகிற விஷயத்தையும் கொஞ்சம் கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு இது பற்றி கடிதம் எழுதியாகிவிட்டது. தினமும் உங்கள் சட்டமன்றக் கட்சிக் கூட்டம் கூடினாலும், எழுதிக் கொடுங்கள், அறை ஒதுக்கித் தருகிறோம் என்று சொல்லியாகிவிட்டது.

திரு. கு. ரமணி: எங்களுடைய கடிதங்களைப் பற்றி நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொன்றையும் சொல்கிறேன். கடிதம் எழுதுவதோடு நீங்கள் இருந்து விட்டீர்கள். ஆனால், வேறு யாரோ ஒருவர் இங்கே அறிக்கை விட்டார்கள்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறோம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பாதிக்கப்படவே இல்லை. தினமும் கூடினாலும் உங்களுக்கு அறை உண்டு.

திரு. கு. ரமணி: இந்த நாட்டின் வாடகை வீட்டில் குடியிருப்பவர்களுக்குக்கூட நடக்காத சம்பவம் நடத்தப்பட்டிருக்கிறது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்கைந்து கட்சிகளுக்கு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. என்றைக்கெல்லாம் கூடவேண்டுமென்று தெரிவித்து கடிதம் எழுதினால் உங்களுக்கு அறை கொடுக்கப்படும். (குறுக்கீடு). ஒன்றை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். சட்டமன்ற கமிட்டிகளை நடத்துவதற்கு இடமே இல்லை. புதியதாக பல சட்டமன்றக் கமிட்டிகளை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். அந்தக் கமிட்டி கூட்டங்களை எல்லாம் வேறு எங்கே போய் நடத்தச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) சட்டமன்றப் பணிகளுக்காகத்தான் அந்த அறைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. வேறு யாரிடமோ, அரசாங்கத்திடமோ அந்த அறைகள் ஒப்படைக்கப்படவில்லை.

திரு. கு. ரமணி : எங்களுக்கு என்னவென்று கடிதம் எழுதப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது என்றைக்கெல்லாம் கூட்டம் கூடுகிறீர்களோ அன்றைக்கெல்லாம் உங்களுக்கு அறை ஒதுக்கப்படும். மற்றபடி உங்களுக்கு பெர்மனென்ட்டாக அறை கிடையாது என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கட்சிகளுக்கு அறைகள் ஒதுக்குவது தொடர்பாக தங்களுடைய அறையிலே பேசி முடிவு செய்து கொண்டு, என்னுடைய மானியக் கோரிக்கைக்கு கொஞ்சம் நேரம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் சொன்னேன், இங்கே மக்கள் பிரச்சினையைப் பற்றித் தான் பேச, வேண்டுமென்று.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த அவையில் நிகழ்கிற நிகழ்ச்சிகளைப் பொறுத்தும், இந்த அவை விவாதித்து முடிவு கட்டவேண்டிய பிரச்சினைகள் குறித்தும் பல சட்ட திட்டங்கள் விதிமுறைகளில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கின்றன. பேரவைத் தலைவர் என்ற முறையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும், எடுக்க வேண்டிய முடிவுகளும் தனியாக இருக்கின்றன. ஆனால், இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலும், இந்த அவையிலே யார் யார் எந்தெந்த இடத்திலே உட்கார வேண்டுமென்று முடிவு கட்ட வேண்டிய முழு பொறுப்பும் தங்களிடத்திலே இருக்கிறது. யார் யாருக்கு எப்படிப்பட்ட அறைகளை ஒதுக்குவது என்பதும் தங்களுடைய முழு பொறுப்பாகும். அரசிற்கும், இதிலே எடுக்கப்பட்ட முடிவிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.



இரண்டாவது, தங்களுடைய ஆணையை ஏற்றுத்தான் இந்தச் சட்டமன்றப் பேரவைத் துறை இயங்க வேண்டும். இயங்கி வருகிறது, இயங்கியும் வந்தது. அந்த முறையில் தான் அவர்கள் அறிக்கைகள் விட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் தாங்கள் எடுத்துச் சொன்னதைப் போல இங்கே விவாதித்து முடிவு கட்ட வேண்டிய நிலைமை ஏற்படாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப்போல—இந்தப் பிரச்னை இங்கே விவாதித்து முடிவு கட்டக்கூடிய ஒன்றல்ல.

ஆனால், சட்டதிட்ட விதிமுறைகள் இருந்தாலும், ஒரு தன்மையின் அடிப்படையில், சிலபல வகைகளில், தங்களுடைய மேற்பார்வையின் கீழே என்னென்ன உரிமைகள், என்னென்ன வசதிகள், என்னென்ன தன்மைகள் என்று தாங்கள் முடிவெடுத்து, அந்த முடிவின்படி சிலபல வசதிகள், வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வழிவகை இருக்கிறது. ஆகவே, இப்போது எவ்வளவு நேரம் பேசினாலும் கூட, இந்த அவையிலே அதுபற்றி ஒரு முடிவுக்கு வர முடியாது. அரசுக்கு இது சம்பந்தமில்லாத பிரச்சனை. இந்த அவையிலே, இந்தக் கருத்தைப் பற்றி பேச இடமில்லை, விவாதிக்க இடமில்லை என்று தாங்கள் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். தங்களுடைய அறையிலே, வந்து அதைப்பற்றி விவாதிக்கலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

ஆகவே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்கள் மட்டுமல்லாமல், இந்தப் பிரச்சனையில் ஈடுபட்டு இருக்கிற தலைவர்கள் அனைவரும் தங்களுடைய அறையில் தங்களுடன் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும். தங்களுடைய பிரச்சனையை தாங்கள் எடுத்து வைத்து, அவர்கள் தங்களுடைய பிரச்சனையை எடுத்து வைத்து, ஒரு சுமூகமான முடிவுக்கு வர அது உதவக்கூடும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போன்று, அவை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதால், இங்கே இது பற்றி மேலும், விவாதிக்க வேண்டாம்; விவாதிப்பதன் மூலம் ஓர் முடிவு காண இடமில்லை. எனவே, எல்லோரையும் தங்கள் அறைக்கு அழைத்து,—டிஸ்கஷன் மூலமாக ஒரு முடிவு பண்ண வேண்டுமே தவிர—"பை டிஸ்கஷன் அக்ராஸ் தி டேபிள்" என்று சொல்வார்கள், அந்த வகையில், பி.ஏ.சி. என்று அல்ல, இந்தப் பிரச்சினையைப் பொறுத்து, அந்தந்தக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி தங்களுடைய விளக்கங்களை அவர்களுக்குச் சொல்லி, அவர்களுடைய விளக்கங்களைச் சொல்லுகின்றபோது, தாங்கள் தங்களுடைய உரிமையை, தங்களுடைய அதிகாரத்தை மற்றவற்றையும் பயன்படுத்தி, அந்தக் கோரிக்கைகளையும், மற்றவைகளையும் எந்த வகையில் சீர்படுத்தலாம் அல்லது செம்மைப்படுத்தலாம் என்பதைக் கண்டறிந்து, அந்த வகையில் ஒரு முடிவு எடுப்பதுதான் நல்லது. அதற்கு தாங்கள் நேரத்தை ஒதுக்கி, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தி

னுடைய தலைவர் மட்டுமல்லாமல் மற்ற தலைவர்களை எல்லாம் அழைத்து வைத்து, ஒரு முடிவு காணவேண்டுமே தவிர, இல்லா விட்டால், இந்தப் பேச்சு வார்த்தையின் மூலமாக இந்த விவா தத்தின் மூலமாக எந்த ஒரு முடிவும் காண முடியாது. இதற்கு திட்டவட்டமாக ஒவ்வொருவரையும் கன்வின்ஸ் பண்ண முடி யாது. ஆகவே, அதற்கு தாங்கள் ஏற்பாடு செய்தால் ஒரு சுமூகமான முடிவு வருவதற்கு கட்சித் தலைவர்கள் ஒத்துழைப்புத் தருவார்களானால், தாங்கள் அதற்கான ஏற்பாட்டைச் செய்ய லாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நான் முத லிலே சொன்னேன். அந்தமாதிரி பேசலாம் என்று. (குறுக் கீடு). எல்லோரும் விதிகளின் படி செயல்பட வேண்டும். (குறுக் கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் எழுப்புகிற அந்தப் பிரச்சினையைப் பற்றி கூட, தனி யாக உட்கார்ந்து பேசி முடிவு காண வேண்டிய ஒன்றே தவிர, இங்கேயே விவாதித்து முடிவு கட்ட முடியாது. ஆகவே, இங்கே உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரையும் தனி யாகக் கூட்டி வைத்து, இந்தப் பிரச்சினையைப் பற்றி கலந்து பேசி ஒரு சுமூகமான முடிவை எடுக்க இயலுமா என்பதைத் தாங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். முடிவு கட்டவேண்டி யது தாங்களாக இருக்கிறீர்கள் என்ற காரணத்தால், இந்த ஏற்பாட்டைச் செய்தால், ஒரு சுமுகமான முடிவு ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

திரு. க. அன்பழகன் : கட்சிகளுடைய அலுவலகங்கள் சீல் வைக்கப்பட்டு இருக்கின்றன. அங்கே இருந்த பொருள்கள் தூக்கி எறியப்பட்டு இருக்கின்றன. அங்கே எப்படிப்பட்ட குறைபாடு கள் ஏற்பட்டன என்பது எல்லாம் அவரவர் விவாதத்திலே, பேசும்போது உண்மைகள் வெளிவரும். இந்த நடவடிக்கை எடுப்பதற்கு முன் அந்தந்தக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி அவர்களது சம்மதத்தைப் பெற்று, இந்த முடிவை எடுக் காமல், மாறாக (குறுக்கீடு). நான் பேசும்போது மைக்கை ஆப் பண்ணிவிடுகிறீர்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி ஒன்றும் இல்லை. திரும்பத் திரும்ப நீங்கள் முன்பு சொன்னதையே சொல்கிறீர்கள். விதிமுறைகளுக்கேற்ப உங்கள் கட்சி உறுப்பினர்களது எண் ணிக்கை எவ்வளவோ, அவ்வளவு பேர்களுக்கு ஏற்ற இடம் உங் களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.





(முற்பகல் 10.50)

திரு இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். விதிமுறைகளைக் காட்டி, எதிர்க்கட்சித் தலைவர்களை கலந்து கொள்ளாமல் சட்டமன்ற எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்பட்ட அறைகளை காலி செய்து, சீல் வைத்து, அவற்றின் உள்ளே இருந்த சாமான்களை எல்லாம் தூக்கி வெளியே வீசி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுபடியும் அதையேத் தான் பேசுகிறீர்கள். காலிப் பண்ணித் தர மறுக்கும்போது, சாதாரண குடிமகனுக்கு என்ன நேருமோ அதுதான் உங்களுக்கும் நேரும். (குறுக்கீடு). ஒரு கட்சி என்று வைத்துக்கொண்டால் நாம் என்ன வேண்டுமானாலும், செய்யலாம் ; தனிப்பட்ட மனிதனுக்கு ஒரு சட்டம் ; கட்சியினர் என்றால் வேறு சட்டமா ? (குறுக்கீடு).

திரு க. அன்பழகன் : அப்படி என்றால் கட்சிகளை மதிக்க மாட்டீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சிகளை மதிக்க மாட் டேன் என்று நான் சொல்லவில்லை. மதிப்பேன் என்று சொல் கிறேன். நாஞ்சிலார் அவை முன்னவராக இருந்த காலத்திலேயே அவர் இப்படி எழுதிவைத்திருப்பது இந்த பைலில் இருக்கிறது.

"Each successive Presiding Officer will face the same Problem."

திரு இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : ஒரு சின்னப் பிரச் சினை. இடம் மாறி உட்கார்ந்து இருக்கிறீர்கள் என்று கருது கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை சம் பந்தமாக இதுவரை ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. என்னுடைய அறையில் இதைப்பற்றி கலந்து பேசலாம் என்று சொன்னேன் ; என்னுடன் ஒத்துழைக்க வேண்டும். நீங்கள் ஏற் கனவே ஒரு முடிவுக்கு வந்திருந்தால் அதைச் சொல்லிவிடுங்கள்.

திரு அ. ரகுமான்கான் : அவையை அட்ஜார்ன் செய்துவிட்டு பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி பேசுவதற்காக அட்ஜர்ன் செய்ய வேண்டுமா ? (குறுக்கீடு) ஜனநாயகத்தின் அங் கம் இந்த சட்டமன்றம் தான். நீங்கள் இந்தச் சட்டமன்றம், சட்டமன்றச் செயலகம் ஆகியவற்றை சரியாக மதிக்கவில்லை என்றால் என்ன செய்வது ? (குறுக்கீடு).

திரு க. அன்பழகன் : பேரவைத் தலைவர் பதவிக்கு இருக்கிற சமமான மரியாதை கட்சிக்கும் உண்டு. இந்த அவையிலே தங் களுக்கு மரியாதை. . . . கட்சிக்கு வெளியில் மக்களிடம் மரியாதை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை என்று சொல்ல வில்லை. அது வெளியில் பேசவேண்டிய பிரச்சினை. மக்களுக் காகத் தான் நாம் இந்த அவையில் பேசவேண்டும். (குறுக்கீடு) எவ்வளவு நேரம் வீணாக்கினாலும், மக்களுடைய வரிப்பணத்தை வீணாக்குகிறீர்கள், எவரிடி (குறுக்கீடு) தனிப்பட்ட முறையில் கட்சிக்கு இங்கே அந்தஸ்து இல்லை. எல்லா உறுப்பினர்களும் சமம்தான். சட்டமன்றக் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் தான் தனியே அவர்களுக்கு வசதி கிடைக்கும். (குறுக்கீடு) உறுப்பினர்கள் அனைவரும் மக்களுக்குப் பணியாற்ற வேண்டும்.

திரு கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே. . . .

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, உறுப்பினர்கள் இடம் மாறி இருந்து பேசலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அவரவர் கள் இடத்திலிருந்து பேசவேண்டும்.

திரு கி. மனோகரன் : சபாநாயகர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கிற அசெம்பிளி ரூல்ஸ் is framed based on Article 208 of the Corstitution of India. Article 208 reads as follows :

"Art. 208 Rules of Procedure—(1) A House of the Legislature of a State may make rules for regulating, subject to the provisions of this Constitution, its procedure and the conduct of its business." அத்தோடு முடிந்து போயிற்று.

சர்ச்சைக்குரிய விஷயம் எதுவென்றால், நமது சட்டப் பேர வைச் செயலர் உங்கள் சார்பாக அறிக்கை விட்ட நேரத்தில் விதி களில் இடம் இருக்கிறது என்றும், அந்த விதிகளின் அடிப்படையில் தான் 'கட்சி' என்றும், 'குரூப்' என்றும் இன்டிபென்டென்ட் என்றும் நாங்கள் முடிவு செய்திருக்கிறோம் என்று கூறியதோடு



மட்டுமல்லாமல், காலி செய்ய வைக்கிற உரிமையும் சபநாயகருக்கு உண்டு என்ற கருத்தோடு தமது அறிக்கையில் தெரிவித்திருக் கிறார்கள். ஆனால் அதே நேரத்தில், இன்னொரு அதிகாரி— எப்படி இந்தக் குழப்பங்கள் ஏற்படுகின்றன உங்களது வட்டாரத் திலே என்று எனக்குத் தெரியாது—அறிக்கை விடுகிறபோது அவர் சொன்னார். காலி செய்ய வைப்பதோ, அல்லது அறைகளை ஒதுக்குகின்ற முறைகளோ, இந்த விதிமுறைகளில் இல்லை என்ற கருத்தை பத்திரிகை மூலமாகத் தெரிவித்திருக்கிறார். என்னைப் பொறுத்தவரையில். . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையில் வந்துள் ளதை எல்லாம் வைத்துப் பேசவேண்டாம். பத்திரிகைகளில் என் னென்ன வருகின்றன என்பதை நானும் பார்த்து வருகிறேன். நம் நாடு அப்படிப் போய்க்கொண்டிருக்கிறது.

திரு கி. மனோகரன் : நான் விதிமுறைகளையே படித்துக் காட்ட விரும்புகிறேன். 'பிரசிங்க்ட்ஸ் ஆஃப் தி ஹவுஸ்': உங்களது ஆளுகைக்கும், உரிமைக்கும், கட்டளைக்கும், ஏவு தலுக்கும் உரிய பகுதிகள் என்று கருதப்படுகின்ற. . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களை ஒருவர் அடிக்க வந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? நானும் அதைத்தான் செய் வேன். நீங்கள் உங்களுடைய இலக்கியத்தை இதிலே தயவுசெய்து காட்டாதீர்கள். அந்த அளவுக்கு எனக்கு இலக்கியப் பயிற்சி இல்லாமல் இருக்கலாம்.

(முற்பகல் 11-00)

திரு கி. மனோகரன் : இலக்கியத்தை நாம் இரண்டு பேர் களும் தனியாக வைத்துக் கொள்வோம். நான் இப்போது 'பிரிசிங்க்டஸ்' பற்றிப் பேசுகிறேன்.

'In the case of the members of the Legislative Assembly. . . . . . the Assembly Chamber, Lobbies and the rooms in which associated offices are situated, the Ministers rooms, the Library, the Canteen and the Committee Room in Fort St. George, the Committee Room in the Legislators' Hostel and the Legislature Library in the Government Estate, Anna Salai and such other places or buildings as might be named by the Speaker from time to time together with verandahs and steps to these buildings and the pathways leading from the Assembly Chamber to the other aforesaid buildings and shall be applicable only while the Assembly or any of its Committees or sub-Committees sits and one hour before and after such a meeting.'

என்று விதியில் உள்ளதை நான் தங்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதிலே எந்த இடத்திலேயும்.

'Rooms allotted to political parties.

என்று இல்லையென்ற காரணத்தால் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

'The Hon. Speaker has no jurisdiction to give instruction to vacate the rooms allotted.'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களே சட்டமன்றத்திறுடைய அதிகார வரம்புகளைக் குறைப்பதற்கு 'வாலண்டரியாக' முன்வருகிறீர்கள். இப்படி நான்கு பேர்கள் சொன்னால் இருக்கும் அதிகாரமும் தானாகவே போய்விடும். சாதாரண டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பிற்கு இருக்கிற ஜூரிஸ்டிக்ஷன், சட்டமன்றத்திற்கு இல்லையா? சட்டமன்றத்திற்கு இதில் எப்படி ஜூரிஸ்டிக்ஷன் இல்லாமல் போகும்?

திரு க. அன்பழகன் : சட்டமன்ற ஜூரிஸ்டிக்ஷன் வேறு, சபாநாயகர் டிஸ்க்ரிஷன் வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபாநாயகரது ஜூரிஸ்டிக்ஷனை இதில் குவஸ்டின் பண்ணக்கூடாது. ஒரு தந்தியையே என்னிடம் காட்டினார்கள். உங்களையெல்லாம் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகத்தான் ஜூரிஸ்டிக்ஷன் கொடுத்ததே.

திரு அ. ரகுமான்கான் : நீங்கள் ஸ்பீக்கர், நீங்களே வயலேட் பண்ணலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் வயலேட் பண்ணவில்லை.

திரு க. அன்பழகன் : தாங்கள் புரிந்துகொள்ளாமல் ஆத்திரப்படுகிறீர்கள். ஜூரிக்ஸ்டிக்ஷனிலே கட்சி அலுவலகங்களை ஏற்கெனவே இருந்தவர்கள் எதற்காக வைக்கவில்லை என்றால் நீங்கள் சட்டமன்ற உறுப்பினரை வெளியேற்றுகிறபோது அந்தச் சட்டமன்ற உறுப்பினர் இன்ன இன்ன இடத்திற்கு வரக்கூடாது என்று சொல்கிறபோது அவர்களுடைய கட்சி அலுவலகத்திற்கு அவர்கள் போவதை நீங்கள் தடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் கட்சி அலுவலகம் தங்களுடைய ஜூரிஸ்டிக்ஷனிலே ஏற்கெனவே வைக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலாட் செய்யும் பவர் எனக்கு இருக்கிறது. அது பெசிலிட்டிஸ் என்பதில் வருகிறது. நான் அலாட் செய்வது போலவே அதை கான்சலும் செய்யலாம். நீங்கள் சொல்வதைப் பார்த்தால் எனக்கு அதிகாரம் இல்லை என்பதாக சிவில் கோர்டிலே போய் இன்ஜங்ஷன் வாங்கி வந்து விடுவீர்கள் போல் இருக்கிறது. சபாநாயகரின் அதிகாரத்தை குவஸ்டின் பண்ணினால் அது அப்படி வந்துவிடும். தேர்தலில் வெற்றி பெறாத எம். எல். ஏ-க்கள் கூட தம் அறையை விட்டு வெளியே போகமாட்டார்கள். எல்லோரும் இன்ஜங்ஷன் வாங்கிக் கொண்டு வந்துவிடுவார்கள்.

திரு. கி. மனோகரன் : இவ்வளவு தெளிவாக உங்களது அதிகார எல்லைகள் வரம்புகள் வரையறை செய்யப்பட்டதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அறைகள் ஒதுக்குகிற அதிகாரம் உங்களுக்கு உண்டு என்று விதிகளில் இல்லாத நிலையில்
..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அவை முன்னவராக இருந்தவர்கள். எத்தனை தடவைகள் கையெழுத்துப் போட்டிருக்கிறீர்கள். அதையெல்லாம் வைத்திருக்கிறேன். அதையெல்லாம் இப்போது விவாதித்தால் ஒரு நாளாகும்.

திரு. கி. மனோகரன் : நானும் வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லுங்கள் பார்க்கலாம் அந்த நோட்டிலேயே "Each successive Presiding Officer will face the same problem" என்று இருக்கிறது.

திரு. கி. மனோகரன் : குழுக்கள் கூடுவதற்கு இடம் இல்லை ஆகவே தேவையான இடம் வேண்டுமென்ற புதிய காரணத்தை நீங்கள் கண்டுபிடித்து இருக்கிறீர்கள். மன்னிக்க வேண்டும். நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் ரூல்ஸ் கமிட்டியிலே உறுப்பினராக இருந்த நேரத்திலே அப்போது ஸ்பீக்கராக இருந்த எனது அருமை நண்பர் திரு முனு ஆதி அவர்கள் அதற்குத் தலைவராக இருந்த நேரத்திலே ரூல்ஸ் கமிட்டிக் கூட்டத்தை எங்கே கூட்டலாம் என்று நான் கேட்ட நேரத்திலே நீங்களே மனமுவந்து உறுப்பினர்களும் மனமுவந்து குற்றாலம் சீசன் நன்றாக இருக்கிறது, அங்கேயே கூட்டலாம் என்று சொல்லி
..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது மட்டுமல்ல, எல்லா குழுக்களும் அப்படிக் கூடுவதுண்டு. இப்போதும் போய்விட்டு வந்திருக்கிறார்கள். அடுத்தமாதம் அங்கே போகவேண்டாம் என்றுசொல்லுங்கள், நிறுத்தி விடுகிறோம்.

திரு இ. மனோகரன் : குழுக் கூட்டங்கள் நடத்துவதற்கு
இடம் இல்லை என்று சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகத்
திற்கு ஒதுக்கப்பட்ட அறையைப் பறித்துக் கொள்வது அல்லது
ஜனதாக் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட அறையைப்
பறித்துக் கொள்வது என்று நீங்கள் முடிவு எடுத்தால் அது ஜன
நாயகத்திற்கே விரோதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜனநாயகத்திற்கு விரோ
தம் அல்ல ; உங்களுக்கு ஜனங்கள் அந்த இடத்தைத்தான் கொடுத்
திருக்கிறார்கள். அதற்கு மேல் ஜனநாயகத்தைப்பற்றி என்ன
பேசுவது ?

திரு. இ. மனோகரன் : ஜனநாயகத்தைப் பற்றி தாங்கள்
எனக்குக் கற்றுத் தர வேண்டியதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் என்னைவிட
சுமார் 20 வயது மூத்தவர்கள்.

திரு. இ. மனோகரன் : எனவே, நீங்கள் இப்படிப்பட்ட
முடிவை எடுத்திருந்தால், வளர்ந்துவரும் சபாநாயகராகிய தங்
களுக்கு அது களங்கத்தை உருவாக்கும்; அது ஜனநாயகத்திற்குப்
பேரிடியாக அமையும்.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, கட்சிகளுக்கு அறைகளை ஒதுக்கு
கின்ற அதிகாரம் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு இருக்கின்ற
காரணத்தால் அவற்றை எடுக்கவோ, மாற்றவோ அதிகாரம் இருக்
கிறது. அதைத் தாங்கள் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்
பொழுது ஏற்படுகின்ற பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக இன்னும்
எவ்வளவு மணி நேரம் இங்கு பேசினாலும் ஒரு முடிவிற்கு வர
இயலாது. ஆகவே, எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் தனியாக
நேரம் ஒதுக்கீடு செய்து பேசி அவர்களுடைய கருத்தக்களைக்
கேட்டு, தாங்கள் எடுத்துச் சொல்ல விரும்புகின்ற கருத்துக்களைச்
சொல்லி சுமுகமான முடிவுக்குவர இடம் இருக்கிறது. அதற்கு
ஏற்பாடு செய்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 11-30 மணிக்கு என்
னுடைய அறைக்கு வந்து அவர்கள் பேசலாம்.

திரு. க. அன்பழகன் : நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாதிக்கப்படவில்லை;
அந்த வார்த்தையை ஏன் சொல்கிறீர்கள்.





திரு க. அன்பழகன் : நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறோம்.
நாங்கள் கைது செய்யப்பட்டோம். இன்னும் எங்களுடைய கட்சிப்
பொருட்கள் எங்களிடத்திலே ஒப்படைக்கப்படவில்லை. எங்க
ளுடைய கட்சிப் பொருட்கள் எங்களிடத்திலே இன்னும் ஒப்படைக்
கப்படாத நிலையில், நாங்கள் இந்தச் சட்டமன்றத்தில் தங்க
ளுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு அமர்ந்திருக்க வேண்டுமென்று
எதிர்பார்ப்பது முறையல்ல. இதைப்பற்றிப் பேசித் தீர்க்க
விரும்பினால் உடனடியாக அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தைக்
கூட்டிப் பேசித் தீர்க்க வேண்டும். அப்படித் தீர்க்க முன்வராத
போது இந்த அவையிலே நாங்கள் கலந்து கொண்டு செயலாற்று
கின்ற முறையில் தாங்கள் எங்களை வைக்கவில்லை என்பதைத்
தான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இந்த அவை
யிலே கலந்து கொண்டு செயலாற்ற வேண்டும் ; உங்கள் கருத்துக்
கள் நாட்டிற்கு முக்கியம். நீங்கள் இருந்து கலந்து கொண்டு
பேச வேண்டும். அதைத்தான் நான் விரும்புகிறேன். இதை
நான் மனதாரச் சொல்கிறேன். வேறு எந்த எண்ணத்தையும்
நினைக்காமல், என்னைப் பார்த்து நினைத்தால், உங்களுக்கு
ஒன்றும் வராது.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தாங்கள் சபா
நாயகராக இருக்க வேண்டும். அடுத்த முறை தேர்தல் நடந்து
தாங்களே சபாநாயகராக வர வேண்டும். அந்த அளவிற்குப்
பல்லாண்டு காலம் தாங்கள் சபாநாயகராக இருக்க வேண்டும்.
(குறுக்கீடு) சபாநாயகர் அவர்களே, தங்களுக்கு அவ்வளவு
பெரிய செல்வாக்கு ஏற்பட்டு, தங்கள் கட்சியே ஆளும் கட்சி
யாக வந்தால் அதில் எனக்கு மாறுபாடு இல்லை. தாங்கள்
விரும்புகின்றபடியே வருமானால் அதில் மாறுபாடு இல்லை.
அப்படியே வந்து தாங்களே சபாநாயகராக வருவதிலும் எனக்கு
மாறுபாடு இல்லை.

ஆனால், சபாநாயகர் பதவியிலிருக்கின்ற தாங்கள், கட்சி
களுக்கு ஏற்பட்டிருக்கின்ற குறைகளைப் போக்க வேண்டும்.
இன்னும் சொல்லப் போனால் எங்களுக்கு விளைவிக்கப்பட்ட
சிறுமையை, அதுவும் சட்டமன்ற அலுவலகத்தால் தரக் குறை
வாக நடத்தப்பட்ட நிலைமைகளை மாற்றுவதற்கு உடனடியாக
அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டிப் பரிகாரம் காண்பதற்கு
முயற்சித்தால் நாங்கள் தங்களுக்குக் கடமைப்பட்டவர்களாக
இருப்போம். அப்படி உடனடியாக அலுவல் ஆய்வுக் குழுக்
கூட்டத்தை நடத்த முடியவில்லை என்றால் இந்த அவையில்
நாங்கள் இருப்பதும் இல்லாமல் இருப்பதும் ஆகிய இரண்டும்
ஒன்றுதான் என்ற நிலைமைதான் ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து ஒத்து
ழையுங்கள்.

திரு க. அன்பழகன் : என்னைவிட சட்டத்திற்குக் கட்டுப்
பட்டு நடப்பவர்கள் யாரும் இருக்க முடியாது. மற்றவர்களின்
விருப்பதற்திற்காக என்னுடைய உரிமைகளைக் கூட விட்டுவிடக்
கூடியவன் நான். ஆகவே, அலுவல் ஆய்வுக் குழுவை உடனடி
யாகக் கூட்டி எங்களுக்கு இழைக்கப்பட்டிருக்கின்ற அநீதியை
அகற்றி நீதியை நிலை நாட்டுங்கள். தாங்கள் சொல்வது
தான் நீதி என்று கட்சித் தலைவர்கள் அத்தனை பேரும்
ஒத்துக் கொண்டால் தலைவணங்கி அந்தத் தீர்ப்பை ஏற்றுக்
கொள்ளத் தயார்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவையை ஒத்திவைத்துவிட்டு,
உடனடியாக அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டுங்கள்.

(முற்பகல் 11-10).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுதான் அரசியல்.
இன்று பிற்பகல் 11.30 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு கூட
இருக்கிறது. (குறுக்கீடு) பேரவையை ஒத்தி வைத்து விட்டு
விவாதிக்க வேண்டிய பிரச்சினை அல்ல இது. (குறுக்கீடு).
அவை நடந்து கொண்டிருக்கட்டும் ; நாம் என்னுடைய அறை
யில் கூடி இது பற்றி விவாதிக்கலாம்.

திரு க. அன்பழகன் : தங்களுடன் ஒத்துழைப்பதற்காகச்
சொல்கிறேன். தாங்கள் இந்த அவையை நடத்துவதுதான்
முக்கியம் என்று நினைத்து, 11.30 மணிக்குத்தான் அலுவல்
ஆய்வுக் குழு கூடும் என்று சொன்னால், நாங்கள் ஏற்கனவே
போட்டிருக்கின்ற தீர்மானத்தின்படி இந்தப் பிரச்சினை
தீராமல், அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்திற்கே வருவதாக
இல்லை. எனவே, நாங்கள் வர முடியாத நிலைமைக்கு ஆளாக்
கப்படுகிறோம் ; எனவே தயவு செய்து அவையை ஒத்தி வைத்து
விட்டு அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தை உடனடியாகக் கூட்டுங்
கள். இல்லை, இந்த அவை நடக்கும். 11.30 மணிக்குத்தான்
அலுவல் ஆய்வுக் குழு கூடும் என்றால், எங்களுடைய தகுதி
என்ன, எங்களுடைய உரிமை என்ன என்று தெரியாமல் இந்த
அவையிலே நாங்கள் வீற்றிருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை இருக்கிறதனால்
தான் 70 நிமிடம் விவாதித்தோம். ஒன்று சொல்கிறேன்,
நீங்கள் ஆசீர்வாதம் பண்ணினீர்கள். என்னைத் தவிர எந்த
சபாநாயகரும் இவ்வளவு தூரம் வந்து..........(குறுக்கீடு)
இந்தக் காலத்திலே கிடையாது. உங்கள் காலத்திலே உள்ளதை
யும் பார்த்தேன். அப்பொழுதும் கிடையாது. ஒரு சமூக





மான முடிவு ஏற்பட வேண்டும் என்றே இதுவரை விவாதித்
தோம். பிரச்சினையாக உருவாக்காதீர்கள். 11.30 மணிக்கு
அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் இருக்கிறது. நாம் அங்கே
கூடி விவாதிக்கலாம். (குறுக்கீடு) இனியும் மக்களுடைய
பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டிய அவையில் நேரத்தை
வீணடிக்க வேண்டாம். இதற்கு மேலும் இந்தப் பிரச்சினையை
நான் இங்கே அனுமதித்தால் , 'ஐ எம் கமிட்டிங் எ கிரைம்'.

திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாங்கள்
எங்களுடைய குறைகளை உணர்ந்தும் கூட, உடனடியாக அதைத்
தீர்க்க முன் வராமல், அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே
விவாதிப்போம் என்கிறீர்கள் ; களங்கம் நீக்கப் பெறாத நிலை
யில் நாங்கள் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு வருவ
தில்லை என்று நேற்றைய தினம் எங்கள் கட்சியைச் சேர்ந்த
வர்கள் தீர்மானித்திருக்கிறோம். நாங்கள் அலுவல் ஆய்வு குழு
கூட்டத்திற்கு வரவேண்டுமென்று சொன்னால் ஒன்று பிரச்சினை
இங்கே தீர வேண்டும் ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் யாரையோ
நினைத்துக் கொண்டே பேசுகிறீர்கள். (குறுக்கீடு) நேராக
என்னைப் பாருங்கள். For a minute, if you touch your conscience,
it will be all right.

திரு க. அன்பழகன் : நான் ஆளுங் கட்சியினரை
நினைத்துப் பேசவில்லை, நான் எப்பொழுதும் சபாநாயகரிடத்
திலே பேசுவதாக எண்ணிக் கொண்டுதான் சுற்றிப் பார்ப்பேனே
தவிர, மற்றவர்களிடத்திலே பேசுவதாக எனக்கு எண்ணம்
இல்லை. அறையிலே இருந்து எங்களை வெளியே தூக்கி
எறிந்த நிலைதான் இருக்கிறது. நீங்கள் தூக்கி எறிய வில்லை
என்று சொன்னாலும் எங்களுடைய நிலை அதுதான் என்ற
காரணத்தால், அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தை உடனடியாக,
தாங்கள் இந்த அவையை ஒத்தி வைத்து, இப்பொழுதே நடத்தி
னால் நாங்கள் வருகிறோம். அப்படி நீங்கள் அவையை ஒத்தி
வைக்க இயலாது என்று சொன்னால், இந்த அவையை நடத்து
வதுதான் முக்கியமானது என்று கருதினால், தாங்கள் தங்க
ளுடைய வசதிக்காக அவையை நடத்துவதாக இருந்தால்—
தங்கள் வசதிப்படி எங்களுடைய அலுவலகத்தை நீங்கள் காலி
செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுவது என்
னுடைய வசதிக்கு என்றால் நானா அங்கே வரப் போகிறேன்.
உங்கள் ரூம் எங்கே இருக்கிறது என்று கூட நான் பார்க்கவில்லை.
எனக்கு என்ன வந்தது ?

திரு. க. அன்பழகன் : பொறுப்பிற்காகத்தான் நான் சொன்னேனே தவிர, எங்கள் அறைக்கு வந்ததாகக் கூட நான் சொல்லவில்லை. தங்கள் சார்பிலே பொறுப்பு நிறைவேற்றப் பட்டதாகத்தான் சற்று முன்னாலே சொன்னீர்கள். அதை நினைத்துக் கொண்டு சொன்னேன், நாங்கள் அறையிலே இருந்து வெளியேற்றப்பட்டு, அரசாங்கத்தினுடைய எந்தப் பகுதி யிலோ, உங்கள் சட்டமன்றத்தினுடைய எந்தப் பகுதியிலோ இல்லாத நிலைமையில், இன்றைக்கிருக்கிற கட்சிகளுடைய பொருள்களும் கட்சிகளிடத்திலே இல்லாத நிலைமையிலே முறை தவறிய வகையில் நாங்கள் வெளியேற்றப்பட்டோம் என்ற உணர்வு எங்களுக்கிருக்கிற காரணத்தால், உடனடியாக அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தைத் தாங்கள் நடத்தி, இந்தப் பிரச்சினையைத் தீர்த்து, அதற்குப் பின்னால், இந்த அவையைக் கூட்ட வேண்டுமென்று நான் பணிவன்போடும் நல்லெண்ணத் தோடும் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 11.30 மணிக்கு எனது அறைக்கு எல்லோரும் வாருங்கள். நாம் இது பற்றி கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரலாம். தற்போது அவை நிகழ்ச்சி நிரல்களின்படி 1985-86 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை மானியக் கோரிக்கையை எடுத்துக் கொள்வோம். வேளாண்மைத் துறை அமைச்சர்.

3. வரவு-செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு
(அ) கோரிக்கை எண். 20—வேளாண்மை.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: (கூச்சல் குழப்பம்).

" மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,03,24,42,000-க்கு மேற்படாத் தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 1,03,24,42,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " (கூச்சல், குழப்பம்).



மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னை ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். 11-30 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெறும், இதுபற்றி விவாதிக்கலாம் என்று நான் தெரிவித்த பின்னாலும் நீங்கள் இப்படி நடந்துகொள்வது முறையல்ல.. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவையை ஒத்திவைத்துவிட்டு அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டுவது நல்ல மரபு அல்ல. பல் வேறு முக்கியப் பிரச்சினைகள் பற்றி அவை நடந்துகொண்டி ருக்கும்போதே அலுவல் ஆய்வுக் குழு கூடி, விவாதித்து முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி நடப்பதுதான் வழக்கம். அதைப்போன்று அவை தொடர்ந்து நடக்க வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லோரும் தலைவர் அவர்கள் தெரிவித்ததுபோல், அவருடைய அறையில் உட்கார்ந்து பேசி, ஒரு சுமுகமான முடிவினை எடுக்கலாம். இந்த அவையின் மரபிற்கு ஏற்ப, அவை நடந்துகொண்டிருக்கட்டும். 11-30 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி, அங்கே விவாதித்து ஒரு சுமுகமான முடிவுக்கு வருவது நல்லது என்பதைத் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. ராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, அவை முன்னவர் அவர்களிடமே நான் இதுபற்றி பேசினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களுக்குக் கடிதம் எழுதினேன். நீங்கள் அவை முன்னவரிடம் போனீர்கள். அவர்கள் பார்த்துச் செய்யலாம் என்று சொல்லியிருப்பார்கள். நான் சொன்னதை நீங்கள் கேட்டு, நின்றிருக்க வேண்டும். எனக்கு மேலே அப்பீலுக்குப் போனீர்கள். இந்தச் செயலகம் " இன்டிப்பென்டன்ட் செக்ரெட்டேரியேட் " என்பதை மறந்து விட்டீர்கள். (கூச்சல், குழப்பம்). அடுத்து மானியக் கோரிக்கை எண். 49.

(முற்பகல் 11-20)

(ஆ) கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ 1,28,51,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் ".

திரு, கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி—அவையார்குப்பம் கிராமத்தில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வசதி செய்ய எல்லா முன் நடவடிக்கைகள் செய்யப்பட்டு, வேலை செய்ய டெண்டர் விட்டு, வேலை நடைபெறாமல் உள்ளது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,28,51,78,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

(இ) கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,23,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ''.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய விளைபொருட்களைப் பிரித்தெடுக்க திண்டிவனம் தொகுதியிலுள்ள எல்லா கிராமங்களிலும் சிமெண்ட் தளம் அமைத்தல் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,23,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றிய விளக்கக் குறிப்புகள் @ஏற்கெனவே அவையில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் நிகழ்த்திய உரையாக அவைக்குறிப்பிலே ஏற்றிக்கொள்ள வேண்டும்.

@ 95—154-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.





மாண்புமிகு உறுப்பினர்கள் அது தொடர்பான கருத்துக்களைச் சொல்லிய பிறகு வேறு ஏதேனும் கருத்துக்கள் சொல்ல வேண்டியிருந்தால் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முறையே அல்ல. இவ்வாறு நடந்துகொள்வது சரியல்ல. (கூச்சல், குழப்பம்.) திரு. பரிதி இளம்வழுதி மேசையின் மேலே ஏறி உட்கார்ந்திருக்கிறார். இப்படி முறைதவறி அவர் நடந்துகொண்டால் அவரை அவையிலிருந்து வெளியேற்றும்படி உத்திரவிடுவேன்.

I will not allow this shot of rowdyism here.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் தாங்கள் எந்த உறுதிமொழியும் கொடுக்காமலேயே தான் எதிர்க்கட்சியில் உள்ளவர்களைக் கட்டுப்படுத்த விரும்புகிறீர்கள் . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரின் ஆணையை மீறுகிற நிலையில் உங்களுக்கு நான் என்ன உறுதிமொழிகளைக் கொடுக்க முடியும். தனியாக இதுபற்றி பேசலாம் என்று சொன்னேன். 11-30 மணிக்குக் கூடிப் பேசுவோம் என்று சொன்னேன். நீங்கள் என்னை கம்பல் பண்ணுவதால்..

திரு. க. அன்பழகன் : எந்த திருப்தியிலே இந்த அவையிலே தாங்கள் மேலும் உட்கார்ந்திருப்பது? நாங்கள் அவமானப் படுத்தப்பட்டிருக்கிறோம். நாங்கள் எப்படி இந்த அவையிலே உட்கார்ந்திருப்பது? நாங்களும் அரசியலிலே உள்ளவர்கள் தானே?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பாதிக்கப்பட்டதாக ஏன் நினைக்கிறீர்கள்? உங்கள் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை அவையில் குறைந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க மாட்டேன் என்கிறீர்களே (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களே 1½ மணி நேரம் இதுபற்றி [illegible] பேச அனுமதியும் தந்திருக்கிறீர்கள். அவர்களே கேட்டார்கள்— அலுவல் ஆய்வுக்குழுவிலே இதைப் பற்றி பேசலாம் என்று. அதையும் ஏற்றுக் கொண்டு 11½ மணிக்குப் பேசலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இவ்வளவையும் ஒப்புக்கொண்ட பிறகும் [illegible] சபையிலே இந்த மாதிரியாக எதிர்க்கட்சியைச் சார்ந்தவர் செய்வது சரியா? முறைதானா என்று கேட்க விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைத்தான் சொன்னேன்....(கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அவர்களை அவமானப்படுத்தியதாகக் குறிப்பிடுகிறார்கள் அவமானப் படுத்த வேண்டும் என்ற நோக்கமே அல்ல. (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்தோடு இந்தப் பிரச்னை முடிகிறது. சபை அட்ஜர்ன் ஆகாது. சபையின் நேரம் மக்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்; கட்சிக்காக அல்ல (மேசையைத் தட்டும் ஒலி) They have purposefully wasted public money. வேளாண்மை மானியத்தின் மீதான விவாதம் தொடரும். (குறுக்கீடு, கூச்சல்) வேண்டாம். இதற்கு எல்லாம் பதில் சொல்வது என்பது தேவையில்லாதது. இதற்குத்தான் எந்த விவாதமும் இதில் வேண்டாம் என்றேன்.

திரு. க. அன்பழகன் : இங்கே எங்களுக்கு நடந்த அவமானத்திற்காக நாங்கள் வேண்டுமானால் வெளிநடப்புச் செய்து விடுகிறோம். (கூச்சல், குழப்பம்).

திரு. கு. ரமணி : இது முறைதானா. நாங்கள் வெளியே போக வேண்டுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் போவதாக முடிவு எடுத்து விட்டால் நான் என்ன சொல்வது ? நீங்கள் எல்லோரும் இங்கே இருக்க வேண்டும். உங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டும்; உங்களுடைய அனுபவம் நாட்டு மக்களுக்கு நலம் பயக்க வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : ஆனால் நிலைமை அப்படி இல்லாமல் எங்களை வெளியேற்ற விரும்புவது போல் தெரிகிறது. தயவு செய்து ஒரு மணி நேரம் நாம் இங்கேயே இது பற்றிப் பேசுவோம். என்ன முடிவு வருகிறது என்று பார்க்கலாம்.

திரு. க. அன்பழகன் : தாங்கள் இந்த அவையை எப்படியாவது முறையாக நடத்த வேண்டும் என்று விரும்புவதை நான் வரவேற்கிறேன். (குறுக்கீடு, கூச்சல்) நான் தனி ஆளாக நின்றே பல பிரச்னைகளை சமாளித்தவன். நான் எதைப் பற்றியும் கவலைப்பட மாட்டேன். தாங்கள் இந்த அவையை நல்லபடியாக நடத்த வேண்டும் என்பதில் அக்கறையாக இருப்பது மறுக்க முடியாத ஒன்று. ஆனால் அதைப் போலவே, இந்த அவையிலே ஒரு பகுதி பாதிக்கப்பட்டிருப்பது என்பதும் உங்களால் மறுக்க முடியாத ஒன்று. ஆகவே, அவையை ஒத்தி



வைத்துவிட்டு இப்பொழுதே அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கு விவாதிப்போம். அது முடியாது என்றால் இந்தப் பிரச்னை தீராது. நாங்கள் அலுவல் ஆய்வுக் குழுவிலே கலந்துக் கொள்வதில்லை என்ற முடிவை ஏற்கனவே எடுத்திருக்கிற காரணத்தால்.... (குறுக்கீடு)

(முற்பகல் 11-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணி 11-30 ஆகிறது. நீங்கள் இப்போது நேராக அலுவல் ஆய்வுக் குழுவிற்கு வரலாம். நானும் வருகிறேன். சபை நடந்து கொண்டிருக்கும்.

திரு. க. அன்பழகன் : சம்பந்தப்பட்ட கட்சித் தலைவர்களும் வர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்ட கட்சித் தலைவர்கள் எல்லோரும் வரலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்கள் மைக்கை உடைக்கும் காரியத்தில் இறங்கியது சரியல்ல. அவையில் விதிகளைப் பற்றி இவ்வளவு நேரம் பேசியிருக்கிறார்கள். விதிகளைப் பற்றி பேசிவிட்டு அவரே மைக்கை உடைப்பது சரிதானா ? அது மக்களுடைய சொத்து இல்லையா ? (கூச்சல், குழப்பம்).

திரு. அ. ரகுமான்கான் : நீங்கள் பார்த்தீர்களா ? (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இங்கே இவ்வளவு நேரம் பேசுகிறபோது மைக் நன்றாகத் தான் இருந்தது. இப்போது உடைந்திருக்கிறது. நீங்கள் மைக்கை உடைத்ததாக உறுப்பினர்கள் சொல்கிறார்கள். (குறுக்கீடு) மைக்கை உடைப்பதற்காக நீங்கள் சட்டமன்றத்திற்கு வரவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : மைக் சரியாகத் தான் இருக்கிறது. (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : காலையிலிருந்து 1½ மணி நேரம் அந்த மைக்கை பயன்படுத்தி பேசினீர்கள். அப்போது அந்த மைக் நல்ல நிலைமையில் இருந்தது இப்போது உடைந்திருக்கிறது. இதுபோன்ற நடவடிக்கைகளில் உறுப்பினர் ஈடுபடுவது சரியல்ல.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலைமையில் விவசாயத்திற்கு எல்லாமே பற்றாக்குறையாக இருக்கிறது. மின்சார பற்றாக்குறை, தண்ணீர் பற்றாக்குறை என்று இருப்பதைப் போல இங்கே அவையிலும் வேளாண்மை மானியத்திற்கு நேரம் பற்றாக்குறையாக இருக்கிறது. எனவே, இந்த மானியத்திற்கு அதிகமான நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அலுவல் ஆய்வு குழுவில் இது குறித்தும் முடிவு செய்து கொள்ளுங்கள்.

*திரு. ஆர் தியாகராசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலிருந்து இரண்டாவது முறையாக நான் இந்த மன்றத்திற்கு வெற்றி பெற்று வருவதற்கு எனக்கு வாக்களித்த என்னுடைய தொகுதி மக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக பாடுபட்ட காங்கிரஸ் பேரியக்க தோழர்களுக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த அரசால் வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப் பட்டிருக்கும் தொகை ரூ. 103 கோடியே 24 லட்சத்து 42 ஆயிரம் ஆகும். இன்றைய நிலைமையில் உணவு உற்பத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தொகை மிக மிகக் குறைவானதாகும் என்பது என்னுடைய கருத்து. விவசாயத் தொழிலாளர்கள் ஒவ்வொரு நாளும் தங்களுடைய உயிரை பணயம் வைத்து உழவுத் தொழிலை செய்து கொண்டு வருகிறார்கள்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்''

என்பது வள்ளுவர் வாக்கு. அன்றைய நிலையில் விவசாயிகள் பொருளாதாரத்திலும், மற்றவற்றிலும் தன்னிறைவு பெற்று நல்ல நிலைமையில் இருந்தார்கள். அதனால் அன்றைக்கு திருவள்ளுவர் அவர்கள்,

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''

என்று சொன்னார்கள். இன்றைக்கு விவசாயிகளுடைய நிலை, உற்பத்தியாளர்களுடைய நிலை எப்படி இருக்கிறது என்றால்,

''தொழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
உழுதுண்டு வாழ்பவர் அவர் பின்செல் பவர்''

என்ற நிலைக்கு சரித்திரம் மாற்றப் பட்டிருக்கிறது.



விவசாயிகளுடைய நிலைமை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு அவர்களுடைய குடும்ப நிலைமை எடுத்துக்கொண்டால், மிகவும் மோசமாக இருக்கிறது. நம்முடைய அரசாங்கம் விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து கொண்டு வருகிறார்கள். இல்லை என்று சொல்ல முடியாது. அந்த நிலையில் எடுத்துக்கொண்டால், விவசாயிகளுக்கு இந்த அரசு செய்த நன்மைகள் பல உண்டு. அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் உண்டா என்றால் இல்லை. அவர்கள் வாழ்வு வளப்படுத்தப்பட்டு இருக்கிறதா என்றால் இல்லை. அவர்கள் பொருளாதாரத்தில் உயர்த்தப்பட்டு இருக்கிறார்களா என்றால் இல்லை. இந்த மன்றத்திலே இருக்கக்கூடிய உறுப்பினர்களில் விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய உறுப்பினர்கள் கிட்டத்தட்ட பாதிக்கு மேல் இருப்பார்கள். எனவே இந்த விவசாயத்தைப் பற்றி இங்கே இருக்கிற ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் விவசாயத்தைப்பற்றி நன்றாக அறிந்தவர். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆனால் விவசாயிகள் வாழ்வில் முன்னேற்றம் உண்டா என்றால் இல்லை. இப்போது தமிழக அரசும், மத்திய அரசும் மாற்றி மாற்றி பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். இப்போது கூட தமிழக அரசு விவசாயிகளுக்கு ஒரு ஹார்ஸ் பவர் வைத்து தண்ணீர் பாய்ச்சினால், 75 ரூபாய் ஆண்டுக்கு கட்டலாம் என்று பெரிய நன்மையைச் செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த 75 ரூபாய் என்பது ஏகபோகமாக, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை பம்ப் செட்டுகளுக்கும் என்பது பொருத்தமாகாது. காரணம் என்னவென்றால் கோயம்புத்தூர் மாவட்டத்திலே இருப்பவர்கள், 3 மோட்டார் வைத்து தண்ணீரை வெளியே எடுக்கிறார்கள். காரணம் தண்ணீர் 400 அடி, 500 அடிக்குக்கீழேதான் இருக்கிறது. எனவே அவர்கள் தண்ணீர் எடுப்பதற்கு அதிகப்படியான கரண்ட் செலவு ஆகிறது. ஆனால் தஞ்சாவூர் மாவட்டத்தில் இருக்கக்கூடியவர்கள், 1 மோட்டார் வைத்து குறைந்த கரண்ட்டை செலவு செய்து தண்ணீரை வெளியே எடுக்கிறார்கள். ஆனால் கோயம்புத்தூர், சேலம் போன்ற மாவட்டங்களில் உள்ளவர்கள், வருடம் முழுவதும் அதைப் பயன்படுத்துகிறார்கள். எனவே, அவர்களுக்கும் ஒரே நீதி, எங்களுக்கும் ஒரே நீதி என்பது எப்படி நியாயமாகும்? எனவே, இந்த 75 ரூபாய் என்பதை சராசரியாக ஹார்ஸ் பவருக்கு 50-ஆக குறைக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த அரசு விவசாயிகளுக்கு கொடுக்கும் நன்மைகள் பல கோடி. ஆனால் அந்தப் பலன்கள் எல்லாம் விவசாயிகளுக்குப் போய்ச் சேருகிறதா என்றால் இல்லை. அவர்கள் கையிலே கிடைக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த மன்றமும் அரசும் கவனிக்கும்

பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நாம் அவர்களுக்கு சப்சிடி கொடுக்கிறோம். விதங்களில் உதவித் தொகை கொடுக்கிறோம். அவர்களுக்கு பல வதற்காக, கோழி வாங்குவதற்காக, மற்றும் தொழில் நுட்ப உதவி பெறுவதற்காக என்று இப்படி பலவிதமான வகையில் உதவித் தொகையை அளிக்கிறார்கள். அதேபோல் இந்த பம்புசெட்டுகளிலிருந்து தண்ணீர் பாய்ச்சுவதற்கு, பிளாஸ்டிக் பைப் தருகிறார்கள். இந்த உதவியை அரசு மூன்று விதமாகக் கொடுக்கிறார்கள். சில பேர்களுக்கு நியாயமான விலையில் கொடுக்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு பாதி விலையில் தருகிறார்கள். மிகச் சிறிய விவசாயிகளுக்கு இனாமாகவே கொடுக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் மணிலா ஒரு ஏக்கருக்கு 55 மூட்டை வரவேண்டியது இப்போது அந்த அளவிற்கு உற்பத்தி ஆவதில்லை. இதையெல்லாம் நான் அமைச்சர் அவர்களிடத்தில் ரிப்போர்ட் செய்திருக்கிறேன். ஒரு மணிலாகூட விவசாயிகளுக்கு கிடைக்காமல் நேரடியாக விற்பனைக் கூடத்திலே விற்கப்பட்டது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல் விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய பிளாஸ்டிக் பைப் அவர்களுக்குச் சரியாகக் கிடைப்பது இல்லை. அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய விவசாயப் பொருள்கள் அவர்களுக்குக் கிடைக்காமல், நேராக கடைகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அதேபோல் அவர்களுக்கு தார்பாலின் சப்ளை செய்கிறார்கள். அதுவும் ஒழுங்காக போய்ச் சேருவதில்லை. இடையில் இருக்கின்ற இடைத்தரகர்கள்தான் இவைகளுக்கு எல்லாம் காரணம். கிணற்றிலேயிருந்து இறைக்கக் கூடிய தண்ணீர் ஒழுங்காக வயல்களுக்குச் சென்று பாய்கிறதா என்று எப்படி ஒரு விவசாயி கூர்ந்து கவனிக்கிறானோ, அதைப் போல அரசாங்கமும், விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய உதவிகள் எல்லாம் அவர்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேருகிறதா என்பதைக் கண்காணிக்கவேண்டும். அப்படிப் போகவில்லை என்றால், அதைக் கவனித்து அதற்கு ஆவன செய்யவேண்டியது அரசாங்கத்தினுடைய அமைச்சருடைய கடமை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே எவ்வளவுதான் உதவிகளை மத்திய அரசும், மாநில அரசும் கொடுத்தாலும் கூட, அது இடையிலே உள்ள இடைத்தரகர்களாலும், மற்றவர்களாலும், அந்த உதவிகள் எல்லாம் விவசாயிகளுக்குப் போய்ச் சேராத நிலைமைதான் இருக்கிறது.





(முற்பகல் 11–40)

அடுத்து அரசாங்கம் விவசாயப் பண்ணைகளை நடத்துகிறார்கள். அந்த அரசுப் பண்ணையிலே ஆதாயம் இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. ஆனால் இன்றைக்கு உற்பத்திச் செலவு ஒரு ஏக்கருக்கு 2 ஆயிரம் ரூபாய் நாம் செலவு செய்தால் 20 மூட்டை நெல் வரும். அதன் மூலம் நமக்கு 2 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். ஆகவே உற்பத்திச் செலவுக்கும் இதற்கும் சரியாக போய்விடும். சரப்பசை இல்லாமல் இருந்தால் அந்த எடை போடும் இடத்தில் அந்த நெல்லுக்கு மூட்டைக்கு 60 ரூபாய் என்று சொல்கிறார்கள். அந்த மாதிரி ஒவ்வொரு பொருளும் நாங்கள் பயிர் வைக்கும்போது ஆடி மாதம் வறட்சியான காலத்தில் அரசிடமிருந்து விலை கொடுத்து ஒவ்வொரு பொருளும் வாங்கி, அந்த வறட்சியான காலத்தில் அதிக விலை கொடுத்து வாங்கி, வேலை செய்யும் ஆட்களுக்கும் அதிகமான சம்பளம் கொடுத்து நாங்கள் தருகிறோம். ஆனால் நெல் விளைந்தபின் அது விற்பனைக்கு வரும்போது அதனுடைய விலை விழுந்து விடுகிறது. விற்பனைக்கு வரும்போது நல்ல சாகுபடி காலம், அறுவடை காலம் பல மகசூல்கள் அதிகமான அளவில் வரும். கேழ்வரகு, கம்பு, சோளம், வரகு எல்லா உணவு தானியங்களும் வரும்போது மார்க்கெட்டில் அதன் விலை விழுந்து விடுகிறது. உற்பத்தி செய்யும்போது விதை விலை அதிகமாக இருக்கிறது. அப்போது கிலோ இரண்டரை ரூபாய் 3 ரூபாய் என்று சொன்னால் அந்த நெல் விற்பனைக்கு வரும்போது கிலோ 1 ரூபாய், ஒன்றரை ரூபாய் என்றுதான் கொடுக்கப்படுகிறது. இந்த நிலையில் தான் எங்கள் நிலை இருக்கிறது. அதனால் ஏக போகமாக இந்த விலையை ஒவ்வொரு ஆண்டும் விதைக்கு விலை நிர்ணயம் செய்கிறார்கள், மற்ற இந்த இந்த பொருட்களுக்கு இவ்வளவு விலை என்று நிர்ணயம் செய்கிறார்கள், தொழிலாளர்களுக்கு சம்பளம் இவ்வளவு என்று நிர்ணயம் செய்கிறார்கள். கரும்புக்கு ஒவ்வொரு ஆண்டும் விலை நிர்ணயம் செய்கிறார்கள். அதேபோல் உற்பத்தி செலவு இவ்வளவு, அதனால் இதற்கு இவ்வளவு விலை நிர்ணயம் செய்திருக்கிறோம், இந்த விலைக்கு குறைத்து விற்கக்கூடாது என்ற ஒரு முழுமையான விலைக் கிடைக்கும் படி ஆவன செய்ய வேண்டும். அப்படி கொடுக்கவில்லை என்றால் விவசாயிகள் வாழ முடியாது. இன்றைய நிலையில் விவசாயிகள் எந்த அளவுக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் தங்களுடைய குடும்பத்தை நடத்த முடியாமல் எவ்வளவு பேர்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதை எல்லாம் நீங்கள் நன்கு கவனித்துப் பார்க்கவேண்டும். இந்த அரசு விவசாயிகள் பக்கம் திரும்பவேண்டும். அவர்களுக்கு கேட்க நாதியில்லை. இந்த நாட்டில் அவர்களுக்காக கேட்க ஆள் இல்லை. தொழிலாளர்களுக்கு [illegible] என்று சொன்னால் [illegible] நன்மைக்கும், தொழில் [illegible]

[திரு. ஆர். தியாகராசன்] [1985 ஜூன் 3

தொழிற்சங்கத் தலைவர்களும் போராட்டம் நடத்தி ஊதிய
உயர்வு பெற்று விடுகிறார்கள். அரசு ஊழியர்களுக்கு சம்பளம்
போதவில்லை என்று சொன்னால் போராட்டம் நடத்தி
உண்ணாவிரதம் இருந்து அரசை மிரட்டி அவர்கள் காரியத்தை
நிறைவேற்றிக்கொள்கிறார்கள். ஆனால் விவசாயிகள் நிலை
என்ன? பரந்து கிடக்கும் விவசாயிகள் எல்லாக்கட்சிகளிலும்
இருக்கிறார்கள். எல்லா அடிப்படை உரிமைகள் அவர்களுக்கு
கொடுத்தாலும் அவர்கள் வாழ்வு முன்னேற்றப்படவில்லை.
அவர்கள் வாழ்வு முன்னேறவில்லை. அவர்கள் குழந்தைகளை
படிக்க வைக்க முடியவில்லை. இன்றைக்கு சாதாரணமாக
ஒரு ஏக்கர் 2 ஆயிரம் ரூபாய் செலவு செய்து பயிர் செய்தால்
அதன் மூலம் 3 ஆயிரம் ரூபாய் வருமானம் வந்தால் எப்படி
அவர்கள் முன்னேற முடியும்? அதற்கும் இயற்கை பாதிப்பு
ஏற்பட்டால் அந்த பணமும் வராது. நஷ்டம் வந்து விடுகிறது.
அல்லது பாசன வசதி இருந்தால் மோட்டார் ரிப்பேர் ஆகி
விடுகிறது, கரண்டு கட் வந்து விடுகிறது. ஆகவே நாற்று விட்டு
அழிந்து விட்டன. நான் கூட 5 ஏக்கர் நாற்று விட்டு கரண்டு
சரியாக வராமல் இருப்பதால் ஓட்ட முடியாமல் இருக்கிறது.
ஆகவே, தமிழக அரசு வாரி, வாரி எல்லோருக்கும் வழங்கி
னாலும் கூட விவசாயிகள் தரத்தை நன்கு கவனித்து உதவ
வேண்டும். விவசாயிகள் பக்கம் கருணை காட்டவேண்டும்.
எல்லா வகையிலும் வாரி வாரி கொடுக்கக்கூடிய அந்த வள்ளல்
இந்த விவசாயிகளுக்கு இந்த மன்றத்திலே அவர்களுக்கு
வாரி வழங்கவேண்டும். அவர்கள் வாழ்நாள் பொன்னான்
ஆவதற்கு அந்த விவசாயிகளுக்கு ஒரு பெரிய நன்மையை இந்த
அரசு செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து இறவை பாசனம். மறைத்தே பயிர் செய்யக்கூடிய
விவசாயிகளுடைய நிலையைப்பற்றி கூற விரும்புகிறேன்.
தஞ்சாவூரில் ஒரு ஏக்கர் பயிர் செய்வதாக இருந்தால் அவர்
களுக்கு இயற்கையினுடைய தண்ணீர் அங்கே வருகிறது.
ஒரு போகத்தை முழுக்க அவர்களால் அந்த தண்ணீரைக் கொண்டு
பாசனம் செய்து அறுவடை செய்ய முடியும். ஆனால் இறவை
பாசனம் என்பது போர் வெல் போட்டு பூமியில் இருந்து தண்ணீர்
எடுத்து பயிர் செய்ய வேண்டும். அதற்கு குறைந்தது 25 ஆயிரம்
ரூபாய் முதலீடு செய்து அதற்கு பின் மோட்டார் வைத்து
கரண்டு போட்டு தண்ணீர் பாய்ச்சுகிறோம். அதற்கு கரண்டும்
சரியாக வரவில்லை. அதனால் எங்களுடைய நிலை எந்த
நேரத்தில் தண்ணீர் பற்றாக்குறை வருமோ, அல்லது மோட்டார்
பற்றாக்குறை வருமோ அல்லது கரண்டு பற்றாக்குறை வருமோ
இந்த நிலையில் அந்த உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை
நாங்கள் மீண்டும் அறுப்பது எப்போது? எப்படி அறுக்கப்போகி
றோம் என்ற ஏக்கத்தோடு இருக்கிறோம். அதனால்



1985 ஜூன் 3] [திரு. ஆர். தியாகராசன்]

ரூபாய் என்பதை 50 ரூபாயாக குறைத்துக் கொடுத்தால்
கொஞ்சம் சௌகரியமாக இருக்கும் என்பது எங்களுடைய
கருத்து. பாசன வசதியைப் பொறுத்தவரையில் ஏற்கனவே
இயற்கையாகப் பாயக்கூடிய ஆறுகளில் எல்லாம் இன்றைக்கு
அணைகளை கட்டிவிட்டு இருக்கிறார்கள். பணிமுத்தாறு அணை
கட்டப்பட்டுவிட்டது. மாயூரா, பணிமுத்தா, கோமுகி என்ற
3 அணைகள் கட்டப்பட்டுவிட்டன. அதற்கு பின்னால் ஏற்
கனவே 11 அணைகளின் மூலம் பாசனம் செய்து கொண்டிருந்த
விவசாயிகளுடைய நிலை அங்கே அணைகள் கட்டி தடுத்து
விட்ட காரணத்தால் அவர்களுக்கு தண்ணீர் வரவில்லை.

இப்போது நாங்கள் இறைப்புப் பாசனத்தைப் பயன்படுத்திக்
கொண்டு வருகிறோம். எங்களுக்கு என்ன நீதி கேட்கிறோம்?
ஏற்கனவே நாங்கள் பெற்றுக் கொண்டிருந்த உரிமை, மரியா
தைக்குரிய தோழர்கள் எல்லாம் கேட்கிறார்கள் அல்லவா,
அந்த மாதிரி எங்களுடைய உரிமை நாங்கள் பாய்ச்சிக் கொண்
டிருந்தோம். அந்தப் பாசனம் தடைப்பட்டுப் போய்விட்டது.
அவர்களைக் கேட்டால், உபரியான தண்ணீரைத்தான் பயன்
படுத்துகிறோம், பாசனத் தண்ணீரை விட்டுவிட்டோம் என்று
சொல்கிறார்கள். முன்னால் இருந்த மரியாதைக்குரிய மாண்பு
மிகு பி.டபிள்யூ.டி. அமைச்சர் அவர்களும் தண்ணீர் கிடைக்கும்
என்று சொன்னார்கள். ஆனால் எங்களுக்கு தண்ணீர் வரு
வதில்லை. இதை விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் எங்
களுக்கு பாகுபாடு இல்லாமல் பகிர்ந்து அளிக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். மூன்று அணைகளிலே, ஒரு, ஒரு வாரத்
திற்கு தண்ணீர் விட்டால் கூட கீழே இருக்கிற விவசாயிகளுக்கு
பலன் கிடைக்கும். ஆற்றிலே தண்ணீர் வந்தால், பக்கத்திலே
300 அடி, 400 அடி வெட்டி நெய்வேலியிலே இருந்து கரண்ட்
எடுத்து தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறோம். அதற்கு
பதில் மேல்நிலை நீராவது கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கும்
இருமாத்தூர் அணை என்பது இருக்கிறது. 100 ஆண்டுகளுக்கு
முன்னே கட்டப்பட்ட அணைகள், அந்தக்காலத்திலே கட்டப்
பட்டபோது, 3 அடி 4 அடி அணை கட்டினால்தான் நிலங்
களுக்கு ஏரித் தண்ணீர் பாயும். பேட்டு வாய்க்கால் என்று
சொல்வார்கள். இப்போது நவீனமயமாக்கப்பட்ட பின்னால்,
அந்த வாய்க்கால்கள் எல்லாம் சரி பண்ணி செலவு செய்து
தண்ணீர் வரும்போது, அந்தந்தப் பகுதியில் 75 ஏக்கர், 100
ஏக்கர் என்று இருக்கின்ற வாய்க்கால்களில் எந்த அளவுக்குத்
தண்ணீர் பகிர்ந்து அளிக்கமுடியுமோ, பகிர்வு செய்து, கொடுக்க
வேண்டும். இந்த நவீன காலத்திலேயும், மண் வெட்டி கொண்டு
போய்கொண்டிருக்கும் நிலையிலிருந்து கட்டாயம் விவசாயி
களை விடுவிக்கவேண்டும், என்று மாண்புமிகு அமைச்சர் அவர்
களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

[1985 ஜூன் 3

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரத்தை சரியாகப் பிரித்திருக்கிறோம். காங்கிரஸ்-க்கு 36 நிமிடங்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 12 நிமிடங்கள். டைம் இல்லை. ஒருவரே பேசிக்கொண்டிருந்தால் எப்படி எதிர்க் கட்சிக்கு மட்டும் சரியாக இருக்கவேண்டும் என்று நினைக்கா தீர்கள். ஆளும்கட்சிக்கும் சேர்த்து நாங்கள் சரியாக இருக்க வேண்டும்.

திரு. ஏ.எஸ். ரவீந்திரன் : ஏறத்தாழ 90 நிமிடம் காலையில் எதுவுமே இல்லாமல் ஓடி இருக்கிறது.

திரு. எஸ். வேணுகோபால் : ஒன்றரை மணிநேரம் காலையில் அலவ் பண்ணியிருக்கிறீர்கள், எங்களை மானியக் கோரிக்கையில் பேச அலவ் பண்ணக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : காலையிலே டந்தது பற்றிச் சொல்கிறீர்கள். அது பற்றி அலுவல் ஆய்வுக் நழுவில் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே நாம் விவாதிக்கக் கூடாது. காலையிலிருந்து, மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கைகளை பிரேரேபித்த வரையில் நடந்த சபைக் குறிப்புக்களை அலுவல் ஆய்வுக் குழு முடிந்து பேரவைத் தலைவர் அறிவிக்கின்ற வரை பத்திரிகையாளர்கள் அதை வெளியிடவேண்டாம் என்று உத்தர விடுகின்றேன். நீங்கள் சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, இந்த மன்றம் ஆரம்பித்ததிலேயிருந்து, இப்போது தான் முதல் தடவையாகப் பேசுகிறேன். இன்றைக்குக் கூட சப் ஜெக்ட் எல்லாம் தயார் பண்ணிக் கொள்ளவில்லை. விவசாயிகள் பற்றி ... பாயின்ட் சொல்ல விரும்புகிறேன், சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் என்று சொல்கிறவர்கள். ஒரு ஏக்கர், 2 ஏக்கர் தானாக உழுது பயிர் செய்யக் கூடிய வர்கள். அவர்கள் நிலத்திலே பயிர் செய்யக் கூடிய அளவுக்கு வருமானம் வருகிறதா என்றால் இல்லை. அதுபோல், வானம் பார்த்த பூமி, கம்பு, கேழ்வரகு விதைக்கிற நிலங்கள் எல் லாம் மழை சரியாகப் பெய்வதில்லை. சரியான முறையிலே, காலத்திற்கேற்ப, அதை எல்லாம் விதைத்துவிட்டால் நன் றாக அமையும் என்று சொல்கிறார்கள். இதுபோன்ற திட்டங் களை விளம்பரப்படுத்தி, வானம் பார்த்த மகசூல் உற்பத்தியை செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பெரிய திட்டத்தை கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.



985 ஜூன் 3] [திரு. ஆர். தியாகராசன்]

சிறு விவசாயிகளுக்கு நாம் நிறைய செய்ய நினைக்கிறோம். அரசு ஊழியர்கள் இறந்தால் 10 ஆயிரம், கட்டிடத் தொழி லாளர் இறந்தால் 10 ஆயிரம், மோட்டார் தொழிலாளி இறந் தால் 10 ஆயிரம் என்று இருக்கிறது. நேற்றைக்குக்கூட, குப்பு சாமி என்கிறவன் எங்கள் ஊரிலே பாம்புகடித்து இறந்துவிட் டான். அவன் கூலி வேலைக்காரன். மோட்டு மேலே படுத்து இருந்தவன், பாம்பு கடித்து இறந்துவிட்டான். அவனுக்குக் கூட இன்சூரன்ஸ் பண்ணியிருந்தால்தான் 10 ஆயிரம் கொடுப் பேன் என்கிறார்கள். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மற்ற தொழிலாளர்கள் இறந்தால் எப்படியோ, மற்ற அரசு ஊழியர்கள் இறந்தால் எப்படியோ, அப்படி உண்மையிலேயே, இல்லாதுபட்ட மிகச் சிறிய விவசாயிகளுக்கு, விவசாயத் தொழி லாளருக்கு 10,000 ரூபாய் வழங்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கரண்ட்டைப் பொறுத்தவரைக்கும், ஏற்கவவே உற்பத்தி செய்த கரண்ட்டையே வைத்துக்கொண்டு எல்லாவற்றுக்கும் கேட்க, கேட்க கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள் என் றால் எவ்வளவுதான் கொடுக்கமுடியும்? கொடுக்கவில்லையே என்று எப்படி குறை சொல்வது. இருக்கிற கரண்ட் 100 மெகா வாட் ஹார்ஸ் பவர் இருக்கிறது என்றால், 20 மோட்டார் இருந்தால், 25 ஹார்ஸ் பவர் போச்சு. ஏனய்யா கட் பண்ணு கிறாய் என்று கேட்டால், 100-க்கு வந்தால் டிரான்ஸ்பார்மர் உடைந்து போய்விடும் என்று சொல்கிறார்கள். ஆனால் கொடுத் திருக்கிற, ஓடுகிற மோட்டார் 120. எனவே, பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(முற்பகல் 11-50)

100 மெகாவாட் மின்சாரம் இருக்கிறது என்றால் அதை இரண் டாகப் பிரித்து, இரண்டு வகையாகப் பிரித்து, 60 மோட்டார் களுக்கு 3 மணி நேரம், பாக்கி 60 மோட்டார்களுக்கு 3 மணி நேரம் என்று பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படியில்லாமல் ஒரே நேரத்திலே 120 மோட் டார்களுக்கும் கொடுத்தால் டக் என்று நின்றுவிடுகிறது. அதன் காரணத்தினால் காயில் எரிந்து போகிற நிலை ஏற்பட்டு விவசாயிகளுக்கு 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய் அளவுக்கு நட்டம் ஏற்படுகிறது. எந்த அளவுக்கு மெகாவாட் ஓடவேண்டுமோ அந்த அளவுக்கு ஓட்டி விவசாயிகளுக்கு நல்ல முறையிலே மின்சாரத் தைக் கொடுக்கவேண்டுமென்று நான் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்றே நோயினால், பாதிப்பு, எலியால் பாதிப்பு என்ற நிலையும் இருக்கிறது. ஒரு பங்கு செங்காலி நோயாலும் ஒரு பங்கு எலிகளாலும் பாதிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. 3 போகம் நெல் விளைந்தாலும் அதிகமாக விளைகிற அந்த நெல்லை நன்றாகத் தின்றுவிட்டு எலிகளும் உற்பத்தியை அதிகமாகுகின்றன. அதனால் விவசாயிகள் எலித் தொல்லைகளுக்குப் பெரிதும் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு போகம் விவசாயம் செய்தபோது இருந்த எலிகளை விட இப்போது மூன்று போகம் விவசாயம் செய்கிறபோது எலிகளும் அதிகமாகியிருக்கின்றன. நான் ஏற்கனவே இதைப்பற்றிச் சொன்னேன். ஆகவே நம்முடைய அரசு உற்பத்தி குறையாமல் இருப்பதற்கு நல்ல திட்டங்களைக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளைப்பற்றி எல்லோருக்கும் நன்றாகத் தெரியும், நான் மட்டும் தெரிந்திருப்பதாக சொல்லவில்லை. மீண்டும் நான் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், அவர்கள் பக்கம் கருணை காட்டவேண்டும். விவசாயிகள் போர்க்கொடி தூக்கவில்லை, உண்ணாவிரதம் என்றும் மற்றவை என்றும் சொல்லவில்லை, அவர்கள் ஒன்றுபட்டு இந்த அரசை ஆதரித்தார்கள். இன்னும் சொல்லப்போனால் தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள்தான், அரசு ஊழியர்களைவிட, ஆசிரியர்களை விட, இந்த அரசை ஆதரித்தார்கள், மற்றவர்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அந்த விவசாயிகளுக்கு இந்த அரசு நன்றிக் கடனோடு நன்மைகளைச் செய்து அவர்களுடைய வாழ்க்கையிலே மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கை எண். 20, 49 மற்றும் 50 ஆகியவைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு இந்த அரசின் மூலமாக விவசாயிகளுக்கு வேண்டிய நல்ல காரியங்களை செய்து வருகிறார்கள். அதன் மூலமாக விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற நன்மைகளைப்பற்றியும் இந்த மாமன்றத்திலே பேசுவது நல்லது என்று ஒரு விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். காரணம் கடந்த 3 முறைகளிலேயும் இந்த அரசாங்கம் விவசாயிகளுக்கு செய்திருக்கிற நன்மைகள், சலுகைகள் இவைகளைப் பார்க்கிறபோது, ஏற்றமிகு சமுதாயத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லவேண்டும்.





மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக பல்வேறு காரியங்களைச் செய்து இருக்கிறார்கள். அந்த வகையிலே உயர் ரக விளைச்சல் தரக்கூடிய அளவுக்குப் பல்வேறு திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். [illegible] பெருக்குத் திட்டம், பயிர்ப் பாதுகாப்புத் திட்டம், மாநில நில மேம்பாட்டுத் திட்டம், நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டம், நிலச் சீர்திருத்தப் பாதுகாப்புச் சட்டம், பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய இத்தனை வளர்ச்சித் திட்டங்களைப் போட்டு அதன் மூலமாக விவசாயிகளுக்கு நன்மைகளைச் செய்து வருகிறார்கள். அந்த அடிப்படையில் கிராமப்புறத்திலே இருக்கிற விவசாயிகள் இந்த அரசாங்கம் அவர்களுக்குச் செய்திருக்கிற சலுகைகள் காரணமாக வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொண்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்ல. தமிழ்நாட்டிலே உள்ள ஏழை எளிய விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். அதன் விளைவாக தமிழ்நாட்டினுடைய [illegible] ஆட்சியினுடைய கொள்கையின் அடிப்படையிலே நல்ல முறையிலே [illegible]ந்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எத்தனையோ அரசாங்கங்கள் இருந்தன. ஆனால் விவசாயிகளைப் பற்றி அவர்கள் எந்த அளவிற்குக் கவனம் செலுத்தினார்கள் என்பதைப் பார்க்கின்ற பொழுது, இந்த அரசாங்கம் வந்தபிறகு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள் என்பதையும், ஏழை எளிய மக்கள் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதையும் எடுத்துச் சொல்லி, இப்படிப்பட்ட பல்வேறு நல்ல காரியங்களை இந்த அரசாங்கம் செய்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கம் செய்கின்ற எந்தத் திட்டமாக இருந்தாலும் அது அடிமட்டத்தில் உள்ள விவசாயிகளுக்குப் போய்ச் சேருகிறதா என்பதைப் பார்க்க அதிகாரிகளை இந்த அரசாங்கம் பயன்படுத்திக் கொள்கிறது. சிறு விவசாயிகளுக்காகப் போடப்படுகின்ற திட்டங்கள் அவர்கள் பயனடைகின்ற வகையில் சென்றடைகிறதா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கண்காணித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த இலாக்கா, விவசாயிகளிடத்தில் அன்பையும், ஆதரவையும் காட்டி, அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயருகின்ற வகையில் செயலாற்றுகிறது.

சிறு விவசாயிகள் பயிர் செய்கின்றபொழுது, அவர்களுடைய பம்பு செட்டில் உள்ள தண்ணீர் வெளியில் உள்ள நிலங்களுக்குப் பாயும்பொழுது, வாய்க்கால் வழியே சென்றால் சேதம் அடைகின்றது என்ற காரணத்தால் ‘[illegible] பைப்புகளை வாங்கிப்போட்டு, தண்ணீரின் மூலம் விவசாயிகள் நேரடியாகப் பயன் அடையும் வகையில் செய்யப்பட்டிருக்கிறது.

காடு நேடுகளில் விவசாயம் செய்கின்ற மக்கள் பயன் அடைகின்ற வகையில் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்த காரணத்தால் ஏழை எளிய மக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

விவசாயிகள் பயன் அடைகின்ற வகையில் ஓடை பராமரிப்புத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எவ்வளவோ நிலங்கள் ஓடைகளினால் பாதிக்கப்பட்டன. ஓடை ஓரங்களில் உள்ள நிலங்கள் பாதிக்கப்பட்டன. ஆகவே, விவசாயிகள் பயன் பெற வேண்டுமென்ற அடிப்படையில் இந்த அரசு ஓடை பராமரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதை நான் பாராட்டுகிறேன். அது போற்றக் கூடிய ஒரு திட்டமாகும். விவசாயிகள் பயன் அடையும் வகையில் அந்தத் திட்டம் செயல்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிறு சிறு குட்டைகளையும், ஏரிகளையும் மராமத்து செய்யவும், செப்பனிடவும் ஏற்பாடு செய்து. அது 50 ஏக்கர் ஆயக்கட்டாக இருந்தாலும், 10 ஏக்கர் ஆயக்கட்டாக இருந்தாலும் சிறுசிறு பாசன வசதிகளை செய்து விவசாயிகள் பயன் அடைகின்ற வகையில் விவசாய இலாக்கா காரியங்களை செய்து வருகிறது என்பதைப் பார்த்து நாம் பாராட்ட வேண்டும்.

ஒரு அரசாங்கம் என்ன செய்தாலும், கீழ் மட்டத்திற்கு அந்தத் திட்டத்தின் பலன்சென்று சேர்ந்தால்தான் மக்கள் பயன்பெறுகின்ற வாய்ப்புகள் ஏற்படும். அந்த வகையில் விவசாயிகளுக்கு இப்படிப் பட்ட நிலைமைகள் கிட்டி வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த இலாக்காவில் இருப்பவர்கள் இன்னும் கவனம் செலுத்தினால், முழுமையான பயன் கிடைக்கும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இருக்கின்ற ஓரிரு குறைபாடுகளையும் நிவர்த்தி செய்தாக வேண்டும்.

கிராமங்களில் உள்ள குளம், குட்டைகளை ஆழப்படுத்தினால், தண்ணீரை அதில் தேக்கி வைத்துக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். காலத்தில் பெய்கின்ற மழை மிகவும் குறைவாக இருப்பதால் இந்தத் தண்ணீர் பயன்படும். இப்பொழுது என்ன செய்கிறோம் என்றால் அணையை மட்டும் செம்மைப்படுத்துகிறோம், பலப்படுத்துகிறோம். ஆனால் அதுமட்டும் போதாது. அந்த அணையின் கீழே உள்ள ஏரிகளையும் ஆழப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் தண்ணீர் அதில் தேங்குவதற்கான வழி ஏற்படும். அணையைச் செப்பனிடுகின்றபொழுது வெட்டிய இடத்திலேயிருந்தே மண்ணை எடுத்துப் போடுகிறார்கள். அப்படிப் பார்க்கிறபொழுது அந்த ஏரிகள் பயனுள்ள ஏரிகளாக அமைய





வில்லை. விவசாயிகளுக்குப் பயன் தருகின்ற ஏரிகளாக அவைகள் அமையவில்லை. வெட்டிய இடத்திலேயே எப்பொழுதும் மராமத்து செய்கிறார்கள். ஆகவே, யாரோ பலன் அடைகிறார்கள். அந்த நிலைமையைத் தடுக்க வேண்டும். 200 ஏக்கர் உள்ள ஆயக் கட்டுகளில், இரண்டு மூன்று நாட்கள் புல்டோசர்களின் மூலம் ஏரியை ஆழப்படுத்தினால் இதே தொகையைக் கொண்டு 400 ஏக்கர் உள்ள இடங்களில் செப்பனிட முடியும்.

உதாரணத்திற்கு ஒன்றைக் கூறுகிறேன். என்னுடைய பகுதியில், அகரம் பஞ்சாயத்து என்ற இடத்தில், சங்கிலிக்குப்பம் காரணியில், 65,000 ரூபாய் மதிப்பீட்டில் செலவிட்டு ரிவெட்மெண்ட் வெட்டிப் போட்டிருக்கிறார்கள். இதனால் விவசாயப் பெரு மக்களுக்கு ஒரு நயாபைசா கூடப் பயன் இல்லை. ஏனென்றால் திட்டம் ஒழுங்காகத் தீட்டப்படவில்லை. ஏரியின் கீழ் உள்ள ஆயக்கட்டுகளுக்குப் பயனுள்ள வகையில் இருக்குமா என்று அதிகாரிகள் நேரடியாகப் பார்த்து திட்டம் தீட்டவில்லை. இப்படிப் பல்வேறு திட்டங்கள், அரசாங்கம் எவ்வளவு செலவு செய்தாலும் பயன் இல்லாமல் போகின்றன. இந்தப் போக்கினை தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு திட்டத்தைச் செயல்படுத்துகின்றபொழுது அங்கேயுள்ள ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகியவர்களைக் கலந்தாலோசித்து செய்ய வேண்டும்.

(நண் பகல் 12-00)

4 வாரணி எடுக்க இருக்கிறோம். எந்தப் பகுதியில் எடுத்தால் அங்கே இருக்கின்ற விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்று கலந்து ஆலோசித்தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாது. ஆகவே, யார் எந்தக் காரியத்தைச் செய்தாலும், அரசாங்கம் எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும், பயன் உள்ள வகையில் நான் சொன்ன வகையில் திட்டத்தை நிறைவேற்றினால் அரசாங்கத்திற்கும் நல்லது, அதிகார வர்க்கத்திற்கும் நல்லது. ஆட்சிக்கும் நல்லது. அந்த மக்களுக்கும் அது நன்மை உள்ளதாக அமையும். ஆகவே, எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் அந்தப் பகுதியிலே இருக்கிறவர்களை கலந்தாலோசித்து, இப்படிப்பட்ட ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து. ஹோஸ் பைப் போடுகிறார்கள். அது நல்ல திட்டம் தான், வரவேற்கத்தக்க திட்டம்தான். விவசாயிகள் பலன் பெறத் தக்க திட்டம்தான். ஆனால், ஒன்றே ஒன்று மட்டும் பயன் இல்லாமல் போய்விடுகிறது. காரணம் ஒரு முறை அந்த ஹோஸ் பைப்பில் தண்ணீர் பாய்ச்சினாலே, அது பிய்ந்து விடுகிறது; தானாகவே பிய்ந்து விடுகிறது. அதற்குக் காரணம், போதுமான திறன் உள்ளதாக அந்த ஹோஸ் பைப் இருப்பதில்லை. ஆகவே,

நல்ல எண்ணத்தோடு காரியத்தை செய்தாலும், அந்தப் பைப் வலுவுள்ளதாக இல்லாமல் இருப்பதால், தண்ணீர் போகிற போர்சில் அடிக்கடி கிராக்காகப் பிய்ந்து விடுகிறது. ஆகவே, தரமான ஹோஸ் பைப் வழங்க வேண்டும். அப்படி வழங்கி, நல்ல திட்டத்தைப் பலனுள்ளதாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊருணிகளைப் பொறுத்தவரையில், அதிகாரிகளை, அங்கே ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற ஆணையர்களை, அந்தப் பகுதியிலே இருக்கிற எங்களைப் போன்றவர்களைக் கலந்தாலோசித்து, ஊருணியாக இருந்தாலும் அல்லது தடுப்பணையாக இருந்தாலும், குளம், குட்டைகள் சீர் செய்வதாக இருந்தாலும், விவசாயிகளைக் கலந்தாலோசித்து, பயன் உள்ள வகையில் செய்தால், அது நன்மை பயக்கும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, குடிதண்ணீர் பிரச்சினை. ஏழை, எளிய மக்கள் கிராம மக்கள், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில், குடிதண்ணீர் பஞ்சம் எப்படியாவது தீரும் என்று நம்புகிறார்கள். ஆகவே, அதிலே முழு கவனம் செலுத்தியாக வேண்டும்.

என்னுடைய குறிஞ்சிப்பாடி தொகுதியில், வடலூரில், வள்ளலார் வாழ்ந்த பகுதியில், பிறந்த பகுதியில், சித்தி பெற்ற பகுதியில், குடி தண்ணீர் இல்லை என்று கடந்த நாலரை ஆண்டுகளாக, ஐந்து ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன். நான் வந்ததிலிருந்து, வள்ளலார் வாழ்ந்த இடத்தில் குடி தண்ணீர் பிரச்னையைப் போக்க வேண்டுமென்று முயற்சிக்கிறேன். ஆனால், இன்னமும் முழு திட்டம் உருவாகவில்லையென்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நாலரை ஆண்டுகள் பொறுத்து, இப்பொழுதுதான், மதிப்பீடுகள் நிதித்துறைக்கு வந்திருக்கிறது. இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகுமோ தெரியவில்லை. எந்தத் திட்டமாக இருந்தாலும், குடி தண்ணீர் திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசாங்க அதிகாரிகள் முழு கவனம் செலுத்த வேண்டுமென்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஆகவே, வருகிற ஆண்டில் குடி தண்ணீர் பொறுத்தவரை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழு கவனம் செலுத்தி, தமிழ் நாட்டில் குடிதண்ணீர் பஞ்சத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாக்குக் கேட்கச் சென்றபொழுது குடி தண்ணீர் தான் முக்கியமாகக் கேட்டார்கள். குடி தண்ணீர் தாருங்கள் என்றுதான் அவர்கள் ஏதோ கெஞ்சிக் கேட்பதைப் போல் கேட்டார்கள். குடி தண்ணீர் வேண்டும் என்று கிராம மக்கள் வலியுறுத்தினார்கள். ஆகவே, குடி தண்ணீர் இல்லையென்ற நிலையைப் போக்கியாக வேண்டும்.



என்னுடைய தொகுதியில் 43 ஊராட்சிகளில் குடி தண்ணீர் வசதியே இல்லை. ஊராட்சிகளை 3, 4, 5, 6 என்று காட்டகரியாகப் பிரித்திருக்கிறார்கள். 6-வது காட்டகரியில் வரும் ஊராட்சிகளில் முழு அளவு குடி தண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். என்னுடைய பகுதியில் 43 ஊராட்சிகளில் குடி தண்ணீரே இல்லை. ஆனால், அவை எந்த காட்டகரியில் இருக்கிறது என்று பார்த்தால், 6-வது காட்டகரி என்று சொல்கிறார்கள். 6-வது காட்டகரி, முழுமையாகக் குடி தண்ணீர் இருக்கிறது என்று சொல்கிறார்கள், இந்நிலையில் நான் கூட லிஸ்ட் போட்டு, குடிநீர் வடிகால் வாரியத்தலைமைப் பொறியாளரிடமும் அமைச்சரிடமும் கொடுத்திருக்கிறேன். அதனைக் கவனிக்க வேண்டும். வள்ளலார் வாழ்ந்த பகுதியிலாவது குடி தண்ணீர் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படியாவது ஏற்பாடு செய்யவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன் வணக்கம்.

*திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் அவை முன் வைக்கப்பட்டிருக்கிற வேளாண்மைத் துறை, குடி நீர் வழங்கல் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

" சுழன்றும் ஏர் பின்னது உலகம் " என்ற குறள் மொழிக்கு ஏற்ப மக்களுக்குத் தேவையான உணவை அளித்து, நாட்டின் வளத்தை மேம்படுத்திக் கொண்டிருக்கிற வேளாண்மைத் துறை மேலும் சிறப்போடும் வலிவோடும் நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. வேளாண்மைத் துறை ஒரு தனித் துறையாக இருந்தாலும் விவசாயிகளுக்கு இருக்கிற பிரச்சினைகளும் தொடர்புகளும் இந்தத் துறைக்கு மட்டுமல்லாமல் மின்சாரத் துறை, வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை, பாசனத் துறை போன்ற பல்வேறு துறைகளோடும் பரவி இருந்துவருகிறது. எப்படி இருப்பினும் விவசாயப் பெருங்குடி மக்களுடைய குறைகளை, பிரச்சனைகளைப் போக்க, அவர்களுடையவாழ்வு வளம்பெற இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் வேளாண்மைத் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

பல திட்டங்களைத் தீட்டி, உணவு உற்பத்தியைப் பெருக்க பல்வேறு தீவிர நடவடிக்கைகளை அரசு முனைப்பாகச் செயல்படுத்தி வருகிறது. உணவு உற்பத்தியில் ஒரு காலத்திலே பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழ்நாடு சென்ற இரண்டு, மூன்று ஆண்டுகளாக மழை இல்லாமல் இருந்தும் தன்னிறைவு பெற்றிருக்கிற மாநிலமாக உருவாகியிருக்கிறது. இயற்கையின் சோதனை

களால் வறட்சியும் புயலும் மாறி மாறி வந்தாலும் விவசாயப்
பெருங்குடி மக்கள் அவற்றை சாதனைகளாக்கி, நல்ல பல திட்டங்
களை அரசு தீட்டி செயல்படுத்தியதால், உற்பத்தியைப் பெருக்கி
யிருக்கிறார்கள். குறிப்பாக வேளாண்மைத் துறையில் இன்றைக்கு
பல்வேறு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு, பல வேலைகள் சிறப்
பாக, செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றை
மேலும் சிறப்பாகச் செயல்படுத்த தேவையான சூழ்நிலை
களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டு மக்களுக்கு உணவு அளித்துக் கொண்டிருக்கிற விவசாயி
தன்னுடைய வாழ்வை உயர்த்திக் கொள்ள முடியவில்லை. கார
ணம் இன்றைக்கு இயற்கையை நம்பி, தன்னுடைய உழைப்பை
நம்பியிருக்கிற விவசாயி, தான் உழைத்து சம்பாதித்த பொருள்
களுக்கு ஏற்ற விலை கிடைக்கவில்லை. தான் செய்கிற விவசாயத்
திற்கு தேவைப்படுகிற இடு பொருள்கள் விலை அதிகமாக இருக்
கின்ற காரணத்தால் தன்னுடையஉழைப்பிலே இருக்கிற தேக்கத்தை
அவன் மாற்றியாக வேண்டும்; அதற்கு என்ன வழிமுறை
என்று தேடுகிறான். அவனுடைய இப்படிப்பட்ட குறைபாடு
களைப் போக்க வேண்டுமென்றால் அதற்கு அரசுதான் முழு முயற்சி
எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு மத்திய அரசும் மாநில அரசும் விவசாயப் பெருங்
குடி மக்களுக்கு பல்வேறு நன்மைகளைத் தொடர்ந்து செய்து
கொண்டு வருகின்றன. அப்படி இருந்தும் அவர்களுடைய பிரச்
சனை தீரவில்லை என்றால் சற்று அதிக முனைப்போடு செயல்பட
வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான உரம், இயந்திர
சாமான்கள், இடுபொருள்கள் மலிவான விலையில் கிடைக்கவும்
அவர்களுடைய உற்பத்திப்பொருள்களுக்கு அதிகவிலை தருவதற்கும்
சற்று முனைப்போடு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
உரத்தின் விலையை நிர்ணயிப்பது மத்திய அரசு. அதைக் கூட்
டவோ குறைக்கவோ மாநில அரசுக்கு எந்தவிதமான அதிகார
மும் இல்லை. அப்படிப் பார்க்கும் போது இன்றைக்கு ஒருங்
கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாகத்தான் ஒரு சில
உரங்களுக்கு மானியம் தருகிறார்கள். அதிலும் மாநில மத்திய
அரசுகள் சரிபாதி என்ற அளவில் நிர்ணயித்து தருகிறார்கள்.

அதைப்போலவே இன்றைக்கு கரும்பு விலை, நெல் விலைகளை
நிர்ணயிக்கும் பொறுப்பும் மத்திய அரசிடம் இருக்கிறது. மாண்பு
மிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற
கொள்கை விளக்கக் குறிப்புகளில் கரும்பு உற்பத்தியில் தமிழ்நாடு
முதலிடம் வகிக்கிறது, அரிசி உற்பத்தியில் இரண்டாவது இடத்தைப்
பெற்றிருக்கிறது என்று பெருமையோடு குறிப்பிட்டிருக்கிறார்
கள். இந்தப் பெருமையைச் சேர்த்த விவசாயப் பெருங்குடி
மக்களுக்கு அவர்களுடைய விளை பொருள்களுக்கு நல்ல விலை
தருவதற்கு மத்திய அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.





அதே நேரத்தில் இன்றைக்கு விலை நிர்ணயம் செய்கிறபோது ஒட்டு மொத்தமாக இந்தியா முழுவதற்கும் சேர்த்து ஒரே மாதிரியான விலையை நிர்ணயம் செய்கிறார்கள். மாநிலத்திற்கு மாநிலம் உற்பத்தித் திறனும் உற்பத்தி செலவும் மாறுபடுகிறது. ஆகையால் அந்தந்த மாநிலத்தில் ஏற்படுகிற உற்பத்திச் செலவுக்கு ஏற்றவாறு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கரும்பு உற்பத்தியை எடுத்துக் கொண்டால், உத்தரப்பிரதேசம் மத்தியப் பிரதேசம் போன்ற வட மாநிலங்களில் உற்பத்திச் செலவு குறைவு; ரெக்கவரி அதிகமாக இருக்கிறது. அதே நேரத்தில் தமிழ்நாட்டில் உற்பத்திச் செலவும் அதிகம், ரெக்கவரியும் குறைவாக இருக்கிறது. ஆகவே, வட மாநிலங்களைப் போல், இங்கேயும் விலை நிர்ணயம் செய்யாமல் உற்பத்திச் செலவுக்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும். ஆகையால் மத்திய அரசு தமிழ்நாட்டில் கரும்பு விலையை 300 ரூபாய்க்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அதேபோல் நெல்லினுடைய விலையையும் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளைப் பொறுத்தவரையில் தண்ணீர் இல்லாத ஒரு பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருந்து கொண்டிருப்பதால், வறட்சி போன்ற நிலைமை ஏற்படுகின்றபோது சாதாரண விவசாயி தன்னுடைய கிணற்றை ஆழப்படுத்தவேண்டும் என்றாலோ, அல்லது இயந்திரங்களைக் கொண்டு வெட்ட வேண்டும் என்றாலோ அதற்குரிய வாய்ப்பும், வசதியும் அற்றிருக்கின்ற காரணத்தால் விவசாய இலாக்காவின் மூலமாக அவர்களுக்கு வாடகைக்கு அந்த இயந்திரங்கள் கிடைக்கின்ற வகையில், அவ்வாறு கிடைத்து அவற்றைப் பயன்படுத்துகின்ற வகையில், வழிவகைகளை உருவாக்கித்தரவேண்டும். வறட்சி, புயல், வெள்ளம் போன்றவைகளால் சிறிய விவசாயிகள் பாதிக்கப்படுகின்றபோது நெல், கரும்பு, சிறு தானியங்கள் போன்ற விதைப் பொருட்களை இலவசமாக வழங்கலாம். மற்ற விவசாயிகளுக்கு மானியமாக வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒருங்கிணைந்த திட்டங்கள், ஊரக வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றின் மூலம் சிறு விவசாயிகளுக்கும் பயன்படும் நல்ல திட்டங்களை எல்லாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அவற்றின் மூலம் கொடுக்கக்கூடிய உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள் போன்றவை [illegible] கிடைக்கப்படுகின்றன. [illegible] வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. தி. அன்பழகன்] [1985 ஜூன் 3

எண்ணெய் வித்துக்கள் துறையில், நிலக்கடலை, தென்னங்கன்று போன்றவற்றை அளித்துக் கொண்டிருக்கிறோம். சாதாரண விவசாயிகளுக்கு பயன்படவேண்டும் என்ற நோக்கத்தோடு அவற்றை அளித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரு சில இடங்களில் அவை தவறான வழிகளில் சென்றுவிடுகின்ற காரணத்தால், அவற்றைக் கண்காணித்து அந்தப் பொருட்கள் சாதாரண விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற வழிவகைகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சான்று பெற்ற விதைகள், பயிர் பாதுகாப்புக்கு வேண்டிய மருந்துகள் போன்றவை விலை அதிகமாக இருக்கின்றன. அந்த விலைகளை எல்லாம் குறைத்துத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அமைந்ததற்குப் பிறகு தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் தருகின்ற நல்ல பெரும் பொறுப்பினை ஏற்று செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஆனால் மழை குறைவதன் காரணத்தால் ஆங்காங்கே பல பகுதிகளில் குடிநீர் பிரச்சினை ஏற்படுகின்றது. அப்படிப்பட்ட பகுதிகளை எல்லாம் கவனித்து அவற்றுக்கெல்லாம் குடிநீர் தருகின்ற வகையில் இன்னும் சிறப்பாகச் செய்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டு இதற்காக 126 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது தமிழகத்திலுள்ள ஒரு பெரிய மாவட்டமாகும். அந்த மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஒரு சோதனையான கட்டத்தில் இருக்கிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் 31 தாலுக்காக்கள் வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டிலிருந்து மழை இல்லை. ஆகவே, நீர் எடுப்பதற்கான வழியே இல்லை. எனவே, எங்களுடைய மாவட்டத்திலுள்ள வறட்சி நிலையைப் போக்குவதற்காக எங்களுடைய மாவட்டத்தை வறட்சியான மாவட்டம் என்று அறிவித்து எங்களுடைய குடிநீர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், புரட்சித் தலைவர் அரசும் உதவி புரியவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வறட்சிப் பகுதி என்று நிர்ணயிப்பதைப் பொறுத்தவரையில், கடைபிடிக்கப்படுகின்ற விதி என்னவென்றால் சென்ற ஆண்டு பெய்த மழையையும், இந்த ஆண்டின் விவசாயிகளின் பயிர் நிலைமையையும் வைத்துக் கொண்டு வறட்சிப்பகுதி என்று அறிவிக்கப்படுகிறது. ஆனால் எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டிற்குப் பிறகு மழை



1985 ஜூன் 3] [திரு. தி. அன்பழகன்]

இல்லை. விவசாயிகளால் பயிர்களைக் காப்பாற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஒருசில தாலுக்காக்களையாவது வறட்சிப் பகுதி என்று அறிவித்து அங்கே துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வடாற்காடு மாவட்டத்திற்கு 500 குழாய்கள்தான் அரசின் மூலம் தரப்பட்டிருக்கின்றன. வடாற்காடு மாவட்டம் பெரிய மாவட்டமாக இருப்பதால் இந்த 500 குழாய்களை வைத்துக் கொண்டு அனைத்து பகுதிகளுக்கும் நன்மை செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். 36 ஒன்றியங்கள் எங்களுடைய மாவட்டத்தில் இருப்பதன் காரணத்தால் கிட்டத்தட்ட 10 குழாய்கள்தான் ஒரு ஒன்றியத்திற்கு அமைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. எனவே, அந்த 500 என்பதை 2,000 ஆக அதிகப்படுத்தி எங்கள் மாவட்டத்தில் இருக்கின்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். இந்த குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், 6 பிரிவுகளாகப் பிரித்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு பிரிக்கப்பட்டது 10, 12 ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட ஒன்றாகும். அப்போது பிரிக்கப்பட்டதாக இருப்பதன் காரணத்தால் இப்போது அந்த முறையின்படி காரியங்களைச் செய்கிறபோது மிக மோசமான பகுதிகளில் இதைச் செயல்படுத்த முடியாத நிலைமை ஏற்படுகிறது. எனவே, அவற்றை மாற்றிச் செயல்படுத்தினால் நல்லது. அதாவது இருக்கின்ற சில விதி முறைகளைக் கடைபிடிப்பதன் காரணத்தால் தொடர்ந்து உடனடியாகச் செய்ய முடியாத நிலைமை இருப்பதால், அந்த கொடுக்கின்ற முறைகளை மாற்றியாவது எந்தெந்தப் பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தப் பகுதிகளை உடனடியாக எடுத்துக் கொண்டு வேலைகளைத் தொடங்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் போடப்பட்டிருக்கின்ற குழாய்களை நிர்மாணிக்கின்ற பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடத்திலே அளித்திருக்கிறோம். அந்தக் குழாய்கள் பழுதடைகிறபோது, அவைகளை உடனடியாக பழுது பார்த்து தர முடியாத சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. காரணம், அவைகளை கண்காணிக்கின்றவர்கள் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தாலும், அவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் குழாய்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும், அவைகளை உடனடியாக பழுதுபார்க்க முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, அதிகமான அளவில் கண்காணிப்பாளர்களை நியமித்து, பழுதுபட்டிருக்கிற குழாய்களை ரிப்பேர் செய்து உடனடியாக நீரை பாதுகாத்து கொடுப்பதற்கு வழிவகைகளை அரசு உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பொறுத்த வரையில், அரசு ஒரு சில விதி முறைகளின் மூலமாக நிறைவேற்றி வருகிறது. அதிலே இருக்கிற சில சிக்கல்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட பகுதியிலேயிருந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக பொது மக்களுக்கு குடி தண்ணீர் வழங்க வேண்டும் என்று விரும்பிச் செயல்படுகிறபோது, அந்த நீரை பரிசீலித்து, அது குடிப்பதற்கு உகந்ததுதானா என்பதை தெரிந்து கொள்ளும் வகையில், அதன் சாம்பிள் சென்னைக்கு பரிசோதனைக்காக அனுப்பப்படுகிறது. இதிலே, மிகப்பெரிய துரதிருஷ்டவசமாக என்ன நடக்கிறது என்றால், இந்தப் பரிசோதனை செய்பவர்கள், அனுப்பப்படுபவை எந்த நீராக இருந்தாலும் அது குடிப்பதற்கு லாயக்கு இல்லை என்று சொல்லி திருப்பி அனுப்புவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான்.

ஒரு பரிசோதனைக்காக எங்கள் கிராமத்திலே ஒரு சில இடங்களிலே ஏற்கெனவே வினியோகிக்கப்பட்டு வரும் குடி நீரையே அனுப்பி வைத்தபோதும் கூட, அதைக் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லை என்று சொல்லி திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அரசு இதை கவனமாக ஆராய்ந்து இதனால் ஏற்படுகிற காலதாமதத்தை போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குடி தண்ணீர் பிரச்சினையைப் பொறுத்த வரையில் வட ஆற்காடு மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்றும், மக்களுக்கு குடி தண்ணீர் வழங்குவதிலும், விவசாயிகளுக்கு நன்மை வழங்குவதிலும் புதிய வழி முறைகளை உருவாக்கித் தரவேண்டும் என்றும், அதையும் மிக விரைவாகத் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பு நல்கியதற்காக நன்றியைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும், வேளாண்மை, குடிநீர் போன்ற மானியக் கோரிக்கைகளின் மீது சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக உழைக்கின்ற உழவர்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய நிலையில், அது நெல்லாக இருந்தாலும் சரி, கரும்பாக இருந்தாலும் சரி, இல்லை என்பதை நாமெல்லோரும் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அப்படி ஒரு சூழ்நிலை இருப்பதை கட்டுப்படுத்துவதற்காகத்தான், மாநில அரசே விலை நிர்ணயக் கமிஷனை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி வருகிறோம். பக்கத்திலே இருக்கின்ற கர்நாடகத்திலே இருப்பதைப் போல நம்முடைய மாநிலத்திலேயும், கரும்புக்கும், நெல்லுக்கும், விலை நிர்ணயக் கமிஷனை அரசாங்கம் நியமித்து, கட்டுப்படியாகக்கூடிய விலையை அவைகளுக்கு நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





குறிப்பாக, நெல்லைப் பற்றி நன்றாக எல்லோருக்கும் தெரியும். கடந்த காலத்திலே காவிரி டெல்டாப் பகுதியிலே குவிண்டாலுக்கு 15 ரூபாய் மானியம் கொடுத்ததன் காரணமாக, வேளாண்மைத் துறைக்கு 15 கோடி ரூபாய் செலவு ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். ஆனாலும் அது தேவையானது. இதுபோன்ற நல்ல திட்டங்களை விரிவடையச் செய்ய வேண்டும். குவிண்டாலுக்கு 15 ரூபாய் மானியம் என்று காவிரி டெல்டாப் பகுதிக்கு கொடுத்ததைப் போல, எல்லா விவசாயிகளுக்கும் அந்த மானியம் கிடைக்கச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 7-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நாம் நம்முடைய தமிழகத்திற்கென்று 10 சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தாலும் கூட, கரும்புக்கும் கட்டுப்படியாகக்கூடிய விலையை நிர்ணயிக்க வேண்டும். அப்படி கரும்புக்கு விலை நிர்ணயம் செய்கிறபோது, கொஞ்சம் மானியம் அதிகமாகக் கொடுக்க அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, அடுத்து சாதாரணமாக நெல் விதையை எடுத்துக்கொண்டால் ஐ. ஆர். 20 என்ற வகை நெல், வெள்ளத்திலும், வறட்சியிலும் நன்கு தாங்கக் கூடிய நெல்லாக ஒரு காலக் கட்டத்தில் இருந்தது. ஆனால் சென்ற ஆண்டு மஞ்சள் நோயால் பாதிக்கப்பட்ட இந்த ஐ. ஆர். 20 என்ற ரகம், தற்போது தன்னுடைய வீரியத் தன்மையை இழந்து விட்டது. ஆகவே, வீரியம் மிக்க புதிய ரக நெல் ரகம் ஒன்றை அரசு, உழவர்களுக்கு அறிமுகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கடலையை எடுத்துக் கொண்டால், ஜெ.எம். 24 என்ற விதைக் கடலை நாட்டு மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. குஜராத்திலும் ஒரு புதிய ரகம் இதுபோன்று இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதையும் நம் விவசாயிகளுக்கு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சாதாரண ரக விதையாக இருந்தாலும் சரி, வீரிய சக்தி உள்ள விதையாக இருந்தாலும் சரி, வேளாண்மைப் பண்ணையில் அவைகளை நல்ல முறையில் உற்பத்தி செய்து, உழவப் பெருமக்களுக்கு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, அடுத்து உரத்தை எடுத்துக் கொண்டால், நல்ல உரமாக, மண் பரிசோதனைக்கு ஏற்ப மண்ணின் தரத் தன்மைக்கு ஏற்றவாறு உரம் இட வேண்டும் என்று நாமெல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அரசாங்கமும் சொல்லிக் கொண்டிருக்கிறது. என். பி. கே. என்ற ஒரு உரம் இருக்கிறது. அதை மிகச் சாதாரணமாக எல்லோரும் உபயோகிக்கிறார்கள். அம்மோனியா சல்பேட்டு என்றால் பயன் அதிகமாக கிடைக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

(பிற்பகல் 12-20)

ஆகவே, யூரியாவைப் போல அம்மோனியம் சல்பேட்டை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு அரசு தரப்பில் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சென்ற ஆண்டு பயிர்கள் மஞ்கள் நோயால் பாதிக்கப்பட்டு விட்டது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் முன் வர வேண்டும். சாதாரணமாக பூச்சி மருந்து அடித்தால் பூச்சுகள் குறையவேண்டும். ஆனால் பூச்சிகள் அதிகமாகி விடுவதை நானே நேரில் பார்த்திருக்கிறேன். ஆகவே தயாரிக்கப்படும் பூச்சி மருந்தின் தரத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது என்பதை அரசு உணர வேண்டும். ஆகவே பூச்சி மருநதின் தரத்தை நிர்ணயம் செய்து, இருக்கிற கோளாறை கண்டுபிடித்து நல்ல தரமான பூச்சி மருந்தை உற்பத்தி செய்ய வேண்டும். குறிப்பாக சென்ற ஆண்டு ஏற்பட்ட மஞ்சள் நோயை விரைவாக நிவர்த்தி செய்வதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1984-85-ஆம் ஆண்டிலே, நம்முடைய உற்பத்தி மிகவும் நன்றாக இருந்தது. காரணம், மேட்டூர் அணையில் தண்ணீர் இருந்தது. காலாகாலத்தில் மழை பெய்தது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் சென்ற ஆண்டு அரிசி 56 லட்சம் டன்னையும், கரும்பு 20 லட்சம் டன்னையும் தாண்டியது. நம்முடைய மாநிலத்தில் அதிகமான உற்பத்திசெய்ததை நான் மனமார பாராட்டுகிறேன்.

இந்த ஆண்டில் உற்பத்தி எப்படி இருக்குமோ தெரியவில்லை. இந்த ஆண்டு போதுமான தண்ணீர் கிடைக்குமென்று நம்புகிறேன். காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். 1924-ல் ஏற்பட்ட ஒப்பந்தம் முடிவுபெற்ற காரணத்தால், மேற்கொண்டு எந்த முடிவும் எடுக்கப்படாமல் இருக்கிறது. அந்த ஒப்பந்தம் மீண்டும் எப்போது ஏற்படும் என்று தெரியாத நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். அதை நல்லமுறையில் நம்முடைய அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மினிக்கிட்டுகள் என்ற திட்டத்தை கொள்கைக் குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள். இந்த மினிக்கிட்டுத் திட்டத்திலே உளுந்தாக இருந்தாலும், எண்ணெய் வித்தாக இருந்தாலும், கொடுக்கிறார்கள். ஆனால் அவை அடிமட்டத்தில் விவசாயிகளுக்கு போய் சேர்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதற்கு என்ன காரணம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். சாதாரணமாக வேளாண்மைத் துறையில் டி.வி. என்ற திட்டத்தில் பணிகளைச் செய்கிறார்கள். ஆனால் கடைமடையில் இருக்கிற களப்பணியாளர்கள் மிகக் குறைவாக இருக்கிறதாலே தான் இந்தத் திட்டத்தின் பலன் மக்களுக்கு போய் சரியாக சேரவில்லை. அதிலே பல்வேறு கோளாறுகள் இருக்கின்றன. குறிப்பாக அரசாங்கத்தின் மானியங்கள் வேளாண் குடிமக்களுக்கு போய் சேர்வதில்லை. பல்வேறு தவறுகள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றை தவிர்ப்பதற்கு





வேளாண் மக்களுடைய பிரதிநிதிகள் அத்தகைய நலத் திட்டங்களில் சேர்க்க வேண்டும். அதிலும் குறிப்பாக ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில், கடைமடையில் இருக்கிற களப்பணியாளர்கள் கிராம நல ஊழியர்கள் அந்தப் பணிகளைச் செய்தால் நலமாக இருக்கும். இதில் ஒன்றும் பெரிய பிரச்னை இருப்பதாக தெரியவில்லை. ஆகவே, அடிமட்டத்தில் விவசாய மக்களோடு தொடர்பு கொண்டு இருக்கிற கூட்டுறவு ஸ்தாபனமாக இருந்தாலும், ஊராட்சி ஒன்றியமாக இருந்தாலும், அவை இந்தப் பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, நீர் ஊற்றுகள், 'ஸ்பிரிங்லர்ஸ்', சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் கொடுக்கப்பட்டன. அது கடைசியாக மார்ச் மாதம் தான் கொடுக்கப்பட்டது. அந்தத் திட்டம் எண்ணெய் வித்து போன்ற திட்டத்திற்கு நல்ல உபயோகமாக இருக்கிறது. ஏறத்தாழ 5,000 ரூபாய் மானியமென்று சொல்லப்படுகிறது. அந்த உதவி எல்லா விவசாயிகளுக்கும் போய் சேரவில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு 1985-86-ல் அத்தகைய திட்டம், குறிப்பாக எண்ணெய் வித்துகள் நடைமுறையில் இருக்கிற மாவட்டங்களில் அதனைச் சிறப்பான முறையில் செய்வதற்கு மிகவும் உதவியாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல சமுதாயத்தில் விவசாயம் எவ்வளவு முக்கியமானது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சுழற்சி முறையில், மழைத் தண்ணீரை நம்பியிருக்கிற மக்கள், ஆற்றுத் தண்ணீரை நம்பியிருக்கிற மக்கள் இருக்கிறார்கள். அடிமட்டத்தில் இருக்கிற மக்களுக்கு போர்-வெல் போடவேண்டுமென்றால் ட்ரில்கள் குறைவான வாடகையில் கொடுக்கப்பட வேண்டும். சென்ற முறை நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்த நேரத்தில் அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய வாடகை மிக மிக அதிகமாக இருக்கிறது. அந்த வாடகையை குறைப்பதற்கு பெருமுயற்சி செய்ய வேண்டும். இதுபற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் ஒரு வாக்குறுதி அளித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆகவே இதில் அரசு கவனம் செலுத்தி ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தென்னை அபிவிருத்தியை எடுத்துக் கொண்டால் பக்கத்து மாநிலமான கேரளாவிற்கு அடுத்தபடியாக நம்முடைய மாநிலம்தான் சிறப்பான முறையில் இருக்கிறது. இன்றைக்கு அதிகப்படியான பணப்புழக்கம் உள்ள தொழில் இந்த தென்னை அபிவிருத்தித் தொழில் தான். ஆகவே, இப்படிப்பட்ட தென்னை அபிவிருத்திக்காக இப்போது ஊரக வளர்ச்சித் திட்டத்திலே

நிறைய மானியம் கொடுத்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவுகிறார்கள். அதேபோல் இதை இன்னும் நல்ல முறையிலே சீர் செய்தால், இந்தத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு —உங்களுக்கு நன்றாகத் தெரியும்— தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு, அது கரும்பாக இருந்தாலும், நெல்லாக இருந்தாலும், கடலையாக இருந்தாலும், நியாயமான விலை கிடைப்பதற்கு மார்க்கெட் கமிட்டிகள் ஆங்காங்கே நிறுவியிருக்கிறார்கள். அங்கே இடைத் தரகர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால் விவசாயிகளுக்கு உரிய தொகை கிடைக்கவில்லை. எனவே, மாவட்டத்திலே இருக்கிற, ஆங்காங்கே உற்பத்தி செய்யப்படுகிற அந்த பொருட்களுக்காக இருக்கிற, அந்த மார்க்கெட் கமிட்டிகளுக்கு நிதி உதவி அளித்து, அதைமேலும் ஊக்குவிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்திலே வேளாண்மைக் கல்லூரி அமைப்பதை பற்றி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். திருநெல்வேலிக்கு அடுத்து, தஞ்சையிலே வேளாண்மைக் கல்லூரி வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, 1985-86-ஆம் ஆண்டிலே தஞ்சை மாவட்டத்திலே ஒரு விவசாயக் கல்லூரியை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, குடிநீரைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நாட்டு மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு அடித் தளத்திலே இருக்கிற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை நாம் வழங்கிக்கொண்டு இருக்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட மக்களுக்காக கட்டப்பட்ட ஓவர்ஹெட் டாங்குகளில் தண்ணீர் சோர்ஸ் இல்லாமல் இருக்கிறது. பல இடங்களில், மாவட்டத்திலே ஏறக்குறைய 50 சதவீத மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் இன்றைக்கு சரியாக இயங்காத நிலையில் இருக்கிறது. ஆகவே, இதை இயக்குவதற்கு நாம் பெரு முயற்சி செய்யவேண்டும்.

அதேபோல் குடிநீர் வடிகால் வாரியத்திலே பம்ப் செட்டுகள் வாங்குகிறார்கள், அதைத் தரமான வகையில் உள்ளதாகப்பார்த்து வாங்க வேண்டும். ஏதோ டெண்டர் என்ற பெயராலே, விலை குறைவாக வைத்து வாங்குவதினால், அவைகள் சரியாக இயங்காத நிலைமை ஏற்படுகிறது. எனவே, தரமான பம்புசெட்டுகளை குடிநீர் வடிகால் வாரியம் வாங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல் கை பம்புகள் மார்க்-2 என்று சொல்லுகிற அந்த பம்புகள் நல்லமுறையில் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. முன்னாலே இருந்ததை விட, இப்போது இருக்கிற இந்த மார்க்-2 பம்புகள் மிக நல்லமுறையில் இருக்கிறது. எனவே, இதை எல்லா இடங்களிலும் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். உங்களுக்கும் நன்றாகத் தெரியும். இந்த கேட்டகரி-வைஸ் என்பதே, சாதாரணமாக சில அதிகாரிகள் சில இடங்களில் எடுத்த நடவடிக்கைகளில் காரணமாக எல்லா மக்களுக்கும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட, அடிமட்டத்திலே இருக்கிற மக்களுக்கும் அது போய்ச்சேருவதில்லை. எனவே, இந்த கேட்டகிரி-வைஸ் என்பதைக் கொஞ்சம் சிந்தித்து ஆங்காங்கே இருக்கின்ற சூழ்நிலையிலே மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தாலும், ஆணையாளராக இருந்தாலும், குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய பொறுப்பாளராக இருந்தாலும், இதை பரிசீலனை செய்து, ஒரு கிராமத்திற்கு 3 ஆயிரம் ஜனத்தொகை என்றால், அந்தக் கிராமத்திற்கு வசதியில்லை. ஆனால் 150, 200 என்று ஜனத்தொகை இருக்கிற கிராமங்களுக்கு ஓவர்-ஹெட் டாங்க் கட்டுகிறார்கள். இது எல்லாம் ஏற்படுத்துவதற்குக் காரணம் மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால்தான், மக்களுக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே ஓவர்-ஹெட் டாங்க் கட்டுவதிலே, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர், குடிநீர் வடிகால் வாரியம், மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்றை அமைத்து, இதைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு, இந்த ஆண்டிடிலே வறட்சி ஏற்பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டிலே சாதாரணமாக கோடைக் காலத்திலே வெயில் அதிகமாக இருக்கிற காரணத்தாலே, நமக்கு எல்லாம் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது. இந்தப் பற்றாக்குறையைப் போக்க நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நடவடிக்கை எடுப்பதாக இந்த மன்றத்திலே வாக்குறுதி கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் சில மாவட்டங்களில் குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலிருந்து நம்முடைய அரசுக்கு பரிந்துரை வந்திருக்கிறது, ஆனால் அதன் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரை செய்த கோரிக்கைகளை, குறிப்பாக, இந்தக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே, தட்டுப்பாடு இருக்கிற இந்த வறட்சிக் காலத்திலேதான் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதிலும் குறிப்பாக, இந்த நல்ல திட்டத்தை, ஒரத்தநாடு பகுதியிலே நம்முடைய மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே, பிற்பட்ட

மக்களுக்கும், அடித்தள மக்களுக்கும், குறிப்பாக வறுமைக் கோட்டுக்குகீழே இருக்கிற மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிசெய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன். நகரத்திற்கு எப்படி குடிநீர் வசதி செய்து கொடுக் கிறார்களோ, அதைப்போல், நகரம்-கிராமம் என்று வேறுபாடு பார்க்காமல் அவர்களுக்கு குடிநீர் வசதியைச்செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே இப்படிப்பட்ட பல்வேறு ஓவர்-ஹெட் டாங்க் கட்டுவதிலே பல்வேறு புகார்கள் இருக்கின்றன. குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே சாதாரணமாக வறட்சியால் பாதிக்கப்பட்ட வள்ளம், செங்கிப்பட்டி போன்ற பகுதிகளிலேயும், புதுக்கோட்டை, ராமநாதபுரம் போன்ற மாவட்டங்களிலேயும், வறட்சியில் பாதிக்கப்பட்ட இடங்களிலே குடிநீர் கிடைப்பது என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே, வள்ளம் போன்ற பகுதிகளிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டிக் கொடுப்பதைப் போல், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு போர் போட்டு, பம்புகள் நிறுவி, குடிநீர் வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

திரு. மு. ஜான் வின்செண்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற குடிநீர், வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல நான் முற்படுகிறேன். தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளாக மழை இல்லாமல் வறட்சி ஏற்பட்டிருக்கிறது.

பல ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட போர் வெல்கள் 40 அடி முதல் 180 அடி வரை இருந்தாலும் அந்த போர் வெல் போடப்பட்ட நேரத்தில் நல்ல குடிநீர் இருந்தது. ஆனால் இப்போது இயற்கை பொய்த்துவிட்டதால் நிலத்தடிநீர் குறைந்துவிட்டதால் அந்ததண்ணீர் குறைவு ஏற்பட்டதுடன் அங்கேபோடப்பட்ட போர்வெல் தண்ணீர் உப்பு நீராக மாறியிருக்கிறது. ஆகவே இந்த அரசு கேட்டகிரி 1 லிருந்து 6 வரை ஏற்படுத்தி, ஒவ்வொன்றுக்கும் ஒரு இலக்கை வகுத்து வைத்து இருக்கிறார்கள். 6-வது கேட்டகிரியில் சேர்க்கப்பட்ட கிராமங்களில் ஏராளமான கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே எனது தொகுதியைப் பொறுத்த வரை நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி வட்டத்தில் மொத்தம் உள்ள 384 கிராமங்களில் 39 கிராமங்கள் குடிநீர் இல்லாமல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இதைப் பற்றி அதிகாரிகளிடம் சென்று கேட்கும்போது அவர்கள் கேட்டகிரிய





மாற்றவில்லை. முதன்மைப் பொறியாளர் அவர் களிடம் சொல்லுங்கள் அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர் களிடம் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் சொல் லும்போது ஒன்றைச் சொன்னார்கள் மாவட்ட ஆட்சித் தலை வர் அவர்கள் பரிந்துரை செய்தால் நிச்சயமாக நடவடிக்கை கள் எடுக்கப்படும் என்று சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்கிறார்கள். ஆனால் கேட்ட கிரி 6 லிருந்து கீழே 2-க்கு கொண்டு வரப்படவில்லை. ஆக மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்தாலும் கேட்ட கிரி 6 லிருந்து 2-க்கு கொண்டு வந்து, அதை முதன்மை பொறி யாளர் அவர்களிடத்தில் உடனடியாக சொல்லி தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். என்னுடைய தொகுதியில் தண்ணீர் இல்லாமல் இங்கே பாதிக்கப்பட்டுள்ள 39 ஊர்களைப் பற்றி நான் சொல்லியாக வேண்டும். 39 கிராமங்களில் 4 ஆண்டுகளாக மக்கள் குடிநீர் இல்லாமல் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, அடுத்த ஒரு பிரச்சினையை அதிகாரி கள் சொல்கிறார்கள். ஒரு ஒன்றிய பகுதியில் இல்லை வேறு ஒரு ஒன்றிய பகுதியில் இல்லை வேறு ஒரு ஊராட்சி ஒன்றிய பகுதியில் குடிநீருக்காக போர் போடப்பட்டு அந்த பகுதி யிலிருந்து மக்கள் எங்கள் ஊராட்சி பகுதிக்கு வந்து தண்ணீர் எடுக்கக்கூடாது என்று தடை செய்கிறார்கள். ஆக குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரை எந்தப் பகுதியில் போர் போட்டாலும் எந்த ஒன்றியத்தில் நல்ல தண்ணீர் இருக்கிறதோ அங்கே போர் போட்டாலும் இல்லை சம்பந்தப்பட்ட ஒன்றி யத்தில் வேறு ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் போர் போட்டு நல்ல தண்ணீர் இருந்தால் அந்த தண்ணீரைகொண்டுவருவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டும். எனது தொகுதியில் போர் வெல் போடப்பட்ட நேரத்தில் சாத்தான்குளத்தில் உள்ள மக்கள், அந்த போர் வெல்லை உடைத்து நொறுக்கி மூடிவிட்டார் கள். ஆனால் அரசு அதிகாரிகளை அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறும்போது நாங்கள் என்ன செய்ய முடி யும், அது அவர்கள் இடம் என்று சொல்கிறார்கள். ஆக அந்த இடம் சம்பந்தப்பட்ட மட்டில் தமிழ்நாட்டில் பொது வாக குடிநீர் பிரச்சினையை நீக்குவதற்கு அரசு சட்டத்தை திருத்த வேண்டும். அதற்கு தகுந்த நடவடிக்கையை அதிகாரி கள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் 384 கிராமங்களில் குடிநீர் இல்லாமல் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிற சில கிராமங்களை நான் இங்கே சொல்ல கடமைப் பட்டு இருக்கிறேன். இதை நான் அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். நாங்குநேரி ஒன்றி யத்தைப் பொறுத்தவரை மொத்தம் உள்ளது 184 கிராமங்கள்.

[திரு. மு. ஜான் வின்செண்ட்] [1985 ஜூன் 3

இந்த 184 கிராமங்களில் தற்சமயம் 29 கிராமங்களில் குடிநீர்
இல்லை. அவர்கள் ஒரு கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டருக்கு
அப்பால் சென்று தனியார் கிணறுகளில் தண்ணீர்
எடுக்கிறார்கள். தனியார்களும் அந்த கிணறுகளில் தண்ணீர்
எடுக்காமல் தடை செய்கிறார்கள். அந்த ஊராட்சி ஒன்றியத்
திற்கு ஒரு கிணறு இருக்கிறது. அதுவும் கிட்டத்தட்ட 1½ கிலோ
மீட்டருக்கு அப்பால் இருப்பதால் அங்கேசென்று கொண்டுவர
மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட சில ஊர்
களின் பெயரை இங்கே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.
நாங்குநேரி ஒன்றியத்தைப் பொறுத்தவரை வறும்மனை, மன்
னார்புரம், தெற்கு ஏராந்தை, தகடியார் புரம், தெற்கு பாப்
பான்குளம், ஏமாங்குளம், புதுகுளம், முத்தாலபுரம்,
வெங்கட்டராயபுரம், அரிசனகுடியிருப்பு, பனையான்
குளம், வாகைகுளம், இரணியன் விடுப்பு போன்றவைகள் மற்
றும் மூன்றடைப்பு, மேலூர், காரியாண்டி, நாங்குநேரி, சோம
நாதன் ஏரி, திருமுல்லாபுரம், திருவாம்புரம் என்ற ஊர்களும்,
வெம்பட்டி, தாராபுரம், அன்பரம், கேவூர் என்ற ஊர்களும்,
பிள்ளைபுரம், பிள்ளையான்புரமும் இதில் அடங்கும்.

இது குறித்து பல நேரத்தில் நான் எழுதிக் கொடுத்தும் அங்கே
தண்ணீர் பிரச்சினையை தீர்த்து வைத்தப்பாடில்லை. இதிலே
இன்னும் ஒரு பிரச்சினையை சொல்கிறார்கள். நகர பஞ்சா
யத்தில் உள்ள சில கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.
அங்கே உள்ள அதிகாரிகள் சொல்கிறார்கள் கிராம பஞ்சாயத்துக்
களுக்கு தான் நாங்கள் தண்ணீர் கொடுக்க முன்வருவோம்,
நகர பஞ்சாயத்துகளுக்கு கொடுக்க வாய்ப்பு இல்லை என்று
சொல்கிறார்கள். அதேபோல் களக்காடு ஒன்றியத்தி
தைப் பொறுத்தவரை மிகப்பெரிய ஊர் 3,500 மக்கள் தொகை
உள்ள டோனாவூர் என்ற ஊர், மற்றும் சிதம்பனாபுரம் என்ற
ஊர் இந்த 2 ஊர்களும் தண்ணீர் இல்லாமல் மிகவும் பாதிக்கப்
பட்டு இருக்கின்றன. அதுபோன்று, கீழ்க்கருவேலூர், மாதூர்
உட்பட பல ஊர்கள் பாதிக்கப்பட்டன. நகரப் பஞ்சாயத்
தைப் பொறுத்தமட்டில், தாமிரபரணி ஆற்றுப் படுகையி
லிருந்து கருங்கல்குளம் பகுதியிலிருந்து குடிதண்ணீர் கொண்டு
வரும் திட்டம் தடைப்பட்டது. 1 கோடியே 10 இலட்சம்
ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டார்கள். முதலிலே போடப்
பட்ட எஸ்டிமேட் 70 லட்சம் ரூபாய். அதற்குப் பின்பு
போடப்பட்ட எஸ்டிமேட் 85 இலட்சம் ரூபாய். அதற்குப்
பின்பு, மூன்றாவது முறையாக போடப்பட்டது 95 லட்சம்
ரூபாய். இப்போது போடப்பட்ட எஸ்டிமேட் 1 கோடியே
10 லட்சம் ரூபாய். எஸ்டிமேட் 1977-லே போடப்பட்டது, இன்று
அது உயர்த்தப்பட்டிருக்கிறதே தவிர, வேலை ஆரம்பிக்கப்பட
வில்லை. நகரப் பஞ்சாயத்தைப் பொறுத்த மட்டிலும், இன்று
6 நகரப் பஞ்சாயத்துக்களிலே மிகவும் பாதிக்கப்பட்ட பஞ்
சாயத்து மூலைக்கரைப்பட்டி, களக்காடு. இந்த ஊர்கள் இட்
டத்தட்ட 18 ஆயிரம் வாக்காளர்கள் கொண்ட பகுதி. அந்
தப் பகுதி, நகர பஞ்சாயத்திலே பாதிக்கப்பட்டு இருக்கிறது. அப்



1985 ஜூன் 3] [திரு. மு. ஜான் வின்செண்ட்]

படிப்பட்டவர்களுக்கு முதல் சலுகையாக உடனடியாகக்
கொடுத்து, குடிதண்ணீர் பிரச்சினையை உடனே நீக்க வேண்
டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக்கடமைப்பட்
டிருக்கிறேன்.

அடுத்து, ட்வாட் பம்புகள், முன்னால் போடப்பட்ட பம்பு
கள் அத்தனையும் ரிப்பேர் ஆகியிருக்கின்றன. ஒரு ஒன்றியத்
திலே ஒரே ஒரு மெக்கானிக் இருக்கின்றார். 200-க்கும் மேற்
பட்ட பம்புகள் உள்ளன. ஒரு மெக்கானிக்கை அழைத்துச் செல்
லும்போது, சில காரணங்களைச் சொல்லி வருவதில்லை. அப்
படியே வந்தாலும் கூட, சில பொருட்களைக் கேட்கிறார். அடி
பம்பு ட்வாட்-ஐப் பொறுத்த மட்டில், அங்கே இருக்கின்ற
வால்வு, டான்சியிலே வாங்கினால் 12 ரூபாய் 50 பைசா
வெளியிலே வாங்கினால் இரண்டு ரூபாய் எழுபத்தைந்து காசு.
டான்சியிலே அது கிடைப்பதும் இல்லை. விலையும் அதிகமாகக்
கொடுக்க வேண்டியுள்ளது. ஆகவே உடனடியாக சம்பந்தப்
பட்ட ஆணையாளருக்கு தனி உத்தரவு பிறப்பித்து, அந்த
வால்வை எங்கேயும் வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னால்,
பழுதடைந்த பம்புகளை ரிப்பேர் செய்வதற்கு வாய்ப்பாக
இருக்கும் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, யூனிட் என்ற அடிப்படையில் டிவிஷனிலே
மொபைல் வேன் வைத்திருக்கிறார்கள். அந்த மொபைல்
வேனிலே உள்ளவர்கள் வருகிறார்கள். பம்பு ரிப்பேரைப்
பார்க்கிறார்கள். அவர்கள் வருவதே மாலை 2 மணிக்கு வரு
கிறார்கள். மொபைல் வேனை ஒரு டிவிஷனுக்கு ஒன்று கூடு
தலாகக் கொடுத்து சம்பந்தப்பட்ட ஒவ்வொரு ஊராட்சி ஒன்றி
யத்திற்கும் மெக்கானிக்கை அழைத்துச் சென்று எல்லாப்
பம்புகளையும் உடனடியாக பழுது நீக்கிக் கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அதிகாரிகள் சொல்
கிறார்கள், இந்தியா மார்க் 2 பம்பு வந்திருக்கிறதென்று.
சிறப்பான பம்பு என்று சொல்கிறார்கள். ஆகவே, மார்க்-2
பம்ப்பை உடனடியாக அரசு ஆணை பிறப்பித்துப் பெற்று
பழைய ட்வாட்-லேயிருந்து போடப்பட்ட பம்ப்பை மாற்றி
அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எத்தனையோ இடங்களில் நல்ல தண்ணீர் ஒரு லோடிலே
இருக்கிறது. ஒவ்வொரு ஊருக்கு ஒரு நில நீர்த் தேக்கத்
தொட்டி கட்டுவதற்குப் பதிலாக, 2, 3 ஊர்களுக்கு சேர்ந்து
செய்தால் பயனுள்ள திட்டமாக இருக்கும். இதற்கு முன்
னால் இருந்த அரசின் காலத்தை விட, மாண்புமிகு இதய தெய்
வம் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஏரா
மான பம்புகள் போடப்பட்டிருக்கின்றன. போட்ட இடத்தில்
நல்ல தண்ணீர் கிடைக்கிறது. சில இடங்களில் தண்ணீர்

மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தண்ணீர்
பாதிக்கப்பட்ட இடங்களை மீண்டும் பரிசோதனை செய்து,
நல்ல தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், குடிதண்
ணீர் பிரச்சினையின்றி தன்னிறைவு பெற்றுள்ளதாக சொல்வார்
கள். தாமிரபரணி ஆற்றுப் படுகையைப் பொறுத்த வரையில்
அம்பாசமுத்திரம் தாலுகா, சேரன்மாதேவி பகுதி, ஸ்ரீவைகுண்
டம், திருச்செந்தூர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி ஆகிய
இடங்களில் ஓரளவு தண்ணீர் கிடைக்க வழி இருக்கிறது. தாமிர
பரணி ஆற்றுப்படுகை ஓரத்தின் பகுதிகள் தென் பகுதியில்
ராதாபுரம் தாலுகா, நாங்குநேரி தாலுகாவைப் பொறுத்த
வரையில், நாங்குநேரி, ராதாபுரம் தொகுதிகள் மிகவும் வறட்சி
யான பகுதிகள். நெல்லை மாவட்டத்தின் வட பகுதிகள், மேல்
கீழ் பகுதிகள் மழை பெய்து செழித்தாலும், தென் பகுதியில்
ராதாபுரம் தொகுதி, நாங்குநேரி தொகுதியும் பாதிக்கப்
பட்டிருக்கிறது என்பதைத் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்
கிறேன்.

மொத்தத்தில், கேட்டகிரி 6-லிருந்து கீழே கொண்டு வரு
வது என்ற திட்டம் இருந்தாலும், எந்த இடத்தில் உப்புத்
தண்ணீராக இருக்கிறதோ, நல்ல தண்ணீர் இல்லையோ, அந்த
இடத்தை அதிகாரிகள் பார்வையிட வேண்டுமே தவிர, கேட்ட
கிரி 6-ஐ 3 ஆக மாற்றினால்தான் தண்ணீர் வரும் என்று சொல்
லும் சட்டத்தை, திட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும் என்று
மெத்த பணிவன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். வறட்சி
யான பகுதிகளை உடனடியாக அரசிலே இருக்கின்ற குடிநீர்
வடிகால் வாரிய அதிகாரிகள் சென்று பார்வையிட வேண்டும்
என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணி
யடிக்கப்பெற்றது).

டவுன் பஞ்சாயத்துக்கு தனி விதிவிலக்கு ஏற்படுத்திக்
கொடுக்க வேண்டும். ஒரு நகரப் பஞ்சாயத்தைப்
பொறுத்த மட்டிலும், 13, 18 கிராமங்கள் இருக்கின்றன.
நகரப் பஞ்சாயத்திற்கு தண்ணீர் சப்ளை கொடுக்கின்றார்கள்.
கிராமங்களுக்கு கொடுப்பதில்லை. உதாரணத்திற்கு எடுத்
துக்கொண்டால், இதிலே பாதிக்கப்பட்ட 5 ஊர்கள் இருக்கின்
றன. களக்காடு நகரத்திற்கு தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு
செய்யப்படுகின்றது; அங்கே இருக்கின்ற மூன்று கிராமங்கள்
தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டன. அங்கே இருக்கின்ற
கிராமங்கள் பாதிக்கப்படுகின்ற நேரத்திலே அங்கிருக்கும்
மக்கள் வரி கொடுக்கமாட்டோம் என்கிறார்கள். நகரத்தை
மட்டும் கவனிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எனவே
நகரப் பஞ்சாயத்துக்களிலே உள்ள கிராமங்களுக்கு
உடனடியாக நடவடிக்கை எடுத்து, தண்ணீர் கிடைக்க
ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



(பிற்பகல் 12-40)

குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்கிற நேரத்திலே நான் குறிப்பாக 5 ஊர்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வள்ளியூரிலே குடிநீர் பிரச்சினை இருக்கிறது, அங்கே குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதைப் போலவே சண்முகபுரம் என்ற ஊரிலேயும் களக்காட்டு நகரப் பஞ்சாயத்திலேயும் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். களக்காட்டு நகரப் பஞ்சாயத்திலே 18 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். அதைப் போலவே மேலப்பத்து, கீழப்பத்து ஆகிய இடங்களிலேயும் தண்ணீர் இல்லாமல் மக்கள் துன்பப்படு கிறார்கள், அவர்கள் 1 மைல் நடந்து சென்று தண்ணீர் கொண்டு வருகிறார்கள். ஆகவே உடனடியாக ஆங்கெல்லாம் குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே கீழக்கருவேல் என்ற இடத்திலேயும் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது, உடனடியாக குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய . வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது முக்கியமாக விவசாயிகளுக்கு விதை வித்துக்கள், காலத்திலே கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் புரட்டாசியிலே விதைக்க வேண்டும் என்றால் ஐப்பசி மாதத்திலேதான் கிடைக்கிற நிலை இருக்கிறது, ஆகவே ஆவணி மாதத்திலே அவர்களுக்கு விதை வித்துக்கள் கிடைக்கக் கூடிய அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிறு விவசாயிகளுக்கு கடன்கள் கொடுக்கப்படுகின்றது, புரட்சித் தலைவர் அரசு விவசாயிகளின் குறைகள் தீர நல்ல பல திட்டங்களைச் செய்து வருகிறது. ஆனால் அங்கே இருக்கிற அதிகாரிகள் குறிப்பிட்ட காலத்திலே அந்தக் கடன்கள் கிடைக்க வழி செய்வதில்லை, அதைப் போலவே உரமும் காலத்திலே வழங்கப்படுவதில்லை, எனவே காலத்திலே அவைகள் கிடைக்க வழி வகை செய்ய வேண்டும். மற்ற மாநிலங்களைவிட தமிழகம்தான் சீரோடும் சிறப்போடும் எத்தனையோ நன்மைகளை அவர்களுக்குச் செய்து வருகிறது. குறிப்பாக விதை வித்துக்கள், கடன்கள், உரம் ஆகியவை காலத்திலே கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைச்சர் அவர்கள் நான் சுட்டிக்காட்டிய ஊர்களிலே குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து உரையை முடித்துக்கொள்கிறேன், நன்றி வணக்கம்.

திரு. மா. சின்னராசு : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் புகழ்பாடும் நமது அன்புக்குரிய அண்ணன் சொல்லேர் உழவர் நம்முடைய உழவர்பெருமக்களுக்காகக் கொண்டு வந்திருக்கிற நல்ல பல திட்டங்களை வரவேற்று நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே நம்முடைய திட்டத்தில் அது மிக முக்கியமான அங்கத்தைப் பெற்றிருக்கிறது என்பதை நாம் அனைவரும் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஒப்பற்ற தலைவர் புரட்சித் தலைவர் இந்த மாநிலத்திற்காக ஒரு ஆயிரம் கோடியைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள், அதிலே கணிசமான ஒரு பங்கு நம்முடைய வேளாண்மைப் பெருமக்களுடைய முன்னேற்றத்திற்கும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அளிக்கப்பட்டு இருக்கிறது என்பதை மானியக் கோரிக்கையின் விளக்க உரையிலே நாம் பார்க்கத் தவறிவிடக் கூடாது.

மத்திய அரசு 20 அம்சத் திட்டம் என்றும் மற்றத் திட்டங்கள் என்ற பெயராலும் எதற்காக திட்ட ஒதுக்கீட்டை செலவிட வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறார்களோ அதற்கு ஏற்ப நாம் செலவிடுகிறோம். அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ண அடிப்படையில் நாம் திட்ட ஒதுக்கீட்டில் பெரும் பகுதியை உணவு உற்பத்திக்கு என்று ஒதுக்கி இருப்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த வகையில் நமது அன்பு அண்ணனுடைய கருத்துக்கு உரம் சேர்ப்பதைப் போல் நம்முடைய வேளாண்மைத் துறை எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கை நெல் உற்பத்திப் பெருக்கத்திற்கு பயன்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக சுதந்திர வரலாற்றில் காண முடியாத அளவுக்கு—இந்த ஆண்டு மழை குறைந்து இருந்தாலும் நெல் உற்பத்தியிலே உயர்ந்த அளவு குறியீட்டை எட்டி இருக்கிறோம். மொத்த உற்பத்தி என்பதைவிட பெர் ஹெக்டேர் 5 டன் என்ற அளவுக்கு நாம் ஆற்றியிருக்கிற பெருஞ்சாதனை இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலேயும் யாரும் நிறைவேற்ற முடியாத பெரும் சாதனையாகும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மிக உயர்ந்த அளவை எட்டியிருக்கிற இந்தத் துறை எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சியை நான் விவசாயப் பெருமக்கள் சார்பிலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தரமான விதையென்றாலும் பூச்சி மருந்து நோய்த் தடுப்பு செயல் விளக்கங்களை மக்களுக்கு தருவது என்றாலும், தமிழகத்திலே இருக்கிற கோடிக் கணக்கான மக்களுக்கு கடன் வசதி செய்து தருவது என்றாலும், வருங்காலத்தில் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்காக வேளாண்மைத்துறை எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றி இந்த மானியக் கோரிக்கை விளக்க உரையிலே நாம் பார்க்கிறோம். அந்த அளவிற்கு உணவு உற்பத்தி மட்டுமல்லாமல், எண்ணெய் வித்துக்கள்,





பயிர் வகைகள் உற்பத்தி குறித்தும் திட்டங்களை வகுத்து மிகச் சிறப்பாக இந்தத் துறையை இயக்குவதற்கு இது ஒரு அடையாளமாக நமக்கு எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது. எண்ணெய் வித்துக்களை அதிகமாகப் பெறும் விதத்தில், தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் குறியீட்டை, மிகக் குறுகிய காலத்தில், குறிப்பிட்ட காலத்தில் எய்துவதற்கு எடுத்துக் கொண்டு இருக்கிற முயற்சிகளைப் பாராட்ட விரும்புகிறேன்.

இப்படி, வேளாண் பெருமக்களுக்கு ஒரு பக்கத்தில் உற்பத்தித் திறனைப் பெருக்கி, அதன் மூலம் அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுகின்ற அதே நேரத்தில் நம்முடைய குறிக்கோளான உணவு உற்பத்தி, எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி, தோட்டப் பயிர்களின் உற்பத்தி ஆகியவைகளையும் அதிகப்படுத்துகின்ற பாங்கினை நாம் மறந்துவிடக் கூடாது.

விவசாயிகளுக்கு முக்கியமான தேவையாக இருப்பது மின்சாரம். புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அந்த மின்சாரத்தை, எந்தக் காலத்திலேயும் கேள்விப்படாத அளவிற்கு, பல இலட்சக்கணக்கான சிறு விவசாயிகளும் பலன் பெறுகின்ற வகையில் இலவசமாகவும், குறைந்த கட்டணத்தில் சலுகை அடிப்படையிலேயும் வழங்கியிருப்பதை விவசாயப் பெருமக்கள் மறந்துவிடக் கூடாது.

காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் பேசும் பொழுது, புரட்சித் தலைவர் அவர்களுக்கு நல்லாதரவைத் தந்திருக்கின்ற வேளாண் பெருமக்களுக்கு நாம் நன்றிக் கடன் செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார்கள். நம்முடைய புரட்சித் தலைவரவர்களின் நல்லாட்சி தீட்டிய நல்ல திட்டங்களின் காரணமாகத்தான் அவர்கள் தங்கள் வாக்குகளைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த வாக்குகள் என்றும் நமக்கு இருக்கும். ஏனென்றால், இவ்வளவு பெரிய சலுகைகளை இந்த வரலாற்றில் வேளாண் பெருமக்களுக்கு யாரும் வழங்கியதில் என்று நினைவுகூற விரும்புகிறேன். ஆகவே, மத்திய அரசு நெல்லினுடைய விலையை உயர்த்த வேண்டும், கரும்புக்கு உரிய விலைகளைத் தர வேண்டும் என்று தமிழக அரசின்சார்பில் நாம் வைத்திருக்கின்ற வேண்டுகோளை அவர்கள் ஏற்க வேண்டும், அதற்கு அவர்கள் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய அரசின் ரிசர்வ் வங்கி ஆட்சேபணை தெரிவித்தாலும், அங்கீகாரம் தர மறுத்தாலும் பல கோடிக்கணக்கான ரூபாய்களுக்கான சலுகைகளைப் புரட்சித் தலைவரவர்கள் அரசு வழங்கி இருக்கிறது. ஆகவே விவசாயிகளின் கடன் சுமை கூட்டுறவு கடனால்தான் ஏற்பட்டுவிட்டது என்று தவறாகச் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்கியிருக்கின்ற கடன்

[திரு. மா. சின்னராசு] [1985 ஜுன் 3

களினால் அவதியுறும் விவசாயிகள் இல்லையா என்பதைப்பற்றி எண்ணிப்பார்க்கவில்லை என்றுகூடச் சொல்லமாட்டேன், ஏதோ அரசியல் காரணங்களினால் எண்ணிப் பார்க்க முடிய வில்லை. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்தும் விவசாயி கள் பயிர்க் கடன்களைப் பெறுகிறார்கள். அப்படிப் பெற்று, இயற்கைச் சூழ்நிலையால் விளைச்சல் இல்லாமல் பாதிக்கப் படுகின்றபொழுது அதிலிருந்து நமக்கு நிவாரணம் தேவையா இல்லையா என்பதை அரசியல் நோக்கத்தில் அல்ல, விவசாயி களின்பால் கொண்ட அக்கறையினால் கேட்க விரும்புகிறேன். எனவே, விவசாயிகள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து வாங்கிய கடன்களினால் சுமை ஏற்பட்டிருந்தால் அந்தக் கடனை அப்படியே தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன், ஆனால் குறைந்த வட்டிக்குக் கொடுக்க வேண்டு மென்றுதான் கேட்கிறேன். அப்படிச் செய்தால் விவசா யிகள் நல்ல முறையில் வாழவும், அவர்களது பொருளாதார நிலைமை மேம்பாடு அடையவும் அது பயன் அளிக்கும் என்பதை மத்திய அரசின் கவனத்திற்குக் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கொண்டு வர வேண்டும். அதிலே அவர்கள் வெற்றியும் பெற வேண்டுமென்று விரும்புகிறேன்.

கோவை மாவட்டம் போன்ற வறட்சிப் பகுதிகளில் உள்ள பெரிய பிரச்னை தண்ணீர் இன்மைதான். குடிதண்ணீருக்கே தட்டுப்பாடு இருக்கின்ற நேரத்தில் நீர்ப்பாசனத்திற்கு என்றால் நினைக்கவே அஞ்சுகின்ற அளவிற்கு நிலைமை இருக்கிறது. 120 அடி, 200 அடிக்குக் கிணறு வெட்டியும், இரண்டு பம்பு செட்டு களை வைத்தும் கூட நீரைப் பார்க்க முடியாத நிலைமை இருக் கிறது. அவர்களுக்கு எந்த ஊக்கத் தொகையோ, மானியமோ கொடுத்தாலும் அவர்கள் வாழ முடியாது என்ற நிலைமையில் தான் இருக்கிறார்கள். அந்தக் கொடுமையைப் போக்கும் விதத் தில், மேற்கு நோக்கிப் பாய்கின்ற ஆறுகளின் தண்ணீரை, புன்னம்புழா-பாண்டியாறு நீரை அந்தப் பகுதிக்கு திருப்பிவிடும் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நல்ல நாளை மத்திய அரசின் ஆளுங் கட்சியாகத் திகழ்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் நமக்குப் பெற்றுத் தர வேண்டும். அது நம்முடைய விவசாயப் பெருமக்களுக்கு ஆற்றுகின்ற கடமை யாகும். நீண்ட நாள் கனவாக இருக்கின்ற, கோவை மற்றும் மற்ற மாவட்டங்களுக்குத் தேவையான தண்ணீரை, கேரளா போன்ற மாநிலங்களில் உள்ள உபரி நீரைப் பெற்றுத் தருகின்ற முயற்சியில் நாம் வெற்றி பெறுவதற்கு அரசியல் சூழ்நிலைகள் பயன் உள்ளதாக அமைய வேண்டுமென்ற விருப்பத்தையும் சொல்ல விரும்புகிறேன்.



1985 ஜுன் 3] [திரு. மா. சின்னராசு]

(பிற்பகல் 12-50)

நம்முடைய வேளாண்மைத் துறையிலே மிகச் சிறப்பு செய் திருக்கிற பல துறைகளிலே ஒன்று வேளாண் பொறியியல் துறை. அவர்கள் ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தில், கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில் எடுத்து செய்து முடித்திருக்கிற கசிவு நீர்க்குட்டைகள் இன்று விவசாயப்பெருமக்களால், அதுவும் வறட்சிப் பகுதியான, கோவை மாவட்டம் போன்ற பகுதிகளில் இருக்கிற கிராம மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது. மிகக் குறைந்த செலவில், மிகப் பயனுள்ள திட்டங்களை அவர்கள் இதுகாறும் செய்து வந்தார்கள். பல நூற்றுக்கணக்கான கசிவு நீர்த்திட்டங்களை அமைத்து, நிலத்தடி நீரைப் பெருக்குவதற்கு உதவியாக இருந்து வருகிறார்கள். நான் கேள்விப்பட்ட வகை யில், இந்த ஆண்டு ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்கப் போவதில்லை, நிதி ஒதுக்கவில்லை. அந்த உதவி இல்லை யென்றால், நம்முடைய தேவையை நிறை வேற்றுகிற மிகப்பெரிய திட்டத்தை நிறைவேற்ற முடியாத ஒரு தடை ஏற்படும். அதற்காக ஏற்படுத்தப்பட்ட அந்தத் துறை விரிவாக்கமும் தடைப்படலாம், வேலை வாய்ப்பும் குறைக்கப் படலாம். ஆகவே, இந்த அபாயத்தைத் தடுக்கிற வகையில் தொடர்ந்து கசிவு நீர்க் குட்டைகள் அமைப்பதற்கும், மற்ற நில வளர்ச்சித் திட்டங்களை நாம்நடைமுறைப் படுத்துவதற்கும், ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் மூலமாக, நமக்கு மத்திய அர சாங்கம் நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டால், நில மேம்பாட்டுத் திட்டங்களும், சிறுபாசன திட்டங்களும், நீர் வளப் பாதுகாப்பு, பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், இப்படிப் பல திட்டங்கள், எல்லாமே, விவசாயிகளுக்காகவும் விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்காகவும் நடைபெறுகிற 20 அம்சத் திட்டத்தை நிலை நிறுத்துகிற நல்ல திட்டங்களாகும். ஆகவே, அதற்கு உதவுகிற மத்திய அரசாங்கம், இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துகிற அளவுக்கு, நிறைந்த அளவு நிதி ஆதாரங்களை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைப் பொறியியல் துறையைப் பொறுத்த வரை யிலே மற்றொரு கருத்து. நீர்ப் பாசனப் பகுதியிலே எடுத்துக் கொள்கிற நீர்ப் பாசன மேம்பாட்டு திட்டத்தை முழு அளவிலே வேளாண்மைப் பொறியியல் துறைக்கு நாம் வழங்க வேண்டும். அணைக் கட்டுகளில் ரெகுலேட் பண்ணுகிற, முறைப்படுத்துகிற பணியை மட்டும் பி.டபிள்யூ.டி.யிடம் விட்டுவிட்டு, மற்ற வாய்க் கால்களிலிருந்து பயிருக்கு பாய்ச்சப்படுகிற, நிலத்திற்குக் கொடுக் கப்படுகிற நீர் நிர்வாகத்தை முழுவதுமே வேளாண்மைத் துறை யிடம் கொடுத்தால் நிச்சயமாக அது இன்னுங் கூடசிறந்த அளவு

நீர் நிர்வாகத்தை மேற்கொண்டு, அதிக அளவு நிலப்பரப்புக்குத் தேவையான நீரைப் பங்கிட்டுக் கொடுக்கக்கூடப் பயன்படக் கூடும். அதை உடனடியாகப் பரிசீலித்து, அந்தத் துறையிடம் அதை ஒப்படைப்பதன் மூலம், நிறைந்த அளவு பயன் கிடைக்கும். பொதுப் பணித் துறையைக் காட்டிலும் அவர்களால் நிர்வாக தைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்று கருதித்தான் அதை அந்தத் துறையிடம் விடுவதால் எந்தத் தவறும் ஏற்படாது என்கிற என்னுடைய பணிவான கருத்தையும் நான் நம்முடைய அமைச்சர் கவனத்திற்கும் துறையின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே, தொடர்ந்து பல திட்டங்களின் மூலம், விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிற அரசுக்கு இந்த வேளாண்மைப் பெருமக்கள் தருகிற ஆதரவு ஒரு சான்றாக அமைந்து வருகிறது.

அதைப்போலத்தான் விவசாயிகளுடைய மேம்பாட்டிற்கும் முக்கியமாக இருக்கிற இன்னொரு பகுதியான, நியாயமான விலையைப் பெற்றுத் தருவதற்கு ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டிருக்கிறோம். கடந்த 5 ஆண்டுக்காலத்தில், இந்தத் துறையிலே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தலைமையில் செய்யப் பட்டிருக்கிற மிகப்பெரிய சாதனையை இந்த நேரத்திலே நான் நினைவுகூற வேண்டும்.

பல இடங்களில், கட்டிடங்கள் இல்லாமல் இருந்த கிராமப் பகுதிகளில், ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்குப் பல கோடி செலவிலே கட்டிடங்கள் நிர்மாணித்திருக்கிறோம். அதனுடைய முழுப் பலனை மக்கள் பெற்று வருகிறார்கள். பல உற்பத்திப் பொருள்கள் இன்று அதிக அளவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்குக் கொண்டு வரப்பட்டு அதனால் பெரிய உதவியை விவசாயிகள் பெற்று வருகி றார்கள். கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிற அதே நேரத் தில், நான் ஏற்கனவே அமைச்சர் அவர்களுக்குத் தெரி வித்ததைப் போல, சொந்த இடத்தைப் பெறுவதில், நிலத்தை ஆர்ஜிதம் செய்வதில் தடை ஏற்பட்டு, பல விற்பனைக் கூடங்கள் கட்டிடங்களைப் பெறாமல் தடைப்பட்டி ருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு என்னுடைய பகுதியில் இருக்கிற காரமடை விற்பனைக் கூடச், சங்கம் இடம் கிடைக்காததால் இன்னும் நிலுவையில் இருந்து வருகிறது. அதே போல், தொண்டாமுத்தூரிலே, பலகாலம் நிலுவையில் இருந்து வருகிறது. ஆக, இந்தக் குறையைப் போக்குவதற்கு ரெவின்யூ துறையில் விலை நிர்ணயம் செய்வதைத் தவிர்த்து நம்முடைய துறையே நெகோஷியேஷன் மூலம் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். மார்க்கெட் விலையைவிட 1,000 ரூபாய், 500 ரூபாய் வித்தியாசம் வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் உரிய விலையைக் கொடுத்து தகுந்த இடத்தைப் பெற்று, தாமதம்





இல்லாமல் விற்பனைக் கூடம் கட்ட நடவடிக்கை எடுத்தால் செலவுகள் ஏறுவதைத் தவிர்க்க முடியும் என்பது மட்டு மல்லாமல் பயனுடையதாகவும் இருக்கும் என்பதால் உடனடியாகக் கட்டி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இன்னும் ஒரு கருத்தைக் கூறி முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம், காய், கறி, கனிவகைகளையும் பாதுகாத்து வைத்து உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை பெற்றுத்தர வேண்டு மென்று திட்டம் தீட்டி, இன்றைக்கு அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். காரணம் கோவை மார்க்கெட்டில் சில நேரங்களில் ஒரு கூடை தக்காளி 50 பைசாவுக்கு விற்கும் நிலைமை கூட ஏற்படுகிறது. ஒரு கூடை என்பது பத்து கிலோ. ஒரு நாள் நாங்கள் தக்காளி கொண்டு சென்று—நானும் ஒரு விவசாயிதான்—ஒரு கூடை 50 பைசாவுக்கு விற்று வந்தோம். சில நேரங்களில் கூடையை மட்டுமே எடுத்துவரும் நிலைமையும் ஏற்படும் அதே தக்காளி சிலநேரங்களில் 30 ரூபாய்க்கு விற்கிறது. இப்படி 30 ரூபாய்க்கு விற்கிற தக்காளி 50 பைசாவுக்கும் விற்கிறது என்றால் இந்த வேடிக்கை வேறு எங்கும் நடக்காது. வியா பாரிகள் நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களை ஏமாற்று கிறார்கள். இதைத்தடுக்க வேண்டும். அதற்கு காய்கறி களையும், பழங்களையும் பக்குவப்படுத்தி, பாதுகாத்து, குளிர் சாதனப் பெட்டிகளில் வைத்து பாதுகாத்து நல்ல விலை வரும்போது விற்கும் வசதி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த வசதிகளை ஏற்படுத்தி வியாபாரிகளின் சதி வேலைகளை முறியடித்து, விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைப் பற்றி ஒரு கருத்து கூற விரும்புகிறேன். ஆராய்ச்சியாளர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் நம்முடைய அரசு வந்தபின்னால் அவர்களுக்கு அளித்து வருகின்ற சலுகைகள் அவர்களை ஊக்கப்படுத்துவதால் அவர் களால் இந்த நாட்டில் உணவு உற்பத்தி பெருகிவருகிறது. அந்தவகையில் அவர்களுக்கு நாம் பல திட்டங்களை நடை முறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு அந்த அசிஸ்டன்ட் லெக்சரர்ஸ் போஸ்ட் அதாவது உதவிப் பேராசிரி யர்கள் இடம் 300 காலி இருக்கிறது, நிரப்பப்படவில்லை. இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் நமக்கு தந்திருக்கிற நிதியை நாம் பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. காலி யாக இருக்கின்ற இடங்களை நிரப்புவதற்கு நமக்கு ஆசிரி யர்கள் கிடைக்க வில்லை. இருக்கிற ஆசிரியர்களும் ஆண்டுக்காண்டு வங்கி, இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் போன்ற

நிறுவனங்களுக்கு சென்றுகொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் அந்த நிறுவனங்களில் அதிகப்படியாக சம்பளம் கொடுக்கிறார்கள். பல்கலைக் கழகம் மூலம் நல்ல முறையில் ஆராய்ச்சிப் பணி நடக்க வேண்டும், அந்தப் பணியில் ஆசிரியர்கள் ஊக்கத்தோடு ஈடுபட வேண்டும், இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியை நாம் முழு அளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு நம்முடைய அரசு என்ன செய்ய வேண்டுமென்றால், வங்கிகள், இன்ஷூ ரன்ஸ் நிறுவனங்கள் கொடுக்கின்ற அளவுக்கு ஈக்குவலாக சம்பளம் கொடுக்கவில்லை என்றாலும் 1,500 ரூபாய் அவர்கள் கேட்கிறார்கள், அந்தச் சம்பளத்தைக் கொடுக்க அரசு முன் வர வேண்டும். அவர்களுடைய ஆராய்ச்சியை ஊக்கு விக்க வேண்டுமென்ற கருத்து ஏற்கனவே அரசின் கவனத்தில் இருக்கிறது. அதை பரிசீலனை செய்து நல்ல முடிவினை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையில் உற்பத்திப் பெருக்கத்திற்கும் ஆராய்ச்சி வளர்ச்சிக்கும் தொடர்ந்து உதவ வேண்டும். எக்ஸ்டன்ஷன் ப்ரோகிராம்ஸ் அடிப்படையில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் இந்தியாவில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழும். அதற்கு நாம் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினையை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். குடிநீர் பிரச்சினை இன்றைக்கு மிகப் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. கோவை மாவட்டத்தில் உலக வங்கித் திட்டத்தின் அடிப்படையில் 44 கோடி ரூபாய்ச் செலவில் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தில் 624 கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தில் முதல் குழாய் பொருத்தப்படுகிற இடம் காரமடை ஒன்றியம். அங்கே என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஒரு கிராமம் கூட சேர்க்கப்படவில்லை. இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும். என்னுடைய தொகுதியிலுள்ள கிராமங்கள் சேர்க்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான சிரமமும் இல்லாமல் காரமடையில் இருக்கிற எல்லா கிராமங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு இருக்கிற நீர் ஆதாரம் போதவில்லை. மேட்டுப்பாளையத்திலிருந்து மற்ற பகுதி களுக்குத் தண்ணீர் கொடுக்கிறோம். ஆனால் அந்த நகருக்கு தண்ணீர் தட்டுப்பாடு இருப்பதை நாம் அறியவில்லை





போல் தோன்றுகிறது. 25 ஆண்டுகளுக்கு முன்னால் போடப் பட்ட திட்டம் தான் இன்னும் அங்கே இருக்கிறது. இப்போதுள்ள தேவைக்கு அது போதவில்லை. ஆகையால் இரண்டாவது குடிநீர் திட்டத்திற்குத் தேவையான நிதியை ஒதுக்கி விரைவிலே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது இருக்கிற பம்புசெட்டுகளை ரிப்பேர் செய்ய 7.5 இலட்சம் ரூபாய் கடன் கேட்டு, அது 3 ஆண்டுகளாக அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த பம்புசெட்டுகளை ரிப்பேர் செய்ய நகராட்சியில் நிதிவசதி இல்லை ; பற்றாக்குறையாக இருக்கிறது. அவர்கள் கேட்டிருக்கிற பணத்தைக் கொடுத்தால் இருக்கிற பம்பு செட்டுகளை ரிப்பேர் செய்து, மாற்ற வேண்டியவைகளை மாற்றி, இருக்கிற நீர் ஆதாரத்தை நல்லமுறையில் பயன் படுத்தினால் ஓரளவு சமாளிக்கலாம். அதற்கு வழிவகை செய்து கொடுக்க வேண்டும். அதை மானியமாகவோ, கடனாகவோ உடனடியாகக் கொடுக்க வேண்டும். இருக்கிற வறட்சி நிலையைக் கருத்திற்கொண்டு உடனடியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று சிறுமுகை ஒன்றியத்திற்கு 8 இலட்சம் ரூபாய் நிதி உதவி கேட்டிருக்கிறார்கள். அதையும் உடனடி யாக வழங்க வேண்டும். கடனாகவோ, மானியமாகவோ வழங்கி குடிநீர் பற்றக்குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் வறட்சிக்கு என்று ஒதுக்கப்பட்ட 100 ஆழ்குழாய்க் கிணறுகள் போதவில்லை.

(பிற்பகல் 1-00)

அவற்றிலே வறட்சியால் பாதிக்கப்பட்ட மேட்டுப்பாளையம் தாலுக்கா, கோயம்புத்தூர் தாலுக்கா போன்றவை சேர்க்கப் படவில்லை. இந்தக் குழாய் கிணறு என்பதைப் பொறுத்த வரையில் மொத்தமாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப் படைத்து விட்டால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றவர் களைக் கலந்து ஆலோசித்து எந்தெந்த பகுதிகளில் கடுமையான தட்டுப்பாடு இருக்கின்றது, எங்கெங்கு நீர் ஆதாரம் இருக்கின்றது என்று பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆனால் அவினாசித் தாலுக்கா, பல்லடம் தாலுக்கா என்று மட்டும் கொடுத்திருப்பதன் காரணத்தால் மற்ற இடங் களைப் பொறுத்தவரையில் பல கிராமங்களில் எவ்வளவு தட்டுப் பாடு இருந்தாலும் அவற்றிற்கு ஆழ்குழாய் கிணறுகளைப்

போட முடியாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அவற்றை மொத்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே ஒப்படை த்து தேவையான இடத்திற்கு அவை கிடைக்கும்படி வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொண்டு கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர் களுக்கு நன்றி சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப்படு கிறேன்.

பாதிக்கப்பட்ட என்னுடைய தொகுதி மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற முறையிலே என்னுடைய விமர்சனம் சுடுமையானதாக இருந்தாலும், கண்ணியமாக இருக்கும் என்ற உறுதி மொழியை முதற்கண் நான் இங்கே அளிக்கிறேன். 128 கோடியே 51 இலட்சத்து 78 ஆயிரத்திற்கு மேற்படாத தொகையைக் குடிநீர் வழங்கல் என்ற மானியக் கோரிக்கையின் கீழ் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். சுதந்திரம் பெற்று 37 ஆண்டுகள் முடிந்து விட்டன. நான் தொகுதியைச் சுற்றி வந்த நேரத்தில் கண்டது என்னவென்றால், மக்கள் அரசிடமிருந்தோ, ஆட்சுப் பொறுப்புக்கு வந்தவர்களிடமிருந்தோ, தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தோ எதையும் பெரிதாக எதிர்பார்க்கவில்லை. அவர்கள் எதிர்பார்ப்பது எல்லாம் ஒழுகாத வீடு. ஒழுங்கான குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதி களைத்தான். சுதந்திரம் பெற்று 38 ஆண்டுகள் ஆன பின்னாலும் நம்மால் மக்களுக்கு இவற்றை வழங்க முடியவில்லை என்றால் நாம் மக்களுக்குத் துரோகம் இழைத்தவர்களாவோம் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில். குடிநீர் பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. 1960 ஆம் ஆண்டிலே 40 ஆயிரம் மக்களுக்காகப் போடப்பட்ட குடிநீர்த் திட்டம் தான் 1985 ஆம் ஆண்டு வரையிலும் இருக்கின்றது. இதன் காரணத்தால் மக்கள் படும் நிலை என்ன என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். 40 ஆயிரம் மக்களுக்கு 5½ இலட்சம் காலன் கொள்ளளவு உள்ள குடிநீர் மேல் நிலைத் தொட்டி வைத்துக் கொண்டு இன்று சுமார் ஒரு இலட்சம் மக்களுக்கும் அதையே பயன்படுத்த வேண்டும் என்றால் நிச்சய மாக தாய்மார்கள் இரவும், பகலும் தொகுதிகளிலே வீதிதோறும் அலைகின்ற நிலைமையைத்தான் பார்க்க முடியும். இது குறித்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், ஒரு கடிதம் வரைந்திருந்தேன். திருவண்ணாமலை குடிநீர்ப் பிரச்சினை யைத் தீர்க்கா விட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க





வேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலைமைக்கு என்னைத் தள்ளி விடாதீர்கள் என்று கூறியிருக்கிறேன். நிச்சயமாகச் சொல் கிறேன் நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன் என்றால், ஏற்கெனவே இருக்கின்ற என்னுடைய பெயருக்குப் பின்னால் எம்.எல்.ஏ. என்ற அடைமொழியைச் சேர்த்துச் சொல்வதற் காக அல்ல; பாதிக்கப்பட்ட என்னுடைய தொகுதி மக்களுக் காக ஏதேனும் உள்ளபடியே பயன் உள்ள காரியத்தை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாகத்தான் நான் இந்தப் பொறுப்பை ஏற்றேன். ஆனால் இன்றுள்ள நிலைமையில் தொகுதி மக்களுக்காக என்னால் எதுவும் செய்ய முடியவில்லை என்ற வேதனையை வெட்கத்தோடு இந்த அவைமுன் கூறு கிறேன்.

1981—லே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருவண்ணா மலைக்கு விஜயம் செய்தபோது திருவண்ணாமலை நகராட்சிக்கு ஜெனரேட்டர் வாங்கித் தருவதாகச் சொன்னார்கள். 1982-லே பாரதி நூற்றாண்டு விழாவில் பங்கேற்க வந்த பழைய உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் இன்னும் ஒரு வாரத்திற்குள்ளாக ஜெனரேட்டர் வரும் என்று சொன்னார்கள். ஆளுநர் உரையிமல நான் பேசியபோது குறிப்பிட்ட இந்த அமைச்சர்கள் அவையின் உள்ளேயும், வெளி யேயும் கொடுக்கப்படுகின்ற உறுதி மொழிகளை அரசு தரப் பிலே கொடுக்கப்படுகின்ற உறுதி மொழியாகக் கருத வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். ஆனால் மூன்றாண்டுகள் உருண் டோடியும் இன்னும் மக்கள் குறை தீர்க்கப்படவில்லை. இது பற்றி குறிப்பிட்டு முதலமைச்சருக்குக் கடிதம் எழுதிவிட்டு அதற்குப் பிறகு பத்திரிகையிலேயும் உண்ணாவிரதம் பற்றி அறிக்கை கொடுத்தேன். மிக வேதனையோடு சொல்கிறேன், இன்றுவரை முதலமைச்சரிடமிருந்தும், வேறு எவரிடமிருந்தும் அதற்கு எந்தவிதமான பதிலும் வரவில்லை. ஒரு வேளை இவர்கள் வேண்டுமானால் உண்ணாவிரதம் இருந்து விட்டுப் போகட்டும் என்ற எண்ணம் இருக்கின்றதோ என்னவோ தெரிய வில்லை. ஆனால், திடீர் என்று ஒரு அரசு அதிகாரி ஒரு அறிக்கை விடுகிறார். யார் ? நகராட்சி ஆணையர். என்ன வென்று ? திருவண்ணாமலை நகராட்சிக்கு ஜெனரேட்டர் தேவையில்லை, அங்கே குடி தண்ணீர் பற்றாக் குறை இல்லை. அங்குள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள் அளவே போதும் என்று கொடுக்கிறார். நான் கேட்கிறேன் 1983—லே மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. நாரா யணன் அவர்கள் ஒரு நோட்—ஒரு குறிப்பு—எழுதி வைத்திருக் கிறார்கள். அதிலே திட்டவட்டமாக குறிப்பிட்டிருக்கிறார். திருவண்ணாமலையைப் பொறுத்த மட்டில் அது மலைப் பாங் கான பிரதேசம் ; எனவே அங்கே 2 ஜெனரேட்டர்கள் அவசியம் தேவை என்று.

ஐ. ஏ. எஸ். படித்து மாவட்ட ஆட்சித் தலைவராகப்
பொறுப்பேற்று பங்காற்றிய அவர் எழுதிய குறிப்பை ஏற்றுக்
கொள்வதா அல்லது இன்று திருவண்ணாமலைக்குப் புதிதாக
வந்த, நகராண்மை ஆணையராகப் பொறுப்பேற்றிருக்கின்ற
இவருடைய கூற்றை ஏற்றுக் கொள்வதா என்றுதான் எனக்கு
விளங்கவில்லை.

இந்தப் பிரச்சினை சம்பந்தமாக இதே மன்றத்திலே கவன
ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது, மாண்புமிகு வேளாண்
மைத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை இந்த
அவைக்கு சமர்ப்பித்தார்கள். அதிலே குறிப்பிட்டிருந்தார்,
திருவண்ணாமலையிலே 6 ஆழ்கிணறுகள் தோண்டப்படும் என்று.
அன்றே நான் அவரைச் சந்தித்து நேரிலேயே கூறினேன்.
திருவண்ணாமலையைப் பொறுத்த மட்டில் ஆழ்கிணறுகள்
தேவைப்படாத ஒன்று. தீர்க்க முடியாத முடிவுகள் பிரச்
சினைக்கு பரிகாரம் ஆகாது என்றும், அது மலைப் பாங்கான
பிரதேசம் என்றும் திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னேன்.
ஆனால், தோழமைக் கட்சி என்ற உரிமையோடு கூறிக் கொள்ள
விரும்புகிறேன். உங்களோடு நாங்கள் எல்லாவற்றிலும்
ஒத்துழைக்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட தோழமைக் கட்சி
உறுப்பினர் கொடுத்த ஒரு வேண்டுகோள், நியாயமான வேண்டு
கோள். இன்னமும் இந்த அரசின் பரிசீலனையில் எடுத்துக்
கொள்ளவில்லை என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்பு
கிறேன். இதைப் பற்றி பேசும்போது, இன்னொன்றையும்
இது சம்பந்தமாக குறிப்பிடாமல் என்னால் இருக்க முடிய
வில்லை.

ஆளும் கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் சொல்கிறார்,
திருவண்ணாமலையைப் பொறுத்த மட்டில், மாண்புமிகு ப.உ.ச.
மனது வைத்தால்தான் அங்கே எதுவும் நடைபெறும். இல்
லையென்றால் எதுவும் நடைபெறாது என்று; என்னையும் மேடை
யிலேயே வைத்துக் கொண்டு கூறுகிறார். உண்மையாகக் கூறு
கிறேன், அதற்குப் பொருள் என்னவென்று எனக்கு இன்னும்
விளங்கவில்லை. அப்படியானால் ஆளும் கட்சி உறுப்பினர்
களின், ஆளும் கட்சி அமைச்சர்களின் சம்பந்தப்பட்ட பிரச்
சினைகளுக்குத்தான் இந்த அரசு கவனம் செலுத்தி தீர்வு காணும்
என்று கூறுகிறாரா என்று நான் கேட்கிறேன். அதுதான்
இந்த அரசின் கொள்கை என்றால், அதையும் தைரியமாக
அறிவித்து விடட்டுமே .......... (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெளியிலே
மேடையிலே பேசியதை இங்கே ரெபெர் செய்ய வேண்டாம்.
இங்கே சபையிலே பேசியிருந்தால் பரவாயில்லை.





**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** மன்னிக்க வேண்டும். ஆகவே,
தயவுசெய்து, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில்,
மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு அரசு அணுக வேண்டிய
நிலைமை இருக்கிறது என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்
றால், 4½ லட்சம் காலன் கொள் அளவு உள்ள நீர்த்தேக்கத்
தொட்டியை வைத்துக் கொண்டு ஒரு கோடி காலன் கொள்
அளவு தேவை உள்ள தண்ணீரை நிச்சயமாக வினியோகிக்க
முடியாது. ஆகவே, திருவண்ணாமலையைப் பொறுத்த
மட்டில் 2 ஜெனரேட்டர்கள் தேவை. ஆகவே, மாண்புமிகு
முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொடுத்த உறுதி மொழியை
முன்னாள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த
திரு. குழந்தைவேலு அவர்கள் இந்த மாமன்றத்திலே அளித்த
உறுதி மொழியை தயவுசெய்து நமது இன்றைய மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், நியாயத்தின் கண்
ணோட்டத்தோடு, மனிதாபிமானத்தோடு கவனித்து ஆவன
செய்ய வேண்டும் என்று வேண்டுகிறேன்.

கேவலம் 5 லட்சம் 6 லட்சம் ரூபாய் அளவிற்குக்
கூட இன்றைக்கு செலவிட முடியாது ஜெனரேட்டர்கள்
தேவை என்று முடிவு செய்து வாங்க குடிதண்ணீர் வடிகால்
வாரியத்தின் மூலம் டெண்டர்கள் கோரப்பட்டன. தலைமை
பொறியாளர் 4 லட்சத்து 91 ஆயிரம் சொச்சம் ரூபாய்க்கு ஒரு
டெண்டர் கேட்டு வாங்கியிருக்கிறார். அதை வாங்கியது 1982லே.
இன்று, 1985 வரை அது கிடப்பிலேயே போடப்பட்டிருக்கிறது
என்றால், மக்கள் படும் அவல நிலைக்கு முடிவு தான் எங்கே?
அதிலும் இப்படிப்பட்ட தொல்லைகள் தொடர்ந்துக் கொண்டே
போகும் என்றால் நாம் இங்கே சட்டமன்ற உறுப்பினராக
வந்துதான் என்ன பயன் என்றுதான் நான் வேதனையோடு
நினைக்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியிலே ஒரு பணி. நான்
ஏற்கனவே பல முறை குறிப்பிட்டிருக்கிறேன், அதிகாரிகளை
நம்பி அரசை நடத்துவதில் பயன் இருக்காது என்று. ஏனென்றால்
அதிகாரிகள் அந்த அளவிற்கு மெத்தனமாக நடந்துக் கொள்
கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் நான் வேளாண்மை
துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.
என்னுடைய தொகுதியில் கல்லாயி சொரத்தூர் என்று ஒரு
ஊர் இருக்கிறது. அந்த ஊரில் கைப் பம்புகள் போடப்பட்டு,
குடிதண்ணீர் பிரச்சினை ஓரளவிற்கு சமாளிக்கப்பட்டு வந்தது.
திடீரென்று ஒரு நாள், அந்தக் கைப்பம்புகளை அகற்றிவிட்டு,
மெஷின் பம்புகளை வைத்து குழாய்களை போடுவதாக ஒரு
முடிவிற்கு வந்தார்கள். கைப் பம்புகள் அகற்றப்பட்டன.
ஆனால் மெஷின் பம்புகளை போட்டார்களே தவிர, அவை
களுக்கு இணைப்புக் கொடுக்கப்படாத காரணத்தால், அந்தப்
பகுதிவாழ் மக்களுக்கு இன்னமும் குடிக்க தண்ணீர் இல்லாமல்
அவதிப்படும் நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

[திரு. ஏ. எஸ். ரவீந்திரன்] [1985 ஜூன் 3

மெஷின் பம்புகளை போட வேண்டும் என்ற யோசனை
இருந்திருந்தால் என்ன செய்திருக்க வேண்டும். அதற்கான
வேலைகள் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்துக் கொண்டு பிறகு
கை பம்புகளை அகற்றியிருக்க வேண்டும். ஆனால் முதலிலேயே
கை பம்புகளை அகற்றி விட்டார்கள். அரசனை நம்பி புருஷனை
கை விட்ட கதையாக ஆகி விட்டது அந்த மக்களின் நிலை. இதை
எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அதிகாரிகள் எந்த
அளவிற்கு பொறுப்புணர்ச்சி இல்லாமல் நடந்துக் கொள்
கிறார்கள் என்பதற்கு உதாரணமாக, எடுத்துக் காட்டாகத்தான்
சொன்னேன். அவர்களின் இத்தகைய செயல்கள் மூலம்,
அரசுக்கும் ஆட்சிக்கும் எந்த அளவுக்கு அவப் பெயரை உரு
வாக்கிவிடுகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் தயவு செய்து கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும்
என்பதற்காகத்தான் கூற விரும்பினேன்.

(பிற்பகல் 1.10)

குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்த வரையில் நான்
வேதனையோடு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். இங்கே ஒதுக்கப்
படுகிற தொகை நிச்சயமாக மக்களுக்குப் போய் சேர வேண்டும்.
இப்போது ஒரு கோடி ரூபாய் திட்டமென்றால் நிச்சயமாக மக்க
ளுக்கு போய் சேர்வது 40 சதவீதம் அளவில் தான் இருக்கிறது.
நடுவில் இருப்பதை பூராவும் ஒப்பந்தக்காரர்களும், அதிகாரி
களும் தான் சாப்பிடுகிறார்கள். ஒரே ஒரு உதாரணத்தை
குறிப்பிடுகிறேன். திருவண்ணாமலை வட்டத்திலே 40 மேல்
நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கு முடிவு செய்யப்
பட்டது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்கனவே
திருவண்ணாமலையிலேயே ஏராளமான ஒப்பந்தக்காரர்கள்
இருக்கிறார்கள். குடிநீர் வடிகால் வாரியத்தில் இந்தப் பணிகளை
ஏற்கனவே திருப்திகரமாக செய்திருக்கிறார்கள். இருந்தும்
அந்த 40 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை கட்டி முடிக்கும்
பொறுப்பிற்காக மதுரையிலிருந்து ஒரு ஒபபந்தக்காரர்
வருகிறார். அவருக்கு திருவண்ணாமலையில் வீடு கிடையாது.
குடிநீர் வடிகால் வாரியத்தின் அலுவலகத்தை தன்னுடைய
இல்லமாக மாற்றிக் கொண்டு, அங்கேயே படுத்துறங்கிக்கொண்டு
அந்தக் காரியத்தை செய்து கொண்டிருக்கிறார். இதிலே என்ன
உட்பொருள் இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, திட்டங்
களை தீட்டுவதாலோ, திட்டங்களுக்குப் பணம் ஒதுக்குவதாலோ
மக்கள் பயன் பெறுவார்கள் என்று எண்ணினால், அது தவறான
கருத்தாகும். ஒதுக்கப்படுவதில் பெரும்பகுதியான தொகை
மக்களுக்குப் போய் சேர்ந்தால் தான் திட்டங்களின் பயனும்,
நோக்கமும் நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள
ஆசைப்படுகிறேன்.



1985 ஜூன் 3] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

அதைப் போல, பாலாறு படுகைத் திட்டத்தின் கீழ் பம்பு
செட் போடலாமென்றால், ஒரு விவசாயி குறைந்தது 2,000
ரூபாய் செலவழித்தால்தான் அதற்கான உரிமை அவனுக்கு
கிடைக்கிறது. இத்தகைய திட்டங்கள் விவசாயிகளின் முன்
னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக இருக்கிறதே தவிர, ஆதர
வாக இல்லை. அதையும் இந்த அரசு கவனத்தில் எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல இடங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்
பிட்டதைப் போல, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி
விடுகிறார்களே தவிர, தண்ணீர் வருவதே இல்லை. எதற்காக
அவைகள் கட்டப்பட்டன என்ற எண்ணமே இல்லாமல் அதிகாரி
கள் இருக்கிறார்கள். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர்
அவர்களை தயவுசெய்து அதிகாரிகளை முடுக்கி விடுங்கள்
என்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகளால் இந்த அரசுக்கு
அவப்பெயர் வருவதைத் தடுக்கப் பாருங்கள் என்று தாழ்மை
யோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வடாற்காடு மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக
அரசு அறிவிக்க வேண்டுமெனறு கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் காவிர் டெல்டாப் பகுதியில் இருப்ப
தால் விவசாயிகள் அதிகமான முயற்சி இல்லாமல் நல்ல விளைச்
சலை காண்கிறார்கள். அங்கே அளிக்கப்படுகிற 15 ரூபாய் ஊக்கத்
தொகையானது, தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக
நெல்லை அதிகமாக உற்பத்தி செய்கிற வடாற்காடு மாவட்டத்
திற்கும் நீட்டிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தைப் பொறுத்த வரையில்,
ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அதிகாரிகள் எந்தளவிற்கு
பொறுப்பில்லாமல் இருக்கிறார்கள் என்பதற்காகத் தான் இதைச்
சொல்கிறேன். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வேட்டவலம்
என்னும் ஊரில் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்காக ஒரு விஞ்ஞான
கூடம் கட்டப்பட்டது. அது ஊருக்கு வெளியே, பள்ளிக்கு
வெளியே நீண்ட தூரத்தில் இருப்பதால் பெண்கள் வருவதற்கு
கஷ்டமாக இருக்கும் என்று அந்த விஞ்ஞானக் கூடத்தை பயன்
படுத்தாமல் விட்டுவிட்டு தற்போது அந்தப் பள்ளிக்கு அருகி
லேயே விஞ்ஞானக் கூடத்தை அமைத்துக் கொண்டார்கள்.
இந்த நிலைமையில், ஒழுங்கு முறை விற்பனைக் கூடமானது ஒரு
வாடகைக் கட்டிடத்தில் இருந்து வருகிற காரணத்தால், அந்த
விற்பனைக் கூடத்தைச் சேர்ந்தவர்கள் அந்த விஞ்ஞானக் கூடக்
கட்டிடத்தை தங்களுக்கு கொடுத்து விடுமாறு கேட்டிருக்
கிறார்கள். அதற்கு கல்வி இலாக்காவிலிருந்து ஒரு பதில் வருகிறது.
"தாங்கள் பின்னாலே கட்டிடம் கட்டும்போது எங்களுக்கு என்ன
தொகை அந்தத் தேதியில் செலவாகுமோ அந்தத் தொகை

கொடுப்பதாக இருந்தால், அந்தக் கட்டிடத்தை உங்களுக்கு ஒப்படைக்கிறோம்'' என்று சொல்லி இருக்கிறார்கள். ஒரு அரசு இலாக்காவிலிருந்து இப்படிப்பட்ட பதில் வருமென்று யாரும் எதிர்பார்க்க முடியாது. ஒரு வீட்டை வாங்குகிறோம் என்றால், இந்தத் தொகையை கொடுத்தால் வீட்டைக் கொடுப்போம் என்று தான் சொல்லுவார்கள். நான் பின்னாலே வேறு வீடு கட்டுவேன், அப்போது என்ன தொகை செலவாகுமோ அந்தத் தொகையைக் கொடுப்பதாக இருந்தால் இந்த வீட்டை உனக்கு விற்கிறேன் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். ஆகவே, கல்வி இலாக்காவிலிருந்து வந்திருக்கிற பதில் ஒரு பொறுப்பான அரசு அலுவலகத்திலிருந்து வந்திருக்கிற பதிலாகத் தெரியவில்லை. எனவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதில் தலையிட்டு உடனடியாக ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு அந்த விஞ்ஞானக் கூடத்தை ஒப்படைத்து, அதற்கான தொகையை அவர்களிடமிருந்து பெற்றுத்தர வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய நண்பர் மாறன் அவர்களுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். சென்னையில் உள்ள ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் உள்ள கொருக்குப்பேட்டை போன்ற பகுதிகளில் உள்ள குடிநீர் பிரச்சினையைப் பற்றி அதிகாரிகள் இடத்திலே எடுத்துக் கூறி, அவர்களும் பல முறை வந்து பார்த்தார்களே தவிர, அதை நிறைவேற்றுவதற்கான எந்தக் காரியத்தையும் அவர்கள் செய்யவில்லை. மக்களுடைய துயரைத் துடைப்பதற்கு அரசு உடனடியாக உத்தரவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வட ஆற்காடு மாவட்டத்தில் துரிஞ்சலாறு படுகைத் திட்டத்தை அமுல் படுத்தினால், ஏராளமான விவசாயிகள் இதன் மூலம் பயன் அடைவார்கள். அதே நேரத்தில் குடிநீர்ப் பிரச்சினையும் தீரும். திருவண்ணாமலைப் பகுதியில் உள்ளவர்களும், மற்றப் பகுதியில் உள்ளவர்களும், இதனால் பெரும் பலனை அடைவார்கள். அங்குள்ள கிராமங்கள் பயன் அடையும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து மக்களின் உயிர்நாடியாக இருக்கின்றஇந்தப் பிரச்சினையில் தங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நான் இதை ஏற்கனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியதைப் போல, இந்த உண்ணாவிரதம் என்பது அச்சுறுத்தலுக்காகவோ அல்லது பயமுறுத்தலுக்காகவோ அல்ல. தொகுதி மக்கள் நியாயமான நலன்களை பாதுகாக்க வேண்டும் என்ற முறையில் தான் அது எடுக்கப்பட்டதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. எனவே அமைச்சர் அவர்கள் தயவு செய்து உடனடியாக நடவடிக்கை



எடுத்து, ஒரு சட்டமன்ற உறுப்பினர் அநியாயமாக உண்ணாவிரதம் இருந்து சாவதைத் தடுக்க வேண்டும் எனறு கேட்டுக் கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாழைக்கும் தென்னைக்கும் வரிபோட்டவர்களால் வளைந்து இருந்த விவசாயப் பெருங்குடி மக்களை எல்லாம் நிமிரவைத்து இருக்கிற புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே இருக்கிற, எங்களுடைய மரியாதைக்கும் வணக்கத்திற்கும் உரிய மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மாணிக்கமாக இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

புரட்சித் தலைவருடைய புனித ஆட்சியிலேதான், மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிற என்னுடைய தொகுதியிலே கிணறுகளை வெட்ட முடியாத அளவிற்கு இருக்கிற என்னுடைய தொகுதியிலே ஏறக்குறைய 736 குளங்கள் இன்றைக்கு பயன் படுத்தப்பட்டு வருகிறது. வானம் பார்த்த பூமியாக இருக்கிற என்னுடைய தொகுதியிலே அந்தக் குளங்களிலே இருக்கிற தண்ணீர் வற்றிவிடுகிறபோது, விவசாயம் செய்ய முடியாத நிலை இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து என்னுடைய பேச்சை முடிக்கலாம் என்று கருதுகிறேன். குளங்களிலே தேங்கியிருக்கிற நீர், தை மாத இறுதியிலே வற்றிவிடுகிற காரணத்தாலே, விவசாயப் பயிர்கள் எல்லாம் சாவியாகி, அதாவது பதராகி போய்விடுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே அந்தக் குளங்களின் அருகிலே சமுதாயக் கிணறுகளை மிகப் பெரிய அளவிலே வெட்டி, அதிலே தேங்கிக் கிடக்கிற நீரை, குளங்கள் வற்றிவிடுகிறபோது, பாசனத்திற்கு பயன் படுகிற வகையிலே கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியிலே மிகப் பெரிய கசிவு நீர்க்குட்டைகளை வெட்டி, இன்றைக்கு புரட்சித் தலைவருடைய அரசு, விவசாய மக்களுடைய நலிந்து கிடக்கிற மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கிற வகையிலே, இன்றைக்கு கசிவு நீர்க் குட்டைகளை அமைத்திருக்கிறது. அதனுடைய முழுப்பலனையும் இன்றைக்கு என்னுடைய தொகுதியிலே உள்ள மக்கள் அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். இது தொடர்ந்து நடைபெற வேண்டும். எனவே இந்த கசிவு நீர்க்குட்டைகள் மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பலன் பெறுகிற காரணத்தால், இதைப்போன்று பலன் அளிக்கக்கூடிய திட்டங்களை எல்லாம், நூற்றுக்கு நூறு மக்களுக்கு உதவக்கூடிய திட்டங்களை எல்லாம் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்,

அதேபோல் இன்றைக்கு விவசாயிகளுக்கு இரவிலே மின்சாரம்
தரப்படுகிறது. இரவிலே மின்சாரம் வருகிற காரணத்தாலே,
அங்கே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம், எங்க
ளுக்கு பாம்பு கடிக்கிறது, தேள் கடிக்கிறது, எனவே விவசாயத்
திற்கு எங்களால் செல்ல முடியவில்லை என்றெல்லாம் சொல்லி,
மிகவும் துன்பப்படுகிறார்கள். எங்களுக்கும் அரசினுடைய சூழ்
நிலை புரிகிறது. நாடு முழுவதும் உள்ள தொழிற்சாலைகளுக்கு
மின்சாரம் தரவேண்டியிருக்கிறது. அந்தக் காரணத்தாலே,
மின்சாரம் தருவதிலே பல்வேறு சிக்கல்கள் இருப்பதை நாங்கள்
புரிந்து கொண்டு இருக்கிறோம். எனவே விவசாயிகளுக்கு பக
லிலே மின்சாரம் தருவதிலே உள்ள பிரச்சனைகளை நாங்கள்
புரிந்து கொண்டு இருக்கிறோம். எனவே என்னுடைய சிறிய
யோசனையை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்
றைக்கு அரசாங்கம் பல்வேறு உதவிகளை விவசாயிகளுக்குச்
செய்து வருகிறது. எனவே விவசாயிகளுக்கு உதவுகிற வகையில்
10 ஆயிரம் ரூபாய் திட்டத்திலே ஒவ்வொரு விவசாயிக்கும்,
மிகப் பெரிய சிமெண்ட் தொட்டியைக் கட்டிக் கொடுக்கு
மாறு நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒரு திட்டத்தைக்
கொண்டு வந்தால், இரவிலே பாய்ச்சுகிற அந்த நீரை எல்லாம்
அந்த தொட்டியிலே தேக்கி வைத்துக்கொள்ளலாம். தொட்டி
யிலே தேக்கிவைத்துக் கொள்கிற நேரத்திலே நம்முடைய
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மீன் வளத் துறை
அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி அந்தத் தொட்டியிலே
மீன் வளர்க்கிற ஒரு திட்டத்தைக் கொண்டு வரலாம். இரவிலே
வருகிற நீர் தொட்டியிலே கிடக்கிறது. பகலிலே அந்த நீரை
எடுத்து, நாம் விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.
அதே சமயத்தில், அந்தத் தொட்டியிலே 2 அடிக்கு தண்ணீரை
நாம் நிரந்தரமாக தேக்கி வைத்தால், மீன் வளர்க்கவும் அது
பயன்படும். எனவே வறண்டு கிடக்கிற விவசாயிகளுக்கு, முழுமை
யான பலனை அனுபவிக்க முடியாமல் இருக்கிற விவசாயிகளுக்கு
ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பதைப் போல வரக்கூடிய
நீர் விவசாயத்திற்கும் பயன்படுகிறது.

(பிற்பகல் 1-20)

அதேநீரில் மீன் வளர்ப்பதன் மூலம் ஒரு வருமானம் வரு
கிறது. அதே நேரத்தில் இரவு நேரத்தில் மின்சாரம் வருவதால்
எங்களுக்கு ஆபத்து வருகிறது, அச்சம் வருகிறது, துன்பம் வரு
கிறது என்று சொல்லுகிற அவர்களுடைய குறைகளை போக்கு
வதற்கு நமக்கு உதவிகரமாக இருக்கும். எனவே அரசு பல்
வேறு வகையில் மானியமாக கொடுத்து கடன் உதவிகள் கொடுத்து
நல்ல திட்டங்களை தீட்டி வருகிற இந்த வேளாண்மைத் துறை
அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு உதவுகிற வகையில்
இந்த சிமெண்டு தொட்டிகளை கட்டி தருவதற்கு கடன் உதவி
அளிக்கக்கூடிய அந்த சிரிய திட்டத்தை அவர்கள் பரிசிலனை





செய்யுமாறு நான் அவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்
கிறேன். அதேபோன்று இன்றைக்கு நாட்டிலே குடிநீர் பற்றாக்
குறை அதிகமாக இருக்கிற சூழ்நிலையில் இன்றைக்கு புரட்சித்
தலைவர் அவர்கள் புனித அரசு போர்கால நடவடிக்கை போல்
ஆழ்துளை கிணறுகளை அமைத்து ஓரளவுக்கு மக்களுடைய
தாகத்தை தணித்து இருக்கிறது. அதனுடைய அடிப்படையில்
என்னுடைய தொகுதியில் இன்றைக்கு 40 சதவீதத்துக்கு குடிநீர்
பற்றாக்குறை போக்கப்பட்டாலும் கூட இன்றைக்கு ஏறக்குறைய
என்னுடைய தொகுதியில் இருக்கிற 3 ஒன்றியங்களில் 100 ஆழ்
துளை கிணறுகளை அமைக்கவேண்டும் என்று சொல்லி நாங்கள்
பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு
அரசினுடைய உதவி குறைவாக இருக்கிறது. எனவே அதை
அதிகப்படுத்துகிற வகையில் ஒரு ஒன்றியத்திற்கு 8 அல்லது 10
ஆழ்துளை கிணறுகள் அரசால் அனுமதிக்கப்பட்டாலும் அதை
அதிகமாக்கித் தரவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக்
கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் மருங்காபுரி தொகுதிக்கும்
குளித்தலை தொகுதிக்கும் நடு நாயகமாக இருக்கிற மணப்பாறை
தொகுதி மக்களுடைய நீண்ட கால கனவை நினைவாக்குகிற
வண்ணம் அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல செய்தியை செய்தித்
தாள்கள் மூலம் அறிவித்து இருக்கிறார். குளித்தலையிலிருந்து
மணப்பாறைக்கு காவேரி நீர் திட்டம் வருமா? என்கிற வகையில்
கேள்விக்குறியாக போட்டு அந்தத் திட்டத்தை 5 கோடி ரூபாய்
செலவில் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்று
அறிவித்து இருக்கிறார்கள். இது எங்களுடைய நெஞ்சங்களில்
எல்லாம் பாலை வார்த்தது போல் இருக்கிறது. மணப்பாறை
தொகுதி மக்களுக்கு அந்த காவேரி நீர் வருகிறது என்ற அரிய
திட்டத்தை விரைவுப்படுத்த வேண்டும். அப்படி வருகிற நேரத்
தில் குளித்தலையிலிருந்து மணப்பாறை வரை இருக்கிற 300
கிராம மக்களுக்கு குறிப்பாக வறட்சி பிரதேசமாக இருக்கிற
மிகவும் துன்பகரமான சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டு இருக்கிற
தோகமலைத் தொகுதியைச் சார்ந்து இருக்கிற மக்களுக்கு
அது மிகவும் உதவிகரமாக இருக்கும். குளித்தலையிலிருந்து
மணப்பாறைக்கு வருகிற காவேரி நீர் திட்டத்தை விரைவுப்படுத்த
வேண்டுமாறு இங்கே அமைச்சர் அவர்களை பணிவன்போடு
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு விவசாயிகள் எல்லாம் இந்த வரத்து
வாரிகள் என்று சொல்லக்கூடிய வேலைகளை எல்லாம் 10 ஏக்க
ருக்கு குறைவாக இருக்கக்கூடிய வரத்து வாரிகள் சம்பந்தப்பட்டு
இருக்கிற பணியை எல்லாம் அந்தப் பகுதி மக்களுக்கு அந்த
நீர்ப்பாசனம் மூலம் பயன்பெறுகிற மக்களுக்கு அரசு இன்றைக்கு
விட்டு இருக்கிறது. அன்றைய தினம் ஆங்கிலேயர் காலத்தில்
எல்லாம் அந்த குடி மரிமை வேலைகள் என்ற எண்ணத்தில்
அந்த வேலைகளை அங்கே இருந்த மக்கள் எல்லாம் நமக்கு

பலன் அளிக்கக்கூடிய அந்த வரத்து வாரிகள் வேலைகளை நாமே செம்மைப்படுத்தவேண்டும்; அதன் மூலம் வருகிற பயனை நாம் நான் பெறவேண்டும்; என்ற நல்ல எண்ணத்தோடு அப் போது பாடுபட்டார்கள், ஆனால் அன்றைக்கு இருந்த சூழ் நிலையில் அவர்கள் அப்படி பாடுபடக்கூடிய ஒரு வேலை இல்லை. வேலைக்கு விட மனமும் இல்லை. அந்த காலத்தில் ஊர் நாட்டாண்மையைக் கூப்பிட்டு வீட்டுக்கு 2 பேர் வாருங்கள் உடனே கால்வாய் அமைத்து விடுவோம் என்று சொல்வார். உடனே அவர்கள் அதற்கு இணங்குவார்கள். ஆனால் இன்றைக்கு அந்த சூழ்நிலை இல்லாத காரணத்தால் அந்த 10 ஏக்கருக்கு குறைவாக இருக்கிற பாசன பரப்புள்ள நிலங்களுக்கு பாதி ரூபாயாவது இந்த விவசாயத்துறை ஏற்றுக்கொள்ள வேண்டும் மீதி ரூபாயை அதன் மூலம் பாசன வசதியை பெறுகிறவர்கள் தரவேணடும் என்ற ஒரு கட்டாயப்படுத்துகிற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் அந்த சிறிய விவசாயிகள் நலன் பெறுவார்கள் என்ற நம்பிக்கையை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அதே நேரத்தில் இன்றைக்கு விவசாயத்திற்கு உதவுகிற வரையில் பல்வேறு சிறப்பான சிறிய திட்டங்களை எல்லாம் தீட்டிக் கொண் டிருக்கிற இந்த வேளாண்மைத்துறை அமைச்சருக்கு இப்போது நான் சொல்லியிருக்கிற இந்த சிறிய கருத்துக்களை எல்லாம் ஏற்று அவர்கள் சிறப்பாக எங்களுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த கசிவு நீர் குட்டைகளை அமைத்துக் கொடுப்பதன் மூலம் ஏறக்குறைய இப்போது என் னுடைய தொகுதியில் உள்ள மக்களுக்கு இது 2, 3 வகையில் பயன்படுகிறது. எங்களுடைய தொகுதியில் விவசாயம் இல்லாத காரணத்தாலும், மழை இல்லாத காரணத்தாலும் எங்கள் தொகு தியை சார்ந்து இருக்கிற மக்கள் எல்லாம் அண்டை மாநிலத் திற்கு சென்று கூலி வேலைக்கு செல்லக்கூடிய ஒரு துன்பமான சூழ்நிலையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இப்போது அந்த கசிவு நீர் குட்டைகள் கட்டுகிற பணி நிற்கிறது. அதை தொடர்ந்து செய்தால் இப்போது தற்சமயம் வறட்சியாய் இருக் கிற நாட்டுப்புற மக்களுக்கு வேலையும் கிடைக்கும். அப்படி வேலை கொடுப்பதன் மூலம் கட்டப்படுகிற அந்த கசிவு நீர் குட்டைகள் தொடர்ந்து மக்களுக்கு பலன் பெறும் வகையில் இருக்கும் என்ற காரணத்தால் அந்த கசிவு நீர் குட்டைகள் தொடர்ந்து கட்டுகிற பணியை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆழ் குழாய் கிணறுகளை கட்டி பொறுத்துகிற வரை அதை நம்முடைய வேளாண்மைத் துறை எடுத்துக் கொள்கிறது. பிறகு அதை மெயின்டெயின் செய்கிற பணியை உள்ளாட்சித் துறைக்கு விட்டு விடுகிறது. இதன் காரணத்தால் இரண்டு துறைகளிலும் அது இரண்டும் கெட்டான் சூழ்நிலையில் இருக்கிறது. சரியான முறையில் பயன் அளிக்கக்கூடிய சூழ் நிலையில் இல்லை.





எனவே, இதனை உள்ளாட்சித் துறையிலிருந்து எடுத்து, குடிநீர் வடிகால் வாரியமே இறுதி வரை வைத்துக் கொண்டு அதைச் செம்மைப் படுத்துகிற சிறப்பான பணியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தப் பணிவான யோசனைகளை எற்று, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பான சிந்தனை யிலே எங்களுக்கு உதவுவார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து மானியக் கோரிக்கையை வரவேற்று வாய்ப்புக்கு நன்றி கூறி உரையை முடித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, 1985-86-ஆம் ஆண்டிற்கான விவசாய, குடிநீர் மானியக் கோரிக்கை, மாண்புமிகு டாக்டர் நாவரசு அவர்கள் கொண்டு வந்ததை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்கலாம் என்று கருதுகிறேன். ஆளுநர் அவர்களது உரையிலே இருந்து இது வரையிலும் விவசாயிகளுக்கு எந்தவித நன்மையும் செய்ய வில்லை என்று மாறுபட்ட கோணத்திலே உள்ளவர்கள், மாறுபட்ட கருத்துக்களைக் கொஞ்சமும் மனம் கூசாமல் வார்த்தைகளை இந்த மன்றத்தில், மாற்று முகாமில் உள்ளவர்கள் எடுத்து வைத்தார்கள், என்பதை நாம் அறிவோம். ஆனால், இந்த மாமன்றத்திலுள்ள திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் பலர், விவசாயிகளுக்கு எந்தவித நன்மையும் செய்யவில்லை என்று முழு மூச்சாக பல கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். நான் அடக்கத்தோடு அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். தாங்கள் ஆட்சி செய்த காலத்தில் விவசாயிகள் என்னென்ன தொல்லைகளுக்கு ஆள் ஆக்கப் பட்டார்கள், என்னென்ன சித்திரவதைக்கு ஆள் ஆக்கப் பட்டார்கள் என்பதை ஆணித் தரமாக ஆதாரத்தோடு, ஆயிரம் உதாரணங்களோடு விளக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோன்று, விவசாயிகளின் குறைகளை நாங்கள் தான் உடனுக்குடன் போக்குவோம் என்று கூறும் கம்யூனிஸ்டு நண்பர் களும் கூட இந்த மாமன்றத்திலே பல கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். ஆனால் மேற்கு வங்கத்தை ஆண்டு கொண் டிருக்கின்ற முதலமைச்சரை விட புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக அரியணையில் அமர்ந்தவுடன் ஏழை எளிய விவசாயி களின் வாட்டம் போக்கப்பட்டது: தமிழகத்திலே பசுமைப் புரட்சி ஏற்பட்டது என்பதை இந்தத் தகுதி வாய்ந்த சட்ட மன்றத்திலே எடுத்துக் கூற கடமைப்பட்டுள்ளேன்.

[திரு. அ. பாலுசாமி] [1985 ஜூன் 3

தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னால் தான் அரிசிப் பஞ்சம் இந்த நாட்டில் இல்லாமல் போனது. உணவுத் துறையில் தன்னிறைவு கொண்ட மாநிலமாக, விவசாயிகள் கருத்தினை கேட்டறிந்து உடனுக்குடன் நிவர்த்தி செய்யும் மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் டாக்டர் நாவரசு அவர்கள் இதில் முழுப் பங்கு கொண்டதன் காரணமாக, தமிழகம் தன்னிறைவு பெற்ற மாநிலமாக விளங்கியது என்பதை மெத்த பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பயிற்சி வழி தொடர்புத் திட்டத்தை தமிழகத்திலே அறிமுகப்படுத்தியதன் விளைவாக, பயனாக, விவசாயிகள் அதிகாரிகளைத் தேடி அலைந்த நிலை மாறி, அதிகாரிகள், விவசாயிகளை நாடிச் சென்று விவசாயிகளின் தேவைகளை நிவர்த்தி செய்யும் நிலை வந்தது. கிராமங்களில், பள்ளிக்கூடங்களில், கிராம விவசாயிகள் கருத்தரங்கினை அதிகாரிகளை வைத்து நடத்தி, பல நல்ல திட்டங்களை நிறைவேற்ற ஏற்பாடு செய்தவர் நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், மேட்டுப் பகுதியைச் சமப்படுத்தும் திட்டம் என்றும், ஊரணி அமைக்கும் திட்டம் என்றும், விவசாயிகள் அவர்கள் பயிரிடக் கூடிய விளை பொருட்களை வைப்பதற்கு, விற்பனைக் கூடங்களைக் கட்டுவதற்கும் அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்கு பின்னால் திட்டங்களை கொண்டு வந்து விவசாயிகளுக்கு நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறார் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், இந்த நல்ல பல நன்மைகளை எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்துக் கொண்டு இருக்கும் நேரத்தில், விவசாயிகளுக்கு நன்மைகள் செய்யவில்லை என்று கூறும் திராவிட முன்னேற்றக் கழகத்தவருக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். இந்த நிதி ஆண்டில் புரட்சித் தலைவர் அவர்களும், விவசாயத் துறை அமைச்சர் அவர்களும், விவசாயிகள் பயிரிடும் பயிர்களுக்கு உர விலையைக் குறைத்திருக்கிறார்கள். விரலுக்குத் தகுந்த வீக்கம் என்பதைப் போன்று தமிழக அரசினால் என்ன செய்ய முடியுமோ அதைத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசையும், விவசாயத் துறை பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். உர விலையை நிர்ணயம் செய்யும் பொறுப்பை மாநில அரசுக்கே மத்திய அரசு கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில், விவசாயிகளுக்கு 1977 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னால்..........



1985 ஜூன் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி
யோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-30)

திரு. அ. பாலுசாமி : ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப்
பின்னால் விவசாயிகளுக்குத் தங்குதடையின்றி உரம் கிடைத்தது
என்பதை நாம் யாவரும் அறிவோம். அதற்காக உரத்தின்
மீதான வரியை புரட்சித் தலைவரின் அரசு ரத்து செய்திருக்கிறது.
ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது கலைஞர்
ஆட்சிச் சக்கரத்தைச் சுழற்றிய நேரத்திலே என்ன தீமைகள்
செய்தார்கள் என்பதை காலச் சக்கரத்தை பின்னே சுழற்றிப்
பார்க்கின்ற நேரத்திலே நமக்கெல்லாம் புரியும். தங்குதடை
யின்றி அப்போது உரம் கிடைத்ததா? 200 ரூபாய் ஒரு மூட்
டைக்குக் கொடுத்தாலும் உரம் கிடைக்கவில்லை என்று விவ
சாயிகள் அலைய நேரிட்டது என்பதை எண்ணிப் பார்த்துத்தான்
விவசாயிகள் இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா தி. மு. க.
அரசை மீண்டும் ஏற்படுத்தி இந்த நாட்டிலே ஏழை எளிய மக்க
ளின் நல்வாழ்விற்காக 3-ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பைக்
கொடுத்து இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

எங்கள் ஆட்சியிலே உள்ள குறைபாடுகளைச் சொல்லட்டும்,
திருத்திக் கொள்வோம், ஆனால் மாமியார் உடைத்
தால் மண் சட்டி, மருமகள் உடைத்தால் பொன் சட்டி என்று
பேசுவதை நிறுத்தவேண்டும். உருப்படியான
கருத்துக்களை இந்த மன்றத்தில் எடுத்து வைக்க வேண்டும்.

வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல பல, திட்டங்
களைத் தீட்டி விவசாயிகளுக்கு உரம் போன்றவை கிடைப்பதற்கு
வழிவகை செய்து இருக்கிறார்கள். ஒரு குவிண்டால் நெல்லுக்கு
இவ்வளவு ரூபாய் அதிகம் என்று விலையைக் கூட்டிக் கொடுத்
திருக்கிறார்கள். பல விவசாயிகளின் பயிர்கள் பூச்சியடித்து பல
சிக்குகளுக்கு உட்பட்டு பயிர்கள் வீணாகிக் கிடக்கின்றன.
அப்படிப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் இந்த
நேரத்திலே தகுந்த ஊதியம் கொடுக்கிற வகையில் ஒரு
திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

எங்களுடைய நிலக்கோட்டைப் பகுதி மிகவும் வறட்சியான
பகுதியாக இருப்பதால் பல வளர்ச்சித் திட்டங்களை நிறை
வேற்ற வேண்டும். எங்கள் பகுதியிலே திராட்சை, கொய்யா
போன்ற பழங்கள் அதிகமாக உற்பத்தியாவதால் அங்கே ஒரு
பதனிடும் தொழிற்சாலை அமைத்துக் தரவேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே என்னுடைய பகுதி
யிலே மல்லிகைப் பூ, ரோசாப் பூ அதிகமாக விளைகிறது.
அங்கே மல்லிகை செண்ட் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்
துத்தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருந்த நிலை மாறி இன்றைக்கு 1977-ம் ஆண்டுக்குப் பின்னால் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு தமிழகத்திலே குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கவேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்கள் திட்டங்களை தீட்டினார்கள். கிராமங்களிலே குடிநீர்ப் பிரச்சினை இருக்கக்கூடாது என்ற முறையிலே செயல்படுத்தப்பட்டது. அதிலே ஒருசில குறைபாடுகள் இருக்கின்றன, அவைகளையும் நிவர்த்தி செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பைப்கள் போடுகிற நேரத்திலே அவைகளிலே உள்ள மரைகள் சிலிப் ஆகிவிடுகின்றன. அதன் காரணத்தினால் தண்ணீர் செல்வதற்கு முடியவில்லை, எனவே அவைகளை மாற்றி நல்ல பைப்களைப் போட்டு அந்தக் கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் நிலக்கோட்டைப் பகுதி மேடான இடமாக இருப்பதால் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாகி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அதிகமான மேல்நிலைத் தொட்டிகளைப் போட்டும் குழாய்களைப் போட்டும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு காலம் நேரம் அதிகமாக இல்லாததால் வாய்ப்புக்கு நன்றிகூறி, முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கைகளைப் பிரேரேபிக்கிறவரையில் நடந்த நிகழ்ச்சிகள் நடவடிக்கைக் குறிப்பில் இருப்பதா இல்லையா என்பதைப் பேரவைத் தலைவர் வந்து அறிவிப்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த நடவடிக்கைகள் அப்படியே குறிப்பில் இருக்கும். அந்த் மானியக் கோரிக்கைகள் நாளை தொடரும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (4—6—1985) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-35 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.





## 4. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

170. முந்தைய நீதித்துறையின் 8—2—1916-ஆம் நாளிட்ட 165-ஆம் எண் அறிவிக்கையில் வெளியிடப்பட்ட விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 2—1—1985-ஆம் நாளிட்ட 10-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1913-ஆம் ஆண்டு பொறுப்பு ஆட்சியர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 2/1913) 30(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

171. குன்னூர், இந்திய குடும்பக் கட்டுப்பாடு சங்கத்திற்கு சொந்தமான M.M.H. 2254 எண்ணுள்ள ஜீப்பிற்கு விதிக்கப்படும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 27—2—1985-ஆம் நாளிட்ட 470-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

172. மதுரை மாவட்டம், நத்தம் தாலூகாவைச் சேர்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 4—1—1985—ஆம் நாளிட்ட 4-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

173. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 8—3—1985-ஆம் நாளிட்ட 567-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

174. தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு சாராவிகள் தயாரிப்பு முறைகள் (கட்டுப்பாடு) விதிகளை வகுப்பது குறித்து மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறையின் 29—8—1984-ஆம் நாளிட்ட 131-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

175. அன்றைய ஒருங்கிணைந்த உணவு மற்றும் வேளாண்மைத் துறையின் II-1, 1405/1965-ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 2-2-1985-ஆம் நாளிட்ட 11-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

176. அந்தியூர், கவுண்டபாடி மற்றும் பவானியைச் சேர்ந்த சில கிராமங்களை அறிவிக்கப் பெற்ற அங்காடிப் பகுதியிலிருந்து நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 12-2-1985-ஆம் நாளிட்ட 239-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

177. நிலக்கடலை, இஞ்சி, விளக்கெண்ணெய், பருத்தி, மிளகாய் வகைகள், புளி, நெல், சர்க்கரை, வெல்லம், கம்பு, சோளம் மற்றும் கேழ்வரகு ஆகியவற்றைப் பொருத்தவரை தாரமங்கலம் அங்காடியினை அறிவிக்கப் பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 18-1-1985ஆம் நாளிட்ட 59-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

178. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த குளித்தலை தாலுகா, மணப்பாறை தாலுகா மற்றும் திருச்சிராப்பள்ளி தாலுகா ஆகியவற்றை சேர்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பெற்ற கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 4-12-1984ஆம் நாளிட்ட 411-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

179. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசு தேர்வாணைக் குழு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 7-3-1985ஆம் நாளிட்ட 230-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].





180. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவிலிருந்து மதுரை மாவட்டம், பழநியிலுள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்திற்கு விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 4-8-1984-ஆம் நாளிட்ட 852-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

181. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 2-11-1984-ஆம் நாளிட்ட 2487 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தில் [மத்தியச் சட்டம் 4/1939) 132(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

182. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப பணியாளர் தேர்வாணைக் குழு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 7-3-1985-ஆம் நாளிட்ட 227ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

183. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு கள் மற்றும் சாராய (ஏலத்தில் விற்பனை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 5-4-1984-ஆம் நாளிட்ட 426-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

184. திருவள்ளுவர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில போக்குவரத்து துறையினருக்கு சொந்தமான 51 வண்டிகளுக்கு செலுத்த வேண்டிய வரியினின்று விலக்களிப்பது குறித்து உள்துறையின் 12-3-1985ஆம் நாளிட்ட 593-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

[1985 ஜூன் 3

185. சென்னையிலுள்ள காது கேளாத முதியோருக்கான பயிற்சி மையத்திற்கு சொந்தமான T.M.V. 5718 எண்ணுள்ள வண்டிக்கு விதிக்கப்படும் வரியினை குறைப்பது குறித்து உள்துறையின் 27-2-1985-ஆம் நாளிட்ட 469-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1971) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

186. கர்நாடக மாநிலத்தின் மாதேஸ்வரா மலையில் நடைபெறும் மகாசிவராத்திரி மற்றும் யுகாதி திருநாட்களை முன்னிட்டு தற்காலிக அனுமதியின் பேரில் நடத்தப்படும் கர்நாடக மாநில சாலை போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்தமான பயணிகள் பேருந்துகளுக்கு விதிக்கப்படும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போ-VI) துறையின் 8-2-1985 -ஆம் நாளிட்ட 318-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

187. தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 9-1-1985-ஆம் நாளிட்ட 59-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்தல், அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

188. எண்ணெய்—இயற்கை வாயு குழுவிற்கு சொந்தமான TNZ 5723 எண்ணுள்ள துளையிடும் இயந்திரத்திற்கு விதிக்கப் படும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போ. I) துறையின் 7-3-1985-ஆம் நாளிட்ட 556-ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

189. எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் குழுவிற்கு சொந்த மான சில வண்டிகளுக்கு விதிக்கப்படும் வரியிலிருந்து விலக் களிப்பது குறித்து உள் (போ. I) துறையின் 7-3-1985-ஆம் நாளிட்ட 557-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



1985 ஜூன் 3]

190. ஊரக வளர்ச்சித் துறையின் சில அறிவிக்கைகளில் மாற்றங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 14-3-1985ஆம் நாளிட்ட 169ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

191. ஊரக வளர்ச்சித் துறையின் அறிவிக்கைகளில் மாற்றங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 14-3-1985ஆம் நாளிட்ட 170ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

192. அன்றைய ஒருங்கிணைந்த உணவு—வேளாண்மைத் துறையின் அறிவிக்கைகளில் திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 18-1-1985ஆம் நாளிட்ட 53ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

193. தல நூலக அதிகாரக் குழுவிற்கு சொந்தமான பணி ரெண்டு வண்டிகளுக்கு அரசுக்கு நிலுவையாக உள்ள தண்டப் பணம் குறித்து உள்துறையின் 12-3-1985ஆம் நாளிட்ட 592ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

194. 30-12-1984 முதல் ஒரு ஆண்டு வரை டிரான்ஸ்பார்மர் ஆயில் ஃபீட் இருப்புகளுக்கு விதிக்கப்படும் வரியினை குறைப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 30-3-1985ஆம் நாளிட்ட 303ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

71. கோரிக்கை எண். 20—வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

72. வேளாண்மைத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

73. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் பற்றிய ஆய்வுரை 1984–85 (தமிழ் ஆங்கிலம்).

74. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் பற்றிய ஆய்வுரை' 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

75. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் பற்றிய ஆய்வுரை, 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

76. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் பற்றிய ஆய்வுரை 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

77. கோரிக்கை எண். 49—கழிவுநீர் போக்கு மற்றும் குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

78. 'சென்னைக் குடிநீர்' என்கிற புத்தகம்—1984–85 (தமிழ்).

79. 'தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்' என்கிற புத்தகம் 1984–85 (தமிழ்).





(32ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## கொள்கை விளக்கம்—1985–86

**வேளாண்மை :**

நமது பொருளாதாரச் சீர்மைக்கு வேளாண்மை இன்றிய
மையா அடிப்படை என்பதோடு, இத்தொழிலில் ஏற்படுகின்ற
சிறு ஏற்றத்தாழ்வு கூட, சமுதாயம் முழுவதையுமே உயர்த்தவோ
தாழ்த்தவோ செய்யும். இதனைக் கருத்தில் கொண்டு உணவு
உற்பத்தியைப் பெருக்கவும் ஊரக பொருளாதாரத்தை உயர்த்
தவும், தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்
படுத்துகிறது. அவற்றுள் வேளாண்மை விரிவாக்கப் பணிகளை
சீரமைக்கும் திட்டம், தரமான விதை, உரம், பூச்சி மருந்து
போன்ற இடுபொருட்களைத் தக்க நேரத்தில்—தக்க இடத்தில்—
கிடைக்க வழி செய்யும் திட்டம், வேளாண் தொழில் நுட்பங்களை
விரைந்து பரப்பும் திட்டம், தக்க காலத்தே மேற்கொள்ளும் பயிர்
பாதுகாப்புத் திட்டம், அதிலும் குறிப்பாக பெருவாரியான பரப்பு
களில் எடுக்கப்படும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்,
சீரிய நீர் பராமரிப்பு மற்றும் மானாவாரி சாகுபடி அபிவிருத்தி
போன்ற சில திட்டங்களையும், செயல் முறைகளையும் முக்கிய
குறிக்கோளாக கோடிட்டுக் காட்டலாம்.

இத்திட்டங்களின் பலனாக செந்நெல்லும் செங்கரும்பும்
தமிழகத்திற்கு உயர் பெயர் ஈட்டித் தந்திருக்கிறது. கரும்பு
உற்பத்தித் திறனில் தமிழகம் இந்தியாவிலேயே முதலிடத்தையும்
அரிசி உற்பத்தித் திறனில் இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது.
உலக ரீதியில் கூட, கரும்பு உற்பத்தித் திறனில் நாம் தான்
முதலிடம் வகிக்கிறோம்! நம் மாநிலத்தில் விளையும் மற்ற
உணவு தானியங்களின் சராசரி உற்பத்தித் திறன்கூட, இந்தியச்
சராசரி உற்பத்தி திறனை விட மிகுதியாகவே உள்ளது என்று
பெருமிதம் அடையலாம். இருப்பினும் உற்பத்தியை அதிகரிக்க
வேண்டிய தேவையும் வாய்ப்பும் உள்ளது.

**பருவ நிலைகள் :**

இவ்வாண்டு தென்மேற்கு பருவத்தில் கிடைக்கப்பெற்ற 505.4
மி.மீ. மழை சராசரி மழையளவான 444 மி.மீ.-ஐ விட சிறிது
அதிகம் என்றாலும் இம்மழை பரவலாக பெய்யவில்லை. அதன்
காரணமாக மானாவாரி பயிர்களின் பரப்பு வெகுவாக பாதிக்கப்
பட்டுள்ளது. வடகிழக்கு பருவத்தில் சராசரி மழை அளவான

448.4 மி.மீ.-க்கு பதிலாக 344.2 மி.மீ. அளவுதான் மழை பெய்தது. மேலும், இம்மழை மாநிலம் முழுவதும் பரவலாக பெய்யவில்லை. இதன் விளைவாக இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர் மற்றும் வட ஆற்காடு மாவட்ட பாசன நிலங்களும் புதுக்கோட்டை மற்றும் தருமபுரி மாவட்ட மானாவாரி சாகுபடியும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டன.

நவம்பர் மாத புயலால் ஏற்பட்ட வெள்ளம் சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களை மோசமாக தாக்கி பயிர்களுக்கும், பொது உடமைகளுக்கும் சேதம் விளைவித்தது.

செங்கை மாவட்டத்தில் நெல் மற்றும் இதரப் பயிர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வெள்ள நிவாரணமாக விதை, உரம், ஜிப்சம், பூச்சிகொல்லி மருந்து ஆகியவை இலவசமாக சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. உப்பு மற்றும் மணல் மேவப்பட்ட நிலங்களின் சீர்திருத்தம் உரிய துறைகள் மூலம் செயல்படுத்தப் பட்டன.

பயிர் உற்பத்தி :

குறைவான மற்றும் பரவலாகப் பெய்யாத பருவமழை, பெருமளவு மானாவாரி பயிர்ச் சாகுபடியை பாதித்தது மட்டுமின்றி ஓரளவு மழையை நம்பியுள்ள ஏரிகளின்கீழ் பயிராகும் பயிர்களின் சாகுபடியையும் பாதித்துள்ளது. பருவநிலைப் பாதிப்பிலிருந்து விடுபட, அரசு தம் திறமை முழுவதையும் பயன்படுத்தி மாற்றுப் பயிர் சாகுபடி முறைகளை செயல்படுத்தி தேவைப்பட்ட இடங்களுக்கு விதை, உரம் மற்றும் பூச்சி மருந்துகளைக் கொண்டு சென்று நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

இவ்விடர்ப்பாடுகள் காரணமாக 1984–85-ம் ஆண்டின் உற்பத்தி கீழ்க்கண்டவாறு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது:—

| | | | |
|---|---|---|---|
| அரிசி | .. | 56.00 | இலட்சம் டன்கள் |
| சிறு தானியங்கள் | .. | 18.00 | ஷை |
| பயறு வகைகள் | .. | 3.40 | ஷை. |
| கரும்பு(வெல்லம் அளவில்) | .. | 20.50 | ஷை |
| பருத்தி .. | .. | 4.75 | இலட்சம் பொதிகள். |

நெல் மற்றும் சிறு தானியங்கள் :

1985–86-ம் ஆண்டு சுமார் 26.50 இலட்சம் எக்டேர்களில் நெல் சாகுபடி செய்வதன் மூலம் சுமார் 63 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்ய குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே போல் மானாவாரி சாகுபடியில் கவனம் செலுத்தி சிறு



சுமார் 22 இலட்சம் டன்களாக
தானியங்கள் உற்பத்தியை
உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தக் குறியீடு இறவை
மற்றும் மானாவாரி சாகுபடிக்கு ஏற்றதாக பருவநிலை அமையும்
என எதிர்பார்த்து நிர்ணயிக்கப்பட்டது.

புதிய இரகங்களை அறிமுகப்படுத்தல், தேவையான அளவு
இடுபொருட்களை காலத்தே வழங்குதல், ஒருங்கிணைந்த பயிர்ப்
பாதுகாப்பு முறைகள், தக்க நீர் பராமரிப்பு முறைகள் மற்றும்
மானாவாரி சாகுபடி முறைகள், திருத்திய அறுவடைக்குப்பின்
கையாளப்பட வேண்டிய தொழில் நுட்பங்கள் ஆகியவை முன்
சொன்ன குறிக்கோள்களை அடைய கையாளப்படப் போகும்
வழிமுறைகளாகும்.

எக்டேருக்கு 5 டன் நெல் உற்பத்தி :

இவ்வாண்டு அரிசி உற்பத்தியை பெருக்க எக்டேருக்கு 5 டன்
என்ற திட்டம் புகுத்தப்பட்டது. இம் மாநிலத்தின் அரிசி
தேவையைப் பூர்த்தி செய்ய தற்போதுள்ள பரப்பிலேயே உற்
பத்தியை அதிகப்படுத்தி அதன் மூலம் உபரியாகும் நிலங்களை
வேறு பணப் பயிர்களுக்கு திருப்புவதன் மூலம் வேளாண் குடி
மக்களின் வருவாயை பெருக்கி ஊரகப் பொருளாதார நிலையை
உயர்த்தும் முயற்சியே இத்திட்டத்தின் சீரிய நோக்கமாகும். இவ்
வாண்டு குறுவை பருவத்திலே கிடைக்கப் பெற்ற விளைச்சல்
மிகவும் ஊக்கமளிப்பதாக உள்ளது. மாநிலத்தின் பல இடங்களில்
எக்டேருக்கு 5 டன் உற்பத்தி எடுக்கப்பட்டுள்ளது. இதே
நிலையைச் சம்பா பருவத்திலும் பெற எல்லா வித முயற்சிகளும்
எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 1985-86ம் ஆண்டு தீவிர
மாகச் செயல்படுத்தப்படும்.

3பி திட்டம் :

வேளாண்மை விரிவாக்கப் பணியின்
ஊரக வளர்ச்சியே இலாபகரமில்லாத எவ்வித விரிவாக்க
முடிவான குறிக்கோள். இக்குறிக்கோளை நினைவில் கொண்டு
பணியும் அர்த்தமற்றது. இலாபத்தையும் அதிகரிக்க வழிசெய்யும்
உற்பத்தித் திறனையும், இலாபத்தையும்
இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் ஒவ்வொரு
வேளாண்மை உதவி இயக்குநரும் தங்கள் எல்லைக்குட்பட்ட
இரண்டு இடங்களில் இரண்டு செயல் விளக்கங்கள் 10 முதல்
20 எக்டேர் பரப்பில் அமைத்து, அதில் பங்குபெறும் விவசாயிகள்
நிலத்திலேயே, பொருத்தமான புதிய வேளாண்மைத் தொழில்
நுட்பங்களை செயல் விளக்கம் செய்து காட்டவேண்டும். இத்
திட்டம் 1985-86ம் ஆண்டு விரிவுபடுத்தப்படும்.

உயர் விளைச்சல் இரகத் திட்டம் :

1984-85ம் ஆண்டு 23.05 இலட்சம் எக்டேரில் நெல்லும்,
8.15 இலட்சம் எக்டேரில் சிறு தானியங்களும் உயர் விளைச்சல்
இரகங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. 1985-86-ம்
ஆண்டு சுமார் 24.00 இலட்சம் எக்டேர்களில் நெற்பயிரும்,
மற்றும் சுமார் 10 இலட்சம் எக்டேர்களில் சிறு தானிய உயர்
விளைச்சல் இரகங்களை பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் 1984-85ம் ஆண்டில்
26,823 பலவகையான வேளாண்மைக் கருவிகள் வழங்கப்பட்டன.
1,214 விதை மற்றும் உரமிடும் கருவிகள் வழங்கப்பட்டன.
1985-86 ஆம் ஆண்டும் 20,000 விதை மற்றும் உரமிடும் கருவி
உட்பட விவசாயக் கருவிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பருத்தி :

கோடை சாகுபடி பருத்தி பரப்பு அதிகமானதன் காரணமாக
1984-85ம் ஆண்டு சுமார் 2.68 இலட்சம் எக்டேரில் பயிரிடப்
பட்டு, 4.75 இலட்சம் பொதிகள் உற்பத்தி அடையலாம் என
எதிர்பார்க்கப்படுக்கிறது. 1985-86ம் ஆண்டு 3.60 இலட்சம்
எக்டேரில் பயிரிட்டு 5.00 இலட்சம் பொதிகள் உற்பத்தி செய்ய
திட்டமிடப்பட்டுள்ளது.

கரும்பு :

தற்போதுள்ள 23 சர்க்கரை ஆலைகள் மற்றும் வெல்லம்
தயாரிப்பாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய கரும்பு
பெருக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1984-85ம்
ஆண்டு 1.83 இலட்சம் எக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது.
இவ்வாண்டு கரும்பு (வெல்லம் அளவில்) உற்பத்தி 20.50 இலட்சம்
டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1985-86ம்
ஆண்டு 1.82 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு, 22·00 இலட்சம்
டன்கள் வெல்லம் என்ற அளவில் கரும்பை உற்பத்தி செய்ய
திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் 21 ஒட்டுண்ணி உற்பத்தி நிலையங்கள்
உள்ளன. 1984-85ம் ஆண்டில் கரும்பு இடைக்கணு புழுவைக்
கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணியை வளர்த்து 7.826 எக்டேரில்
விடப்பட்டுள்ளது. அதே போல் 1985-86ம் ஆண்டு 10,800
எக்டேரில் ஒட்டுண்ணிகள் விடப்படும்.



பயறு வகைகள் :

நமது மாநிலத்தில் பயறு வகைத் தேவைகள் ஆண்டுக்கு
ஏறத்தாழ 9 இலட்சம் டன்கள் ஆகும். ஆனால், நம்முடைய
உற்பத்தி சுமார் 3 இலட்சம் டன்களாகவே உள்ளது. எனவே,
நமது தேவையைப் பூர்த்தி செய்ய ,பெருமளவு பயறு வகைகள்
பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. பயறு
உற்பத்தியை இரு மடங்கு ஆக்குவதற்காக, 1980-81ம் ஆண்டு
'' பயறு உற்பத்தி ஆண்டுத் திட்டம் '' என்ற மாநில அரசுத்
திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டில்
பயறு வகை சாகுபடி பரப்பு 10.34 இலட்சம் எக்டேர்களில்
சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1984-85ம் ஆண்டில் கோடைப்
பருவத்தில் தீவிர சாகுபடித் திட்டத்தை மேற்கொண்டு 4.5
இலட்சம் எக்டேரில் பயறுவகைகள் பயிரிட உத்தேசிக்கப்பட்
டுள்ளது. 1984-85ம் ஆண்டு பயறு வகைகள் உற்பத்தி சுமார்
3.40 இலட்சம் டன்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
1985-86 ஆம் ஆண்டில் 10.10 இலட்சம் எக்டேரில் பயறு
வகை சாகுபடி செய்து உற்பத்தியை 3.50 இலட்சம் டன்கள்
ஆக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பயறு வகை உற்பத்தியை அதிகரிக்க, நுண்ணுயிர் கலவை
யைப் பயறு வகை விதைகளுடன் கலந்து விதைக்கும் பொருட்டு
நுண்ணுயிர் கலவைப் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டு
வருகின்றன. 1984-85ம் ஆண்டு 4.928 இலட்சம் பொட்ட
லங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1985-86ம் ஆண்டில் 7
இலட்சம் பொட்டலங்கள் விநியோகிக்கப்படும்.

இலை வழியாக, '' டை அமோனியம் பாஸ்பேட் '' தெளிப்
பதால் பயறு உற்பத்தி அதிகரிக்கிறது. இத்திட்ட இனத்தின்
கீழ் 1984-85ம் ஆண்டு 10,572 எக்டேரில் '' டை அமோனியம்
பாஸ்பேட் '' தெளிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில்
10,000 எக்டேரில் இத்திட்டத்தை செயல்படுத்த தீர்மானிக்கப்
பட்டுள்ளது.

பயறு உற்பத்தி நுணுக்கங்களை வேளாண் பெருங்குடி மக்கள்
அறிந்து கொள்ளும் பொருட்டு, ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆண்
டுக்கு நூறு விவசாயிகள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி
யளிக்கப்பட்டு வருகிறது. 1984-85ம் ஆண்டு 36,821 விவசாயி
களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டி
லும் 36,800 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்
பட்டுள்ளது.

மைய அரசின் பயறு வகைத் திட்டம் மற்றும் கோடைப்
பயறு வகை சாகுபடித் திட்டங்களின் கீழ் 1984-85ம் ஆண்டு
2,480 எக்டேரில் நீர்ப்பாசன மானியம் வழங்கப்பட்டுள்ளது.
522 எக்டேர் பரப்பளவில் நிருபணத்தளைகள் அமைக்கப்பட்டன.

50 சதவீத மானியத்தில், உழுவர்களுக்குப் பூச்சி மருந்துகள் [1985 ஜூன் 3
4,097 எக்டேர் பரப்பளவிற்கு வழங்கப்பட்டன. 50 சதவீத
மானியத்தில் 1,194 பயிர்ப் பாதுகாப்பு கருவிகளும், 1,64,753
நுண்ணுயிர் கலவைப் பொட்டலங்களும் விநியோகிக்கப்பட்
டுள்ளன. மேலே குறிப்பிட்ட இந்திட்டப் பணிகள் 1985-86
ஆம் ஆண்டிலும் செயல்படும். இது தவிர, 1984-85ம் ஆண்டு
4,724 குவிண்டாலுக்கு சான்று பெற்ற விதை உற்பத்தி மானியத்
தொகை இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ளது. 1985-86
ஆம் ஆண்டில் 6,000 குவிண்டால்கள் சான்று பெற்ற விதை
களுக்கு மானியம் அளிந்து கொள்முதல் செய்யப்படும்.

புகையிலை :

வாய்மூலம் மெல்லும் புகையிலை விளைச்சலையும் தரத்தை
யும், அதிகரிக்க இப்பயிரின் கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை
நாற்றங்கால் முதல் அறுவடை வரை எடுத்துரைக்கவும, நிரு
பணத் தளைகள் அமைத்து விளக்கவும். ஒரு திட்டம் நமது
மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்
கீழ் 1984-85ம் ஆண்டு 0.12 இலட்சம் எக்டேர்கள் வரை பயன்
அடைந்துள்ளது. 1985-86ம் ஆண்டில் இத்திட்டம் 0.19 இலட்
சம் எக்டேரில் செயல்படுத்தப்படும்.

வளர்ந்து வரும் மக்கட் தொகைக்கு உணவளிக்கவும் மற்றும்
ஏனைய விளைபொருட்களை உற்பத்தி செய்யவும் வேண்டிய
முயற்சிகளின் தொடர்பாகவும் வேளாண் குடிமக்களின் பொருளா
தார நிலையை உயர்த்தும் சீரிய நோக்கத்துடனும், 1985-86
ஆம் ஆண்டு கீழ்க்கண்ட உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

| | (இலட்சம் டன்கள்) |
|---|---|
| அரிசி | 63.00 |
| சிறு தானியங்கள் | 22.00 |
| பயறுகள் | 3.50 |
| கரும்பு (வெல்லம் அளவில்) | 22.00 |
| பருத்தி | 5.00 இலட்சம் பேல்கள் (பொதிகள்) |

விதை பெருக்கத் திட்டம்:

மாநிலத்தில் மொத்தம் 44 அரசு விதைப் பண்ணைகள்
உள்ளன. அவை குறிப்பாக ஆதார விதை உற்பத்தியையும்,
[illegible] சான்றிதழ் பெற்ற விதைகளையும் உற்பத்தி செய்வதில்
டுபட்டுள்ளன. இதற்குத் தேவையான (மூலவிதை) கோவை



1985 ஜூன் 3]

வேளாண்மைப் பல்கலைக் கழகத்திடமிருந்து பெறப்பட்டு அரசு விதைப் பண்ணைகளில் பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

நெல் மற்றும் சிறுதானியங்கள் :

அதிக உற்பத்திக்கு முக்கிய இடுபொருள் பொறுக்கு விதையே ஆகும். இவ்வரசின் தற்போதைய கொள்கை மொத்த பரப்பிற்கு தேவையான விதை நெல்லில் 10 சதவீதமும், கேழ்வரகில் 15 சதமும், இரகச் சோளத்தில் 7 சதமும், ஒட்டுரகச் சிறு தானியங்களுக்கு 40 சதமும் துறை மூலம் விநியோகம் செய்வதாகும்.

1984-85 ஆம் ஆண்டு 14,143 டன்கள் நெல் விதையும், 364 டன்கள் கேழ்வரகு விதையும், 537 டன்கள் இரகச் சோளம் விதையும், 81 டன்கள் ஒட்டுரக சோளம் விதையும், 408 டன்கள் கம்பு விதையும், 110 டன்கள் மக்கா சோள விதையும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

1985-86 ஆம் ஆண்டிற்கான திட்டம் :

1985-86 ஆம் ஆண்டு கீழ்க்கண்டவாறு சான்றிதழ் பெற்ற விதைகள் விநியோகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

| | பரப்பு விழுக்காடு | விதை அளவு டன்னில். |
|---|---|---|
| நெல் | 12 | 16,200 |
| கேழ்வரகு | 16 | 226 |
| இரகச் சோளம் | 7 | 161 |
| ஒட்டுரகச் சோளம் | 40 | 157 |
| ஒட்டுரகக் கம்பு | 40 | 432 |
| ஒட்டுரக மக்காச் சோளம் | 40 | 128 |

136396

பயறு வகைகள் :

1984-85 ஆம் ஆண்டு சான்றிதழ் பெற்ற விதைகள் உட்பட 2,498 டன்கள் தரமான விதைகள் விநியோகிக்கப்பட்டன. 1985-86 ஆம் ஆண்டு 10 சதம் பரப்புக்கு தேவையான 2,535 டன்கள் விதை விநியோகம் செய்யப்படும்.

புகையிலை:

1984-85 ஆம் ஆண்டு 440 கிலோ விதைகள் கொள்முதல்
செய்து விநியோகம் செய்ய உத்தேசிக்கப்பட்டதில், 363 கிலோ
விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 1985-86 ஆம்
ஆண்டு 440 கிலோ விதைகள் கொள்முதல் செய்து விநியோகம்
செய்யப்படும்.

பருத்தி:

பருத்தி சாகுபடியில் மானாவாரி பரப்பில் 10 சதம் பரப்புக்கும்
இறவை பரப்பில் 15 சதம் பரப்புக்கும் தரமான விதைகளை
விநியோகம் செய்வது இத்துறையின் கொள்கையாகும். அதன்படி
1984-85ஆம் ஆண்டில் 3,512 குவிண்டால்கள் விதை விநியோகம்
செய்யப்பட்டுள்ளது. 1985-86ஆம் ஆண்டு 5,485 குவிண்டால்கள்
தரமான பொறுக்கு விதை விநியோகம் செய்ய உத்தேசிக்கப்
பட்டுள்ளது.

கரும்பு:

கரும்பு விதைக் கரணை பெருக்குத் திட்டம் மூன்று அடுக்குகள்
கொண்ட தரமான விதைக்கரணைகள் பெருக்கம் செய்யும்
நாற்றங்கால் திட்டமாகும். 1984-85ஆம் ஆண்டு 32 எக்டேர்கள்
முதல் தர, 362 எக்டேர் இரண்டாம் தர மற்றும் 3,086 எக்டேர்
வணிக ரீதி நாற்றங்கால் நிறுவப்பட்டுள்ளது.

1985-86ஆம் ஆண்டு 35 எக்டேரில் முதல்தரம், 350 எக்டே
ரில் இரண்டாம் தரம், மற்றும் 3,500 எக்டேரில் வணிக ரீதி
நாற்றங்கால் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இடுபொருள் இருவார விழாக்கள்:

விவசாயிகளிடையே வேளாண் இடுபொருள்களை காலத்தே
மற்றும் போதிய அளவு பயிருக்கு இடுதல் பற்றிய விழிப்புணர்வை
ஏற்படுத்த ஆண்டுக்கு இரண்டுமுறை இரு பருவங்களுக்கு வெகு
முன்னதாகவே இடு பொருள் இருவார விழாக்கள் கொண்டாடப்
படுகின்றன. அதில், வேளாண் இடுபொருள்கள் சம்பந்தப்பட்ட
எல்லா நிறுவனங்களும் பங்கேற்கும். அதில் கருத்துக்காட்சி,
கிராமங்களிலேயே இடு பொருள்கள் வழங்குதல், மரம் நடுதல்
ஆகியவை அமைப்பதுடன், மைய மற்றும் மாநில உயர்மட்ட
அலுவலர்களும் பங்கேற்பார்கள். இத்திட்டம் 1985-86ஆம்
ஆண்டும் தொடரப்படும்.



உரங்கள் :

1984-85ஆம் ஆண்டு 3.94 இலட்சம் டன்கள் தழைச்சத்து,
1.38 இலட்சம் டன்கள் மணிச்சத்து மற்றும் 1.58 இலட்சம்
டன்கள் சாம்பல் சத்து அடங்கிய உரங்கள் விநியோகம்
செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டு உர விநியோகம்
மொத்தம் 6.90 இலட்சம் டன்களாகும். இது ஒரு
குறிப்பிடத்தக்க சாதனையாகும். உர உபயோகத்தை
அதிகப்படுத்த தீவிர உர விநியோகத் திட்டம் சேலம், தர்மபுரி,
புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னி
யாகுமரி ஆகிய 6 தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்
படுத்தப்படுகிறது.

இரசாயன உரங்களை, இயற்கை உரங்களுடன் பயன்படுத்த
விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. இயற்கை உரங்களின்
உபயோகத்தை ஊக்குவிக்க நீலப்பச்சைபாசியின் உபயோகம்
நெல் பயிரிடும் விவசாயிகளிடையே பரவிட வழிவகை செய்யப்
படுகிறது. 1984-85ஆம் ஆண்டு 1,049 டன்கள் நீலப்பச்சைப்
பாசி பெருக்கப்பட்டு 1.05 இலட்சம் எக்டேர் பரப்பில் இட,
விநியோகம் செய்யப்பட்டது.

1984-85ஆம் ஆண்டு 93.68 இலட்சம் டன்கள் உள்ளூர்
உரங்களும், 3.56 இலட்சம் டன்கள் மலமக்கு உரங்களும்
தயாரித்து உபயோகப்படுத்தப்பட்டன.

1985-86ஆம் ஆண்டு 3.95 இலட்சம் டன்கள் தழைச்சத்தும்,
1.20 இலட்சம் டன்கள் மணிச்சத்தும், 1.20 இலட்சம் டன்கள்
சாம்பல் சத்தும் கொண்ட மொத்தம் 6.35 இலட்சம் டன்களாக
உர விநியோகம் செய்வது நமது குறிக்கோள் ஆகும். அதற்கான
வழிமுறைகள் சில :—

(1) நிலத்திற்கேற்ப பரிந்துரைகள்.

)2) உரமிடும் காலம் மற்றும் முறைகள் போன்ற நவீன
உழவியல் முறைகளைத் தெரியப்படுத்துதல்.

(3) உர நிருபண செயல் விளக்கங்கள், வயல் விழாக்கள்,
இயக்கங்கள், கருத்தரங்குகள் மற்றும் விளம்பரங்கள் மூலம் உர
விநியோகம் குறைவான பகுதிகளில், அதிகப்படுத்துதல், இது
போன்ற செயல்முறைகள் மூலம் தீவிர உர விநியோகத் திட்டம்
செயல்படுத்தப்படும். 6 மாவட்டங்களில் மேலும் இம்முறைகள்
துரிதப்படுத்தப்படும்.

(4) மானாவாரி சாகுபடி பகுதிகளில் உர உபயோகம்
படுத்தப்படல்.

(5) "கரீப்" மற்றும் "இராபி" பருவங்களுக்கு முன், தேசிய இடுபொருள் இயக்க வார விழாக்கள் நடத்துவதன் மூலம் உர உபயோகம் அதிகப்படுத்துதல்.

விவசாயிகளுக்குத் தரமான உரங்களைக் குறிப்பிட்ட விலையில் கிடைக்க தரக்கட்டுப்பாடு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு இலட்சம் எக்டேர் நெல் பரப்பில் நீலப்பச்சைப் பாசி இடப்படும். அதே போல் 'அசோலா' என்ற இயற்கை உரம் முதலில் அரசு விதைப் பண்ணைகளில் பெருக்கப்பட்டு, விவசாயிகளுக்கு அளிக்கப்படும். ஊரக மலமக்கு உரம் தயாரிக்கும் திட்டத்திற்கும் போதிய கவனம் செலுத்தப்படும்.

உற்பத்தி ஊக்கமளிப்பு :

1984-85ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் முழுவதும் மற்றும் திருச்சி, தென் ஆற்காடு மற்றும் புதுக்கோட்டை மாவட்டப் பகுதிகள் அடங்கிய காவிரி ஆற்றுப் படுகை விவசாயிகளுக்கு, நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு விற்கப்படும் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூபாய் 15 வீதம் பெறுமான உரங்கள் இலவசமாக குறுவை மற்றும் சம்பா பருவங்களில் அளிக்கப்பட்டது. இப்புதுமையான உற்பத்தி ஊக்கமளிப்பு திட்டத்திற்கு 14.22 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது.

பயிர்ப் பாதுகாப்பு :

1984-85ஆம் ஆண்டில் 61.15 இலட்சம் எக்டேர்கள் பரப்பில் பூச்சி தடுப்பும் 21.63 இலட்சம் எக்டேரில் நோய் தடுப்பும் மேற்கொள்ளப்பட்டது. உணவு மற்றும் உணவல்லாத பயிர்களின் பரப்பில் 1985-86ஆம் ஆண்டில் 56.87 இலட்சம் எக்டேர்களில் பூச்சித் தடுப்பும், 17.33 இலட்சம் எக்டேர்களில் நோய்த்தடுப்பும் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1984-85ஆம் ஆண்டில், 9,000 டன்கள் தூள் மருந்தும், 5 இலட்சம் லிட்டர்கள் திரவ மருந்தும் வாங்கி வைத்து விவசாயக் கிடங்குகள் மூலம் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டது. அதில் 8,022 டன்கள் தூள் மருந்தும் 5.53 இலட்சம் லிட்டர்கள் திரவ மருந்தும் விற்பனை செய்யப்பட்டது. இதே போல் 1985-86ஆம் ஆண்டும் பூச்சி மருந்து விநியோகம் தொடரப்படும்.

நெல் குருத்துப் புழுவை கட்டுப்படுத்த 1984-85ஆம் ஆண்டு 39,500 எக்டேரில் மருந்தடிக்கப்பட்டது. 1985-86ஆம் ஆண்டும் நெல் குருத்துப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த இப்பரந்த அளவில் மருந்தடிக்கும் திட்டம் தொடரப்படும்.





நெல் பயிரில் புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்த பரந்த அளவில் மருந்து தெளிக்கும் திட்டத்தின்கீழ் 1984-85ஆம் ஆண்டு 26,400 எக்டேரில் மருந்துதெளிக்கப்பட்டது. 1985-86ஆம் ஆண்டும் 30,000 எக்டேரில் மருந்தடிக்கப்படும். இச் செலவினத்தில் பாதியை, மைய அரசும், மாநில அரசும் சமபங்கேற்கும். மீதமுள்ள பாதி செலவை சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படும்.

1984-85ஆம் ஆண்டு நெற்பயிரில் "துங்ரோ வைரஸ்" நோய் பெரும்பாலான பகுதிகளில் தோன்றி சேதம் விளைவித்தது. இதனைக் கட்டுப்படுத்த ரூபாய் 51.32 இலட்சம் செலவில் ஒரு சிறப்பு திட்டம் ஒப்பளிக்கப்பட்டது. 19,573 எக்டேரில் மருந்து தெளிக்கப்பட்டது. 1985-86ஆம் ஆண்டும் இத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு 'துங்ரோ வைரஸ்' நோய் கட்டுப்படுத்தப்படும்.

1984-85ஆம் ஆண்டு நெற்பயிரில் (கழுத்து) குலைநோய் தாக்குதலைத் கட்டுப்படுத்த பரந்த அளவில் மருந்து தெளிக்கும் திட்டத்தின்கீழ் 27,600 எக்டேரில் மருந்து தெளிக்கப்பட்டது. அதே போல் 1985-86ஆம் ஆண்டும் இத்திட்டம் தொடரப்படும். இச் செலவினத்தில் பாதியை மைய மாநில அரசால் சரி சமமாக ஏற்கப்படும். மிகுதியை சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படும்.

1984-85ஆம் ஆண்டு ஒரு வட்டாரத்திற்கு 20 நபர் வீதம் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிரில் தோன்றும் முக்கிய பூச்சி மற்றும் நோய்களை கண்டறிதல், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைக் கையாளுதல் மற்றும் கருவிகளைப் பழுது பார்த்தல் போன்ற பணிகளில் 7,400 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 1985–86 ஆம் ஆண்டில், 7,480 ஆசிரியர்களுக்கு இத்தகைய பயிற்சி அளிக்கப்படும்.

பயிர்ப் பாதுகாப்பு செலவைக் குறைக்கவும், திறனை அதிகப்படுத்தவும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளுடன் திருந்திய சாகுபடி முறைகளையும் சேர்த்து கையாளும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கங்கள் 1984–85 ஆம் ஆண்டு 99 நிலையங்களில் அமைக்கப்பட்டன. இத்திட்டம் 1985–86 ஆம் ஆண்டும் விரிவான அளவில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பூச்சி நோய்க் கணக்கெடுப்புத் திட்டம் மாநிலம் முழுவதும் தீவிரமாக செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பூச்சி நோய்த் தாக்குதல் பற்றி விவசாயிகளுக்கு முன் எச்சரிக்கை விடுக்கவும் காலத்தே பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கவும் உதவுகிறது. இத்திட்டம் 1985–86 ஆம் ஆண்டும் வேளாண்மை பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களின் கூட்டு முயற்சியுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் 24,000 எக்டேரில் திட்டமிட்டு 1984–85 ஆம் ஆண்டில் 24,117 எக்டேரில் எலி ஒழிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1985–86 ஆம் ஆண்டும் செயல்படுத்தப்படும்.

**உழவர் பயிற்சி நிலையங்கள் :**

மாவட்டத்திற்கு ஒன்றாக மொத்தம் 15 உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. கோவை மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள நிலையங்கள் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும், உதகையில் உள்ள நிலையம் தருமபுரி தோட்டக்கலை இயக்குநர் கட்டுப்பாட்டிலும் உள்ளன. மீதமுள்ள 12 நிலையங்கள் வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. 1984–85 ஆம் ஆண்டின் சாதனை மற்றும் 1985–86 ஆம் ஆண்டின் திட்டம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1984–85 ஆம் ஆண்டின் சாதனை. | 1985–86 ஆம் ஆண்டின் குறியீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. ஆண்/பெண் விவசாயிகளுக்கான நிலைய பயிற்சி. | 246 | 240 |
| 2. உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக்கான நிலையப் பயிற்சி. | 97 | 60 |
| 3. கிராமப்புற களப் பயிற்சியும், செயல் விளக்கங்களும். | 1,220 | 1,220 |
| 4. பெண்களுக்கான செயல் விளக்கப் பயிற்சி. | 125 | 120 |





**வேளாண்மை பயிற்சிப் பள்ளிகள் :**

தமிழ் நாட்டில் 13 வேளாண்மைப் பள்ளிகள் உள்ளன. அவை கிராமிய இளைஞர்களுக்கு அறிவியல் வேளாண்மை நுணுக்கங்களைப் பற்றி அறிவு போதிக்கின்றன. ஆண்டுக்கு 325 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். இத்திட்டம் 1985–86 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படும்.

**மண் ஆய்வுக் கூடங்கள் :**

தமிழ்நாட்டில் 15 மண் ஆய்வுக் கூடங்களும், 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களும் உள்ளன. காஞ்சீபுரம், ஆடுதுறை, கோவில்பட்டி, கோவை மற்றும் திருச்சியில் உள்ள மண் ஆய்வுக் கூடங்களில் சிறப்பான வசதிகள் செய்யப்பட்டு "மாங்கனீசு", துத்தநாகம், தாமிரம் மற்றும் இரும்பு போன்ற நுண்ணூட்ட உரங்கள் மண் மாதிரிகளில் உள்ள அளவை ஆய்ந்தறிய வசதிகள் செய்யப்பட்டு உள்ளன. 1984–85 ஆம் ஆண்டு இலக்கான 9.72 இலட்சம் மாதிரிகளில் 8.22 இலட்சம் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மண் மாதிரிகள் மட்டுமின்றி பாசன நீர் மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. 1985–86 ஆம் ஆண்டும் மண் ஆய்வுத் தொடர்ந்து செயல் படுத்தி, குறைவான உற்பத்தித் திறன் கொண்ட நிலப் பிரச்சினைகள் மண் ஆய்வுக் கூடங்கள் மூலம் சமாளிக்கப்படும்.

**உரக்கட்டுப்பாடு சோதனைக் கூடங்கள் :**

இம்மாநிலத்தில் 6 உரக் கட்டுப்பாடு சோதனைக் கூடங்கள் உள்ளன. அவை ஆண்டுக்கு 10,800 உர மாதிரிகள் ஆய்வு செய்யும் திறன் கொண்டவை. 1984–85 ஆம் ஆண்டு 9.741 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அவைகளில் 1,492 மாதிரிகள் தரமற்றவை என அறிவிக்கப்பட்டு குற்றம் புரிவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1985–86 ஆம் ஆண்டும் இத்திட்டம் செயல் படுத்தப்படும்.

**பூச்சிகொல்லி சோதனைக் கூடங்கள் :**

பூச்சி பூஞ்சானக் கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளின் மாதிரிகள் மாநிலத்தில் உள்ள 9 சோதனைக் கூடங்களில் ஆய்வு செய்யப்படுகின்றன. இச்சோதனைக் கூடங்களின் தற்போதைய திறன் வருடத்திற்கு 18,366 மாதிரிகள் ஆகும். 1984–85 ஆம் ஆண்டு 15,352 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் 1985-86 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

**மண் வள அளவை மற்றும் நில உபயோக அமைப்பு :**

இம்மாநிலத்தில் 4 மண் அளவை அலகுகள் வேலூர், கோவை
தஞ்சை மற்றும் பாளையங்கோட்டையில் உள்ளன. எல்லா
மாவட்டங்களுக்கும் மண் வள தகுதி குறித்த அறிக்கைகள்
இம் மாநிலத்தில் முதன் முறையாக 1984-85 ஆம் ஆண்டு வெளி
யிடப்பட்டன. 1984-85-ம் ஆண்டில் 6.25 இலட்சம் எக்டரில்
மண் அளவை மேற்கொள்ளப்பட்டது.

**வேளாண்மைக் காடு வளர்ப்பு:**

மைய அரசு நிதியுதவியுடன் சிறு மற்றும் குறுநில விவசாயி
களுக்கென, பழக்கன்றுகள் மற்றும் எரிபொருள் மரக்கன்று
கள் வழங்கும் இத்திட்டம் 1984-85 ஆம் ஆண்டு நடைமுறையில்
இருந்தது. இதற்கென 93.4 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு
செய்யப்பட்டது. அதில் 1984-85 ஆம் ஆண்டு 6.71 இலட்சம்
பழக்கன்றுகளும் 600·47 லட்சம் இதர மரக்கன்றுகளும் 1.83
இலட்சம் விவசாயிகள் பயனடைய வழங்கப்பட்டுள்ளன : இத்
திட்டம் புதிய திட்டமாயினும் விவசாயிகளிடையே நல்ல வர
வேற்பு பெற்றுள்ளது. 1985-86-ஆம் ஆண்டும் இத்திட்டம்
தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**மினிகிட்டுகள்:**

1984-85-ஆம் ஆண்டு 202,779 நெல் மற்றும் 37,571 சிறு
தானிய மினிகிட்டுகள் வழங்கப்பட்டன. சிறு விவசாயிகளிடையே
புதிய இரகங்களை அறிமுகப்படுத்த உதவும் இத்திட்டம்
1985-86-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1985-86-ம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:**

1. **மானாவாரி சாகுபடி மேம்பாடு திட்டம் :**— அடிக்கடி
பருவ மழை பொய்ப்பதின் காரணமாக இடர்ப்பாடுகளுக்கு
உள்ளாகும் மானாவாரி நிலங்களில் கிடைக்கும் மழை நீரை
சேமித்து, அதற்குத் தக்கவாறு பயிர்ச் சாகுபடி
முறைகளைப் பரவிடச் செய்ய மானாவாரி சாகுபடி செய்யும்
திட்டம் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் மேம்பாடு
பட்டுள்ளது. அதன் முதல் கட்டமாக முன் மொழியப்
2,000 எக்டர்கள் பரப்பு கொண்ட 1985-86 ஆம் ஆண்டு.
அதில் முன்னேற்றமடைந்த மானாவாரி ஒரு அலகு தொடங்கப்படும்.
செயல் விளக்கம் செய்து காட்டப்படும். சாகுபடி முறைகள்
பெறும் விவசாயிகளுக்கு தகுந்த இத்திட்டத்தில் பங்கு
தேவையான கடன் வசதியும் ஊக்குவிப்பு தொகையும்
கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.



2. **சான்றிதழ் பெற்ற பயறு வகைகளை மாநில மான்ய உதவியுடன் உற்பத்தி செய்தல் :**

பயறு வகைகள் உற்பத்தியை பெருக்க தரமான விதைகள்
தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு உதவ ஒரு குவிண்டால் விதைக்கு
ரூ. 200 மான்யம் அளிக்கப்படும். 1985-86 ஆம் ஆண்டில் 2,500
குவிண்டால் விதைகள் இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்ய
திட்டமிடப்பட்டுள்ளது.
பயறு வகைப் பெருக்கத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் ... அளிக்கப்படும்.

3. **அரசு விதைப் பண்ணைகளின் உள்ளமைப்புகளை செம்மைப் படுத்தும் திட்டம் :**

இத்துறையின் கீழ் 44 அரசு விதைப் பண்ணைகள் உள்ளன.
இப்பண்ணைகள் நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், பருத்தி
மற்றும் காய் கறி வகைகளின் ஆதார விதை மற்றும் சான்றிதழ்
பெற்ற விதைப் பெருக்கத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன. கூடு
தல் வசதிகள் செய்வதன் மூலம் இப்பண்ணைகளின் உற்பத்தி
திறனை அதிகப்படுத்த முடியும்.

1985-86 ஆம் ஆண்டு இந்நோக்கத்துடன் சாக்கோட்டை
மற்றும் பாப்பானகுளம் போன்ற சில தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு
விதைப் பண்ணைகளில் உள்ளமைப்புகளை செம்மைப்படுத்தும்
பணிகள் மேற்கொள்ளப்படும்.

4. **விதை சுத்திகரிப்பு நிலையங்களை வலுப்படுத்துதல் :**

சுத்திகரிப்பு செய்யப்பட்ட விதைகள் தகுந்தவாறு பாது
காக்கப்பட வேண்டும். 1985-86 ஆம் ஆண்டு திருவாரூர்
மற்றும் இனுங்கூரில் உள்ள விதைச் சுத்திகரிப்பு நிலையங்களில்
கூடுதல் சேமிப்பு வசதியும். போக்குவரத்து வசதிகளை துரிதப்
படுத்த இணைப்பு சாலையும் ரூ. 4.80 இலட்சம் செலவில்
செய்து கொடுக்கப்படும்.

5. **விதைச் சுத்திகரிப்பு மற்றும் தரம் பிரிக்கும் இயந்திரங்கள் வழங்குதல் :**

விவசாயத் துறையின் கீழ் 56 பெரிய மற்றும் நடுத்தர விதை
சுத்திகரிப்பு இயந்திரங்கள் அரசு விதைப்பண்ணைகள், வேளாண்
கிடங்குகள், விதைமையங்கள் மற்றும் விதை சுத்திகரிப்பு நிலை
யங்களில் உள்ளன. பல விதை சுத்திகரிப்பு இயந்திரங்கள்
தேவையான அளவு செயல்பட்டு ஆற்றல் இழந்து விட்டன.
ஆகையால் அவைகளை மாற்ற வேண்டிய தேவை உள்ளது.
மேலும் பல இடங்களில் அவை கட்டிட வசதி குறைவு காரண
மாக திறந்த வெளிகளில் இருக்கின்றன.

ஆகையால் 1985-86 ஆம் ஆண்டு 5 பழைய விதை சுத்திகரிப்பு இயந்திரங்களை மாற்றவும், அவைகளுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. வைகை அணை விவசாயப் பண்ணை 2-ல் உள்ள உள்ளமைப்பைச் செம்மைப்படுத்தல் :

வைகை அணை விவசாயப் பண்ணை 2-ல் பருத்தி கருவிதை உற்பத்தி செய்யப்படுகிறது.

1985-86 ஆம் ஆண்டு 8.12 இலட்சம் ரூபாய் செலவில் நீர்ப்பாசன வசதிகளை பெருக்கவும், ஏனைய உள்ளமைப்பு வசதிகளைச் சீரமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7. பவானிசாகரிலுள்ள வேளாண்மைப் பள்ளியில் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுதல் :

பவானிசாகர் வேளாண்மைப் பள்ளியில் பணியாளர் குடியிருப்பு 1.50 இலட்சம் ரூபாய் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

8. தரக்கட்டுப்பாடு அலுவலர்களுக்கு விரைவில் தரமறிந்திட உர ஆய்வு கலப்பெட்டி வழங்குதல் :

தனியார் துறையில் விநியோகம் செய்யப்படும் உரங்களின் தரக்கட்டுப்பாடு பணிகளை செம்மைப்படுத்தவும், அந்தந்த இடங்களிலேயே சோதனை மேற்கொள்ளவும் தரக்கட்டுப்பாடு பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களுக்கு 1985-86 ஆம் ஆண்டு 30 உர ஆய்வு கலப்பெட்டிகள் வழங்கப்படும்.

9. நீர்ப்பாசன ஏரிகளின் கீழ் பண்ணை மேம்பாடு திட்டம் :

ஏரிப்பாசன நிலங்களில் கிடைக்கும் நீரை திறமையாக பயன்படுத்தி அந்நிலங்களில் உற்பத்தியைப் பெருக்க பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும் தலா 200 ஏக்கர் வீதம் ஏரிப்பாசன நிலம் எடுத்துக் கொண்டு நீர் பராமரிப்பிலும், பயிர்ச் சாகுபடியிலும் முன்னேற்றமடைந்த வழிமுறைகள் செயல் விளக்கம் செய்து காட்டப்படும். அவைகளில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும்:—

(1) தேவைப்படும் இடங்களில் வயல் வாய்க்கால்கள் வெட்டுதல் மூலம் வயலுக்கு வயல் நீர் பாய்ச்சுதலை தவிர்த்தல்.

(2) தேவைப்பட்டால் நீர்ப்போக்குகள் மற்றும் வயல் அக உறைகள் அமைத்தல்.



(3) தேவைக்கேற்ப நிலச் சீரமைப்பு செய்தல்.

(4) வடிகால்கள் அமைத்தல்.

(5) நிலங்களைத் தரப்படுத்துதல்.

(6) அதிக உற்பத்தி அடைய தேவைப்படும் திருந்திய சாகுபடி முறைகளையும், நீர் பராமரிப்பு முறைகளையும் செயல் விளக்கம் செய்து காட்டுதல், 1985-86-ஆம் ஆண்டு 6.63 இலட்சம் ரூபாயில் 2,600 எக்டர்களில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

10. களைக் கொல்லிகள் மூலம் களைகளைக் கட்டுப்படுத்துதல்.

களைக்கொல்லிகளின் பயனை விவசாயிகள் அறியச் செய்யவும், பரந்த அளவில் கடைப்பிடிக்கவும், 1985-86ஆம் ஆண்டு 5,000 எக்டேருக்கு களைக்கொல்லி மருந்துகளை 50 சதம் மான்ய விலையில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

11. உப்பு படிந்த நிலங்களைச் சீர்திருத்துதல் :

கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும் ஆண்டுக்கு தலா 500 எக்டேர் வீதம் உப்பு படிந்த நிலங்கள் முன்னோடி செயல் விளக்க முறைகளாகச் சீர்திருத்தம் செய்ய ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ‘ஜிப்சம்’ போன்ற நில சீர்திருத்த இரசாயன பொருட்கள் 50 சதம் மானிய விலையில் வழங்கப்படும். மேலும் தகுந்த உழவியல் முறைகள் செயல் விளக்கம் செய்து காட்டப்படும். 1985-86 ஆம் ஆண்டு முதல் கட்டமாக 4 மாவட்டங்களில், 2,000 எக்டர்களில் இந்த செயல் விளக்கங்கள் நிறுவப்படும்.

இவைகளுக்கப்பால், ஆராய்ச்சி நிறுவனங்களின் நெருங்கிய தொடர்போடு விரிவாக்க முயற்சிகள் பயிற்சி வழி தொடர்புத் திட்ட அமைப்பின் மூலம் தீவிரப்படுத்தப்படுவது மட்டுமல்லாமல் வேளாண் சமுதாயத்திற்குப் புதிய தொழில் நுட்பங்கள் காலத்தே கிடைக்க ஆவன செய்யப்படும். புதிய தொழில் நுட்பங்களில் தேவையானவற்றை தெரிந்தெடுக்க சிறந்த முறையில் பணியாற்றப்படும். வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க பருவநிலை துணை போகும் என எதிர்பார்க்கலாம்.

## வேளாண்மை பொறியியல் துறை

வேளாண் பொறியியல் துறை விவசாயிகளின் விளை நிலங்களை மேம்படுத்தியும், குறித்த காலத்தில் நவீன இயந்திரங்களைக் கொண்டு நிலங்களை உழுது கொடுத்தும், நீர்ப்பாசன வசதிகள் பெருக்கத்திற்கு தக்க ஏற்பாடுகளைச் செய்து

கொடுத்தும் வருகின்றது. இதோடு மட்டுமின்றி, நீர், நிலவளப் பாதுகாப்பு, ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டங்களை செயல்படுத்துதல், இயற்கை சீற்றங்களால் ஏற்படும் வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுதல் முதலிய பணிகளையும் திறம்பட செயலாற்றி வருகின்றது.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை மாநில அரசு திட்டங்களின் மூலமும், மத்திய மாநில அரசுகளின் சரிபங்கீட்டு கூட்டுத் திட்டங்களின் மூலமும், மத்திய அரசு ஆதரவு திட்டங்களின் மூலமும், கீழ்க்கண்ட பிரிவுகளாக செயலாக்கம் செய்து வருகின்றது :—

(1) நில மேம்பாட்டுத் திட்டம்.

(2) சிறுபாசனத் திட்டம்.

(3) நில நீர்வள பாதுகாப்புத் திட்டம்.

(4) பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மேற்கண்ட திட்டங்களின் மூலம் 1984-85 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இத்துறையின் சாதனைகளும், 1985-86 ஆம் ஆண்டு செயல்படுத்தவிருக்கும் திட்ட விவரங்களும் வருமாறு :—

நில மேம்பாட்டுத் திட்டம்:

தரிசு மற்றும் மேடுபள்ளங்கள் நிறைந்த பூமியினைத் திருத்தி, நிலமட்டம் செய்துகொடுத்து, மேம்பட்ட நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்கு புல்டோசர் மற்றும் டிராக்டர் முதலியக் இயந்திரங்களை குறைந்த வாடகையில் விவசாய பெருங்குடி மக்களுக்கு இத்துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. இதோடு மட்டுமின்றி, நிலம் உழுதல், மண்ணைக் கிளறி விடுதல், சேராக்குதல் போன்ற பணிகளைச் செய்ய டிராக்டர்களையும் மற்ற கருவிகளையும் கொடுத்து உதவி செய்து வருகின்றது.

இத்துறையின் கீழ் 135 புல்டோசர்களும், 175 டிராக்டர்களும் சீரிய முறையில் இயங்கி தமிழக விவசாயிகளுக்குப் பேருதவி புரிந்து வருகின்றன.

1984-85 ஆம் ஆண்டில் 8,600 எக்டேர் பரப்பில் நில சமன் செய்யப்பட்டுள்ளது. 33,000 எக்டர் நிலப்பரப்பில் டிராக்டர் இயந்திரத்தின் மூலம் ஆழ உழுது கொடுக்கப் பட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டில் 7,000 எக்டர் பரப்பளவு நிலம் சமன் செய்யவும், 18,800 எக்டேர் நிலப்பரப்பில் இயந்திரங்களைக் கொண்டு பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.



சிறுபாசனத் திட்டங்கள் :

நிலத்தடி நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்த வடிமுனைக் குழாய்கள், மற்றும் ஆழ்குழாய் கிணறுகள், அமைக்கப்படு கின்றன. மேலும் பாறைப் பகுதிகளில் அதிக நீரை பெறு வதற்கு திறந்த கிணறுகளில் ஆழப்படுத்துவதும் கிணற்றுக்குள் துளையிடுவதும் முக்கிய பணிகளாகும். இதற்கான தொழில் நுட்ப அறிவுரைகள் இலவசமாகவும் இயந்திரங்கள் குறைந்த வாடகைக்கும் இத்துறையின் மூலம் வழங்கப்படுகிறது.

விவசாயத்திற்கு போதுமான நிலத்தடி நீர் இருக்கும் இடங்களை நவீன இயந்திரங்களைக் கொண்டு கண்டு பிடித்து தருவதுடன், கிடைக்கும் நீரின் அளவு, நீரின் தன்மை ஆகிய வற்றையும் ஆராய்ந்து கொடுத்து வருகின்றது.

இத்துறையின் கீழ் 158 இயந்திர துளைக் கருவிகளும், 103 பாறை உடைப்பு கருவிகளும், 57 நீண்ட துளையிடும் இயந்திர கருவிகளும், 410 கைத்துளைக் கருவிகளும், 22 காற்றழுத்தக் கருவிகளும், இப்பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

கிணறுகளை அமைத்துக் கொடுப்பது மட்டுமின்றி சரியான நீரேற்ற கருவிகள் அமைக்கவும் சிக்கன நீர்ப்பாசன முறை களான, சொட்டு நீர்பாசனம் மற்றும் நீர்த் தெளிப்பு (Sprinkle Irrigation) முறைகளை அறிமுகப்படுத்துவதிலும் தொழில் நுட்ப அறிவுரைகளுடன், திட்டங்களைச் செயல் படுத்துவதிலும் தீவிர கவனம் செலுத்தப்பட உள்ளது.

1984–85 ஆம் ஆண்டில் 4,880 குழாய் கிணறுகள், 3,049 வடிமுனைக் குழாய்க் கிணறுகள், 3,427 கிணறு களில் துளைகள் இடுதல் ஆகியவை அமைத்துக் கொடுக்கப்பட் டுள்ளன. இத்துடன், 2,470 திறந்த கிணறுகளில் ஆழப் படுத்தும் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1985–86-ம் ஆண்டில் 4,850 குழாய் கிணறுகள், 2,920 வடிமுனைக் குழாய் கிணறுகள் அமைக்கவும், 2,435 கிணறுகளில் கிணற்றுக்குள் துளையிடவும், 3,010 கிணறுகளை ஆழப்படுத்தவும் திட்டமிடப் பட்டுள்ளது.

நீர் மற்றும் நிலவள பாதுகாப்பு திட்டம்.

நாளுக்கு நாள் பெருகி வரும் உணவு, உடை மற்றும் இதர தேவைகளுக்கு ஏற்ப, உற்பத்தியைப் பெருக்க நீர் மற்றும் நில வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மிக அவசியமான ஒன்றாகும். இவ்வேளாண்மை பொறியியல் துறை, காற்று மற்றும் நீரினால் ஏற்படும் மண் அரிப்பினைத் தடுத்தல், மலைப் பகுதிகளில் ஏற்படும் நிலச்சரிவைக் கட்டுப்படுத்துதல், நீரோடைகளில் ஏற்படும் மண் அரிப்பினைத் தடுத்தல் முதலான

நடவடிக்கைகளுடன், கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பு வசதி களை ஏற்படுத்தி, நிலமற்ற ஏழை மக்களுக்கு மேற்குறிப்பிட்ட திட்டங்களைச் செம்மையான முறையில் நடைமுறைப்படுத்தி வந்துள்ளது.

நீர் மற்றும் நிலவளப் பாதுகாப்புத் திட்டங்கள் இத்துறை யினரால் மலை மற்றும் சமவெளிப் பிரதேசங்களிலும், காற் றரிப்பு தடுப்பு நடவடிக்கைகள் மதுரை, திருநெல்வேலி, மா வட்டங்களிலும், பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டப் பணிகள் வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், தருமபுரி மற்றும் திருச்சி மாவட்டங்களிலும், வறட்சி தாக்கும் பகுதிகளான தரும புரி, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகளும் இத்துறையினரால் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

குந்தா மற்றும் கீழ்பவானி ஆற்று படுகை பகுதிகளில் ஏற் படும் மண் அரிப்புத் தடுப்பு நடவடிக்கைகள் மட்டுமின்றி, மேற்குறிப்பிட்ட அணை நீர்பிடிப்பு பகுதிகளின் பயிர்ச் சாகு படி முறைகள் மேம்பாட்டுத் திட்டத்திலும் கவனம் செலுத்தி, அவைகளில் ஏற்படும் வண்டல்மண் படிவத்தை மத்திய அரசு நிதி உதவியுடன் தடுத்து வருகின்றது.

மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள்:

சிறு சிறு நீர்ப்பிடிப்புப் பகுதிகளாக பிரித்து நீர், நிலவள பாதுகாப்புத் திட்டங்களை இம்மேற்கு தொடர்ச்சி மலையில் செயல்படுத்தி இயற்கை சூழ்நிலைகளைப் பேணி பாதுகாப்பதி லும், அதனைப் போற்றி வளர்ப்பதிலும், இத்துறை மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது.

மதுரை மாவட்டம், கொடைக்கானல் வட்டத்தில் டிசம்பர் 1984-லிருந்து சுமார் 318 இலட்சம் ரூபாயில் புதிதாக அங்கீ கரிக்கப்பட்ட மஞ்சளாறு நீர்பிடிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஏழாவது திட்டக் காலத்தில் இம்மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வும், தரிசு நிலங்களை மேம்படுத்துதல், கார, அமிலத் தன்மை களால் பாதிக்கப்பட்ட நிலப்பகுதிகள் மற்றும் நீர் தேங்கி, வேளாண்மைக்கு உபயோகமின்றிப் போன நிலங்களைத் திருத்தி,





விளை நிலங்களாக மாற்றம் செய்தல், அதிக தரிசு நிலங் களை வேளாண்மைக்கு ஏற்ற நிலங்களாக மாற்றம் செய்தல் போன்ற பணிகளில் அதிக கவனம் செலுத்த இத்துறை திட்ட மிட்டுள்ளது.

| | 1984–85 எக்டேரில். | 1985–86 திட்ட குறியீடு பரப்பு, எக்டேரில். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. மண்வளப் பாதுகாப்புத் திட்டம், மலை மற்றும் சமவெளிப் பகுதி கள் .. .. .. | 54,500 | 50,000 |
| 2. காற்றரிப்பு தடுப்புத் திட்டங்கள், மதுரை மாவட்டம் .. | 1,297 | 1,200 |
| 3. காற்றரிப்பு தடுப்புத் திட்டங்கள், திருநெல்வேலி மாவட்டம் .. | 906 | 900 |
| 4. ஓடை சீரமைப்புத் திட்டம், தென் ஆற்காடு மாவட்டம் .. .. | 1,105 | 1,000 |
| 5. மண்வளப் பாதுகாப்புத் திட்டம், பழங்குடியினர் பகுதி .. | 297 | 250 |
| 6. குந்தா மற்றும் கீழ்பவானி நதி பள்ளத்தாக்குத் திட்டப் பகுதி மண்வளப் பாதுகாப்புத் திட்டம் | 3,117 | 3,000 |
| 7. மதுரை மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதி மண் வளப் பாதுகாப்புத் திட்டம் .. | 726 மற்றும் 193 தடுப்பு அணைகள். | 750 |
| 8. மஞ்சளாறு நீர்ப் பிடிப்புப் பகுதி மண்வளப் பாதுகாப்புத் திட்டம் | 240 | 850 |
| 9. மண்வளப் பாதுகாப்பு மற்றும் மூலக் கூறுகளின் வளர்ச்சிப் பற்றிய ஆய்வு .. .. .. | 2,000 | .. |

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

வேளாண்மைக்கு நீர் ஒரு முக்கிய இடு பொருளாகும். இந் நீரைச் சீரிய முறையில் பயன் படுத்தி மகசூலைப் பெருக்கவும், அனைத்து விவசாயிகளும் தங்கள் தேவைக்கேற்ப பங்கிட்டுக் கொள்ளவும் பாசனப் பகுதிகளில் நீர் பராமரிப்பு திட்டம் அமுல் செய்யப்படுகிறது.

இதனை மேம்படுத்தும் வகையில், குறித்த காலத்தில், குறித்த அளவில், தேவையான நீரை, தேவையான இடத்தில் பயிர்களுக்கு அளிப்பதற்காக, நீர் பராமரிப்புத் திட்டங்கள் இத் துறையினால் 1967-ஆம் ஆண்டு முதல் காவேரி பாசனப் பகுதியிலும், 1969 ஆம் ஆண்டு முதல் சாத்தனூர் பாசனப் பகுதியிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் முக்கியத் துவத்தை உணர்ந்து தற்போது காவேரி, சாத்தனூர் பகுதிகள் மட்டுமல்லாமல், பெரியார்-வைகை, கீழ்பவானி, ஆகிய பாசனப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

வேளாண்மை பொறியியல் துறை, இத்திட்டத்தின் கீழ் தனித் தனியாக வயல்களுக்கு வாய்க்கால்கள் அமைத்தல், நீர் அளந்து பிரித்தனுப்பும் கட்டுமானங்களையும், மற்ற சுழற்று நீர் பாசனம் முதலானவைகளை செயல்படுத்தி, நீர் பாசனப் பராமரிப்புப் பணிகள் நல்ல முறையில் செயலாக்கம் செய்து வருகின்றது. இதனால், தேவையான அளவு நீர் அனைத்து விவசாயிகளுக்கும் தேவையான நேரத்தில் கிடைப்பதோடு, தேவையில்லாத நீரை வெளியேற்றவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதினால், விவசாயிகளிடையே இத்திட்டம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது.

1984–85 ஆம் நிதியாண்டில் செய்த சாதனை மற்றும் 1985–86 ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | பரப்பு எக்டேரில் | |
|---|---|---|
| | 1984–85. | திட்ட குறியீடு 1985–86 |
| (1) | (2) | (3) |
| 1. காவேரி பாசனப் பகுதி .. | 19,340 | 18,000 |
| 2. பெரியார்-வைகை பாசனப் பகுதி | 16,633 | 13,000 |
| 3. கீழ்பவானி பாசனப் பகுதி .. | 5,444 | 5,000 |



| | பரப்பு எக்டேரில். | |
|---|---|---|
| | 1984–85. | திட்டக்குறியீடு 1985–86. |
| (1) | (2) | (3) |
| 4. சாத்தனூர் பாசனப் பகுதி .. | 1,306 | 2,000 |
| 5. சுழற்று நீர்ப்பாசன முறை அமல் படுத்துதல் காவேரி பாசனப்பகுதி | 1,053 | 1,000 |
| 6. பெரியார்-வைகை பாசனப் பகுதி | 1,004 | 1,000 |
| 7. கீழ்பவானி பாசனப் பகுதி .. | 1,057 | 1,000 |

இத்துடன் 1985–86 ஆம் ஆண்டு காலத்தில் ஐரோப்பிய
பொருளாதார குழு உதவியுடன் செங்கல்பட்டு, வட ஆற்காடு,
தென் ஆற்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்
டங்களில் குளத்து நீர் பாசன மேம்பாட்டு திட்டங்களையும்,
பரம்பிக்குளம்—ஆழியாறு பாசன பகுதியில் பாசனப் பகுதி
மேம்பாட்டுத் திட்டங்களையும் செயல் படுத்த உள்ளது.

சிறப்புத் திட்டங்கள்.

டிசம்பர் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான வெள்ளத்
தினால் தஞ்சாவூர், தென் ஆற்காடு, திருச்சி, புதுக்கோட்டை
ஆகிய மாவட்டங்களிலும், 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி-மார்ச்
மாதங்களில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்
களிலும் பாதிக்கப்பட்ட விளை நிலங்களை, புல்டோசர் இயந்திரம்
மூலம் ரூ. 24.82 இலட்சம் செலவில் சீர்திருத்தப்பட்டது.
இதன் பயனாக 1,600.02 எக்டேர் மீண்டும் விளை நிலங்களாக்
கப்பட்டது.

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்.

கிராமப்புறங்களில் ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை
ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக ஏற்படுத்தப்பட்ட பல திட்டங்
களில் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டமும் ஒன்
றாகும். வேளாண் பொறியியல் துறை, இத்திட்டத்தின் கீழ்
கசிவு நீர்க் குட்டைகளைக் கட்டியது. இதன் பயனாக மழைக்
காலங்களில் வீணாக ஓடும் மழை நீரினை தேக்கி அருகாமையி
லுள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர வழி செய்கிறது.
1984–85-ம் ஆண்டில் 926 கசிவு நீர்க் குட்டைகள் சுமார்
7.13 கோடி ரூபாயில் கட்டப்பட்டுள்ளன. மேலும் 1985–86-ம்
நிதி ஆண்டில் 1,000 நீர்க் கசிவு குட்டைகளும், 500 தடுப்பணை
களும், ரூபாய் 10 கோடி செலவில் கட்டப்படும்.

[1985 ஜூன் 3

**புதிய திட்டங்கள்:**

1985–86-ம் ஆண்டு காலத்தில் இத்துறை செயலாக்கவுள்ள
புதிய திட்டங்களாவன :—

1. சுழற்றுப் பாசனம் மற்றும் சொட்டு நீர் பாசன முறைகளை
வேளாண் குடி மக்களுக்கு பிரபலப்படுத்துதல். —

பாசன நீரை பயிர்களுக்குத் தேவையான அளவில் அளித்து,
நீர்ச் சேதாரத்தைக் குறைப்பதற்கான வழிமுறைகளை விவசாயி
களுக்கு எடுத்துக்கூறி நீர்பாசனத் திறனை அதிகரிக்கும் பொருட்டு
100 எக்டேர் முன்னோடிப் பண்ணைகள் (Pilot Project) அமைத்
தல் இத்திட்டத்தில் அடங்கும்.

2. இரண்டு புல்டோசர் இயந்திரங்களும் அதனை எடுத்துச்
செல்ல பார ஊர்தியும் வாங்குதல் :—

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில், பாசனத்
திறனை அதிகரிக்க நிலச் சமம் செய்யும் பணி தலையாய ஒன்றா
கும். அதனை செம்மையாகச் செயல் படுத்தும் பொருட்டு மேற்
குறிப்பிட்ட இயந்திரங்கள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றரிப்புத் தடுப்புத்
திட்டத்தில் பயிர் செய்யப்பட்ட மரங்களைப் பாதுகாத்து
வளர்த்தல் :—

காற்றரிப்பு தடுப்புத் திட்டத்தில் பயிர் செய்யப்பட்ட மரங்
களை குறைந்த பட்சம் ஐந்து ஆண்டு காலத்திற்கு பாதுகாப்பது
இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

4. திருச்சியிலுள்ள வேளாண் பொறியியல் துறை பயிற்சி
மையத்தை விரிவுபடுத்துதல் :—

மண்வளப் பாதுகாப்பு மற்றும் வேளாண் இயந்திரங்களை
பராமரித்தல், பயன்படுத்துதல் முதலியவற்றில் வேளாண் குடி
மக்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் வேளாண் பொறியியல்
துறையில் பணிபுரியும் சிப்பந்திகளுக்கு பயிற்சியளிப்பதற்கு ரூ.
4.67 இலட்சத்தில் திருச்சிராப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள
வேளாண் பொறியியல் துறை பயிற்சி மையத்தை விரிவுபடுத்துதல்
இத்திட்டத்தில் அடங்கும்.



1985 ஜூன் 3]

**எண்ணெய் வித்துக்கள் துறை :**

தமிழகத்தில் எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுக்கெனவும்,
எண்ணெய் வித்துக்கள் மற்றும் தென்னை அபிவிருத்தியில் சீரிய
முன்னேற்றம் கண்டிடவும் ஒரு தனித் துறை கடந்த ஐந்து ஆண்டு
களாக இயங்கி வருகின்றது. இத்துறையின் கடமை எண்ணெய்
வித்துக்களின் உற்பத்தியை பெருக்கிடவும், குறிப்பிட்ட பரப்பள
வில் உற்பத்தி திறன் மிகுதியாக அடைந்திடவும் எண்ணெய்
வித்துக்கள் மற்றும் எண்ணெய் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு
பெற்றிடவும் வழி செய்திட இத்துறை பணியாற்றுகிறது. குஜராத்
மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கு ஒப்பாக எண்ணெய் வித்துக்கள்
உற்பத்தியில் தமிழகம் தனித்தன்மை பெற்று விளங்குகிறது.
இந்திய துணைக்கண்டத்தில் மொத்த உற்பத்தியான 125 இலட்
சம் மெட்ரிக் டன்னில் எண்ணெய் வித்துகள் உற்பத்தியில்
தமிழகம் 14.69 இலட்சம் மெட்ரிக் டன்களை ஆண்டொன்றுக்கு
உற்பத்தி செய்யும் திறன் கொண்டுள்ளது.

**1984–85 ஆம் ஆண்டில் இத்துறையின் சாதனை :**

இம்மாநிலத்தில் எண்ணெய் வித்துக்கள் பெரும்பாலும் மானா
வாரி நிலங்களிலேயே பருவ மழையை எதிர் நோக்கி பயிரிடப்
படுகின்றது. ஆகவே, அவற்றில் உற்பத்தி காலத்தே பெறப்
படுகின்ற பருவ மழையின் அளவு மற்றும் பருவ மழையின்
தன்மை ஆகியவற்றிற்கு ஏற்பவே இருக்கும்.

1984–85 ஆம் ஆண்டு 'காரீப்' பருவத்தில் ஆரம்ப காலத்தில்
வறட்சி நிலை நிலவியது. இதன் காரணமாக எண்ணெய் வித்து
பயிர்கள் பாதிக்கப்பட்டன. இருப்பினும், 'காரீப்' பருவத்தின்
பின் பருவத்தில் அடையப்பெற்ற மிகுதியான மழையின் காரண
மாக இப்பயிர்கள் செழித்து வளர வாய்ப்பு ஏற்பட்டது. கடந்த
ஆண்டு பருவ நிலை சாதகமாக இல்லாமல் இருந்த போதிலும்
எண்ணெய் வித்துக்கள் சாகுபடியில் 1985ஆம் ஆண்டில் 15.37
இலட்சம் எக்டேர் பரப்பளவில் வணிக பயிரான எண்ணெய்
வித்துக்கள் பயிரிடப்பட்டது. எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி
இவ்வாண்டில் 14.60 இலட்சம் மெ. டன் என்னும் குறி
யீட்டினை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1985–86-ஆம் ஆண்டு தமிழகத்தில் எண்ணெய் வித்துக்களின்
உற்பத்தி குறியீடு 15.75 இலட்சம் மெ.டன்கள் என நிர்ண
யிக்கப்பட்டு அதனை எய்துவதற்காக கீழே அட்டவணையில்
குறிப்பிடப்பட்டுள்ளவாறு 1984-85-ன் சாதனைகளும், 1985-86
ஆம் ஆண்டுக்கான இலக்குகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பரப்பளவு (இலட்சம் எக்டேர்களில்). உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்களில்)

| எண்ணெய் வித்துக்கள். | 1984-85. | | | | 1985-86. | |
|---|---|---|---|---|---|---|
| | பரப்பு. | | உற்பத்தி | | பரப்பு. | உற்பத்தி. |
| | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. | இலக்கு. | எதிர் பார்க்கும் சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| நிலக்கடலை .. | 11.65 | 12.42 | 13.25 | 14.15 | 11.82 | 14.11 |
| எள் .. | 1.60 | 1.69 | 0.65 | 0.70 | 1.60 | 0.68 |
| சூரியகாந்தி .. | 1.25 | 1.07 | 0.62 | 0.59 | 1.28 | 0.67 |
| ஆமணக்கு .. | 0.17 | 0.19 | 0.08 | 0.08 | 0.19 | 0.09 |
| சோயா மொச்சை .. | .. | .. | .. | .. | 0.25 | 0.20 |
| மொத்தம் .. | 14.67 | 15.37 | 14.60 | 15.52 | 15.14 | 15.75 |



1985 ஜூன் 3]

தென்னை சாகுபடியை பொறுத்த வரையில் 1984-85ஆம் ஆண்டு இப்பயிர் தமிழகத்தில் 1.5 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டது. தென்னையில் உற்பத்தி இந்த ஆண்டு 158 கோடி நெற்றுக்களாகும். 1985-86ஆம் ஆண்டு இப்பயிர் புதிய நிலங்களில் பயிரிடப்பட்டு தமிழகத்தில் தென்னை சாகுபடி 1.62 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பெறுதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் தென்னை பயிர், இம் மாநிலத்தில் 164 கோடி தென்னை நெற்றுக்கள் மகசூல் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி பெருக்கத்திற்கான திட்டங்கள் மாநில மற்றும் மைய அரசால் அமுல் படுத்தப்படுகின்றது. இம் மாநிலத்தில் 12 மாநில திட்டங்களும் ஒரு மைய அரசு திட்டமும் செயலாக்கப்படுகின்றன. நிலக்கடலை மற்றும் சூரியகாந்தி பயிர்களின் மேம்பாட்டுக்கென மைய அரசு 1984-85ஆம் ஆண்டு நூறு சதவீத மான்யத்தில் தேசிய எண்ணேய் வித்துக்கள் அபிவிருத்தி திட்டம் என ஓர் திட்டத்தினை இம்மாநிலத்தில் செயல் படுத்தியது.

மேலே குறிப்பிட்ட அனைத்து திட்டங்களும் எண்ணெய் வித்துக்கள் பெருக்கத்தை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப் படுகின்றது. இதனை அடைவதற்கு முதற்கண் தேவை, தரமான வித்துக்கள் விநியோகம் ஆகும். இதைத் தவிர செயல் விளக்கப் பாத்தி அமைத்தல், மினிகிட் வழங்குதல், பூச்சி மற்றும் பூஞ்சாண நோய் தடுப்பு, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையின் மூலம் நிலக்கடலையை தாக்குகின்ற சிவப்பு கம்பளிப் பூச்சியைக் கட்டுப் படுத்துதல், இலை சுருள் பூச்சி, இலைப் புள்ளி நோய் மற்றும் துரு நோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல் ஆகிய அனைத்து முறைகளும் இத்துறையினரால் செயல்படுத்தப்படுகிறது. மைய அரசினால் செயல்படுத்தப்படுகின்ற தேசிய எண்ணெய் வித்துக்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வேளாண் பெருமக்களுக்கு தரமான வித்துக்கள், உற்பத்திக்கு இரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு, நீர்ப்பாசனம் மற்றும் திருந்திய உழவியல் கருவிகள் ஆகியவற்றினை மானிய விலையில் அளித்திட நிதியுதவி அளிக்கப் பட்டுள்ளது.

வேளாண் பெருமக்களுக்குத் தரமான வித்தினை அளித்திட இத்துறை ஒரு கரு வித்து பண்ணையையும், இரண்டு ஆதார வித்துப் பண்ணைகளையும், நான்கு மண்டல விதைப் பண்ணைகளையும் இயக்கி வருகின்றன.

1981-82ஆம்ஆண்டுவரை இத்துறை நிலக்கடலை சாகுபடியில் இரண்டு சதவீதம் பரப்பளவிற்கே வித்துக்கள் அளித்து வந்தது. இதனை மிகுதியாக்கி 1984-85ஆம் ஆண்டு இத்துறை சாகுபடி பரப்பளவில் 5 சதவீதத்திற்கு வித்துக்கள் அளித்திட ஏற்ற திட்டங்களைச் செயல்படுத்தியது. 1985-86ஆம் ஆண்டு இதே

பரப்பளவிற்கான விதைகள் அளித்திட தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய எண்ணெய் வித்துப் பயிர்களைப் பொறுத்தவரையில் இத்துறை சாகுபடி பரப்பில் 15 சதவீதத்திற்கு எள் பயிருக்கும், 50 சதவீதத்திற்கு சூரியகாந்தி பயிருக்கும், ஆமணக்கு பயிரைப் பொறுத்தவரையில் 30 சதவீதத்திற்கும் தேவையான வித்துக்களை அளித்திட திட்டங்கள் வகுத்துள்ளது.

1985-86 ஆம் ஆண்டு இத்துறையினரால் 11,650 மெ. டன் நிலக்கடலையும், 120 மெ. டன் எள்ளும், 750 மெ. டன் சூரியகாந்தியும், 31 மெ. டன் ஆமணக்கும் விநியோகித்திட திட்டமிடப்பட்டுள்ளது. சாகுபடி பரப்பளவில் ஒரு சதவீதப் பரப்பளவிற்குத் தேவையான நிலக்கடலை சான்றிதழ் பெற்ற வித்துக்களாக அளித்திட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது.

சோயா மொச்சை பயிரைப் பொறுத்த வரையில் 1983-84 ஆம் ஆண்டு முதன் முறையாக மினிகிட் வழங்கி, இம்மாநிலத்தில் வேளாண்மை பெருமக்களின் மத்தியில் இப்பயிர் பரவலாக பயிரிடப்பட்டது. இத்திட்டம் 1984-85 ஆம் ஆண்டும் நீடிக்கப் பட்டது. 1985-86 ஆம் ஆண்டு இத்துறை சோயா மொச்சை சாகுபடி பரப்பினை மிகுதியாக ஆக்குவதற்கும், இப்பயிரினை 25,000 எக்டேர் பரப்பளவில் பயிரிட தேவையான வித்துக்களை அளித்து, சீர்மிகு முறைகளை வேளாண் பெருமக்களுக்கு பரிந் துரைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

### தென்னை அபிவிருத்தித் திட்டங்கள்:

தமிழகத்தில் தென்னை சாகுபடி மேம்பாட்டுக்கென எண் ணெய் வித்துக்கள் துறை பல்வேறு சீரிய திட்டங்களைச் செயல் படுத்தி வருகின்றது. 1985-86 ஆம் ஆண்டு இம்மாநிலத்தில் தென்னை சாகுபடி (பழைய பரப்பினையும் உள்ளடக்கி) 1.62 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயிரிடப்படும். தென்னை நெற்றுக்களின் உற்பத்தி 164 கோடி நெற்றுக்களாக இருக்குமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்துறையினரால் செயலாற்றப்படு கின்ற திட்டங்களின் பயனாக தென்னை சாகுபடியில் மரம் ஒன் றுக்கு பெறப்படுகின்ற மகசூல் திறனை மிகுதியாக்குவதற்கு 16 ஆக்கபூர்வமான திட்டங்கள் செயலாற்றப்படுகின்றன. இத்திட்டங்கள் அனைத்தும் 1985-86 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். எண்ணெய் வித்துக்கள் துறையின் கட்டுப் பாட்டின்கீழ் நல்ல தரமான தென்னை நாற்றுக்கள் வேளாண்மை பெருமக்களுக்கு அளித்திட 23 சிறிய மற்றும் 5 பெரிய நெட்டை இரக நாற்றுப் பண்ணைகளும், 5 நெட்டை மற்றும் குட்டை வீரிய ஒட்டு ரக தென்னை நாற்றுப் பண்ணைகளும், 3 குட்டை மற்றும் நெட்டை இரக வீரிய ஒட்டு இரக தென்னை நாற்றுப் பண்ணைகளும்இயங்கி வருகின்றன. 1984-85 ஆம் ஆண்டு



இத்துறையினரால் 27.12 இலட்சம் தென்னை நாற்றுக்கள் இப்
பண்ணைகளின் மூலமாக உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்
பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டு இப்பண்ணைகளின் மூலமாக
20.75 இலட்சம் நெட்டை இரக நாற்றுக்களும், 5.25 இலட்சம்
நெட்டை மற்றும் குட்டை இரக வீரிய ஒட்டு தென்னை நாற்றுக்
களும், 40,000 குட்டை மற்றும் நெட்டை இரக வீரிய ஒட்டு
தென்னை நாற்றுக்களும் அரசு தென்னை நாற்றுப் பண்ணை
களின் மூலமாக உற்பத்தி செய்து வேளாண் பெருமக்களுக்கு
விநியோகித்திட குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தென்னை
யை தாக்கி பெருஞ் சேதத்தை விளைவித்துள்ள கருந்தலைப்
புழுவினை கட்டுப்படுத்துவதற்கு இத்துறையின் கீழ் 17 ஒட்
டுண்ணி மையங்கள் இயங்கி வருகின்றது. ஆண்டொன்றுக்கு
5,000 எக்டேர் பரப்பளவில் கருந்தலைப் புழுவை கட்டுப்படுத்தும்
நடவடிக்கை இத்துறையினரால் செயல்படுத்தப்படுகின்றது.
இதைத் தவிர, வாடல் நோய் தடுப்பு திட்டத்திற்கு மாநில
எல்லையோரங்களில் 5 சோதனை சாவடிகளும் நிறுவப்பட்டுள்
ளன. இதன் மூலமாக வாடல் நோயால் பீடிக்கப்பட்டுள்ள
தென்னை நாற்றுக்களை அண்டை மாநிலத்திலிருந்து தமிழ்
நாட்டுக்குள் கொண்டு வருவதைத் தடுக்க தகுந்த நடவடிக்கைகள்
எடுக்கப்படுகின்றன. மேலும், 1984-85 ஆம் ஆண்டு தமிழக
அரசு தஞ்சை வாடல் நோய் ஒழிப்பு திட்டத்தின்கீழ்
20,174 தென்னை மரங்களுக்கு மான்ய விலையில் மருந்து
அளித்து நோயினை கட்டுப்படுத்த தக்க நடவடிக்கை எடுத்
துள்ளது. இதே போன்று கேரள வாடல் நோய் தாக்கிய 3,890
தென்னை மரங்களை அகற்றிட வேளாண் பெருமக்களுக்கு
மான்யம் அளித்து நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை
எடுக்கப்பட்டது.

வரும் ஆண்டுகளில் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்ற நாற்றுப் பண்ணைகளுக்கு தரமான விதை நெற்றுக்கள் அளித்திட, தென்னாற்காடு மாவட்டத்தில் நெய் வேலி பண்ணையில் ஓர் தாய் மரத் தோட்டம் 100 ஏக்கர் பரப்பளவில் முன்னோடி திட்டமாக இவ்வாண்டில் இருந்து செயல்பட துவங்கியுள்ளது.

1985-86 ஆம் ஆண்டு, இத்துறையினரால் கீழே குறிப்பிடப் பட்டுள்ள புதிய திட்டங்களை எண்ணெய் வித்துக்கள் மற்றும் தென்னை அபிவிருத்திக்கென செயலாற்றப்படும்:

(1) எண்ணெய் வித்துக்கள் கரு வித்து உற்பத்திக்கான ஓர் பண்ணை அமைத்தல்.

(2) எண்ணெய் வித்துக்கள் பெருக்கத்திற்கென ஓர் ஆதார விதைப் பண்ணை அமைத்தல்

(3) சோயா மொச்சை தீவிர சாகுபடி திட்டம்.

(4) எள் அபிவிருத்தித் திட்டம்.

(5) ஆமணக்கு தீவிர சாகுபடித் திட்டம்.

(6) வெள்ளாள விடுதி ஆதார விதைப் பண்ணையில் தேவையான உபகரணங்கள் அளித்திடும் திட்டம்.

(7) நெல்லை மாவட்டத்தில் இயங்கி வருகின்ற குட்டை மற்றும் நெட்டை இரக வீரிய ஒட்டு தென்னை நாற்றுப் பண்ணைக்கு புதிய பரப்பளவு கையகப்படுத்தும் திட்டம்.

### தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்:

தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் கடந்த நான்கு ஆண்டுகளாக இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றது. இவ்விணையம் பல்வேறு சீரிய திட்டங்களை செயல்படுத்துகின்றது. இத்திட்டம், உற்பத்தி, கொள்முதல் மற்றும் விற்பனை ஆகிய அனைத்து செயல்களையும் நிலக்கடலைச் சாகுபடியாளர்களின் நலன் கருதி செயல்படுத்துகின்றது. இவ்விணையம் ஏழு ஆண்டுகளில் 370 உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களைச் செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட வட்டங்களில் செயல்படுத்தும். நிலக்கடலை உற்பத்தியாளர்களின் மகசூல் இவ்விணையத்தின் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு கையிருப்பு வைக்கப்பட்ட பின்னர், தர வாரியாக பிரிக்கப்பட்டு நல்ல விலைக்கு விற்பனை செய்யப்படும். அங்கத்தினர்களாக உள்ள உற்பத்தியாளர்கள், கூட்டுறவு சங்கங்களுக்குக் கிடைக்கின்ற நிகர இலாபத்தில் 50 விழுக்காடு அடைய தகுதியுடையவராவார். இத்திட்டம் ஏழு ஆண்டுகளில் ரூ. 16.01 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

உழவியல் மையம் ஒன்றும், எண்ணெய் வித்துக்கள் மையம் ஒன்றும் நெய்வேலி பண்ணையில் 122 எக்டேர் பரப்பளவில் நிறுவ திட்டமிடப்பட்டுச் செயல் படுத்தப்படும். இங்கு, சாகுபடியாளர்-உறுப்பினர்களுக்கு எண்ணெய் வித்துக்கள் வழங்கும் பொருட்டு, கரு வித்து மற்றும் தரமான விதைகள் உற்பத்தி செய்யப்படும். இதுவரையில் இவ்விணையத்தின் மூலமாக 15[illegible] கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களின் மூலமாக 23,340 மெ. டன் நிலக்கடலை 1985-86 ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்படும்.

தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் [illegible]டுறவு இணையத்திற்காக 'டான்பெட்' நிறுவனத்திலிருந்து திருவண்ணாமலை மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு எண்ணெய் உற்பத்தி நிலையங்களை பெறப்பட்டுள்ள[illegible]



சென்னையை அடுத்துள்ள கிண்டி தொழிற்பேட்டையில் இவ்விணையம் எண்ணெய் அடைப்பான்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை ரூபாய் 30 இலட்சம் முதலீட்டில் துவக்க தக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இவ்விணையத்தால் உற்பத்தி செய்யப்படும் சுத்திகரிக்கப்பட்ட மற்றும் 'எக்ஸ்பெல்லர்' இரக கடலை எண்ணெய் 1985-ம் ஆண்டு ஜூன் மாத வாக்கில் சென்னையில் விற்பனைக்கு வரும்.

### தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள்:

பல்வகைப்பட்ட தோட்டக்கலை பயிர்கள் வளர்ச்சிக்கான இயற்கை வளங்கள் தமிழகத்தில் மிகுந்து உள்ளன. மாநில அரசின் முக்கிய நோக்கமாக மலைச்சரிவுகள், சமவெளியான அனைத்து பகுதிகளிலும் தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி பரப்பினையும் உற்பத்தியினையும் அதிகரிக்கும் பொருட்டு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை 1979-ம் ஆண்டு துவக்கப்பட்டு செயல்படுகிறது. இத்துறையின் பல் வகைப்பட்ட பணிகள் கீழ்க்கண்ட இனங்களின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன :—

1. தரமான செடிகளின் உற்பத்தி மற்றும் விநியோகம்.

2. (அ) பழப் பயிர்கள், (ஆ) காய்கறிகள், (இ) வாசனைத் திரவிய மற்றும் மலைப்பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

3. மலைப் பயிர்கள், அலங்கார மற்றும் தோட்டங்களின் வளர்ச்சியினை ஊக்குவித்தல்.

4. மாவட்டங்களில் தோட்டக்கலை பயிர்களின் மேம்பாட்டை தீவிரப்படுத்துதல்.

5. மலைப் பகுதிகளில் தோட்டக்கலை மேம்பாட்டிற்கு பணிகள் மேற்கொள்ளல்.

6. நீலகிரி மாவட்டத்தில், பயிற்சி வழி தொடர்பு திட்டத்தின் மூலம் விரிவாக்கப் பணியினை தீவிரப்படுத்தல்.

7. மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம்.

8. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்.

9. செயல்முறை தோட்டக்கலை பயிற்சி அளித்தல்.

[1985 ஜூன் 3

1. தரமான செடிகளின் உற்பத்தி மற்றும் விநியோகம்.

நிலையான தோட்டக்கலை தொழிலமைப்பிற்கு, போதிய அளவிலான தரமான செடிகளின் உற்பத்தி இன்றியமையாததாகும். இந்நோக்கத்தினை எய்திட 53 தோட்டக்கலைப் பண்ணைகள் இயங்குகின்றன. 19 இலட்சம் பழச் செடிகள் 1984-85 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டன. இந்த அளவானது 1985-86 ஆம் ஆண்டில், 30 இலட்சத்துக்கு அதிகரிக்கப்படும்.

2. உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

(அ) பழப்பயிர்கள்.

2.1. வாழை :

நோய் தாக்காத, தரமான வாழைக் கன்றுகள் நவ்லாக், முதலைப்பட்டி மற்றும் சின்னகல்ராயன் மலை மையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன. மலை வாழை சாகுபடியானது முடிக்கொத்து நோயால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு புத்துயிர் அளிக்கும் நோக்குடன், இந்நோயால் தாக்கப்படாத மலைவாழைக் கன்றுகள் சின்னகல்ராயன் மலைப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. இம்மையங்களிலிருந்து 1984-85 ஆம் ஆண்டில் மூன்று இலட்சம் தரமான வாழைக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. இந்த அளவானது 1985-86 ஆம் ஆண்டில் 3.25 இலட்சமாக உயர்த்தப்படும். வாழையில் பெருமளவில் தென்படும் இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த (3,000 எக்டேரில்) பயிர்ப் பாதுகாப்பு பணியும், 6,000 எக்டேரில் நுண்ணூட்டச் சத்தினை அளிக்கும் பணியும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.2. " மா ":

'மா' பயிரின் பரப்பினை அதிகரிக்க, தரமான 'மா' ஒட்டுச் செடிகள் உழவர்களுக்கு அதிக அளவில் விநியோகிக்கப்படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டில், 2.16 இலட்சம் விநியோகிக்கப்பட்ட 'மா' ஒட்டுச் செடிகள், வரும் ஆண்டில் 2.25 இலட்சமாக அதிகரிக்கப்படும். தருமபுரி மாவட்டத்தில், அதிக அளவில் காணப்படும் தண்டு துளைப்பான் மற்றும் 'மா' தத்துப் பூச்சியினைக் கட்டுப்படுத்த பயிர்ப் பாதுகாப்புப் பணிகள், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின்கீழ் ஆண்டு தோறும் ஒவ்வொன்றிலும் 2,500 எக்டேரில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணியானது, 1985-86 ஆம் ஆண்டில் 3,000 எக்டேராக அதிகரிக்கப்படும்.



1985 ஜூன் 3]

2.3. எலுமிச்சை :

நச்சுரி நோயால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ள எலுமிச்சை சாகுபடியினை ஊக்குவித்திடவும், இப்பயிரின் பரப்பினை அதிகரித்திடவும் நச்சுரி நோய் தாக்காத ஈர்ப்புத் திறன் கொண்ட எலுமிச்சை செடிகள் ஒரு இலட்சம் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும்.

2.4. அன்னாசி :

அன்னாசி சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டு, 4.20 இலட்சம் கியூ ரக அன்னாசி கன்றுகள் பேச்சிப்பாறை மற்றும் கொல்லிமலையில் உள்ள நாற்றங்கால்களிலிருந்து ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த அளவு 1985-86 ஆம் ஆண்டில் 4.50 இலட்சமாக உயர்த்தப்பட்டு விநியோகிக்கப்படும்.

2.5. சீமை இலந்தை, சீதாப்பழம், மாதுளை மற்றும் இதர பழ வகைகள் :

நிரந்தர தோட்டக் கலைப் பயிர் சாகுபடியின் பலனை வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளிலும் பெறுவதற்கு வறட்சியினைத் தாங்கவல்ல சீமை இலந்தை, சீதாப்பழம், மாதுளை, விளாம்பழம், நெல்லி, உயர் இரக புளி போன்றவற்றின் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு உழவர்கட்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இப்பணியானது 1985-86 ஆம் ஆண்டில் மேலும் தீவிரப்படுத்தப்படும்.

(ஆ) காய்கறிகள்.

2.6. 1985-86 ஆம் ஆண்டில் குன்னூர் மற்றும் சின்னக்கல்ராயன் மலையில் உள்ள காய்கறி விதை உற்பத்தி மையங்களிலிருந்து ஆறு மெ. டன். விதைகள் உற்பத்தி செய்யப்படும். சமவெளிக்கான காய்கறி விதைகளின் உற்பத்தி தனியார் விதை உற்பத்தியாளர்களின் மூலமாக 75 மெ. டன். சான்றிதழ் விதைகள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும். மேலும், காய்கறி விதை உற்பத்தியானது பிற அரசு பண்ணைகளிலும் ஊடுபயிராக மேற்கொள்ளப்படும். இப்பல்வகை முயற்சிகள் உயர் இரக காய்கறிகளின் பரப்பினைக் கணிசமாக உயர்த்திட வழி வகுக்கும்.

2.7. காய்கறி மேம்பாடு திட்டத்தின் கீழ் 1984-85 ஆம் ஆண்டில் 75 மெ. டன். விதைகள், 10.00 இலட்சம் நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டன. 80 மெ. டன். காய்கறி விதைகள், 10.50 இலட்சம் நாற்றுக்கள், 15 மெ. டன். நுண்ணூட்டச் சத்துக்களின் விநியோகமும், நாறு செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தலும் 1985-86 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

2.8. நகர்ப்புறங்களில் இருந்துவரும் காய்கறிகளின் தட்டுப்பாட்டைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, நகர்ப்புற இல்லங்களில் வீட்டுக்காய்கறி தோட்டத்தினை அமைத்திட, நகர காய்கறி அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை நகரங்களில் இத் திட்டம் செயல்படுகிறது. 1985-86 ஆம் ஆண்டில் 5.50 மெ. டன். காய்கறி விதைகள் 4.00 இலட்சம் பழம் மற்றும் இதர முக்கிய செடிகள், 70 மெ. டன். கலப்பு உரங்கள், 2.50 மெ. டன். நுண்ணூட்டச் சத்து, பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளாக 21 மெ. டன். தூள் மருந்தும், மற்றும் 800 லிட்டர் திரவ மருந்துகளும், இந்நகரங்களில் விநியோகிக்கப்படும். இந்த இடுபொருள்கள் சிறிய மற்றும் தகுந்த அளவு பொட்டலங்களாக விநியோகிக்கப்படும்.

2.9. வரும் ஆண்டில் உற்பத்தியினைப் பெருமளவில் உயர்த்த முன்னோடி சாகுபடியாளர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கலப்பின காய்கறி விதைகளை 25 விழுக்காடு விலையில் விநியோகிக்கப்படும்.

2.10. மதுரை மற்றும் புறநகர் பகுதிகளில் அதிகரித்துவரும் காய்கறித் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு, பெரியார் வைகை நீர்ப் பிடிப்பு பகுதிகளிலும், மதுரை நகர் சுற்றுப்புறங்களிலும், பயிர் மாற்றுத் திட்ட அடிப்படையில் 1985-86 ஆம் ஆண்டில் 800 எக்டேர் கூடுதல் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்படும்.

(இ) வாசனைத் திரவியம் மற்றும் மலைப்பயிர்கள்.

2.11. மிளகு:

பேச்சிப்பாறை மற்றும் கூடலூரில் உள்ள மிளகு நாற்றங்கால்களிலிருந்து, 1984-85 ஆம் ஆண்டில் 4.70 இலட்சம் வீரிய ஒட்டு 'பன்னியூர்-1' மிளகு மற்றும் இதர இரக மிளகுச் செடிகள் விநியோகிக்கப்பட்டன. இந்த உற்பத்தி அளவானது வரும் ஆண்டில் 4.85 இலட்சமாக அதிகரிக்கப்படும்.

2.12. மஞ்சள் :

உலக அங்காடியில் மஞ்சள் ஏற்றுமதி நல்லதோரு இடத்தைப் பெற்றிட, விஞ்ஞான அடிப்படையில் மஞ்சளை பதப்படுத்தும் முறையின் செயல் விளக்கம், கோவை, பெரியார் மற்றும் சேலம் மாவட்டங்களில் மஞ்சள் சாகுபடியாளர்களுக்கு, 1983-84 ஆம் ஆண்டில் 44 இடங்களில் நடத்தப்பட்டது. இது வரும் ஆண்டிலும் தொடரப்படும். இதற்கான நிதி உதவியை கொச்சியிலுள்ள வாசனைத் திரவிய ஏற்றுமதி ஊக்குவிக்கும் மன்றம் அளிக்கிறது.



2.13. முந்திரி :

தமிழ்நாட்டிலுள்ள முந்திரி சராசரி உற்பத்தித் திறன் குறைவாக உள்ளது. இதனை அதிகரிக்கும் நோக்குடன், பட்டை ஒட்டுக் கட்டும் பணியானது 200 எக்டேரில் ஆண்டு தோறும் மேற்கொள்ளப்படுகிறது. மூன்று முந்திரி வம்சா வழிப் பண்ணைகள், 120 எக்டேரில், செயல் விளக்க மையங்களாகவும், பட்டை ஒட்டு கட்டுதலுக்குத் தேவையான, அதிக மகசூல் தரவல்ல பட்டைகளை அளிக்கும் நோக்குடன் பராமரிக்கப்படுகின்றன. 1983-84 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 650 செயல் விளக்கத் திடல்கள் 1985-86 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து பராமரிக்கப்படும். தேயிலைக் கொசு தாக்குதலிலிருந்து முந்திரிப் பயிரைப் பாதுகாக்கும் நோக்குடன், ஆண்டு தோறும் 6,000 எக்டேரில் பயிர்ப் பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்படுகின்றது. இப்பணியானது 1985-86 ஆம் ஆண்டில் 10,000 எக்டேராக அதிகரிக்கப்படும்.

2.14. காப்பி :

கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் காப்பி பயிரின் வளர்ச்சிக்கு உள்ள வாய்ப்பினை அறிய சேலம் மாவட்ட சின்னகல்ராயன் மலைப் பகுதியில் 100 எக்டேர் பரப்பில் ஒரு மாதிரி காப்பித் தோட்டம் அமைக்கப்பட்டு வருகிறது.

2.15. வெற்றிலை :

வெற்றிலைப் பயிரில் 'வாடல் நோய்' மிகுந்த சேதத்தை விளைவித்து வருகின்றது. இந்நோயைக் கட்டுப்படுத்த பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், மானிய விலையில் கோவை, சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் விநியோகிக்கப்படுகின்றன.

2.16. மலைப் பயிர்களின் சாகுபடியினை விரிவாக்கிட ஏதுவான பகுதிகளைத் தெரிவு செய்யும் பணி 600 எக்டேரில் மேற்கொள்ளப்படுவதுடன், செடிகளும் இதர இடுபொருட்களும் மானிய விலையில் விநியோகிக்கப்படும். இத் திட்டத்திற்கென ரூபாய் 12.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மலைப்பயிர்கள் வளர்ச்சியும் அலங்கார தோட்டங்கள் அமைக்கும் பணியும்.

வணிக மலர்களான மல்லிகை, கனகாம்பரம், சாமந்தி ரோசா, நிலச்சம்பங்கி போன்றவற்றின் சாகுபடியினை அதிகரிக்கும் நோக்குடன், இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுவதுடன், 50 செயல் விளக்கங்களும் அமைக்கப் பெறுகின்றன. 1985-86 ஆம் ஆண்டில், (10) பத்து நகரங்களில் தோட்டக் கண்காட்சி நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

4. மாவட்டங்களில் தோட்டக்கலை பயிர்களின் தீவிர மேம்பாட்டுத் திட்டம்.

பயிறுமாற்றுத் திட்டம் மற்றும் தரிசு நிலங்களை சாகுபடியின் கீழ் கொண்டு வரும் அடிப்படையில் பல்வேறுபட்ட தோட்டக்கலை பயிர்களின் சாகுபடியினை அதிகரித்திட ஏதுவாக இத்திட்டம் வட ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயலாக்கப்படுகிறது. வருடாந்திர மற்றும் நீண்டகாலப் பயிர்கள் சாகுபடியின் கீழ் 1985–86 ஆம் ஆண்டில் 12,000 எக்டேர் பரப்பளவில் நிலம் கொண்டு வரப்படும்.

5. மலைப்பகுதிகளில் தோட்டக்கலை மேம்பாட்டுப் பணிகள்.

கோவை, பெரியார், சேலம், தருமபுரி, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளில் வருடாந்திர மற்றும் நீண்டகால தோட்டக்கலை பயிர்களின் சாகுபடியினை பயிர் மாற்ற அடிப்படையில் புகுத்திட ஏதுவாக இடுபொருட்கள் மானிய விலையில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. 1985–86 ஆம் ஆண்டில் 3,500 எக்டேரில் இச்சாகுபடியினை புகுத்திட ஏதுவாக இடு பொருட்கள் வழங்கப்படும்.

5.2 நீலகிரி மாவட்டத்தில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வகைப்பட்ட பணிகள், நீர்பிடிப்பு பகுதி மேம்பாட்டு அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டு செயலாக்கப்படுகின்றன. 1984–85 ஆம் ஆண்டில், மண் வளப்பாதுகாப்பு பணிகள் 1,200 எக்டேரில் மேற்கொள்ளப்பட்டன ; 40 இலட்சம் தேயிலைப் புதியன்கள் விநியோகிக்கப்பட்டன ; 9,000 எக்டேரில் தேயிலையில் பயிர் பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. 250 மெ. டன் தரமான உருளைக் கிழங்கு விதை விநியோகிக்கப்பட்டது. மற்றும் 50 புலம் பதனப்படுத்தும் நிருபணங்கள் மேற்கொள்ளப்பட்டது. இவ்வனைத்துப் பணிகளும், 1985–86 ஆம் ஆண்டில் மேலும் தீவிரப்படுத்தப்படும்.

6. நீலகிரி மாவட்டத்தில் பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்.

நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை விரிவாக்கப்பணியமைப்பு, பயிற்சி வழித் தொடர்பு திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட்டு, உழவர்கட்கு அதிக பயனளிக்கும் வகையில் விரிவாக்கப் பணி மேற்கொள்ளப்படுகிறது.



7. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.

கீழ் பழனி மலைப்பகுதிகளில் கமலா ஆரஞ்சு அபிவிருத்தி பணியானது, முடிக்கொத்து நோயால் அழிவுற்ற மலைவாழைப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றது. ஆண்டுதோறும் 30,000 கமலா ஆரஞ்சு நாற்றுக்கள் விநியோகிக்கப்படுகின்றன. மித வெப்பமண்டல பழங்கள் மற்றும் வாசனைத் திரவியப் பயிர்ச் செடிகள், உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள், திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 800 எக்டேர் பரப்பளவில் இப்பயிர்கள் விரிவாக்கப்படுவதுடன், இதே அளவுக்கு மற்ற இடுபொருட்களும் வழங்கப்படுகின்றன. தரமான செடிகளை உற்பத்தி செய்யவும், மலைப் பகுதியில் நிலத்தை செவ்வனே பயன்படுத்தவும், சிறுமலையில் 200 எக்டேரில் மாபெரும் பழப்பண்ணை நிறுவப்பட்டுள்ளது. மதுரை மாவட்ட மலை அடிவாரப் பகுதிகளிலும், அர்ஜுனா நதி நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம் 1984–85 ஆம் ஆண்டில் புதியதாக அனுமதிக்கப்பட்டு 1985–86 ஆம் ஆண்டில் 450 எக்டேரில் பல்வகைப்பட்ட தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியினை புகுத்தி திட்டமிடப்பட்டுள்ளது.

8. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்.

ஐந்து மாவட்டங்களில் 15 ஆதிவாசிகள் பகுதிகளில் 3,000 ஆதிவாசிகள் குடும்பங்களுக்குப் பயனுறும் வகையில் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. விதைகள், செடிகள், உரங்கள், பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் போன்ற அனைத்து இடுபொருட்களும் 50 விழுக்காடு விலையில் ஆதிவாசிகளுக்கு ஒவ்வொன்றிலும் 1,200 எக்டேர் பரப்பளவு அடைய விநியோகம் செய்யப்படுகிறது. இது நீங்கலாக செயல்விளக்க பாத்திகள் அமைக்கப்படுவதுடன், உழவியல் குறித்த பயிற்சிகளும் ஆதிவாசிகளுக்கு அளிக்கப்படுகின்றன. 1985–86 ஆம் ஆண்டில் இப்பணிகள் தொடர்ந்து நீடிக்கப்படும்.

8.2. சின்னகல்ராயன் மலையில் 400 எக்டேரில் நிறுவப்பட்டுள்ள மாபெரும் பழப்பண்ணை செயல்விளக்கப் பண்ணையாகத் திகழ்வதுடன் இம்மலை வாழ் ஆதிவாசி மக்களுக்கு ஆண்டு முழுமையும் வேலை வாய்ப்பினையும் நல்குகின்றது.

8.3. திருச்சிராப்பள்ளி மாவட்டம், பச்சைமலையில் ஒரு தோட்டக்கலைப் பண்ணையும், வடாற்காடு மாவட்டம், ஜமுனாமரத்தூர் [illegible] ஒரு மாபெரும் பழப்பண்ணையும் 1985–86 ஆம் ஆண்டில் நிறுவப்படும்.

9. செயல்முறை தோட்டக் கலையில் பயிற்சி அளித்தல். [1985 ஜுன் 3

குடுமியான்மலையில் உள்ள மத்திய தோட்டக்கலை பயிற்சி நிலையத்தில், தோட்டக்கலைத் துறையில் பணியாற்றும் களப் பணியாளர்கட்குத் தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. தோட்டக் கலையில் செயல்முறை பயிற்சி அளிக்கும் நோக்குடன் இரண்டாண்டு பட்டயப் பயிற்சியும் ஓராண்டு மற்றும் ஆறு மாத கால சான்றிதழ் பயிற்சிகளும் ஒவ்வொன்றிலும் இருபது மாணவர்கட்கு; சென்னை தரமணி தோட்டக்கலை பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகின்றன. தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சியினை மேலும் மேம்படுத்த, பின்வரும் திட்டங்கள் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (நாபார்டு) உதவியுடன் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

1. தர்மபுரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த 'மா' அபிவிருத்தித் திட்டம்.

2. தென் ஆற்காடு மாவட்டத்தில் முந்திரி மேம்பாடுத்திட்டம்.

3. திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 'பருவமல்லா காலத்து மா பயிர்' மேம்பாடு.

4. திருநெல்வேலி மாவட்டத்தில் எலுமிச்சை வகைப் பயிர் அபிவிருத்தி.

மேலும் 1985–86 ஆம் ஆண்டில் பின்காணும் புதிய இரண்டு புதிய திட்டப் பணிகள் குறிப்பாக செயலாக்கப்படும்.

1. தோட்டக்கலை பண்ணைகளுக்குச் சொட்டு நீர்ப் பாசன வசதி அளித்தல்.

2. தோட்டக்கலை பண்ணைகளுக்குக் கூடுதல் பண்ணைத் தேவைகளை அளித்தல்.

3. குடுமியான்மலை மத்திய தோட்டக்கலை பயிற்சி நிலையத்திற்குக் கட்டிட வசதி அளித்தல்.

4. பெரியார்—வைகை நீர் பிடிப்பு பகுதிகள் மற்றும் மதுரை நகர் சுற்றுப் புறங்களில் காய்கறி மேம்பாடுத் திட்டம்.

5. மானிய விலையில் வீரிய ஒட்டு காய்கறி விதைகளின் விநியோகம்.

விதைச் சான்றளிப்புத் துறை.

விதைச் சான்றுத் துறை உரிய காலத்தில் விதைகளை சான்றளிப்பது மற்றும் 1966 ஆம் ஆண்டு விதைச் சட்டத்தை செயல்படுத்தும் பணியைச் செய்கின்றது.



1985 ஜுன் 3]

முன்னேற்றமும் சாதனைகளும்.

1983–84 மற்றும் 1984–85 ஆம் ஆண்டுகளில் விதைச் சான்றளிப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பரப்பளவு மற்றும் சான்றளிப்பு செய்யப்பட்ட விதைகளின் அளவு வருமாறு:

| ஆண்டு. | பதிவு செய்யப்பட்ட பரப்பளவு (ஏக்கரில்.) | சான்றளிப்பு செய்யப்பட்ட விதைகளின் அளவு (மெட்ரிக் டன்னில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1983–84 .. .. | 37,552 | 12,526 |
| 1984–85 .. .. | 49,500 (எதிர்பார்க்கப் படும் அளவு). | 14,600 (எதிர்பார்க்கப் படும் அளவு). |

சான்று விதைகளுக்கு விவசாயிகளிடையே நல்ல வரவேற்புள்ளதால், பரப்பு, சான்றிதழ் மற்றும் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.

2. குறிப்பாக வீரிய ஒட்டு ரகப் பருத்தி உற்பத்தி 1980–81 ஆம் ஆண்டு 140 ஏக்கரில் மட்டும் நடைபெற்று வந்தது.

1983–84-ல் 667 ஏக்கரும், 1984–85-ல் 2,755 ஏக்கர் பரப்பும் பதிவு செய்யப்பட்டு உற்பத்தியில் உள்ளது. வீரிய ஒட்டுப் பருத்தி உற்பத்தியினால் கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் குறிப்பாக அவிநாசி, அன்னூர், சத்தியமங்கலம் மற்றும் கோபிச் செட்டிப்பாளையம் தாலுக்காக்களில் ஆண் மற்றும் பெண் விவசாய வேலையாட்களுக்கு புதிய வேலை வாய்ப்பளித்து வருகிறது. வீரிய ஒட்டுப் பருத்தி 700 மெட்ரிக் டன் அளவு உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகத்தின் தேவை போக மீதமுள்ள விதைகள் ஆந்திரா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் சான்று விதைகளின் தரம் மேம்பட்டுள்ளதால் நமது மாநில விதைகளுக்கு வெளி மாநிலங்களில் அதிக அளவு தேவையேற்பட்டு வருகிறது. இதுபோன்று நமது மாநில சான்று பெற்ற "கோ.எஸ்.எச். 5", ஒட்டு வீரிய சோள விதைகளுக்கும் மற்ற மாநிலங்களில் நல்ல வரவேற்புள்ளது.

3. விதைச் சான்றுத் துறையின் இதரப் பணிகளான மறு ஆய்வு, மறு சான்றளிப்பு மற்றும் சுத்திகரிப்பு பணிகளின் மூலம் இத்துறைக்கு வருவாய் அதிகரித்து வருகிறது. 1984–85-ல் இத்துறை, 285 விதை சுத்திகரிப்பு நிலையங்களை ஆய்வு செய்து அங்கீகரித்துள்ளது.

4. விதை உற்பத்தியைக் குறித்து விதை மைய அலுவலர்களுக்கும், விவசாயிகளுக்கும், அவர்கள் நடைமுறையில் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் பல பயிற்சித் திட்டங்களை விதை மைய அலுவலகங்களில் செயலாக்கி வருகிறது. சான்று அலுவலர்கட்கும் உற்பத்தியாளர்க்கு உதவவல்ல தீர நிர்ணய ஆய்வு முறைகளை அறிவிக்கும் பிரசுரங்கள், கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

5. அகில இந்திய வானொலி நிலையம் கோவை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் சென்னை நிலையங்களில் விதைச் சான்றின் அவசியமும், நன்மைகளும், உற்பத்தி நுணுக்கங்களும் எளிதில் விளங்கும் வண்ணம் ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

### 1985–86ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்.

1985–86 ஆம் ஆண்டிற்கு 51,850 ஏக்கர் பரப்பு, சான்றளிப்பின் கீழ் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. பயிர் வளர்ச்சி சோதனை செய்து இனத் தூய்மை அறிய உதவியாக இருக்கும்,பொருட்டு ரூபாய் 5 இலட்சம் செலவில் ஒரு கண்ணாடி ஆய்வுக்கூடம் கட்டும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இத்துறையின்கீழ் 180 பயிர் ரகங்கள் சான்றளிப்பிற்கு பதிவு செய்து சான்றளிக்கப்பட்டுள்ளது. பயிர் ரகங்களை தெரிந்து வயலின் தரத்தை அறிவதற்கு பயிற்சி மிகவும் தேவையாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு வேளாண்மை அலுவலர்களுக்கு, விதை சான்றளிப்புப் பணியில் போதிய அறிவும் தொழில் நுட்பத் திறனும் கிடைப்பதற்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

### விதை ஆய்வு.

அறிவிக்கப்பட்ட ரகங்கள், வேளாண்மைத்துறை, எண்ணெய் வித்துத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விற்பனைக்கு வருகிறது. இவ்வாறு விற்பனைக்கு வரும் விதைகள் தரமானதாக இருப்பதை கண்காணிக்க விதைச் சட்டம், 1966 வழி வகுக்கின்றது. இவை விவசாயிகளுக்கு தேர்ந்த தரமான விதைகள் வழங்கும் பணியை செவ்வனே செயலாற்றி வருகிறது. 1980–81 ஆம் ஆண்டு 776 விதை மாதிரிகள் ஆய்வு செய்து முடிவுகளின்படி அறிவுரை வழங்கப்பட்டது. 1983–84 ஆம் ஆண்டு, 8,066 விற்பனைக் கூடங்களை சோதனை செய்து 5,141



மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்து முடிவுகளின்படி அறிவுரை வழங்கப்பட்டது. மிகவும் தரம் குறைந்த விதைகளை விற்ற விற்பனையாளர்கள் மீது நடவடிக்கைகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது. இதன் நோக்கம், போலி விதைகளை, விற்பனையாளர்கள் விவசாயிகட்கு வழங்கிடுவதைத் தடுப்பதேயாகும்.

1984–85 ஆம் ஆண்டில் 5,000 விதை விற்பனை நிலையங்களைப் பார்வையிட குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 7,790 நிலையங்களைப் பார்வையிட்டது. 4,950 விதை மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்யப்பட்டது.

இத்திட்டத்தில் 1985–86 ஆம் ஆண்டில், 5,400 விதை விற்பனை நிலையங்களைப் பார்வையிடவும், 5,400 விதை மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்யவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு குடுமியான் மலையில் உள்ள ஒரு விதை சோதனை நிலையம், அறிவிக்கப்பட்ட மூன்று விதைப் பரிசோதனை நிலையங்களில், விதைத் தரத்தை, ஆய்வு செய்யும்.

### வேளாண்மை விற்பனைத் துறை.

வேளாண்மை விற்பனைத் துறை கீழ்க்கண்ட திட்டப் பணிகளை செயல் படுத்துகிறது :—

1. விற்பனைக் குழுக்கள் மூலமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அமைத்தலும் நிர்வகித்தலும்.
2. "அக்மார்க்" தரக்கட்டுப்பாடு.
3. பருத்தி தரம் பிரித்தல்.
4. வணிகமுறை தரம்பிரித்தல்.
5. பயிற்சி.
6. பருத்தி சான்றுரையும் சட்ட அமுலும்.

1. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

வேளாண் பெருமக்களின் விளை பொருட்களுக்கு நல்ல விலை பெற்றுத் தரும் நோக்கத்துடன் தமிழகத்தில் 13 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் இதுவரை 264 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டைக் காட்டிலும், மேலும் 7 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இந்த ஆண்டு நிறுவப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 3

பெரியார் மாவட்டத்திற்காக தனியாக ஒரு விற்பனைக் குழுவை அமைப்பது அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

நல்ல வாய்ப்புகள் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் வளர்ச்சிக்காக 102.44 கோடி ரூபாய் நிதி உதவி கோரும் திட்டத்தை சென்ற ஆண்டு மத்திய அரசிற்கு சமர்ப்பித்ததை தற்பொழுது உலக வங்கியினர் பரிசீலித்து வருகின்றனர்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு 1984–85 ஆம் ஆண்டில் வந்த வேளாண்மை விளை பொருள் வரத்தும் விற்பனைக் குழுக்களின் வருமானமும் கீழ் வருமாறு :—

வரத்துக்கள்—5,18,680 மெட்ரிக் டன்.
வருமானம்—ரூபாய் 4.50 கோடி.

எல்லா விற்பனைக் கூடங்களுக்கும் நிலம் வாங்கி தேவையான அடிப்படை வசதிகளையும் படிப்படியாக செய்திட மூன்று ஆண்டுக்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பெரிய நகரங்களில் காய்கனிக்காக தனியாக விற்பனைக் கூடங்களை மத்திய மானியத்துடன் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி விற்பனைக் கூடங்களில், குளிர் பதன சேமிப்புக்கூடங்களும், சுகாதாரமான விற்பனை அங்காடிகளும் இருக்கும். இட வசதிகள் இருக்கும். 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பணியாளர்களுக்காக குடியிருப்புகள் படிப்படியாகக் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய ஊரக கிடங்குகள் கட்டும் திட்டத்தின் கீழ் இதுவரை 89 ஊரக கிட்டங்கிகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், 15 ஊரகக் கிட்டங்கிகள் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

இந்த ஊரக கிட்டங்கிகளில், அறுவடையானதும் விளைபொருள்களின் விலை குறையும் பொழுது, சிறு நில விவசாயிகள் தங்களது விளை பொருட்களை இவற்றில் சேமித்து, பண உதவி பெற்று, பின்னர் நல்ல விலை கிடைக்கும் சமயம் விளை பொருள்களை விற்று பயன் பெறலாம்.

## 2. '' அக்மார்க் '' தரம் பிரிப்பு :

தமிழகத்தில் 36 '' அக்மார்க் '' ஆய்வுக்கூடங்கள் செயல்படுகிறது. மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் சமையல் எண்ணெய் வகைகள், நெல், தேன், மஞ்சள் தூள், மிளகாய் தூள், மசாலாப் பொடிகள் மேற்கூறிய ஆய்வுக்கூடங்களில் பரிசோதனை செய்யப்பட்டு தரமானவற்றிற்கு மட்டும் '' அக்மார்க் '' முத்திரையிட்டு விநியோகிக்கப்படுகின்றன. அரிசி, பருப்பு வகைகள், மஞ்சள், வெல்லம், பழம், முட்டை, பாக்கு ஆகிய பொருட்



1985 ஜூன் 3]

களும் '' அக்மார்க் '' முறையில் தரம் பிரிக்கப்படுகிறது. 1984–85 ஆம் ஆண்டில் மட்டும் 4,85,503 குவிண்டால் உணவுப் பொருட்கள் இம்முறையில் தரம்பிரிக்கப்பட்டது. 1985–86 ஆம் ஆண்டில் மேலும் ஒரு '' அக்மார்க் '' ஆய்வுக்கூடத்தை ரூ. 2.04 இலட்சம் செலவில் நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'' அக்மார்க் '' ஆய்வுக்கூடங்களுக்காக இதுவரை 10 இடங்களில், சொந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டு, காங்கேயத்தில் '' அக்மார்க் '' ஆய்வுக்கூடம் கட்டிடம் கட்ட அரசு ஆணை வழங்கியுள்ளது. அடுத்த ஆண்டில் மேலும் ஒரு ''அக்மார்க்'' ஆய்வுக்கூடம் ரூ. 3.50 இலட்சம் செலவில் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 3. பருத்தி தரம் பிரித்தல் :

பதினோரு பருத்தி தரம்பிரிப்பு மையங்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்படுகின்றன. இந்த மையங்களில் விற்பனைக் கூடங்களுக்கு விற்பனைக்கு வரும் பருத்தி தரம் பிரிக்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் தங்கள் பருத்தியின் தரத்திற்கேற்ப நல்ல விலையைப் பெற முடிகிறது. 1984–85 ஆம் ஆண்டு 4.61 இலட்சம் குவிண்டால் பருத்தி தரம்பிரிக்கப்பட்டது.

## 4. வணிகமுறைத் தரம் பிரித்தல் :

102 வணிகமுறை தரம்பிரிப்பு மையங்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டு செயல்படுகின்றன. விவசாயிகளின் விளைப் பொருட்கள், இங்கே தரம் பிரிக்கப்படுவதனால் விளைபொருட்களின் தரத்திற்கேற்ப விலைகளை விவசாயிகள் பெறுகின்றனர். சென்ற ஆண்டு 35.97 இலட்சம் குவிண்டால் விவசாய விளை பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டன.

## 5. பயிற்சி :

விற்பனைத் துறை இயக்ககத்தில் செயல்படும் பயிற்சி மையம், இத்துறையின் உதவி வேளாண் அலுவலர்கள், மற்றும் விற்பனை குழுக்களின் மேற்பார்வையாளர்களுக்கு '' அக்மார்க் '' வணிக முறைத் தரம்பிரிப்பில் உள்ள தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சியை 3 மாதங்களில் அளிக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் 60 பேர்களுக்கு பயிற்சி அளிக்கிறது.

6. பருத்தி சான்றுரையும் சட்ட அமுலும் :

பருத்தி விதைகளின் தூய தன்மையைக் காப்பாற்றுவதும், பருத்தி அரைவை, மற்றும் பஞ்சு அழுத்தும் தொழிற் கூடங்களில் பருத்தி மற்றும் பஞ்சில் கலப்படம் செய்வதைத் தடுக்கவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. இதனால் தமிழகத்திற்கு தேவையான பருத்தியின் அளவையும் பிற மாநிலங்களிலிருந்து தருவிக்கப்படும் பருத்தி, பஞ்சு அளவினையும் அறிய முடிகிறது. இதற்காக இவ்வியக்ககம் சில சட்டங்களையும் விதிகளையும் இம்மாநிலத்தில் செயல்படுத்துகிறது.

கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டம்.

தமிழ்நாட்டில் வளர்ச்சி அடைந்துவரும் தொழில்களில் மிக முக்கியமானதும், வேகமாக வளர்ச்சி அடைவதும் சர்க்கரைத் தொழில் ஒன்றுதான். தமிழ்நாட்டில் 23 சர்க்கரை ஆலைகள் பல பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. கரும்பை ஆலைக்கு விரைவாக எடுத்துச் செல்ல கரும்புச்சாலை அபிவிருத்தி திட்டம் என்ற திட்டத்தினை ஏற்படுத்தி ஏற்கனவே சரியில்லாத சாலைகளை புதுப்பிக்கவும், புதிய சாலைகள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு ஆகும் செலவினை முழுவதும் சர்க்கரை ஆலைகளிலிருந்து வசூலிக்கப்படும் ''செஸ்'' நிதியிலிருந்தே செலவழிக்கப்படுகிறது.

இத்திட்டம் நிறைவேற தமிழ்நாடு அரசு மூன்று கோட்ட பொறியாளர்களையும் ஒருவட்ட பொறியாளரையும் அவர்களுக்கு உதவியாக பல அலுவலர்களையும் நியமித்துள்ளது. மேற்கூறிய அலுவலர்கள் சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் பணியாற்றுகிறார்கள்.

கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புதிய சாலைகளை அமைத்தும், சரளைக் கற்கள் பரப்பியும், தற்போது இருக்கும் சாலைகளை மேம்படுத்தியும், தார்போட்டும், பாலங்கள் சிறுபாலங்கள், கழிவுநீர் வாய்க்கால்கள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவைகள் மழைக்காலங்களிலும் கரும்பினை ஆலைகளுக்குத் தடங்கலின்றி கொண்டுவர உதவுகின்றன.

கரும்புச்சாலை அபிவிருத்தி திட்டத்திற்கு தேவையான நிதி அந்தந்த ஆலைகளில் ''லோக்கல் ஏரியாவினுள்'' கொண்டு வரப்படும் கரும்பின்மீது டன் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் ''செஸ்'' வசூலிக்கப்பட்டு சேகரிக்கப்படுகிறது. 1985–86-ம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.





1980–81 ஆம் ஆண்டிலிருந்து 1984–85 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் செலவான தொகையின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | செலவிடப்பட்ட தொகை. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சங்களில்.) |
| 1. 1980–81 .. .. .. .. | 160.41 |
| 2. 1981–82 .. .. .. .. | 230.24 |
| 3. 1982–83 .. .. .. .. | 250.67 |
| 4. 1983–84 .. .. .. .. | 253.35 |
| 5. 1984–85 .. .. .. .. | 225.09 |

நகர்ப்புற கலவை எருத்திட்டம்:

தமிழ்நாட்டிலுள்ள 98 நகராட்சிகளிலும் , எட்டு நகரியங்களிலும், கலவை எரு உற்பத்தித்திட்டம் செயல்படுகின்றது. இதற்கான தொழில்நுட்ப உதவியை வேளாண்மைத் துறை அளிக்கிறது. உற்பத்தி செய்யப்படும் கலவை எரு உழவர்களுக்கு அவர்களது நிலங்களில் பயன்படுத்துவதற்காக வழங்கப்படுகிறது. 1985–86ம் ஆண்டில் 3,30,800 மெட்ரிக் டன் கலவை எரு தயாரிப்பதற்கான குறியீட்டளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்கள் தரமான கலவை எருவை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கும் பொருட்டும் கலவை எரு விற்பனையை அதிகரிக்கும் பொருட்டும் போட்டிகள் நடத்தி சுழற்கேடயங்களும் ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது.

கழிவு நீர்ப்பயன் திட்டம்:

23 நகராட்சிகள் தற்போது கழிவுநீர் பண்ணையை பராமரித்து வருகின்றன. இப்பண்ணைகளில் பசும்புல் மற்றும் பயன்தரும் பயிர்கள் வளர்க்கப்படுகின்றன. தற்போது இத்திட்டத்தின்கீழ் பயன்படுத்தப்பட்டுவரும் 265 ஏக்கர் பரப்பளவு, 1985–86-ம் ஆண்டில் 365 ஏக்கர் பரப்பளவுக்கு விரிவுபடுத்தப்படும்.

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம்:

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் மத்திய அரசு தொடங்கிய சிறப்புத் திட்டமாகும், பல அபிவிருத்தி பணிகள் மூலம் நீண்ட காலமாக வறட்சித் தாக்குதலுக்குட்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதும் வறட்சித் தாக்குதலினால் இப்பகுதிகளில் ஏற்படும் கடுமையை ஓரளவு குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டச் செலவினை மத்திய அரசும், மாநில

அரசும், 50 : 50 விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் 16 வட்டாரங்களிலும், தர்மபுரி மாவட்டத்தில் 10 வட்டாரங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 4 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

2. 1984–85 ஆம் ஆண்டிற்கு ரூ. 441.13 இலட்சம் அளவில் பல தரப்பட்ட பணிகளை இராமநாதபுரம், தர்மபுரி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. விடுபட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 143.68 இலட்சம், இம்மூன்று மாவட்ட முகமைகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3. இந்திய அரசு, தற்போது இம்மாநிலத்தில் இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், தர்மபுரி, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 மாவட்டங்களில் 43 வட்டாரங்களில் இத்திட்டத்தினை இந்த நடப்பாண்டு முதல் செயலாற்றுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்படி திட்டத்திற்கு இந்திய அரசு ரூ. 516.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம்:

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம், 1966-ம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள்;—

(1) வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு போன்றவற்றை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்.

(2) உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.

இந்நிறுவனத்தில் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 400 இலட்சம் ஆகும். அதில் 360 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு அதற்குரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு ரூ. 195 இலட்சமும் இந்திய அரசு ரூ. 165 இலட்சமும் செலுத்தியுள்ளன.

1. உர விற்பனை :

பல்வேறு வகையான உரங்களை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு, இக்கழகம் ஐந்து குறிப்பிட்ட நிறுவனங்கள் தயாரிக்கும் பல்வேறு வகையான உரங்களை விநியோகம் செய்யும் உரிமையைப் பெற்றுள்ளது. இக்கழகம் 1984–85-ம் ஆண்டில் அவ்வாண்டு குறியீடான 60,000 மெ. டன் உரங்களுக்கு எதிராக 53,806 மெ.டன் அளவுள்ள உரங்களை விற்பனை செய்துள்ளது. 1985–86-ம் ஆண்டு 1,00,000 மெ. டன் அளவுள்ள உரங்களையும் விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.





2. டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை:

இக்கழகம் விவசாயிகளுக்குத் தேவையான நல்ல உதிரி பாகங்
களையும் டயர் மற்றும் டியூப்புகளையும் மின் கலங்களையும்
தேவையான நேரத்தில், நியாயமான விலையில் சீராக தனது
விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகம் செய்து வருகின்றது.
தற்சமயம் இக்கழகம் மொத்தம் 15 விற்பனை நிலையங்களைக்
கொண்டுள்ளது. அதில் 14 விற்பனை நிலையங்கள் நமது மாநிலத்
திலும் ஒரு விற்பனை நிலையம் பாண்டிச்சேரியிலும் உள்ளது.

1984–85-ம் ஆண்டில் ரூபாய் 411.96 இலட்சத்திற்கு விற்
பனை செய்துள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் ரூபாய் 518.81
இலட்சத்திற்கு விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

இக்கழகம் 1984–85 ஆம் ஆண்டில் 73 டிராக்டர்களையும்,
471 பவர் டில்லர்களையும் விற்பனை செய்துள்ளது. 1985–86
ஆம் ஆண்டில் விற்பனைக் குறியீடாக 140 டிராக்டர்களும், 450
பவர் டில்லர்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3. பூச்சிக்கொல்லி மருந்து தயாரிப்புத் திட்டம்:

1972 ஆம் ஆண்டு இக்கழகம் பிரசித்தி பெற்ற ''பி.எச்.சி. 10
சதவிகிதம்'' போன்ற பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரிக்க
ஆரம்பித்தது. தொடக்கத்தில் இக்கழகம் பூச்சிக்கொல்லி மருந்து
களைத் தனியார் நிறுவனங்களின் உதவியால் தயாரித்து வந்தது.
இப்பொழுது இக்கழகம் தனது சொந்தத்தில் ரூ. 9.79 இலட்சம்
முதலீட்டில் அம்பத்தூரில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி
யுள்ளது. இந்த தொழிற்சாலை தனது வர்த்தக ரீதியிலான
உற்பத்தியை 1976-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல்
ஆரம்பித்தது. பெருகி வரும் பூச்சிக்கொல்லி மருந்துகளின்
தேவையை ஈடுகட்ட, ரூ. 4 இலட்சம் செலவில் தேவையான
வசதிகளுடன் தனது இரண்டாவது ஆலையை ஏற்படுத்தியுள்ளது.
இந்திய தர நிர்ணய கழகத்தின் தரத்திற்கேற்ப உயர்ந்த
பூச்சிக்கொல்லி மருந்துகள் இக்கழகத்தால் உற்பத்தி செய்யப்
பட்டு, பொதுமக்களுக்கு இக்கழகத்தின் கிளை நிலையங்கள் மூலம்
வேளாண்மைத்துறை கிடங்குகள் மூலமும் விநியோகிக்கப்
படுகின்றன.

ரூ. 51.83 இலட்சம் மதிப்புள்ள 3,848
1984–85-ல் அளவுள்ள தூள் மருந்துகளும், ரூ. 18.38
மெ. டன். மதிப்புள்ள 40,930 லிட்டர் திரவ மருந்துகளும்
இலட்சம் செய்யப்பட்டன. 1985–86 ஆம் ஆண்டில்
விற்பனை ரூ. 75.90 இலட்சம் மதிப்புள்ள 5,510 மெ. டன் அளவுள்ள தூள்
ரூ. 75.90 இலட்சம் மதிப்புள்ள 1,00,000
மருந்துகளையும் ரூ. 52.00 இலட்சம் மதிப்புள்ள 1,00,000
லிட்டர் திரவ மருந்துகளையும் உற்பத்தி செய்து விற்பனை
செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

4· மீன்பிடி வலைத் தயாரிப்புத் திட்டம் :

நைலான் நூலினாலும், பாலி எத்திலின் நூலினாலும் ஆண் டிற்கு 60 மெ.டன் அளவு மீன் பிடி வலைகளைப் பின்னுவதற்காக கிண்டியில் ஒரு ஆலையை இக்கழகம் அமைத்துள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் 24,850 மெ. டன். எடையுள்ள மீன்பிடி வலைகள் விற்பனை செய்யப்பட்டன. 1985–86-ல் 45 மெ. டன் எடையுள்ள மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

5. இலைப்புரத மாவுத் திட்டம், உடுமலைப்பேட்டை :

சிறு விவசாயிகள் தங்களது உற்பத்திக்கேற்ப விலையைப் பெறவேண்டி, கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் தேவையான முக்கிய உணவாகிய இலைப்புரத மாவை, லூசரின் என்ற புல் வகையைப் பக்குவப்படுத்துதல் மூலம் தயாரிக்கும் தொழில் கத்தை முன்னோடியாக உடுமலைப்பேட்டையில் இக்கழகம் அமைத்துள்ளது.

இக்கழகம், 1984–85 ஆம் ஆண்டில் 286 மெ. டன். அளவுள்ள இலைப்புரத மாவை உற்பத்தி செய்துள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் 425 மெ. டன் அளவு இலைப்புரத மாவு உற்பத்தி செய்து விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

6. எண்ணெய் பிழிந்தெடுக்கும் திட்டம், போச்சம்பள்ளி:

ரூ. 56 இலட்சம் மதிப்புள்ள, போச்சம்பள்ளியில் அமைக்கப் பட்ட சூரியகாந்தி விதைகளிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக் கும் தொழிற்சாலை 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியை துவக்கியது. இவ்வாலை யின் திறனை முழுவதும் பயன்படுத்த, ஆண்டொன்றிற்கு, உரிமம் பெற்ற 12,000 மெ. டன் அளவிற்குக் கடலை எண்ணெய் வித்துக் களிலிருந்து எண்ணெய் பிழிய இந்திய அரசின் அனுமதி பெறப் பட்டது.

கர்நாடகம் மற்றும் மஹாராஷ்டிரா மாநிலத்திலிருந்து 4,162 மெ. டன்னும், தமிழ் நாட்டிலிருந்து 2,400 மெ. டன்னும் 1984–85-ம் ஆண்டில் மொத்தம் 6,562 மெ. டன் சூரியகாந்தி விதைகள் கொள்முதல் செய்யப்பட்டன.

1984–85 ஆம் ஆண்டில் 3,402 மெ. டன் அளவு சூரிய காந்தி விதைகளும் 820 மெ. டன் அளவு கடலை கொட்டை களும் இத்தொழிற்சாலையில் பிழியப்பட்டன. 1985–86-ம் ஆண்டில் 6,000 மெ. டன் சூரியகாந்தி விதைகளையும், 2,000 மெ. டன் நிலக்கடலையும் பிழிந்தெடுக்க திட்டமிடப்பட் டுள்ளது.



இக்கழகத்தின் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெயான 'சனோலா' மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. அண்டை மாநிலங்களான கர்நாடகத்திலும், கேரளத்திலும் மற்றும் ஆந்திரப்பிரதேசத்திலும் ''சனோலா'' கிடைக்க வழி செய்யப் பட்டுள்ளது.

7. கரைத்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை, நாமக்கல் :

இக்கழகம் செக்கு பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுப் பதற்கும் மற்றும் அதன் சம்பந்தப்பட்ட பொருட்களைத் தயா ரித்து விற்பனை செய்வதற்குமான நாமக்கல்லில் அமைக்கப் பட்ட கூட்டுறவு இணையகத்திடமிருந்து எண்ணெய் கரைத் தெடுக்கும் தொழிற்கூடம் ஒன்றை 1977 ஜூன் திங்களில் மேற் கொண்டது. இத்தொழிற் கூடம் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கி யது. இத்தொழிற்சாலையின் மூலதனம் ரூ. 21 இலட்சமாகும். இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 15 மெ. டன் அளவுள்ள அரிசி தவிட்டிலிருந்து அல்லது 20 மெ. டன் அளவுள்ள பிண்ணாக் கிலிருந்து எண்ணெய் கரைத்தெடுக்கும் திறன் கொண்டுள்ளது.

1984–85 ஆம் ஆண்டில் 602 மெ. டன் அரிசி தவிட்டிலிருந்து எண்ணெய், கூலி அடிப்படையில் பிழிந்தெடுக்கப்பட்டது. அதே காலத்தில் 313 மெ. டன் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கப்பட்டது.

1985–86 ஆம் ஆண்டில், 4,500 மெ. டன் அரிசித் தவிட்டை பிழிந்தெடுப்பதன் மூலம் ரூ. 90.68 இலட்சம் மதிப்புள்ள 743 மெ.டன் அரிசித் தவிட்டு எண்ணெயையும் 3,735 மெ. டன் அளவு எண்ணெய் பிழிந்தெடுக்கப்பட்ட அரிசித் தவிட்டையும் விற்க திட்டமிடப்பட்டுள்ளது.

8. கரைத்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை, பொனக்குளம்:

காதி மற்றும் கிராமப்புற தொழில்கள் வாரியத்தினரால் பட்டுக்கோட்டையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருந்த எண் ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்கூடத்தை இக்கழகம் ஏற்று புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பொனக்குளம் என்ற இடத் திற்கு இதனை மாற்றியுள்ளது. இவ்வாலை நாளொன்றிற்கு 60 மெ. டன் எண்ணெய் பிண்ணாக்கிலிருந்து அல்லது 30 மெ. டன் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் திறன் கொண் டது. இவ்வாலையின் திறனை நாளொன்றிற்கு 100 மெ. டன் எண்ணெய் பிண்ணாக்கிலிருந்து அல்லது 60 மெ. டன் அரிசி தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் அளவிற்கு உயர்த்தலாம்.

இவ்வாலை விரைவில் உற்பத்தியை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டில் 7,500 மெ. டன் அளவுள்ள அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் பிரித் தெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

9. பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கான மூலப் பொருட்கள் தயாரித்தல்:

மெஸர்ஸ் இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்துடன் ஆந்திர பிரதேசம், கர்நாடகம் மற்றும் மஹாராஷ்டிரா மாநிலங்களில் வேளாண் தொழில்கள் கழகங் களுடன் கூட்டுத் தயாரிப்பில் இக்கழகம் ஒரு தொழில் முயற்சியை மேற்கொண்டுள்ளது. ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள கோவூர் என்னும் இடத்தில் உற்பத்தி பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் மிகவும் பிரசித்தி பெற்ற 'பி.எச்.சி. 50 சத விகிதம், நீரில் கரையும் தூள் மற்றும் 'பி.எச்.சி. 10 சத விகிதம்' தூள் போன்ற பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரிக்க ஆரம்பித் துள்ளது. இக்கழகம் ரூ. 39.76 இலட்சத்தை இந்நிறுவனத்திற்கு தனது பங்கு மூலதனமாக கொடுத்துள்ளது.

10. 'கேஜ்வீல்' தயாரிப்பு :

பவர் டில்லர்களுடன் விற்பனை செய்யும் 'கேஜ் வீலுக்கு' வாங்குவோரிடமிருந்து சிறந்த முறையில் எதிர்பார்ப்பு உள்ளது. 'கேஜ் வீல்'கள் திருச்சி, காஞ்சிபுரம் ஆகிய இரு மையங்களில் தயார் செய்யப்படுகின்றன. இந்த கேஜ் வீலைமிட்சுபிசி' மற்றும் 'குபோடா' பவர் டில்லர் தயாரிப்பாளர்களுக்கு மூல உப கரண மாக விற்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 'கேஜ் வீல்' மேற்கூறிய இரு பவர் டில்லர் தயாரிப்பாளர்களின் பரிசோதனை யில் உள்ளது. இதன் முடிவு விரைவில் தெரியவரும்.

தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் 1972 ஆம் ஆண்டு 220 வட்டார அளவி லான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையங்களும் 12 மாவட்ட அளவிலமைந்த கூட்டுறவு வேளாண் மைப் பணிச் சங்கங்களும் இணைந்த மாநில அளவிலான கூட்டுறவு சங்கமாக அமைக்கப்பட்டது.

இணையத்தின் முக்கிய நோக்கம் விவசாயிகளுக்கு கிராமப் பகுதிகளில் வேளாண்மைப் பொறியியல் சம்பந்தப்பட்ட வேளாண் மை பணி மையங்களை திறுவுவதும் மற்றும் வேளாண்மைக் கருவிகளையும் இயந்திரங்களையும் வாடகைக்கு அளிப்பது மற்றும் அது சம்பந்தப்பட்ட கருவிகளையும் இடுபொருளையும் விற்பதுமாகும்.



இணையகத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் நூறு இலட்சங்களாகும். மற்றும் 31-3-1985-ன் நிலவரப்படி செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 21.63 இலட்சங்களாகும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் மற்றும் அதனைச் சார்ந்த மையங்களின் தற்போதைய நடவடிக் கைகள்.

1. ஒருங்கிணைப்புத் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் டீசல் இயந்திரங்களையும் மற்றும் மின்சார மோட்டார் பம்பு செட்டுகளையும் துவக்க நிலை நிலவள வங்கியில் கடன் பெற்றுள்ள விவசாயிகளுக்கு நியாய மான விலையில் கொடுக்கப்படுகிறது. 1984–85 ஆம் ஆண்டில் 1.203 டீசல் இயந்திர பம்பு செட்களும் 29 மினசாரப் பம்பு செட்டுகளும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

வணிக நடவடிக்கைகள் :

இடு பொருட்களை விவசாயிகளுக்கு நேரடியாகவும் மற்றும் அதனைச் சார்ந்த சங்கங்கள் மூலமாகவும் தொடர்ந்து வழங்கி வருகிறது. மார்ச் 1985 வரையுள்ள காலத்தில் ரூபாய் 58.87 இலட்சம் மதிப்புள்ள இடுபொருள்களையும் கருவிகளையும் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. 1984–85-ல் இதனைச் சார்ந்த சங்கங்களின் மூலம் ரூபாய் 252 இலட்சம் மதிப்புள்ள விவசாய இடு பொருள்கள் வழங்கப்பட் டிருக்கின்றன.

மாபெரும் விவசாய உற்பத்தித் திட்டம் :

இத்திட்டம் தமிழக அரசினால் கொண்டு வரப்பட்டு ஊரக வளர்ச்சி இயக்குனரால் வேளாண்மை உற்பத்தியை பெருக்கும் வண்ணம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு இவ்விணையம் 813 டீசல் இயந்திரங்களையும் 29 மின்சார மோட்டார்களையும் 1984–85-ஆம் ஆண்டில் வழங்கியிருக் கிறது.

வாடகைப் பணி மற்றும் பழுது பார்க்கும் பணிகள் :

இவ்விணையத்தைச் சார்ந்த பிரிவுகள் 233 இயந்திர கலப்பை களையும், 183 இழுவை இயந்திரங்களையும் 167 எண்ணெய் இயந்திரங்களையும், 310 விசைத் தெளிப்பான்களையும் மற்றும் 24 பாறை பிளக்கும் கருவிகளையும் கொண்டுள்ளன. அதன் மூலம் அவை விவசாயிகளுக்கு உதவி புரிந்து வருகின்றன. இத்

இயந்திர கலப்பை மற்றும் இழுவை இயந்திரங்களின் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும்பணி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இவ்வாறு வாடகைப் பணி மற்றும் பழுது பார்க்கும் பணிகள் மூலம் 1984–85 ஆம் ஆண்டில் இப்பிரிவுகள் 39.62 இலட்சம் ரூபாய் வருமானம் அடைந்துள்ளது.

இவ்விணையம் அதனுடைய வருமானத்தை மேலும் பெருக்கிக் கொள்வதற்காக 6 சாலை உருளைகளை வாங்கியுள்ளது. இச்சாலை உருளைகள் மூலம் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் கிராமங்களை தொடர்பு படுத்தும் வகையில் சாலைகள் அமைப்பதற்காக வாடகைக்கு வழங்கி வருகிறது. இச்சாலை உருளைகளின் மூலம் இவ்விணையம் 31—3—1985 முடிய ரூ. 2,28,712 வருமானம் அடைந்துள்ளது.

தானிய சேமிப்பு உலோக குதிர்கள் :

இந்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ள தானிய பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்தும் வண்ணம் தானிய சேமிப்பு உலோக குதிர்களை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. இத் திட்டத்திற்காக இவ்விணையத்திற்கு இது வரை ரூ. 57 இலட்சம் சுழல் நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விணையம் இதனைச் சார்ந்த மாவட்ட கூட்டுறவு வேளாண்மை சங்கங்களின் மூலமும் வட்டார அளவிலான மையங்கள் மூலமும் 1–4–1984 முதல் 31–3–1985 முடிய 784 உலோக குதிர்களை தயாரித்து வழங்கி உள்ளது.

மத்திய அரசின் ஆதரவுடன் தொடங்கப்பட்ட திட்டங்கள் :

வேளாண்மை உற்பத்தியை பெருக்குவதற்காக விவசாயிகளுக்கு கால்நடைகளால் இழுக்கப்படும் வேளாண்மைக் கருவிகளையும் கையினால் இயக்கப்படும் கருவிகளையும் வாடகைக்கு விடுவதற்காகவும், மேற்படி கருவிகளைப் பற்றி விவசாயிகள் அதிகம் தெரிந்து கொள்வதற்காகவும், மக்கள் மத்தியில் செயல் விளக்கம் அளிக்கப்படுவதற்காகவும், இக்கருவிகளை விவசாயிகள் வாங்கி பயன்படுத்துவதற்காகவும் மானியம் வழங்கும் வகையில் மத்திய அரசு ஒரு திட்டத்தை வகுத்து செயல்படுத்துவதற்காக இவ்விணையகத்தின் பொறுப்பில் கொடுத்துள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு ரூ. 82.58 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்விணையம் மேற்கூறப்பட்ட கருவிகளையும் கையினால் இயக்கப்படும் கருவிகளையும் மக்கள் மத்தியில் செயல் விளக்கம் அளிக்கப்படுவதற்காக உற்பத்தியை ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆறு மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 36 வட்டாரங்களில் ஒரு வட்டாரத்திற்கு இரண்டு வீதம் 72 விவசாய வேளாண்மை பணி மையங்களை இவ்விணையம் நிறுவியுள்ளது.



எதிர்காலப் பணிகள்

மாவட்ட வேளாண்மை பணி மையங்களின் மூலம் பல கட்டங்களில் வேளாண்மை சிறப்பங்காடிகளை தமிழ்நாட்டில், நிறுவுவதற்கு இவ்விணையம் திட்டமிட்டுள்ளது. சிறிய மற்றும் ஏழை விவசாயிகளுக்கு வேளாண்மை இயந்திரங்கள். கருவிகள், சேமிப்பு உலோக குதிர்கள், பயிர் பாதுகாப்பு கருவிகள் மற்றும் வேளாண்மை இடுபொருள்களை மானியம் விலையில் ஒரே இடத்தில் வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

I. கல்வி.

1984–85 ஆம் ஆண்டில் சாதனைகள் :

1. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கிள்ளிகுளத்தில் வேளாண் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இது இப் பல்கலைக் கழகத்தின் மூன்றாவது வேளாண் கல்லூரியாகும்.

2. இவ்வாண்டில் கீழே காணும் புதிய முதுநிலைக் கல்விப் பட்டப் படிப்புக்கள் தொடங்கப்பட்டன :—

(அ) எம்.எஸ்.சி. (விவ.) பண்ணைத் திட்ட நிர்வாகம் (வேளாண் கல்லூரி, கோயம்புத்தூர்.)

(ஆ) எம்.ஈ. (விவ.) பின் அறுவடைத் தொழில் நுட்பம் (வேளாண் பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர்).

(இ) எம். வி. எஸ்.சி. (பால் பண்ணை நுண்ணுயிரியல்) (சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை):

3. முதறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளை செம்மைப் படுத்தும் வகையில், மண் மற்றும் பயிர் நிர்வாக ஆய்வு மையம் ஒன்றும், பயிர்ப் பாதுகாப்பு ஆய்வு மையம் ஒன்றும் 1984–85 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

4. ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக சிறந்த ஆசிரியர் சிறந்த விஞ்ஞானி மெடல்கள் ஆண்டு தோறும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1985-86 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள் :

1. சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல்லில் மற்றொரு கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்குதல்.

2. கிள்ளிகுளம் வேளாண் கல்லூரியின் அடிப்படை வசதிகள், மற்றும் கல்வி மற்றும் ஆராய்ச்சி சம்பந்தமாக வேலைகள் மேம் படுத்தப்படும்.

3. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பால் பண்ணை தொழில் நுட்பம், பால் பண்ணை வேதியல் மற்றும் கால்நடை விரிவினைத்துறை ஆகியவற்றில் மூதறிவியல் பட்டப் படிப்பு தொடங்கப்பட உள்ளது.

4. கோயம்புத்தூர் வேளாண் கல்லூரியில் நிர்வாக அறிவிய லில் முதுநிலைக் கல்வி ஏற்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

5. பண்ணைத் தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ள படித்த இளம் விவசாயிகள் பலன் அடையும்படியாக தொலைக் கல்வித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. இத்திட்டத்தின்மூலம் இவ்விவசாயிகள் பி. விவ. தொழில் நுட்பம் (B.Agri.Tech.) பெற வாய்ப்பு ஏற்படும்.

6. பள்ளியில் தோல்வியுற்று வெளிவரும் இளைஞர்கள் சுய வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் பயிர்ப் பாது காப்பில் பட்டயக் கல்வி வகுப்பு ஒன்று தொடங்கப்பட உள்ளது.

ஆராய்ச்சி.

1984–85 ஆம் ஆண்டில் சாதனைகள்.

1. வெளியிடப்பட்ட புதிய இரக்ங்கள் :

இவ்வாண்டு கீழ்க் காணும் புதிய உயர் விளைச்சல் பயிர் இரகங்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டன :—

1. டி.பி.எஸ். 1 நெல்.
2. பி.எம்.கே. 1 நெல்.
3. கோ. 25 சோளம்.
4. கோ. 12 ராகி (கேழ்வரகு).
5. கோ. 1 மக்காச் சோளம்.
6. கோ. 10 பருத்தி.
7. பையூர் 1 பாசிப்பயறு.
8. வி.ஆர்.ஐ. முந்திரி.
9. ஓய். சி. டி. 1 மாதுளை.
10. கோ. 5 பப்பாளி.
11. எம்.டி.யு. 1 புடல்.
12. ஓய். சிடி. 1 ரோஜா.
13. கோ. 1 சாமந்தி.
14. எம். டி. யு. 1 சாமந்தி.
15. கோ. 1 வெந்தயம்.
16. சி.ஓ.சி. 85061 கரும்பு.



1. வேளாண் தொழில் நுட்பச் சாதனைகள் :

கீழே கொடுக்கப்பட்டுள்ள புதிய இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வேளாண் பொறியியல் துறையில் கண்டு பிடிக்கப்பட் டுள்ளன :—

டிராக்டரால் இயக்கப்படும் சால் போடும் கருவி.

டிராக்டரால் இயக்கப்படும் சால்போடும்போதே விதைக் கும் கருவி.

தானியங்கி நெல் அறுவடை இயந்திரம்.

நெல் நடுவதற்கான நடவு உபகரணம்.

அரை டன் கொள்ளளவு கொண்ட குறைந்த விலை சேமிப்புக் கலன்.

சமூக சாண எரிவாயு சாதனம்.

2. பாசன நீர் தொழில் நுட்ப மையம் :

பாசனநீர் தொழில் நுட்ப மையத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளில் சில முக்கிய கண்டுபிடிப்புகள் பின் வருமாறு :—

(அ) சோளம் மற்றும் மக்காச்சோளத்திற்கு எக்டேருக்கு 334 மி.மீ. பாசன நீர் பாய்ச்சுவதன் மூலம், அவற்றில் தானிய மகசூல் அதிகரிக்கின்றது.

(ஆ) சோள வயலில் வைக்கோல் மற்றும் பாலீதின் காகி தத்தைப் பரப்பி வைப்பதன் மூலம் சோளத்தின் நீர்த் தேவை களைக் குறைக்க முடியும்.

(இ) நெல்லுக்குப்பின் சாகுபடி செய்யப்படும் பருத்திக்கு சால் முறையில் நீர் பாயச்சுதல் மிகச் சிறந்ததாகும்.

(ஈ) கரும்பில் சாலின் அகலத்தைப் சிறிது சிறிதாக அதி கரிப்பதன் மூலம் கரும்பின் பாசன நீர்த் தேவையைக் குறைக்க இயலும்.

3. கால் நடை மருத்துவம் :

கால்நாட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்களின் செயல் பாடுகளைத் தீவிரப்படுத்துவதற்காக பிராணிகள் நல நெறியகம் ஒன்று திருச்சியில் 1984–85 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

12. பயிர்பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் ஒன்று நிர்மாணிக்கும் திட்டம்—கோயம்புத்தூர்.

13. மண் மற்றும் பயிர் நிர்வாக ஆராய்ச்சி மையம் நிர்மாணிக்கும் திட்டம்—கோயம்புத்தூர்.

14. வேளாண் விரிவினை நெறியகத்தில் பயிற்சிப் பிரிவை வகைப் படுத்தும் திட்டம்.

**கால்நடை மருத்துவம் :**

1. மண்டல செம்மறி ஆடு ஆய்வு மற்றும் மேம்பாட்டு மையம் —அருப்புக்கோட்டை.

2. சென்னை மருத்துவக்கல்லூரியில் கதிரியக்கப் பிரிவுத் துறையை வலுப்படுத்துதல்.

3. கால்நடை பராமரிப்பு புள்ளியியல் துறையை வலுப்படுத்துதல்—கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.

4. 'ஹிஸ்டாலஜி' மற்றும் 'ஹிஸ்டோ கெமிஸ்டரி' பிரிவு ஏற்படுத்துதல்—சென்னை.

5. கால்நடை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைத்தல்— தஞ்சாவூர்.

6. 'புரோடா ஜூவாலஜி' மற்றும் 'ஹெல்மிந்தாலஜி' ஆராய்ச்சி—சென்னை.

7. கால்நடை நல நெறியகம் அமைத்தல்—திருச்சி.

1985–86 இல் தொடங்கப்பட உள்ள புதிய திட்டங்கள்.

**வேளாண்மை :**

1. மதுரை, கிள்ளிகுளம், குன்னூர், ஆழியார்நகர், திருவண்ணாமலை, திருச்செங்கோடு மற்றும் காட்டுப்பாக்கம் நிலையங்களில் விதை உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்.

2. நெல்லில் ஒட்டு வீரியத்தன்மையை வணிக முறையில் பயன்படுத்திக் கொள்ளுதல் (மதுரை, ஆடுதுறை மற்றும் திரூர்).

3. கதிர் ஆராய்ச்சியை வலுப்படுத்தும் திட்டம்.

4. நெல் 'பிளாஸ்ட்' நோய்க்கு ஒருங்கிணைந்த பாதுகாப்புத் திட்டம், கோவை.

5. உயிரியல் முறையில் பயிர்ப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் (கோவை).





**கால்நடை மருத்துவம் :**

1. இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்குதல்;

2. கால்நடை மருத்துவக்கல்லூரியில் உள்ள தகவல் தொடர்பு மையத்தை வலுப்படுத்தும் திட்டம், சென்னை.

3. இரப்பை வினையியல் ஆய்வுத் திட்டம், சென்னை.

4. குளிர்ப்பதனம் செய்யப்பட்ட விந்துகளின் மூலம் ஏற்படும் கர்ப்பத்தின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் ஆய்வு, சென்னை.

**மீன் வளம் :**

1. சத்துணவு வேதியல் மற்றும் சாக்கடை உபயோகிப்பு ஆய்வு, தூத்துக்குடி.

2. புகையால் பதப்படுத்தப்பட்ட மீன்கள் தயாரித்தல்; தூத்துக்குடி.

**வேளாண் விரிவாக்கக் கல்வி :**

கோவையிலுள்ள தகவல் தொடர்பு நிலையம், வேளாண்மை விஞ்ஞான கேந்திரங்கள், பயிர் மருந்தகங்கள், தேசிய ஆராய்ச்சி விளக்கத் திட்டங்கள், ஆய்வுக் கூடத்திலிருந்து பண்ணைத் திட்டம், பின் தங்கியோர் மேம்பாட்டுத் திட்டம், கிராம ஏற்புத் திட்டம் போன்றவற்றின் மூலம் பல்கலைக் கழகத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் வேளாண் மக்களிடையே நன் முறையில் பரப்பப்பட்டன. 1984–85 ஆம் ஆண்டில் 462 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதனால் பயன் பெற்றோரின் எண்ணிக்கை 13,226 ஆகும். அதோடு பயிர்ப் பாதுகாப்பு, பயிர் சாகுபடி, தோட்டக்கலை, மனையியல் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் போன்றவை சம்பந்தமான 538 செயல் விளக்கங்கள் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்டன. மேலும் ஆராய்ச்சிக் குறிப்புகள் வெளியிடுதல், வானொலி மூலம் அறிக்கைகளும், குறிப்புகளும் தருதல், தொலைக் காட்சி மூலம் விவசாயச் செய்திகள் தருதல், பொருட்காட்சிகள் நடத்துதல், திரைப்படக் காட்சிகள் ஏற்பாடுசெய்தல் போன்றவற்றின் மூலமாகவும் வேளாண் ஆய்வுகள் பொது மக்களிடையே பரப்பப்பட்டன.

1984–85 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மைக்கென 14,163 கிலோ நெல் விதை, 746 கிலோ சிறு தானிய விதை, 20,550 கிலோ பருப்பு வகைகளின் விதை, 2,427 கிலோ பருத்தி விதை, 55,030 கரும்புக் கரணைகள், 101 கிலோ காய்கறி விதைகள், 13,108 கிலோ நிலக்கடலை விதை, 101 கிலோ எள் விதை, 2,080 கிலோ சோயா மொச்சை விதை, 1985 கிலோ சூரிய காந்தி விதை, முதலியனவும் விநியோகிக்கப்பட்டன. மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து விதைகளும் மூலவிதைகளாகும்.

தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம், வடபாதிமங்கலம்

1974இல் நிறுவப்பட்ட தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.2 கோடிகள் ஆகும். இது பங்குத் தொகை ஒன்றுக்கு ரூ. 100 வீதம் இரண்டு இலட்சம் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இன்று வரை இக்கழகத்திற்கு அரசிடமிருந்து வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.27·50 இலட்சங்கள் ஆகும். இக்கழகத்தின் மொத்த நிலங்களின் பரப்பு 4,051.74 ஏக்கர்களாகும். 13 மையங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த நிலங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி மற்றும் திருவாரூர் தாலுக்காக்களில் அடங்கியுள்ளன.

2. இக்கழகம் தோன்றியது முதல் 1974–75 மற்றும் 1980-81 ஆம் ஆண்டுகள் நீங்கலாக, மற்றைய ஆண்டுகளில் நட்டத்தையே அடைந்துள்ளது. இக்கழகத்தின் நடைமுறைகளைப் பரிசீலனை செய்ய ஒரு நிபுணர் குழுவை அரசு அமைத்து. கழகத்தின் வளர்ச்சிக்காக, குழு சில பரிந்துரைகள் செய்தது. நிபுணர் குழுவின் பரிந்துரைகள் அரசு ஆய்வு செய்து. அதனை நடைமுறைப்படுத்த, ஆணை வழங்கியுள்ளது. கரும்புப் பயிரை, தற்போதுள்ள 500 ஏக்கரிலிருந்து 1,000 ஏக்கருக்கு உயர்த்தல், கூடுதல் பாசன வசதி ஏற்படுத்துவது, சிக்கனமற்ற சிறு நிலப் பகுதிகளை தவிர்த்தல், போன்ற சில பரிந்துரைகள் தற்போது நடைமுறைப்படுத்த கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 1985–86இல் 500 ஏக்கரில் கரும்பும், 2,843 ஏக்கரில் நெல்லும், மற்ற நிலங்களில் பருப்பு வகைகள், பருத்தி போன்றவை பயிரிடவும், கழகம் உத்தேசித்துள்ளது.

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P N Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagobi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.

38/86 2840

வெளியீடு 19-10-1985 Issued 19—10—1985

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஜூன் 4, 1985 - தொகுதி VI எண் 2

Tuesday the 4th June 1985 - Volume VI No 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George.
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 pais.

உள்ளடக்கம்

4–6–1985


பக்கங்கள்.

1 வினாக்கள்—விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 155—199

2 அறிவிப்புகள் :

(அ) அன்றாடம் குறித்தபடி அலுவல்களை எடுத்து முடிக்க ஒத்துழைப்புக் கோருதல் .. 199—200

(ஆ) உறுப்பினர் திரு. பிரணவநாதன் கைது செய்யப்பெற்று விடுதலையானது .. 200

(இ) பேரவை அலுவல் .. .. .. 200—202

3 சட்டமன்ற கட்சிகளுக்கு அரசினர் தோட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த அறைகளை சட்டமன்றச் செயலகம் கையகப்படுத்திக் கொண்டது .. 203—215

4 வரவு-செலவுத் திட்டம் 1985–86 வாக்கெடுப்பு :

(அ) கோரிக்கை எண். 20.—வேளாண்மை 216—280

(ஆ) கோரிக்கை எண். 49.— குடிநீர் வழங்கல் ,,

(இ) கோரிக்கை எண். 50.—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு தொடர்ச்சி ..

திரு எஸ். வேணுகோபால் 216—222

திரு. ப. ந. இராமச்சந்திரன் 222—226

திரு. வே. கு. சின்னசாமி 226—231

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் 231—239

திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் 239—244

திரு. டி. ஆர். வேங்கடரமணன் 244—251

திரு. சீ. சிவப்பிரகாசம் 252—256

திரு. எஸ். என். இராமசாமி 256—259

திரு. கே. உச்சி 259—262

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி 262—267

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து 267—279

5 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 281

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, ஜூன் 4 செவ்வாய்க்கிழமை

வைகாசி 22, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

உழவு செய்து அதனால் கிடைத்ததை உண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர். மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே.

## (1) வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### புதிய அனல் மின் திட்டங்கள்

94—*வினா எண். 2—திரு. என். எஸ். வி. சித்தன் : திரு. வே. இரா. ஜேயராமன் : திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு, மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1,000 கோடி ரூபாய் செலவில் இரண்டு புதிய அனல்மின் திட்டங்கள் தொடங்கப்பட உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) : எண்ணூருக்கு அருகில் புதிதாக ஒவ்வொன்றும் 210 மெ. வா. திறனுடன் 3 யூனிட்டுகள் கொண்ட வடசென்னை மின்நிலையம் ரூ. 547.79 கோடி செலவிலும், தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் ஒவ்வொன்றும் 210 மெ.வா. திறனுடன் கூடிய 2 புது யூனிட்டுகள் கொண்ட விரிவுத் திட்டம் ஒன்று ரூ. 356.38 கோடி செலவிலும் ஆக மொத்தம் ரூ. 904.17 கோடி செலவில் அமைக்கப்பட உள்ளன.

[1985 ஜூன் 4

திரு. என். எஸ. வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, 210 மெகாவாட் திறனுடன் 3 யூனிட்டு கள் கொண்ட மின் நிலையம் வட சென்னையிலும், 210 மெகா வாட் திறனுடன் கூடிய 2 புது யூனிட்டுகள் கொண்ட விரிவுத் திட்டம் தூத்துக்குடியிலும் அமைக்கப்பட உள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டங்கள் எப் பொழுது செயல்படுத்தி முடிக்கப்படும்? அவைகள் எப்பொழுது உற்பத்தியைத் துவங்கும் என அறிய விரும்புகிறேன். மேலும், ஏற்கெனவே நம்மிடத்தில் நிலக்கரித் தட்டுப்பாடு இருப்பதால், இந்தப் புதிய மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி கிடைப்பதற்கும் என்ன ஏற்பாடுகளை அரசு செய்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, திட்டக் குழுவின் ஒப்புதல் இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்புதல் விரைவில் கிடைத்து, திட்டம் துவக்கப்பட்டால் அநேக மாக ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே ஒரு யூனிட் அல்லது இரண்டு யூனிட்டுகளில் உற்பத்தியைக் கொண்டு வர இயலும். நிலக்கரியை எங்கிருந்து தருவது என்பதையும் இந்திய அரசு முடிவு செய்ய உள்ளது.

திருமதி. பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகப்படியான மின் திட்டங்களை அமைப்பதற்கு தமிழக அரசு மத்திய அரசிடம் நிதி உதவி கோரியுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, ஒவ்வொரு திட்டக் காலத்திலும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாநில அரசு எத்தகைய திட்டங்களை மேற்கொள்வது என்று திட்டமிடுவதும், அதற்கு மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட முறையின் அடிப்படையில் அத்தகைய மாநில அரசின் மொத்த திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதும்தான் வாடிக்கை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய பதி லில் இருந்து, இந்த மின் உற்பத்தி நிலையங்கள் ஒப்புக்கொள்ளப் பட்டு மின்சார உற்பத்தியைத் துவங்குவது என்றால் இன்னும் பல ஆண்டுகள் ஆகும் எனத் தெரிகிறது. எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு கடுமையான மின்சாரப் பற்றாக்குறை இருப்பதை உணர்கிறோம். இந்த மின்சாரப் பற்றாக்குறை எப் பொழுது நீங்கும்? தற்பொழுது எவ்வளவு உற்பத்தி ஆகிறது? இந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்கும், புதிதாக மின்சார உற்பத்தியை அதிகரிப்பதற்கும் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 ஜூன் 4]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, இந்தத் திட்டங்களுக்கான ஒப்புதல் கிடைத்துவிட்டால், இந்த ஆண்டேகூட இந்தத் திட்டங்களைத் துவக்கலாம். ஆகவே, நிறைய ஆண்டுகள் ஆகும் என்று நினைப்பது சரி இல்லை. எல்லா ஆண்டுகளையும் விட இந்த ஆண்டு மின்வெட்டு அதிகம் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். பழைய ஆண்டுகளில் இதைவிட மோசமான நிலை யில், வீடுகளுக்கே கூட மிவசாரம் இல்லாத நிலைமை இருந்தது என்பதெல்லாம் தெரியும். இருந்தாலும், நம்முடைய தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. மின் உற்பத்தித் திட்டங் களையும் அதைப் போல அதிகரித்துக்கொண்டே போவதன் மூலம் தான் இந்தத் தேவைகளை நிறைவு செய்ய முடியுமே தவிர, அதன் மூலம்தான் மின் வெட்டிலிருந்து தப்பிக்க வழிவகை உள் ளதே தவிர வேறு வழி இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மின் நிலையங்களை ஏற்படுத்துவதற்கு முயற் சிப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். அது குறித்து மகிழ்ச்சி. நிலக்கரி பற்றாக்குறை இருக்கிறது அல்லது அவைகளை வரவழைக்க வேகன்கள், கப்பல்கள் கிடைப்பது, போன்ற சிரமங்கள் இருப்பதால் அணு மின் நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா? அப்படியென் றால் இதற்கும் அதற்கும் அதிக வித்தியாசம ஏற்படுமா? அத னுடைய எரெக்ஷன் சார்ஜ் அதிகமாகுமா? அத்தகைய அணு மின் நிலையங்களை ஏற்படுத்தினால் தமிழ்நாட்டிற்கு அது சிறப் பான பயனை அளிக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவர் அவர் களே, நிலக்கரி சுரங்கங்களிலிருந்து தொலை தூரத்தில் உள்ள மாநிலங்களுக்கு அணு மின் நிலையங்கள்தான் முழுவதும் பொருத்தமானவை. ஆகவே, அணு மின் நிலையங்களை நிறுவு கிறபொழுது நிலக்கரி சுரங்கங்களுக்கு அருகிலுள்ள மாநிலங்களுக் குத் தருவதற்குப் பதிலாக தமிழகம், கேரளம் போன்ற தொலை தூர மாநிலங்களுக்குத் தர வேண்டுமென்ற அடிப்படையில் இரண்டாவது அணு மின் நிலையத்தை திருநெல்வேலியிலே கூடங் குளத்தில் அமைக்க வேண்டுமென்று இந்திய அரசைக் கேட்டு வருகிறோம். அவர்களும் ஆவன செய்வார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, புதிய மின் திட்டங்களை அமுல் நடத்துவதற்கு நிதிப் பற்றாக்குறை ஒரு காரணமாக இருக்கிறது; நிதி உதவி மத்திய அரசிடமிருந்து கோரப்படுகிறது என்று மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படி மின் திட்டங்
களை நிறைவேற்றுவதற்கு உலக வங்கியிடம் கடன் கோர மின்
சார வாரியம் ஏதாவது முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறதா
என்கிற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமி திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதிப் பற்றாக்
குறைதான் காரணம். நிதிப் பற்றாக்குறை மாநில அரசுக்கு
மட்டுமல்ல, மத்திய அரசுக்கும் சொந்தமானதுதான். ஆகையி
னாலே, அவர்களிடத்திலே நிதி கேட்பதன் மூலம் நிதியைப் பெறு
வது என்பது இயலாத காரியம். உலக வங்கி போன்ற நிறு
வனங்கள் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு உதவி செய்யும். எப்
பொழுது என்றால், மின் வாரியம் இலாபமாக நடக்கிறது
பொழுது. நட்டமாக நடக்கிறபொழுது உதவி செய்ய
மாட்டார்கள். மின் உற்பத்தித் திட்டங்களுக்கென்று தனி
நிறுவனங்கள் அமைந்து, அத்தகைய நிறுவனங்களை இலாபமாக
நடத்துவதற்கு, உதாரணமாக வட சென்னை இருக்கிறது. அதை
நாம் ஒரு கம்பெனியாக, தனியாக அமைக்கலாம். அந்தக் கம்
பெனியைப் பொறுத்தவரையிலே அது உற்பத்தி செய்து மின்
சார வாரியத்திற்குத் தரலாம். அந்தக் கம்பெனி இலாபம் ஈட்டு
கின்ற வகையிலே இயங்குகிறது என்றால் உலக வங்கி போன்ற
நிதி நிறுவனங்களிலிருந்து நாம் நிதியைப் பெறுவதற்கு ஒரு வழி
உண்டு. அதைப்பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த ஆண்டு சிப்காட் தொழில் பேட்டைகளில்
துணை மின் நிலையங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரி
சீலனையில் உள்ளதா ? ஆம் எனில், இராணிப்பேட்டை சிப்
காட் மின் உற்பத்தித் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும்
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வியை
தொழில் அமைச்சரிடம் போடவும்.

மேட்டூர் மின் உற்பத்தி நிலையம்.

95—*வினா எண். 48—திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு மின்
துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் மின்சார உற்பத்தியை மேலும் விரிவு
படுத்த செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேட்டூர் மின்சார உற்பத்தியை மேலும் அதிகப்படுத்துவதற்கான திட்டம் ஏதாவது உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மேட்டூரில் ஏற்கவே 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு யூனிட்டுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் இரண்டு யூனிட்டுகள் அமைத்து அவை இரண்டும் செயல்முறையிலே இருக்கின்றன. ஆகையினாலேதான் விரிவாக்கத் திட்டம் அதற்கு மேல் இல்லை என்றேன். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேதான் இந்த வேலைகள் எல்லாம் முடியும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மேட்டூரிலே மின்சாரத் திட்டம் விரிவுபடுத்துவதற்கான பிரச்னையே எழவில்லை என்று சொன்னார்கள். நீர் மின் உற்பத்தியிலே விரிவுபடுத்த முடியாது. ஆனால் அங்கே ஒரு அனல் மின்சார திட்டம் இப்பொழுது கட்டப்பட்டு வருகிறதே அது எப்பொழுது முடிவடையும்? அதனுடைய கப்பாசிட்டி என்ன? எவ்வளவு செலவாகும்? அந்த வேலை எந்த அளவிலே இருக்கிறது என்பதை இப்பொழுது அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, டிசம்பர் 1986-ல் முதல் பிரிவும் ஜூன் 1987-ல் இரண்டாவது பிரிவும் டிசம்பர் 1988-ல் மூன்றாவது பிரிவும் டிசம்பர் 1989-ல் நான்காவது பிரிவும் உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களுக்கு மின்சார உற்பத்தி செய்வதற்கு அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளதா என்பதை அறிய விரும்புறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்புக் கொண்டுள்ளது.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற மின் கட்டுப்பாட்டை தீர்க்கின்ற முறையில் சிறு திட்டங்கள் என்ற முறையிலே கீழ் பவானி, அமராவதி அணைக்கட்டுகளிலே மின் உற்பத்திக்கான செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா? இதுபற்றி ஏதேனும் நடவடிக்கை எடுக்கபட்டு வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சிறு சிறு மின் உற்பத்தித் திட்டங்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல 200 திட்டங்களுக்கு நாம் கருத்துருக்களை உருவாக்கி வருகிறோம். ஒவ்வொன்றாக நிறைவேற்றுகின்ற வகையில் மின்வாரியம் திட்டமிட்டு வருகிறது.

(முற்பகல் 9—10)

திரு. கு. சுப்பராயன் : தலைவரவர்களே, வளர்ந்து வருகிற நம்முடைய மாநிலத்தில் மின்சாரத் தேவையை மதிப்பீடு செய்து, தேவையான திட்டங்களை 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றுவதற்குரிய கால வரையறைக்கு உட்பட்ட திட்டங்கள் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, திட்டம் தீட்டுவதில் குறையில்லை. காலவரையறைக்கு உட்பட்டு நிறைவேற்ற வேண்டும் என்ற ஆசை இருகிறது. ஆனாலும் போதிய நிதி வசதி இல்லை என்பதுதான் குறை.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, கீழ் மேட்டூர் புனல் மின் திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அந்த அனுமதி கிடைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கீழ் மேட்டூர் புனல் மின் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாருக்கு மின் உற்பத்தி செய்ய அனுமதி வழங்க இருக்கிறோம் என்று சொன்னார்கள். எந்த விதிமுறையின் கீழ் அனுமதி வழங்க இருக்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரர்களே. அனுமதி வழங்குவதற்கு விதிமுறை ஒன்றும் தேவையில்லை, அவர்களுடைய சொந்தத் தேவைக்கு மின் உற்பத்தி செய்து. கொள்ள உரிமை இருக்கிறது. இருந்தாலும் இந்திய அரசுதான் கொள்கையளவில் அனுமதி வழங்க வேண்டும். ஏனென்றால் நிலக்கரி, அந்நியச் செலாவணி எல்லாம் தர வேண்டும். நம்முடைய சர்க்கார் பரிந்துரை செய்து இந்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. இந்திய அரசு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.



தேனியில் சாலையோர சுற்றுலா விடுதி.

96 (*வினா எண் 57)—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனியில் நெடுஞ்சாலை சுற்றுலா விடுதி (Motel) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) தகுந்த இடம் கையகப்படுத்தப்பட்டவுடன் வேலை தொடங்கப்படும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, இதைப் போன்ற ஓட்டல்கள் தமிழ்நாட்டில் எந்த எந்த இடங்களில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினுடைய 1985—86-ஆம் ஆண்டுத் திட்டத்தில் காரைக்குடியில் இப்படி ஒரு 'மோட்டல்' தொடங்குவதற்கான திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் பேராவூரணிப் பகுதியில் சுற்றுலா முககியத்துவம் வாய்ந்த மனோராவை மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள சிறப்புமிக்க சுற்றுலாப் பகுதியாகிய மனோரா பகுதியை ஒரு சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகக் கருதி, சில திட்டங்களை நிறைவேற்றுவது அரசின் கருத்தில் இருக்கிறது. தனியாகக் கேள்வி போட்டால் விரிவான பதில் தரப்படும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : தலைவரவர்களே, இந்த மாதிரியான அரசாங்க சுற்றுலா விடுதிகளில் எம். எல். ஏ.-க்கள் தங்குவதற்கு 'கன்சஷன் ரேட்டில்' குறைந்த வாடகை வாங்க வழிவகை செய்யப்படுமா?

[1985 ஜூன் 4

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, பெரிய அளவில் முதலீடு செய்து. அந்த முதலைப் பாதுகாக்கின்ற அளவில் நடத்தப்படுகின்ற நிறுவனங்கள் இவை. ஆகவே, கன்செஷன் முறையில் வாடகை வாங்குவது என்பது அந்த நிறுவனங்களுக்கு நன்மை தராது என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

## கொல்லிமலையில் சுற்றுலா விடுதி.

97 (*வினா எண் 228)—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொல்லிமலையில் சுற்றுலா வாரியத்தின் மூலம் தங்கும் விடுதி மற்றும் சிறப்பு வசதிகள் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சுமார் 53.20 இலட்சத்தில் சாலை, இளைஞர் விடுதி, பூங்கா, பழத்தோட்டம், தொலைநோக்கி நிலையங்கள் போன்றவை அமைப்பதற்கு பல அரசுத் துறை நிறுவனங்கள் சார்பில் திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, கொல்லிமலைப் பகுதியை சுற்றுலா மையமாக உருவாக்குவதற்கும் பல்வேறு திட்டப் பணிகளை உருவாக்கி வருவதற்கும் நன்றி கூறி, இன்னும் அங்கு சுற்றுலா வாரியம் இளைஞர்கள் தங்கும் விடுதியைத்தான் கட்டுவதற்கு திட்டமிட்டுள்ளது; பல்வேறு வசதி படைத்தவர்களும் தங்குகின்ற வகையில், மகாபலிபுரத்தில் கட்டப்பட்டுள்ளது போல் தனித்தனியாக குடில்கள் கட்ட அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்த கொல்லிமலைப் பகுதி என்பது எதிர்காலத்திலே மிகச் சிறந்த மலைவாசஸ்தலமாகி, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக வளர இருக்கிற ஒரு பகுதி. இப்போதுதான் அங்கே திட்டங்களைத் தொடங்கியிருக்கிறோம். முதலிலே இளைஞர் விடுதி கட்ட அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. அதன் பிறகு எதிர்காலத்தின் தேவையை ஒட்டி பல்வேறு பிரிவினரும் விரும்பி தங்குகிற வகையில் விடுதி கட்டுவதை அரசு பரிசீலிக்கும்.



1985 ஜூன் 4]

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சுற்றுலா மையமாக ஆக்கப்படுமா? வால்பாறையில் இத்தகைய தங்கும் விடுதிகள் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தற்போது அரசினிடத்தில் அப்படிப்பட்ட கருத்து இல்லை.

## செய்திப் படங்கள் திரையிடுதல்.

98—(*வினா எண் 413) திரு. சா. துரைசாமி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் செய்திப் படங்களை திரையிடாத திரையரங்குகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தமிழக அரசு தயாரித்து வெளியிடும் செய்தி விளக்கப் படங்களை திரையிடாத திரையரங்குகள்மீது 1955 ஆம் ஆண்டின் தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின்கீழ் உள்ள பிரிவு 9 (2) (பி)-ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா என்பதை எங்களால் உணர முடியவில்லை. காரணம் தியேட்டர்களிலே திரைப்படங்களை நாங்கள் பார்க்கின்ற நேரத்திலே இப்படிப்பட்ட செய்திப் படங்களைப் பார்க்க இயலவில்லை. எனவே ஒவ்வொரு காட்சியிலும் தமிழக அரசினுடைய செய்தி விளக்கப் படத்தைத் திரையிடுகின்ற வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா? அதே போல் ஏ. சி. தியேட்டர் என்று சொல்லப்படுகின்ற தியேட்டர்களில் போதிய ஏ.சி. போடாமலே மக்களிடத்திலே அதற்கான காசை மட்டும் வசூலிக்கிறார்கள். தியேட்டர்களில் உள்ள இருக்கைகள் சரியாக அமருகின்ற வகையில் இல்லை. கழிப்பிடங்கள் துர்நாற்றம் வீசுகின்ற நிலைமையில் இருக்கின்றன. இப்படிப்பட்ட குறைபாடுகளைப்பற்றி அங்கே படம் பார்க்க வருகின்ற பொதுமக்கள் எழுதி வைத்து அந்தக் குறைகளின்மீது நடவடிக்கை எடுக்கின்ற வகையில் புகார் புத்தகம் வைக்கின்ற நடவடிக்கை எடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதா என்பதை நடைமுறையில் மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று தெரிவித்தார்கள். இந்த நட

[1985 ஜூன் 4

வடிக்கை என்பது எல்லா தியேட்டர்களிலும் ஏக காலத்தில் எடுக்கப்படுவதில்லை. ஆங்காங்கே கண்டுபிடிக்கப்பட்டு குற்றச் சாட்டுகள், குறைகள் கூறப்படுகிறபோதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இப்போது செங்கை மாவட்டத்தில் தளவாய்பேட்டை கிரா மத்தில் உள்ள தியேட்டரில் விளக்கம் கேட்டு நடவடிக்கை எடுத் திருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் சாத்தான்குளத் தில் நாராயணசாமி தியேட்டர் 15 நாட்களுக்கு சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கின்றது. வெளியகரம் கிராமத்தில் தேவி தியேட்டர்மீது விளக்கம் கேட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலிலுள்ள ராஜேஷ் தியேட்டர் மீது 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட் டிருக்கின்றது. இராஜபாளையத்தில் உள்ள ஜெயசக்தி தியேட் டரைப் பொறுத்தவரையில் தற்காலிகமாக ஒரு மாதத்திற்கு லைசன்ஸ் ரத்து செய்யப்பட்டிருக்கின்றது. இராஜபாளையத் தில் உள்ள பத்மாவதி திரையரங்கத்தைப் பொறுத்த வரையிலும் தற்காலிகமாக லைசன்ஸ் ஆறு மாதங்களுக்கு ரத்து செய்யப் பட்டிருக்கின்றது.

இதைப் போன்று கடுமையாகக் கண்காணித்து நடவடிக்கை கள் எடுக்க வேண்டுமென்றும், தண்டனைகள் வழங்கப்பட வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் திரையரங்குகளினுடைய மொத்த சூழ்நிலை பற்றிக் குறிப் பிட்டார்கள். அவைகளும் கண்காணிக்கப்பட்டு தக்க நட வடிக்கை எடுக்கப்பட்டு, தேவையானால் தண்டனைகளும் வழங் கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன் னதுபோல் படம் பார்க்க வருகின்றவர்கள் காணுகின்ற குறைகளை எழுதி வைத்து அவற்றின்மீது நடவடிக்கை எடுக் கின்ற வகையில் புகார் புத்தகம் வைக்கின்ற ஒரு முறையை அரசு விரைவிலே அமல்படுத்துவதற்குரிய நடவடிக்கையை எடுக்கும்.

**திரு. சா. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியில் வாரம் ஒரு முறை திரைப்படம் திரை யிடுகிறார்கள். அந்தத் திரைப் படத்ினூடே தமிழக அரசி னுடைய செய்தி விளக்கப் படத்தையும் திரையிட மைய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியிலே திரைப் படங்களை அவர்கள் திரையிடுகிறபோது நம்முடைய செய்திப் படத்தைக் காட்ட வேண்டும் என்று வற்புறுத்த முடியாது. ஆனால் மாநில அரசு தயாரிக்கிற செய்திப் படங்களையும் கருத்து விளக்கப் படங்களை யும் தொலைக்காட்சி நிலையங்கள் அங்கே ஒளி பரப்ப வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.



1985 ஜூன் 4]

**திரு. வே. கு. சின்னசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இருக்கின்ற சினிமா தியேட்டர்களில் தைப் பொங்கல், தீபாவளி போன்ற விசேஷ நாட்களில் 5 காட்சிகள், 6 காட்சிகள் என்று ஓட்டுகிறார்கள். கிராமப்புற மக்களைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு திருவிழாக்களும்தான் அவர் களுடைய வாழ்க்கையில் கொண்டாடுகின்ற முக்கியமான விழாக் களாகும். அப்படிப்பட்ட சமயங்களில் ஒரு காட்சியிலே கூட இப்படிப்பட்ட அரசின் செய்திப் படங்களைத் திரையிடு வதில்லை என்பதைக் கண்டிக்கின்ற வகையில் தனியாக அப்படிப் பட்ட நாட்களில் அரசு அதிகாரிகளை நியமித்து கண்டிப்பாக அரசின் செய்திப் படங்களை வெளியிடுவதற்கு உரிய வகையில் ஏதேனும் தனியான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சில விசேட நாட்களில் அல்லது விடுமுறை காலங் களில் அதிகக் காட்சிகளை, திரைப் படங்களை திரையிடுகிற போதுதான், இப்படி நம்முடைய செய்திப் படங்களை திரையிட முடியாத சூழ்நிலையைக் கையாளுகிறார்கள் என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அதைப் பற்றி கடுமையான நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலே அபிராமி என்ற பெயரில் ஒரு திரை யரங்கு கட்டப்பட்டு, அதிக வசதிகளுடன் கூடிய அந்தத் தியேட் டரின் மூலமாக அதிகமான வருவாய் அரசாங்கத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. ஆனால் அதேநேரத்தில், அதே தியேட் டரிலேயே ஒரு மினி தியேட்டரைக் கட்டி அரசாங்கம் கொடுத் துள்ள அத்தனை நிபந்தனைகளையும் அவர்கள் பூர்த்தி செய்து கொடுத்திருக்கிற தருணத்திலும் கூட, அந்த மினி அரங்கிற்கு உரிய அனுமதியை அதிகாரிகள் வழங்க மறுக்கிறார்கள். அதன் மூலம் அரசாங்கத்திற்கு வர வேண்டிய அதிக வருவாயைத் தடுக் கிறார்கள். அதைத் தடுப்பதற்கு அந்த மினி தியேட்டருக்கு விரைவிலே அனுமதி வழங்குவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த திரை அரங்கத்தைப் பொறுத்தவரையில் என்னிடத்திலே தகவல்கள் எதுவும் இல்லை. அரசாங்கத்திற்கும் அப்படி ஒரு தகவல் வந்திருக்கிறதா என்பதும் தெரியவில்லை. ஆனால் பொதுவாக மாநிலத்திலே பல இடங்களிலே இப்படி சிறந்த முறையிலே திரை அரங்குகள் அமைத்ததற்குப் பிறகும் கூட, தேவையான அந்த அனுமதியை உரிய காலத்திலே வழங்காமல்

தாமதப்படுத்துகிறார்கள் என்ற புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. தேவையான அறிவுரைகளை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. இந்த அரங்கத்தைப் பொறுத்தவரை அதற்கான தகவல்கள் அரசினிடத்திலே தரப்படுமானால் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் மத்தியில் பகுத்தறிவு மற்றும் விஞ்ஞான அறிவைப் பரப்புகின்ற வகையில் செய்திப் படங்களை அரசு எடுத்து அவற்றை அனைத்து திரையரங்குகளிலும் கட்டாயமாக திரையிட வேண்டும் என்ற நடவடிக்கையையும் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திரையரங்குகளை அவர்களுடைய தொழிலாக அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு குறிப்பிட்ட அளவு, சுமார் 2 ஆயிரம் அடி நீளம் உள்ள படங்களைத் தான் செய்திப் படங்களாக, விளக்கப் படங்களாக திரையிடுவது என்ற முறையில், அதை சட்டத்தின் விதிகளிலே சேர்த்து அமல்படுத்திக் கொண்டு வருகிறோம். கூர்மையான விஞ்ஞான அறிவுள்ள அல்லது பகுத்தறிவுள்ள படங்கள் என்று சொல்ல ஆரம்பித்தால், எது பகுத்தறிவு என்பதே விவாதத்திற்குள்ளாகிவிடும். ஆகவே அப்படிப்பட்ட ஆராய்ச்சியில் அரசு தலையிடுவது என்பது அவ்வளவு உகந்ததாக இராது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள திரைப்படங்களில் மத்திய அரசின் மூலமாக வெளியிடப்படும் செய்திப் படங்களை கரெக்டாகப் போடுகிறார்கள். ஆனால், மாநில அரசினுடைய செய்திப் படங்களை அவர்கள் அப்படிப் போடுவது கிடையாது. அது மட்டும் அல்லாது மத்திய அரசின் செய்திப் படங்களில் தமிழக அரசின் சாதனைகளைப் பற்றியோ செய்திகளைப் பற்றியோ விவரங்கள் அதிகமாக இடம் பெறுவது கிடையாது. ஆகவே, அவைகளை அதிக அளவு இடம் பெறச் செய்வதற்கும், கண்டிப்பாக அவைகள் திரையிடப்பட வேண்டும் என்ற விதிகளை கடுமைப்படுத்துவதற்கும்—3 மாதங்கள், 6 மாதங்கள் தண்டனையோ அல்லது அபராதம் அதிகமாகப் போடுவதோ மட்டும் போதாது—லைசன்சையே ரத்து செய்கிற அளவுக்கு கடுமையான உத்தரவுகளை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மத்திய அரசினுடைய செய்தி விளக்கப் படங்கள் மத்திய அரசினுடைய சாதனைகளையோ அல்லது இந்தியா முழுவதும் நடைபெறுகிற சாதனைகளையோ விளக்குகிற படங்களாகத்தான் இருக்க முடியும். அதிலே மாநில அரசினுடைய செய்தி என்பது குறைந்த அளவிலேதான் இடம் பெறும் : அல்லது சில நேரங்களிலே இடம்



பெறாமலேயே கூட இருக்கும். அதற்காகத்தான் தனியாக தமிழக அரசின் சார்பில் செய்தி விளக்கப் படங்களை நாம் எடுக்கின்றோம். ஆனால் மத்திய அரசின் செய்தி விளக்கப் படங்களை திரையிட்டால், அங்கே மாநில அரசின் செய்திப் படங்கள் இடம் பெறாது. ஏதாவது ஒரு படத்தைத்தான் திரையிட முடியும். அது மாறி மாறித்தான் வருகிறது.

அதேபோல தண்டனையை அளிப்பது என்பதில் ஒரு ஆண்டு தண்டனை அல்லது நிரந்தரமாக லைசன்ஸை ரத்து செய்வதற்கும்கூட சட்டத்திலே வகையிருக்கிறது. அந்தக் குற்றத்தினுடைய கடுமையை பொறுத்த வரைதான் அந்தத் தண்டனைகள் கொடுக்கப்படுகின்றன.

கோவை மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப்படி.

99—(*வினா எண் 12) திரு. கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாநகராட்சியின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாநகராட்சிப் பகுதிகளுக்குரிய நகர ஈட்டுப்படி கொடுக்கப்படாமலிருந்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(இ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாநகராட்சிப் பகுதிக்குரிய ஈட்டுப்படி, தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைப்படி வழங்கப்படுகிறது.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கி வருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னுடைய கேள்வி, கோவை மாநகராட்சியானதற்குப் பிறகு முன்னமேயிருந்த நகராட்சியில் கொடுக்கப்பட்டு வந்ததை விட மாநகராட்சிக்கு உரித்தான அளவிற்கு பெர்சென்டேஜ் அவர்களுக்கு உயர்த்தப்பட வேண்டும், அந்த முறையில் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியில் மதுரை மாநகராட்சியில் எந்தளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறதோ அதே அடிப்படையில் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1985 ஜூன் 4

திரு. கு. ானி : தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியிலும் மதுரை மாநகராட்சியிலும் அவை எந்த கிரேடில் இருக்கின்றனவோ அந்த கிரேடுக்குரிய நகர ஈட்டுப்படி இப்போது கிடைக்கவில்லை என்பது அங்கு பணிபுரியும் ஆசிரியர்களிடமிருந்து வந்திருக்கும்படியான குறைபாடாகும். என்னிடத்திலேயே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன தொகை அல்லது எவ்வளவு பெர்செண்ட்டேஜ் இப்போது நகர ஈட்டுப்படியாகக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு, ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியில் எந்தளவிற்குக் கொடுக்கப்படுகிறதோ அதே அளவிற்குத்தான் கோவை மாநகராட்சியில் உள்ள ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுகிறது என்பதுதான் இலாகாவிலிருந்து எனக்கு வந்திருக்கிற தகவலாகும். அடிப்படைச் சம்பளம் ரூ. 700 முதல் 999 வரை இருந்தால் நகர ஈட்டுப்படி ரூ. 40 அளிக்கப்படுகிறது. இப்படி மதுரை மாநகராட்சியில் கொடுக்கப்படும். அதே நகர ஈட்டுப்படி கோவை மாநகராட்சியில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதாக என்னிடத்தில் குறிப்பு இருக்கிறது.

## தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்.

100—(*வினா எண் 54.) திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1984–85 ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய மத்திய அரசினிடமிருந்து தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் (NREP) மான்யமாக வந்த தொகை எவ்வளவு ?

(ஆ) மாநில அரசு பங்குத் தொகையாக செலவிட்ட தொகை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ரூ. 1,864.38 இலட்சம்.

(ஆ) 1984–85-ஆம் ஆண்டில் 31-12-1984 முடிய மாநில அரசு பங்குத் தொகையாக செலவிட்ட தொகை ரூ. 2,127.50 இலட்சம் ஆகும்.



1985 ஜூன் 4]

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக ஒருங்கிணைந்த திட்டம், என்.ஆர்.இ.பி. இவற்றின் மூலம் 1985–86க்கு வந்த தொகை உத்தேசமாக எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, 1985–86க்கான புள்ளி விவரம் என்னிடம் இப்போது இல்லை. 1984–85 ஆம் ஆண்டில் வந்த தொகை எவ்வளவு என்று கேட்டார்கள், நான் அதைத்தான் படித்தேன்.

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, ஆர்.எல்.இ.ஜி.பி. என்ற மத்திய அரசு திட்டத்தில் இப்போது நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களை குறைப்பதாகச் சொல்லப்படுகிறது, அதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கேள்வி, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் பற்றியது. ஆர்.எல்.இ.ஜி.பி. தனித் திட்டம். அதுபற்றி தனியாக கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தர முடியும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, என். ஆர். இ. பி., ஆர். எல். இ. ஜி. பி. போன்ற திட்டங்கள் மூலம் மத்திய மாநில அரசுகள் நிறையப் பணம் ஒதுக்கி ரோடுகள் போடுகிறார்கள். போட்ட ரோடுகளை மீண்டும் பராமரிப்பு செய்யாததால் ஆங்காங்கே போட்ட ரோடுகள் அழியக்கூடிய சூழ்நிலையில் உள்ளன. ஆகவே, போட்ட ரோடுகளைச் செப்பனிடுவதற்கு தனியாகப் பணம் ஒதுக்கி பழுதுபார்க்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஏற்கெனவே போடப்பட்டிருக்கிற பாதைகளைச் செப்பனிடுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி. திட்டம் கிராமங்களுக்கு ரோடுகள் போடுவது. ஆனால், நெடுஞ்சாலைகளில் எல்லாம் வண்டிகள், வாகனங்கள் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படியிருக்கும்போது கிராமங்களில் மட்டும் ரோடுகள் போட்டு வைப்பது—அந்தப் பாதை வழி சென்றால்தான் இந்தப் பாதைக்கு வரும் சூழ்நிலை இருக்கிறது. அது பற்றி டி.இ. யிடம் கேட்டால் சாங்க்ஷன் ஆகி வரவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, நெடுஞ்சாலைகளைச் செப்பனிடாமல் கிராமச் சாலைகள் மட்டும் போட்டு என்ன பிரயோஜனம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களிடம் போட வேண்டிய கேள்வியாகும்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம். ஆனால், அதே போல் விழாக்கள் நடத்த இடம் கிடையாது. எனவே விழாக்கள் நடத்துவதற்கு ஒரு மண்டபம் என்று இந்தத் திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது மத்திய அரசு, மாநில அரசு இணைந்து செயல்படுகின்ற திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், ஆதி திராவிட விடுதி கட்டுதல் போன்ற பணிகளுக்காக இதுவரை செலவழிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் விழாக்கள் நடத்துவதற்கு அரங்கம் கட்டுவதற்கு முடியுமா என்று கேட்டார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் அப்படி அமைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி. திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு இடம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால், சில மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்கள் என்.ஆர்.இ.பி. திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்று இப்போது தடங்கல் விதித்திருப்பது, அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படி, யென்றால், அதை மாற்றி கிராமங்களில் ரெகுலர் பள்ளிக் கட்டிடங்கள் கட்டக் கூடிய நிலைமை இருப்பதால், இந்தத் திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 31–3–1985 வரையில் இத்திட்டத்தின் கீழ் 2,000 பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவது என்று முடிவெடுக்கப்பட்டு, 2,000 பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. எந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அப்படி ஆணை பிறப்பித்துள்ளார் என்ற தகவலைத் தெரிவித்தால், அதைப்பற்றி விசாரிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என். ஆர். இ. பி. என்று அழைக்கப்படுகின்ற தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கிராமங்களில் சாலைகள் போடுதல், பாலங்கள் கட்டுதல், கட்டிடங்கள் கட்டுதல் போன்ற பணிகளுக்கு இப்போதுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் ஊர்நல அதிகாரிகள், கிராம சேவக்குகள் மூலம் இந்தப் பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டும், அரிசி வழங்கப்பட வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால், ஊர்நல அதிகாரிகள் தங்களுக்கு இருக்கின்ற பணிச் சுமையின் காரணமாக ஒப்பந்தக்காரரிடம் அந்தப் பணிகளை ஒப்படைத்து விடுகிறார்கள். அதனால், இந்தத் திட்டம் எந்த நோக்கத்திற்காக தீட்டப்பட்டதோ, அந்த நோக்கத்தை செயல்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தந்த ஊர்களிலே இந்தப் பணிகளைச் செய்வதற்கு பொதுமக்கள் குழு ஒன்றை அமைத்து, நேரடியான முறையிலே இந்தப் பணிகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊர்நல அதிகாரிகள் இந்தப் பணிகளைச் செய்யாமல் இனிமேல் அந்தந்த கிராமங்களிலுள்ள படித்த வாலிபர்கள், ஆயக்கட்டுதாரர்கள் செய்யவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்தாகி விட்டது.

## ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பேருந்து நிலையங்கள்.

*101 --*வினா எண் 188* — திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் மேச்சேரி பேரூராட்சியில் ஐ.யு.டி.பி. (I. U. D. P.) திட்டத்தின் மூலம் பேருந்து நிலையம் கட்ட கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கோரிக்கைகள் எழுத்து மூலம் வரவில்லை என்று சொன்னாலும், மேச்சேரி பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுவதற்கு முறையாக முன்மொழிவு அந்தப் பேரூராட்சியின் மூலம் அனுப்பப்பட்டு, இன்றைக்கு 'இட் இஸ் பெண்டிங் வித் தி டைரக்டோரேட் ஆப் கன்ட்ரி அண்டு டவுன் பிளானிங்' முறையாக புரபோசல் அனுப்பப்பட்டிருப்பதால், நடப்பு ஆண்டில் இந்த முன்மொழிவின் மீது நடவடிக்கை எடுத்து, மேச்சேரி பேரூராட்சியில் இந்த ஆண்டு பேருந்து நிலையம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சியை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது வரை வரவில்லை என்று சொன்னேன். 1985-86லே இது குறித்து வருமேயானால், அரசு அதைப்பற்றி பரிசீலித்து முடிவெடுக்கும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொந்த நிதியில்லாத காரணத்தால், இப்படி பல பேரூராட்சிகள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள, இப்படிப்பட்ட பேருந்து நிலையங்களைக் கட்டுவதற்கான திட்டங் களைப் போட்டு, பணம் கேட்டு அனுப்பப்பட்டு அவைகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் தற்போது இருந்து வருகின்றன என்று அறிகிறேன். அதற்குக் காரணம் ஐ.யு.டி.பி. திட்டத்தின் கீழ் அதிக நிதி ஒதுக்காத நிலை இருப்பதாகவும் அறிகிறேன். எனவே, ஐ.யு.டி.பி. மூலம் இப்படிப்பட்ட திட்டங்களை நிறை வேற்றுவதற்கு மைய அரசிடமிருந்து அதிக நிதி உதவி பெறு வதற்கு நமது அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அப்படி அதிக நிதி மைய அரசிடம் பெறுவதற்கான முயற்சி மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் கிடைத்ததை வைத்துக் கொண்டுதான் காரியங்கள் ஆற்ற முடியும். 1985-86-க்கான திட்ட வரைவில் எதை எதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இதுவரை அரசு முடிவு எடுக்கவில்லை. இப்படி ஒரு திட்டம் வருமானால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர் களே, தமிழகத்திலே உள்ள பெரும்பாலான பேரூராட்சிகள் வருமானம் குன்றிப்போய் இருக்கிற சூழ்நிலையில் அரசின் திட்டங் கள் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு செய்யப்படும்போது, பேரூ ராட்சிகளுக்கு செய்வதற்கு வழியில்லாமல் இருக்கிறது. ஆகவே வருமானம் குறைவாக இருக்கிற பேரூராட்சிகளை எல்லாம் விலக்கிவிட்டு அவைகளை கிராமப் பஞ்சாயத்துக்கள் என்று அறிவிப்பதற்கான முயற்சியை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக்கேள்வி ஐ.யூ.டி.பி. திட்டத்தைப் பற்றிய தாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது பேரூராட்சி களை வெறும் ஊராட்சிகளாக மாற்றுவதைப் பற்றியதாகும். ஆகவே தனியாகக் கேள்வி கேட்டால் விரிவான பதில் அளிக்க இயலும்.

திரு. ஏ. தங்கராசு : தலைவர் அவர்களே, பேருந்து நிலை யம் கட்டுவதற்கு பேரூராட்சிக்கு ஐ.யூ.டி.பி. மூலம் லோன் கொடுத்து வருகிறார்கள். ஆனால் அப்படி லோன் கொடுக்கிற



போது வசதி, வாய்ப்பு இருக்கிற இடத்தில் முதல் மாடி கட்டு வதற்கு அனுமதியில்லை என்று சொல்கிறார்கள். முதல் மாடி கட்டுவதால அந்தப் பேரூராட்சிக்கு வருமானம் வருகிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இப்போது இருக்கிற நிலைமையை மாற்றி முதல் மாடி கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த ஊர் என்று குறிப்பிட்டுக் கேட்டால் பதில் கொடுக்க இயலும்.

102 (*வினா எண் 229)—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சேந்தமங்கலம் நகரத்தில் (I.U.D.P.) திட்டத்தின் நிதி உதவியுடன் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டு சேலம் மாவட்டம் வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இதற் கான முன் மொழிவுகள் அரசிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன அரசும் அதனை பரிசீலனை செய்து பதில் அனுப்பியிருக்கிறது. இதற்காக நிலம் ஒதுக்கீடு இருந்தால் இந்தத் திட்டத்தில் சேர்த்து கொள்ளலாம் என்று அரசு பதில் அனுப்பி இருக்கிறது. ஆகவே வருகிற ஆண்டிலே திட்டத்திலே சேர்த்துக்கொள்ள அரசு முயற் சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 1985-86 ஆம் நிதி ஆண்டில் முன்மொழிவுகள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கிடைக்கப்பெறுமானால் இதுபற்றி பரிசீலிக் கப்படும்.

## கிராமங்களில் மேல்நிலை நீர்த்தொட்டிகள்

**103** (*வினா எண் 9)—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்பு மிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களிலும் மேல்நிலைத் தொட்டி மூலம் ( O. H. T. ) குடிநீர் வழங்கும் சிறப்புதத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) தமிழகத்தின் குடியிருப்புகளில் உள்ள மக்கட்
தொகைக்கேற்ப கையிறைப்பான்கள் அல்லது மேல்நிலைத்
தொட்டியுடன் விசையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்
படுகிறது. தற்போதுள்ள நடைமுறை விதிகளின்படி ஒரு
குடியிருப்பில் மக்கள்தொகை 750-க்கு மேல் இருந்தால்
மேல்நிலை தொட்டி கட்டி விசையிறைப்பான் மூலம் குடிநீர்
வழங்கப்படும். மக்கட்தொகை 750-க்கு குறைவாக உள்ள
குடியிருப்புகளில் நீர் ஆதாரம் குடியிருப்பின் எல்லைக்கு
வெளியே இருந்தாலும் மேல்நிலைத்தொட்டி விசையிறைப்பான்
மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே குடியிருப்பின்
மக்கட்தொகை 750-க்கு கீழ் இருந்து நீர் ஆதாரம் குடி
யிருப்புக்குள்ளேயே இருந்தால் மட்டுமே, மக்கட்தொகை
300-க்கு ஓர் கையிறைப்பான் வீதம் போடப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சர் அவர்கள்
மக்கள் தொகை அடிப்படையில் இந்த மேல்நிலை நீர்த்
தேக்கத் தொட்டிகள் கட்டப்படுகின்றன என்ற விவரத்தைச்
சொன்னார்கள். எந்த ஆண்டு எடுத்த மக்கள் தொகை
அடிப்படையில் இந்தக் கணக்கு எடுக்கப்படுகிறது?
கிடைத்த தகவல்படி 1971 ஆம் ஆண்டு அல்லது 1977 ஆம் எனக்கு
ஆண்டு என்று கணக்கைச்
இப்போது அண்மையில் எடுத்த சொல்லியிருக்கிறார்கள்.
கணக்கை—எடுத்துக் கொண்டால் கணக்கை—மக்கள் தொகை
பயன்பெறுகிற வாய்ப்புகள் இன்னும் நிறைய கிராமங்கள்
மேல்நிலை நீர்த்தேக்கத் இருக்கின்றன. ஆகவே இந்த
எந்த ஆண்டில் தொட்டிகள் கட்டி முடிக்கிற பணி
எதிர்பார்கிறார்கள் நிறைவுபெறுமென்று அமைச்சர் அவர்கள்
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர்
அவர்களே, 1976—77-ஆம் ஆண்டிலிருந்து நாம் இதை ஆய்வு
செய்து, வகைப்படுத்தி, இந்த மேல்நிலை நீர்த்தேக்கத்
தொட்டிகள் கட்டுகிற முயற்சியை மேற்கொண்டு இருக்
கிறோம். அதன்படி மொத்தம் 47,075 குடியிருப்புகளில்
18,167 குடியிருப்புகளுக்கு தகுந்த நீர் ஆதாரம் இல்லையென்று
தெரிய வந்துள்ளது. நாம் 17,173 குடியிருப்புகளுக்கு இந்தத்
திட்டத்தை முடித்திருக்கிறோம். ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்
தில் ரூ. 222.82 கோடி இந்த முயற்சிக்காக ஒதுக்கீடு செய்யப்
பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த
தைப் போல முன்பு எடுத்த வகைகளின் அடிப்படையில்
பார்த்தால் இதிலே சில சிக்கல்கள் இருக்கக்கூடுமென்று
தெரிகிறது. ஆகவே இதை மறு ஆய்வு செய்ய அரசு
விரும்புகிறது.



திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது மக்கள் தொகை குறைவாக இருக்கிற ஊர்களில் கை இறைப்பான்கள் மூலமாக குடிதண்ணீர் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். இந்த கை இறைப்பான்கள், ''ஹேண்ட் பம்ப்ஸ்'', அடிக்கடி பழுதுபடுகிற நிலைமையில் இருக்கின்றன. பொது வாழ்க்கையில் இருக்கிற எங்களைப் போன்றவர்கள் கிராமங்களுக்குச் செல்கிறபோது மக்கள் நிறைய குறைகளை சொல்கிறார்கள். ஆகவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகமான ஆட்களை அளித்தாவது, ஒன்றிரண்டு நாட்களில் ஏற்படுகின்ற பழுதை சரிசெய்வதற்கு அரசு ஏதாவது ஒரு முயற்சியை எடுத்துக்கொண்டு, குடிதண்ணீர் வழங்குவதற்கான முயற்சியை துரிதப்படுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையோடு கலந்து பேசி தகுந்த முடிவுகள் எடுக்கப்படும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீருக்காக மேல்நிலைத் தொட்டிகள் கட்டுகிற போது, அதைக் கட்டுவதற்கு முன்னாலே, அங்கே தண்ணீர் வசதி இருக்கிறதா, என்பதைப் பார்க்காமலேயே பெரும்பாலான இடங்களில் அப்படிப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு, அவைகள் மக்களுக்குத் தேவைப்படாமல் இருக்கின்றன, கட்டப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு தண்ணீர் சப்ளை இல்லாமல், 4, 5 ஆண்டுகள் அப்படியே கிடக்கின்றன. எனவே இப்படிப்பட்ட நிலையைப் போக்கவும், குடிநீரை உடனடியாக மக்களுக்கு வழங்கவும், அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பணிகள் எல்லாம் ஒரே நேரத்திலே செய்து முடிக்கவேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக அப்படிப்பட்ட மேல் நிலைத் தொட்டிகள் கட்டப்படுகின்றன. ஆனால் சில இடங்களில் மேல்நிலை தொட்டிகள் கட்டி முடிக்கப் பட்டதற்கு பிறகு, தண்ணீர் எடுக்கக்கூடிய நீர் ஆதாரங்கள் உள்ள கிராமங்களிலே அப்படிப்பட்ட சிக்கல்கள் அல்லது வேறு சில சிக்கல்கள் காரணமாக இது தாமதப்படுகிறது என்பதை அரசு அறிகிறது. அத்தகைய முயற்சிகளை எண்ணிப் பார்த்து, எதிர்காலத்திலே முறையான முயற்சிகளை எடுக்கக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலே குடிநீர் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதுவும் குறிப்பாக வறட்சிக் காலத்தில், குடிநீர் பற்றாக்குறை தமிழகம் முழுவதும் இருக்கிறது. குறிப்பாக நம்முடைய தர்மபுரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியிலே பருவ மழை தவறியதன் காரணமாக குடிநீர் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆங்காங்கே இருக்கக்கூடிய குடிநீர்த் தொட்டிகள், கிணறுகள் எல்லாம் வறண்டு போய் தண்ணீர் இல்லாமல் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள்.

எனவே, ஆங்காங்கே ''போர் வெல்'' போடுவதற்கு அரசாங்கத்திலே நடவடிக்கை எடுத்து, இப்படி குடிநீர் தொட்டிகள், கிணறுகள் வறண்டு போய் இருக்கும் இடங்களை ஆழப்படுத்தி, குடிநீர் வசதியை செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ? மேலும் இப்படி கட்டப்பட்ட இடங்களில் மேல்நிலைத் தொட்டிகள் சரியாக பராமரிப்புச் செய்யப்படாமலும், ஆங்காங்கு உள்ள இயந்திரங்கள் பழுதடைந்தும் இருக்கின்ற காரணத்தாலும், அவைகள் எல்லாம் பல மாதங்கள் ஆகியும் ரிப்பேர் செய்யப்படாமல் இருப்பதாலும், மக்கள் தண்ணீருக்காக மிகவும் அவதிப்படுகிறார்கள்.

எனவே, பழுதடைந்த அந்த இயந்திரங்களை ரிப்பேர் செய்து, குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு போர் வெல்கள் போட்டு, நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ? மேலும் அமைச்சர் அவர்கள் தீவிரமாக நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். என்னுடைய தர்மபுரி மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டு இருப்பதால்—அமைச்சர் அவர்கள் அளித்துள்ள அறிக்கையில் கூட இதைப்பற்றி எதுவும் கொடுக்கப்படவில்லை—இந்தப் பிரச்சினையைப் போக்க தீவிரமான நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, ஏற்பட்டு இருக்கக்கூடிய வறட்சியை முன்னிட்டு, தமிழகத்திலே மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிற வட்டங்களில், 25 வட்டங்களை தெரிவு செய்து அதிலே 620 ஆழ் குழாய் கிணறுகள் போடப்பட இருக்கின்றன. இதிலே பாதிக்கு மேல் முடிந்து விட்டன. இருந்தாலும், ஏற்கனவே போடப்பட்டு இருக்கிற ஆழ் குழாய் கிணறுகள்—ஏறத்தாழ 68 ஆயிரம் போடப்பட்டு இருக்கின்றன—அவைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்படுத்துவதுதான் நாம் பிரச்சினையை சமாளிப்பதற்கு உதவும் என்று அரசு கருதுகிறது.





**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆழ் குழாய் கிணறுகள் மூலமாக வழங்கப்படுகிற குடி தண்ணீர், அதிலே ஏற்படுகிற சிறு குறைபாடுகள், இடத்திற்கு ஏற்றவாறு அந்தத் தன்மையைப் பொறுத்து இருக்கிறது என்று சொன்னார்கள். ஆங்காங்கே மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு, ஆழ் குழாய்க் கிணறுகள் இறக்கப்பட்டு, அரசினுடைய பணங்கள் லட்சக்கணக்கான அளவில் செலவழித்து, அந்த தண்ணீரை மேலே எடுத்து தொட்டிக்கு செலுத்தவேண்டிய மின்சார மோட்டார்கள் சக்திவாய்ந்ததாக இல்லாத காரணத்தினால், 20, 25 அடிக்குள்ளே இருக்கிற தண்ணீரை எடுத்து மேலே தொட்டிக்கு செலுத்த முடியாத அளவிற்கு இருக்கிறது.

எனவே, அப்படிப்பட்ட சக்தியில்லாத அந்த மோட்டார்களை நீக்கிவிட்டு, சப்மெர்சன் போன்ற பம்புகளை இறக்கி, இந்த வாட்டர்போர்டு மூலமாக முதலிலே ஒப்படைக்கிற போது, இதையும் சேர்த்து வைத்தால்தான் ஆங்காங்கு இருக்கிற தண்ணீரை மேலே கொண்டு வந்து நீர்த்தேக்கத் தொட்டிகளில் செலுத்த முடியும். எனவே இதை பரிசீலனை செய்து, வாட்டர் போர்டு மூலமாக ஊராட்சி ஒன்றியத்திலே குறைகளாக ஒப்படைக்கப்படுகிறது, ஒப்படைக்கிறபோது, குறைகளை நிரந்தரமாக நீக்கவும், 100, எனவே இந்த குறைகளை நிரந்தரமாக நீக்கவும், எனவே இந்த குறைகளை இருக்கிற தண்ணீரை எடுக்கக்கூடிய 150 அடிக்குக் கீழே இருக்கிற தண்ணீரை பொருத்தி மக்களுக்கு அளவிற்கு உள்ள சப்மெர்சன் பம்புகளை பொருத்தி மக்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு துரிதமான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கின்ற கருத்துக்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

**கோவை மாவட்டத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்**

**104** (*வினா எண் 196)—**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திற்கு பயனளிக்கும் உலக வங்கி திட்டமான அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இத் திட்டம் எப்போது முடிவுறும் ?

[1985 ஜூன் 4

(இ) இத் திட்டத்தில் காரமடை பேரூராட்சி சேர்க்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இத் திட்டம் 1985–86 ஆம் ஆண்டின் மத்தியில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(ஆ) செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளில் இருந்து 5 ஆண்டுகளில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) இத் திட்டத்தில் காரமடை பேரூராட்சி சேர்க்கப்படவில்லை.

திரு. ம. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் சுமார் 700-க்கும் மேற்பட்ட பல்வேறு கிராமங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் இந்த குழாய்களை பதித்து வேலைகளைத் துவங்குகிற இடமே காரமடை ஒன்றியம் தான். காரமடை ஒன்றியத்தில் இருக்கிற வேறு நீர் ஆதார வசதிகள் இல்லாத அந்த கிராமங்களை இதில் சேர்ப்பதற்கு—காரமடை பேரூராட்சிக்கு மிக கடுமையான குடிநீர் தட்டுப்பாடு இருந்து வருகிறது. ஆகவே, அந்த காரமடை பேரூராட்சியோடு காரமடை ஒன்றியத்தில் இருக்கிற கிராமங்களும் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று நான் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளிடமும், அமைச்சர் அவர்களிடமும் மனு கொடுத்து இருக்கிறேன். ஆகவே பரிசீலித்து காரமடை ஒன்றியத்தில் உள்ள கிராமங்களை இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடைக்கின்ற நீர் ஆதாரங்களை ஒட்டி தான் எந்த அளவுக்கு இவர்களுக்கு கொடுக்கமுடியும் என்பதைக் கணக்கில் கொண்டு நாம் இந்தத் திட்டத்தை வகுக்க முடியும். நமக்கு இருக்கின்ற விருப்பம், ஆர்வம் இவைகளை அனைத்தையும் உள்ளடக்கி திட்டத்தில் இணைப்பது என்பது மிக கடுமையானது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து இருக்கின்ற அந்த கருத்தின் அடிப்படையில் இந்த குழாய்கள் பதித்ததற்குப் பிறகு 1.712 மில்லியன் லிட்டர் தண்ணீர் காரமடைக்கு எடுத்து கொண்டு வருவதற்கு வகை செய்யப்பட்டு இருக்கிறது.

திரு. பு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உலக வங்கித் திட்டத்தின் கீழ் நகர பஞ்சாயத்துக்ள், கிராமப் பஞ்சாயத்துக்களில் கொடுக்கப்படுகின்ற



1985 ஜூன் 4]

அடிப்படைத் திட்டத்தில் 1960 ஆம் ஆண்டு டின் ஷீட் தகரத்தில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை நீக்கி மீண்டும் சிமெண்ட்டால் கட்ட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆயும்.

திரு. பூ. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு உலக வங்கிக் கொடுக்கிற கடனில் நம்முடைய அரசின் பங்கு எவ்வளவு என்பதையும் உலக வங்கி கொடுக்கிற கடன் தொகையின் வட்டி விகிதங்கள் என்ன என்பதையும் மத்திய அரசுக்கு நாம் திருப்பிக் கொடுக்கிற கடன் வட்டி விகிதம் என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றித் தகவல் இல்லை.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கும் நகரத்தில் திருவண்ணாமலை நகரமும் இணைக்கப்பட்டுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆழ் துளை கிணறுகள் வெட்டப்பட்டு வருகின்றன என்று கூறியிருக்கிறார்கள். கடுமையான வரட்சி நிலவுகின்ற இந்த நேரத்தில் குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் சொந்தமான அந்த ஆழ் துளைக் கிணறுகள் போடும் இயந்திரங்கள் மூலம்தான் வேலைகள் முடிக்கப்படும் என்று ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் சொல்கிறார்கள். இதை போர்க்கால அடிப்படையில் இந்தக் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண்கின்ற வகையில் தனியார்களிடமிருந்து வாடகைக்கு ஆழ் துளை கிணறுகள் போடும் இயந்திரங்களை எடுக்க அரசு அனுமதிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் இடத்தில் போதுமான அளவுக்கு அந்தக் கருவிகள் இருக்கின்றன. தேவைப்பட்டால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

105 (*வினா எண் 486)—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் சிறுவாணி குடிநீர்த் திட்டத்தால் பயன்படும் கிராமங்கள் எத்தனை ?

(ஆ) இத் திட்டத்திற்கான மொத்த செலவு எவ்வளவு ?

(இ) வீடுகளுக்கு இணைப்புக் கொடுக்க கட்டணம் வசூலிக்கப்படுகிறதா ?

(ஈ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) 19 பேரூராட்சிகள் மற்றும் 8 ஊராட்சிகள் சிறுவாணி குடிநீர்த் திட்டத்தால் பயன்பெறுகின்றன.

(ஆ) இத் திட்டத்திற்கான மொத்த செலவு ரூ. 3,088.46 இலட்சம்.

(இ) ஆம்.

(ஈ) கோவை மாநகராட்சி பகுதிகளுக்கு வீட்டிணைப்புக் கட்டணமாக ஒரு இணைப்பிற்கு ரூ. 600 வசூலிக்கப்படுகிறது. மேலும் வீட்டு உபயோகத்திற்குப் பயன்படும் தண்ணீருக்கு, ஒவ்வொரு 4,500 லிட்டருக்கும் ரூ. 5.00 ஆக மீட்டர் கட்டணம் உள்ளது. இதர உபயோகத்திற்குப் பயன்படும் தண்ணீருக்கு ஒவ்வொரு 4,500 லிட்டருக்கும் ரூ. 10.00 ஆக மீட்டர் கட்டணம் உள்ளது. குறைந்த கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20 ஆக இருக்கின்றது. மேலும், ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளின் மீட்டர் கட்டணமாக ஒவ்வொரு 1,000 லிட்டருக்கும் சில இடங்களுக்கு ரூ. 1.00 என்றும் சில இடங்களுக்கு ரூ. 1.35 என்றும் முதலீட்டுக்குத் தக்கவாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகளுக்குக் கொடுக்கப்படுகின்ற இணைப்புகளுக்கு ஒவ்வொரு இணைப்புக்கும் சுமார் 1,000 ரூபாய் முதல் 1,500 ரூபாய் வரை வாங்கப்படுகிறது. இதை அரசு அறியுமா ? அப்படி வாங்கப்படுகின்ற தொகைக்கு எந்தவிதமான ரசீதும் கொடுக்காமல் குறிப்பிட்ட பிளம்பர்களே அந்த வேலைகளை எடுக்கின்ற வகையில் குறிச்சி, குனியமுத்தூர் பேரூராட்சியில் நடைமுறையில் இருந்து வருவதை அரசு அறியுமா ? அதை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் எதுவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து இருக்கின்ற கருத்தின் அடிப்படையில் விவரங்களை கேட்டு அது பற்றி உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.



(முற்பகல் 9–50)

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி வீடுகளுக்கு இணைப்புக் கொடுத்து இருப்பதிலே, அமைச்சர் அவர்கள், அங்கே 4,500 லிட்டருக்கு சுமார் 7½ லிருந்து 10 ரூபாய் வரைக்கும் கட்டணம் விகிதம் விதிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அமைச்சர் அவர்களிடத்திலே தனியாகப் பேசும் போதும், ஏற்கெனவே, அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்ற நிலையிலேயும், இந்த மீட்டர் சிஸ்டத்திலே இருக்கின்ற குழப்பமான சில நிலைமைகளை நான் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். சாதாரணமாக மீட்டர் 1,001 என்று வைத்துக் கொண்டாலும் அதை 2,000 என்று கணக்கெடுத்துக் கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. அந்த மீட்டர் சிஸ்டத்திலே இருக்கக்கூடிய குழப்பமான நிலையைப் போக்குகின்ற முறையில், காம்பவுண்டிங் முறையிலே ஒரு ரேட்டை நிர்ணயம் செய்வது முறையாக இருக்கும் என்று இந்த மன்றத்திலேயும் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். இது போன்ற சிக்கலை, தமிழ்நாடு வாட்டர் டிரெயினேஜ் போர்டு என்று இருக்கிற ட்வாட் அதிகாரிகளையும், மாநகராட்சி அதிகாரிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்டு ஒரு கூட்டுக் கூட்டத்தை அமைச்சர் அவர்கள் கூட்டி, சாதாரணமாக கோவை மாநகராட்சியின் எல்லைக்குள்ளே இருக்கிற மக்கள் 600 ரூபாய், 1,000 ரூபாய் வரைக்கும் ஒரு வீட்டு இணைப்புக்குக் கட்டணம் செலுத்தக் கூடிய நிலையிலிருந்து மக்களுக்குப் பாதுகாப்புத் தரத் தக்க ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா ? இதில் இருக்கிற சிக்கலை உணருமா ? காம்பவுண்டிங் முறையை கடைப்பிடிக்குமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கட்டணம் வசூலிப்பதைப் பற்றிக் குறை சொல்லவில்லை. அது வகைப்படுத்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தண்ணீர் திட்டத்திற்கு வாங்கியிருக்கிற கடனைத் திருப்பிக் கட்ட வேண்டிய காரணத்தால்தான் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. வேறு காரணம் அல்ல. அதை எந்த வகையிலே வகைப்படுத்துவது என்று அரசு ஆராயும்.

திரு. எஸ். நாராயணன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, பாளையங்கோட்டை போன்ற நகரங்களில் ரிசர்வாயர் பெரிதாக இருந்தும், தாமிரபரணி நதியிலே தண்ணீர் நிறைய இருந்தும், அதில் பம்ப் பண்ணி மக்களுக்கு சப்ளை செய்வதற்கான கரண்ட் ரிசர்வாயர் பம்ப்பிங் ஸ்டேஷனில் இல்லை என்று சொல்கிறார்கள். 16 மணி நேரம் தான் கரண்ட் கிடைக்கிறது. 22 மணி நேரம் கரண்ட் கிடைத்தது என்றால், நன்றாக சப்ளை பண்ணலாம் என்று சொல்கிறார்கள். இந்த ரிசர்வாயர் போன்ற பகுதிகளில் பம்ப்பிங் ஸ்டேஷன் பகுதிகளுக்குக்

[1985 ஜூன் 4

கரண்ட் வழங்குவதற்கு, தனி பீடர் எலக்டிரிசிடி போர்டிலே யிருந்து அமைத்துக் கொடுக்க திட்டம் உள்ளதா? தண்ணீர் வாங்கிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர் களே, மின் துறையிடம் இது பற்றி குடிநீர் வடிகால் வாரியம் கேட்கும்.

திரு. கு. மணி: தலைவர் அவர்களே, சிறுவாணி அணைக் கட்டு உயர்த்தப்பட்டு, அதனுடைய கொள்ளளவு அதிகப்படுத் தப்பட்டதற்குப் பிறகு, அங்கே தண்ணீர் ஸ்டாக் இன்றைக்கு, கோவை மாநகராட்சிக்கும் அதனுடைய வழித் தடங்களிலே இருக்கும் கிராமங்களுக்கும் கொடுப்பதற்கு தேவையான அளவுக்கு மேலே இருக்கிறது. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியிருக்கும்போது, பல இடங்களில் இணைப்புக் கொடுப் பதற்கு இன்னமும் மறுத்துக் கொண்டிருப்பதும் அதிகமான மீட் டர் இணைப்புக்களை கொடுக்காமல் இருப்பதும், வழித் தடங் களில் இருக்கும் கிராமங்களுக்கு பல இடங்களுக்கு தேவையான அளவுக்கு, குறைந்த பட்ச தண்ணீர் கொடுக்காமல் இருப்பதையும் கவனித்து, நிறைவேற்ற உடனே அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர் களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறுவாணி குடிநீர்த் திட்டத்தினால் பயன் பெறும் தொண்டா முத்தூர், ஆலாந்துறை, கூலாம்பட்டி பேரூராட்சிகள், திட்டச் செலவை அரசுக்குத் திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கின்றன. எனவே, திட்டச் செலவை அரசே ஏற்றுக் கொள்கிற வகையில் பேரூராட்சி மன்றங்களுக்கு உதவி வழங்கப்படுமா? சலுகை காட்ட அரசு பரிசீலிக்குமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இயலாது.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்: தலைவர் அவர்களே, அதிகாரிகள் அரசினுடைய உத்தரவை ஏற்காமல், தங்களுக்கு வசதி இருந்தும், குடிதண்ணீரை நல்ல முறையில் பொதுமக்க ளுக்கு விநியோகிக்காமல் தாமதப்படுத்தி வருகிறார்கள். இது பற்றி அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் அரசு அதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர் களே, பொதுவாகவே, இப்படி ஒரு தாமதம் இருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது. ஆகவே, அதைச் சரிப்படுத்துகின்ற வகையிலே அரசு முயற்சிகளை மேற்கொள்ள இருக்கின்றது.



1985 ஜூன் 4]

106 (*வினா எண் 197)— திரு. மா. சின்னராசு: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்த, அந்நகராட்சி அரசிடம் கடன் கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) மேட்டுப்பாளையம் நகராட்சி அதன் குடிநீர் மேம் பாட்டுத் திட்டத்திற்காக, ரூ. 7.48 இலட்சத்திற்கு, அரசிடம் கடன் கேட்டுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் நகராட்சி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப் பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட காரணத்தினால் அந்த பம்புகள் எல்லாம் திறனை இழந்து அதன் காரணத்தினால் மக் களுக்குத் தேவையான குடிநீரை வழங்க முடியாமல் வறட்சிக் காலத்திலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. வறட்சித் திட்டத்தின் அடிப்படையில் Adverse Seasonal Condition அடிப்படையில் அரசாங்கம் இயன்ற அளவுக்கு மானியமாகக் கொடுக்க முன்வருமா? அது கொடுக்கப்பட்டால்தான் குடிநீர்ப் பிரச்சினையை அங்கே உடனடியாகத் தீர்க்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு அரசு அதை விரைவாக வழங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அந்தக் கருத்தின் அடிப்படையில் அரசு நிச்சயமாக அதைப் பரிசீலிக்கும்.

ஆண்டிப்பட்டி தொகுதியில் காற்றுத் தடுப்பு நடவடிக்கைகள்.

107 (*வினா எண் 370)— திரு. இரா. முத்தையா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதியில் [illegible] காற்றுக் காலத்தில் [illegible] பயிர்கள் மணற்காற் றினால் பாதிக்கப்படாமல் [illegible] காற்றுத் தடுப்பு நடவடிக்கை யாக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

(ஆ) இதன் காரணமாக ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மதுரை மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறையில் காற்று அரிப்பு தடுப்புப் பணிகளை செயல்படுத்த போடியில் ஒரு உபகோட்டம் 1959 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. ஆண்டிப்பட்டி பகுதியில் 1984–85 ஆம் ஆண்டு முடிய 322, 366 ஹெக்டேர் விளை நிலங்கள் இத் திட்டத்தினால் பாதுகாக்கப்பட்டு பயன் அடைந்துள்ளன.

(ஆ) காற்று அரிப்பு தடுப்புத் திட்டத்தின் கீழ் இப்பகுதியில் காற்று அரிப்பு தடுப்புச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தடுப்புச் சாலைகளில் நடப்பட்டுள்ள பல்வகை மரங்கள், விளை நிலங்களை பாதுகாப்பதுடன் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானமும் கிடைக்கவும், கிணறுகள் மண்படிந்து தூர்ந்து போகாமல் தடுக்கவும் உதவுவதுடன் உட்சுவாசிக்கும் காற்றிலுள்ள தூசுத்தன்மையையும் குறைக்கிறது. இத்திட்டத்தால் இப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புகளும் கிடைக்கின்றன.

திரு இரா. முத்தையா : தலைவர் அவர்களே, இந்த மணற்காற்றினால் பாதிக்கப்பட்டுள்ள விளை நிலங்கள் சீர்செய்யப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால், ஆண்டிப்பட்டியிலிருந்து கண்டமனூர் வரையிலும் 10 மைல் சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களிலே உள்ள நிலங்கள் எல்லாம் இன்னும் மணல் மூடிய நிலையில் தான் இருக்கின்றன. அதை அகற்றுவதற்கு இந்தத் துறை விவசாயிகளுக்கு ஏதாவது உதவி செய்யுமா ? அதோடு இந்தக் காற்றுத் தடுப்பிற்காக மரங்களை நடுகிறபோது ஆங்காங்கே உள்ள விளை நிலங்களையொட்டியே நடுவதால் அந்த விளை நிலச் சொந்தக்காரர்கள் அந்த மரங்கள் பெரிதானவுடன் அவைகளை வெட்டி விடுகிறார்கள். எனவே, அதைத் தடுக்கிற முறையிலே வைகை ஆற்றின் ஓரத்திலே அதிகமான அளவில் மரங்களை நடுவதற்கு துறை முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி, மரிக்குண்டு, உசிலம்பட்டி, சிம்மராசநாயக்கனூர் ஆகிய கிராமங்கள் பயன் அடைந்திருக்கின்றன என்று துறை குறிப்பு தந்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் எந்த எந்தக் கிராமங்களிலே அந்தப் பணிகள் செய்யப்படவேண்டுமென்பதை விரிவாக எடுத்துச் சொன்னால் அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும். விளை நிலங்களுக்கு அருகாமையிலே மரங்களை நடாமல் ஆற்றின் ஓரத்திலே நடவேண்டுமென்று சொல்கிறார்கள், விளை நிலங்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்திற்காகத்தான் இந்தத் திட்டமே செயல்படுத்தப்படுகிறது. ஆகவே, அங்கேயே நடுவதுதான் பொருத்தமாக இருக்கும்.



## முந்திரி பயிர் அபிவிருத்தி

(108—*வினா எண் 735)—திரு.எஸ்.இராசாராமன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முந்திரிப் பயிரை அபிவிருத்தி செய்ய உலக வங்கி உதவியுடன் சுமார் ரூபாய் 3,950.46 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) 1982–83ஆம் ஆண்டில் உலக வங்கி உதவியுடன் 20,000 ஹெக்டேர் பரப்பளவில் புதியதாக முந்திரி பயிர் சாகுபடி செய்யவும், ஏற்கனவே 23,500 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளதை மேம்படுத்தவும் ரூ. 39.50 கோடி செலவில் ஒரு முந்திரி அபிவிருத்தி திட்டம் செயல்படுத்த, பரிசீலிக்கப்பட்டு பின்னர் அது கைவிடப்பட்டது.

திரு. எஸ். இராசாராமன் : தலைவர் அவர்களே, அங்கே ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு . கைவிடப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எதற்காக அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. தமிழகம் பூராவும் ஆயிரக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் முந்திரி பயிர் அபிவிருத்தி செய்யக்கூடிய நிலையில் —தஞ்சாவூர் மாவட்டத்திலே மருங்குளம் பகுதியிலேயும், புதுக்கோட்டை மாவட்டத்திலே ஆதனக்கோட்டை பகுதியிலேயும் ஆயிரக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் இருக்கின்றன— இருக்கின்றன, என்பதை அரசு அறியுமா ? அந்த நிலங்களை அரசு கையகப்படுத்தி அங்கே முந்திரிப் பயிர் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நாம் தயாரித்து உலக வங்கி உதவியைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பினோம். மத்திய அரசும் அதனைப் பரிசீலனை செய்து நபாட் என்ற நிறுவனமும் இவ்வளவு பெரிய திட்டம் சரியாகப் பலன் அளிக்காது என்றும் வேறு மாநிலங்களிலே இப்படிப்பட்ட திட்டங்கள் போடப்பட்டு அவை சரியாகப் பலனை அளிக்கவில்லை என்றும் தெரிவித்து அந்தக் காரணத்தை எடுத்துக் காட்டிய காரணத்தினால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சிறிய அளவிலே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக விரிவான செயற்குறிப்புகளை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

[1985 ஜூன் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

(முற்பகல் 10—00)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏறத்தாழ ஒரு இலட்சம் தொழிலாளர்கள் முந்திரித் தொழிற்சாலைகளிலே கச்சா முந்திரி கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் வேலையில்லாமல் இருக்கின்ற நிலைமையைப் போக்குவதற்காக, முந்திரிப் பயிரை அபிவிருத்தி செய்து எந்தெந்த மாவட்டங்களில் பயிரிட முடியுமோ அந்த அளவிற்குத் திட்டத்தை அரசு வைத்திருக்கிறதா ? எந்தெந்த மாவட்டங்களில் இப்படிப்பட்ட செடிகள் பயிரிடப்படுகின்றன ? அதை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு ஏதேனும் திட்டம் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, தோட்டக் கலைத் துறையினால் இப்பொழுதுதான் அந்தத் திட்டம் செயற் குறிப்பில் வகுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே சாகுபடி செய்யக்கூடிய பரப்பளவை மேம்படுத்துவதற்கு, அவர்களுக்கு உதவி செய்வதற்கு எந்த எந்த வகையிலே முயற்சி எடுக்க முடியுமோ அத்தகைய முயற்சிகளை அரசு செய்யும்.

## திருத்துறைப்பூண்டி மருத்துவமனை

(109 —*வினா எண் 138) —திரு.பொ.உத்திராபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருத்துறைப்பூண்டி நகரத்தில் மருத்துவமனையை ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு வெவ்வேறு இடத்தில் உள்ளதை பெண்கள் பிரிவு உள்ள இடத்திலேயே மருத்துவமனையை அமைக்கும்படி கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



1985 ஜூன் 4]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தாலுக்கா மருத்துவமனை என்பது, எப்பொழுது அந்த மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டதோ அன்று முதல் இன்று வரையில் அதே நிலையில்தான் இருக்கிறது. மருத்துவமனை இருக்கின்ற இடம் ரொம்பவும் குறுகலான இடம். அங்கே 48 படுக்கைகள் இருக்கின்றன. அதைப் போல பெண்கள் மருத்துவமனை, பேருந்து போகும் ரோட்டுக்கும் அப்பால் ஒரு இடத்தில் இருக்கிறது. இதனால் இரண்டு மருத்துவமனைகளுக்கும் சென்று வருவது என்றால் நோயாளிகளுக்குப் பெரும் கஷ்டம் ஏற்படுகிறது. இந்த நிலையில் ஆண்கள் மருத்துவமனையில் காலராக் கொட்டகை இருக்கிறது. டெட்டனஸ் நோயினால் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. பெண்கள் மருத்துவமனை இருக்கின்ற பகுதியில் அதிகமாக இடம் இருக்கிறது. அந்த இடத்தில், கட்டிடம் கட்டி, புதிய நாகரிக உலகத்திற்குத் தகுந்தாற்போல் மருத்துவமனையைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது மாதிரியாக அங்கே இரண்டு மருத்துவமனைகள் இருக்கின்றன. பெண்கள் மருத்துவமனைக்கும், ஆண்கள் மருத்துவமனைக்கும் இருக்கக்கூடிய இடைவெளி 150 மீட்டர்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு பிரச்னை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஆண்களுக்காகக் கட்டப்பட்ட மருத்துவமனையில் இடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையில் பெண்கள் மருத்துவமனை இருக்கும் அந்தப் பகுதியிலேயே புதிய கட்டிடம் கட்டுவதற்கான தாக்கீது அரசுக்கு வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை இங்கே வாக்குறுதியாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தப் புதிய இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அதற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நாகப்பட்டினத்தில் உள்ள டி.எம்.ஓ. நேரில் வந்து பார்த்து அவர்களே சிபாரிசு செய்திருப்பதாக என்னிடத்தில் சொன்னார்கள். ஆகவே 1986 ஆம் ஆண்டிலேயே இந்த வேலைகளைத் துவக்குவதற்கு அரசு முன் வருமா ? ஏனென்றால், அந்தப் பகுதியில் உள்ள சாதாரண மக்கள் இந்த இரசு மருத்துவமனையில் உள் நோயாளிகள் வெளி நோயாளிகள் பகுதிகளில் நெருக்கடி இருப்பதால் காலம் கடத்தாமல் இருப்பதற்காகத் தனியார் மருத்துவமனைகளில் செல்லுகின்ற நிலைமை இருக்கிறது. எனவே, இந்த

நிலைமையைப் போக்குவதற்காக வரும் ஆண்டிலேயே அமைச்சரவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்து அந்தப் பகுதி மக்களின் நலனை கருத்திற்கொண்டு செய்வதற்கு வாக்குறுதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஓரளவிற்கு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் அவர்களுக்கே தெரியும் சென்ற ஆண்டு இந்தப் பிரச்சினை சொல்லப்பட்டு, பிறகு டி.எம்.ஒ.வினிடத்தில் நானே சொல்லி, நல்ல ப்ரப்போசலை அனுப்புங்கள் என்று சொன்னபிறகு அவர்கள் நேரில் பார்வையிட்டு அனுப்பியிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்வதற்குக் காரணம், அது பார்ட்-2 ஸ்கீமில் வருவதற்கான வாய்ப்பு இல்லை என்றாலும், உடனடியாகப் பரிசீலித்துத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்.

(110—*வினா எண். 184)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை அரசு மருந்தகமாக மாற்ற ஏதேனும் தடை உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள 18—1—1984 ஆம் தேதியிட்ட அரசு ஆணைப்படி தற்போதுள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு ஏற்பதில்லை என முடிவு செய்துள்ளது.

(ஆ) இவ்வாணையை மாற்றும் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை அரசு மருந்தகமாக மாற்றுகின்ற நடைமுறை அரசு ஆணையின் மூலமாக நிறுத்தப் பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் பெரும பாலானவைகள் சித்த மருந்தகங்களாகவும், ஆயுர்வேதிக் மருந்தகங்களாகவும் தான் இப்பொழுது செயல்பட்டு வருகின்றன. எனவே, அவைகளை அரசு மருந்தகமாக மாற்றுகின்ற உத்தேசம் இல்லை என்றாலும், ஊராட்சி ஒன்றியம் மருந்தகங்களை





அலோபதிக் மருந்தகமாக ஆரம்பிக்க முன் வந்தால் அரசாங்கம் அதற்கு உதவுவதற்கு முன் வருமா அதற்கு உத்தரவு கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சித்த மருந்தகங்களை அலோபதியாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை விட்டிருக் கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலே, மாற்ற வேண்டிய தேவை இல்லையென்றுதான் கருதுகிறது. ஏனென் றால், சித்த வைத்தியத்திலே நல்ல மருந்துகள் இருக்கின்றன. ஆகவே, தேவையினுடைய அடிப்படையிலே மருந்தகங்களை, மருத்துவ மனைகளை அமைக்கவேண்டுமென்பது அரசின் எண் ணம். சித்த மருந்தகங்களை மாற்றி அமைப்பது என்பது இயலாத காரியமாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரீஸ் நடைமுறைப்படுத்துகிறார்கள். அதற்கு Payment of maintenance grant Rs. 5,400 ஆண்டுதோறும் தருகிறோம். அதை நிறுத்தி வைக்க வேண்டாம் என்றுதான் சொல்லியிருக்கிறோம், அதை அரசாங்கம் கொடுக்க வேண்டாம் என்று அந்த ஆணையிலே நாம் எந்த மாறுதலும் செய்யவில்லை.

அதோடு Mini Health Centres, 264—இதுவரையில் துவக்கியிருக்கிறோம். அதிலே ரூ. 9,000 மத்திய அரசாங்கமும் ரூ. 9,000 வாலண்டரி ஏஜன்ஸீஸும் மாநில அரசாங்கம் ரூ. 9,000 ஆக ஆண்டுதோறும் ரூ. 27,000 செலவிலே, 264 மினி ஹெல்த் சென்டர்களை ஆரம்பித்திருக்கிறோம். அங்கே இருக் கிற வாலன்டரி ஏஜன்ஸீஸ் கொஞ்சம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதே மாதிரி மற்ற உறுப்பினர்கள் அங்கங்கு உள்ள வாலண்டரி ஏஜன்ஸிஸ் மூலமாக, அவர்களே முயற்சி எடுத்துக் கொண்டு ஆரம்பிப்பார் களானால், பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரீசை விட மிகச், சிறப்பான வகையில், இது பயன் அளிக்கும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே நடைபெற்றுக் கொண்டு வருகிற சித்த மருந்தகங்களும் ஆயுர்வேத மருந்தகங்களும் தொடர்ந்து நடக்கட்டும். ஆனால், நான் அமைச்சரிடம் விளக்கம் கேட்க விரும்புவது, ஊராட்சி ஒன்றியங்கள், அலோபதி மருந் தகங்களைத் தாங்களாகவே திறக்க முன் வருவார்களானால் அரசு உதவ முன் வருமா என்பதுதான். ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியமாக ரூ. 5,400 தொடர்ந்து கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்தத் தொகை என்றைக்கோ ஏதோ ஒரு காலத்திலே, எப்பொழுதோ நிர்ணயிக்கப்பட்ட தொகை. தற்போது ஊராட்சி ஒன்றியங்கள் நிதிப் பற்றாக்குறை

யுடன் இருந்து வருவதால், அந்தத் தொகையை உயர்த்திக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே வெளியிடப்பட்ட இன்னொரு ஆணையை நான் படித்துக் காட்டினால் மாண்புமிகு உறுப்பினருக்குக் கொஞ்சம் மகிழ்ச்சி தரும் என்று நம்புகிறேன்.

Panchayat Unions will be permitted to open new regular allopathy dispensaries in future and financial assistance from the State Government up to Rs. 100 for the maintenance of these dispensaries will be granted depending upon the financial position of the Panchayat. இந்த ஆணை 7—1—1977 அன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையிலே எந்தவிதமான மாறுதலும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையம்.

111—(*வினா எண் 562)—திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், வடகாடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே வடகாடு கிராமம், திருவலம் ஒன்றியத்தைச் சேர்ந்தது. அந்தக் கிராமத்திலே மட்டும் 8,000 ஜனத்தொகை இருக்கிறது. அதைச் சுற்றியிருக்கிற கிராமங்களைச் சேர்த்து 20,000 ஜனத் தொகை இருக்கிறது. அப்படியிருந்தும் 1977 ஆம் ஆண்டிலிருந்து அங்கு மருத்துவ மனை வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம். அப்பொழுது நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். இதுவரை அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது அமைச்சர் பதிலிலிருந்து தெரிய வருகிறது. இனி மேலாவது அந்த மக்களுக்கு வசதி செய்து தருகின்ற வகையிலே மருத்துவ மனை அமைக்க அரசு முன்வருமா ? அதற்கான பங்குத் தொகை கட்டவும் இடம் ஒதுக்கி, கட்டிடம் எல்லாம் நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம் என்பதையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமத்தைப் பொறுத்த வரையில் 3,000 ஜனத்தொகை கொண்ட கிராமமாக இருக்கிறது. பஞ்சாயத்து ஒன்றியத்திலே 1,20,000 ஜனத்தொகை இருக்கிறது. கீரமங்கலம் 15 கிலோமீட்டர் தூரத்திலே உள்ளது. அதேபோல் ஆலங்குடி 8 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ளது. அங்கே மருத்துவ மனைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது சட்டமன்றத்திலே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இடத்தைக் கொடுக்கிறோம், பணம் கொடுக்கிறோம், என்று. அவர்கள் எழுத்து மூலமாகக் கொடுத்தால் அரசாங்கம் நிச்சயமாகக் கவனிக்கும் என்பதை நான் வாக்குறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. த. புஷ்பராசு : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் அங்கே ஜனத்தொகை 3,000 என்று சொன்னார்கள். இப்போது நடைபெற்ற தேர்தலிலே அங்கே வாக்களித்த மக்கள் தொகையே 3,000-க்கு மேற்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்கிற கணக்கு பழைய விவரமாக இருக்கும் என்று கருதுகிறேன். அது என்னுடைய சொந்த கிராமம் என்ற முறையில் சொல்கிறேன் இதற்கு முன்பே அங்கே மருத்துவமனை கட்டுவதற்கு தேவையான இடம், மக்களுடைய பொதுப்பணம் எல்லாம் கொடுப்பதாக லெட்டர் மூலம் வாக்குறுதி அளித்திருக்கிறோம். தேவை என்றால் மீண்டும் அத்தகைய வாக்குறுதி கொடுக்க தயாராக இருக்கிறோம். ஆகையால் அரசு விரைவிலே அங்கே மருத்துவமனை அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நல்ல முறையில் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. பாலுசாமி : தலைவரவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு புது கட்டிட வசதி செய்து கொடுக்க ஏதாவது காலவரையறை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பிரைமரி ஹெல்த்சென்டர்களைப் பொறுத்தவரையில் வேகமாக கட்டிடங்களைக் கட்டி முடித்து, ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவான பிரச்சனையைக் கேட்டிருக்கிறார்கள். இந்தக் கேள்வி மூலக்கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்றாலும் வெகு விரைவில் கட்டிடம் கட்டி முடிக்கப்படும், ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கான கட்டிட வேலை தொடங்கப்பட்டு வேலை நடந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவரவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இப்போது 'இன் பேஷன்ட்' இருக்கக் கூடியவை மிகக் குறைந்த அளவில் இருக்கின்றன. எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள் எல்லாவற்றிலும் 'அவுட் பேஷன்ட்ஸ்' வந்துபோகக்கூடிய அளவில்தான் இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில் கருங்கல் ஆரம்பச் சுகாதார நிலையம் 1960-ல் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது அங்கே கிட்டத்தட்ட ஆயிரம் அவுட் பேஸன்ட்ஸ் வந்து போகக்கூடிய அளவில் இருக்கிறது. நோயாளிகள் தங்கி சிகிச்சைப் பெற வேண்டுமென்றால் நாகர்கோவில், குழித்துறை மருத்துவ மனைகளுக்குச் செல்ல வேண்டும். கிட்டத்தட்ட 25 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் தூரத்தில் அந்த மருத்துவ மனைகள் உள்ளன. ஆயிரத்திற்கு மேற்பட்ட நோயாளிகள் அவுட் பேஷன்டுகளாக வருகிற காரணத்தால் அங்கே படுக்கை வசதி அமைத்துத் தந்து, நவீன கருவிகள் வைத்து சிகிச்சை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு யோசனையாகச் சொல்கிறேன். இது மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லை. இதைத் தனிக் கோள்வியக எழுத்து மூலமாக, ஒரு ஸ்டார்டு கொஸ்டினாக போட்டிருந்தால் அவர்களுக்கு விவரமான பதில் கிடைத்திருக்கும். பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களும் நல்ல முறையில் செயல்படுகின்றன. நானே நேரடியாக பல ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பார்த்திருக்கிறேன். எல்லாவற்றையும் தொகுத்து விவரமான பதில் கொடுக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு ஸ்டார்டு கொஸ்டின் போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. வெங்கடாசலம் : தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. புஷ்பராஜ் அவர்கள் கேட்டார்கள். நானும் அதே ஊரைச் சேர்ந்தவன்தான். 1977-ல் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இதே கோரிக்கையை இந்த மன்றத்தில் வைத்து ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டித் தருவதாக அரசு ஒப்புதல் கொடுத்துள்ளதாகச் சொன்னார்கள். இப்போதும் அதே கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. புஷ்பராஜ் அவர்கள் சொன்னதைப்போல வடகாடு கிராமத்தில் இந்த ஆண்டு ஓட்டுச்சாவடியில் வாக்காளர்கள் எண்ணிக்கை 5,063. மக்கள் தொகை 3,000 என்பது பழைய கணக்காக இருக்கலாம். அதைப்போன்று கீரமங்கலம், ஆலங்குடியில் அரசு மருத்துவமனை இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். வடகாடு கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதியில் ஏறத்தாழ 20,000 அல்லது 25,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். அங்கே அரசு மருத்துவமனை இல்லாதது





ஒரு பெரும் குறையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் வடகாடு கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க இடமும் தயாராக இருக்கிறது. 6 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசுக்கு எவ்வளவு தொகை கட்ட வேண்டுமென்றாலும் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதைப்போன்று ஆலங்குடி அருகில் அறந்தாங்கியில் செனட்டூர் ஒன்றியத்தில் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்காக 25,000 ரூபாய் கட்டி, இடமும் ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப்போல ஆலங்குடி தொகுதியில் அறந்தாங்கி ஒன்றியத்தைச் சேர்ந்த மரமடக்கியில் 87,500 ரூபாய் ஒதுக்கப்பட்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. அ. வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, மரமடக்கி ஊராட்சியில் 87,500 ரூபாய் ஒதுக்கப்பட்டு ஒன்றியத்தினுடைய வளர்ச்சி நிதியிலிருந்து 12,500 ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆக மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய் நிதி தயார் நிலையில் இருக்கின்றது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, வடகாடு கிராமத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. புஷ்பராஜ் அவர்களும் ,மாண்புமிகு திரு. வெங்கடாசலம் அவர்களும் சேர்ந்து தீவிர முயற்சி எடுத்துக் கொள்வார்களேயானால் — அவ்வாறு முயற்சி எடுத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது—இன்னும் சிறப்பான வகையில் வெகு வேகமாக அந்தப் பணியை நாம் துவக்கி வைக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ந. ராசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதைப் பொறுத்தவரையில் என்ன மக்கள் தொகை அடிப்படையில் ஆரம்பிக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன். உதாரணமாகச் சொல்கிறேன். ஒரு இலட்சம் பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்றிருந்தால் 50 ஆயிரம் பேர்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் இந்த நடப்பாண்டில் அதாவது 1985-86லேயே துவக்கப்படுமா? அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்த வரையில் இப்போது [illegible] ஆரம்ப சுகாதார நிலையங்கள் [illegible]கின்றன. ஒன்றியத்திற்கு ஒன்று என்று இருக்கை [illegible]

யமைத்து கூடுதலாக 50 இடங்களில் நாம் ஆரம்பித்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் 1985-86-ல் 20 Subsidiary health centres under Part II Scheme under minimum needs programme என்ற அதையும் துவக்க இருக்கிறோம். அதுமட்டுமல்ல. 30 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றியமைத்திருக்கிறோம். ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று என்று இருந்ததை மாற்றியமைத்து, ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு என்று 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் அதைச் செய்ய வேண்டும் என்று மத்திய அரசு பரிந்துரை தந்திருக்கிறது. ஆனால் பல மாநில சர்க்கார்கள் அதற்கான முயற்சியைக் கூட எடுத்துக்கொள்ளவில்லை. நாம் ஏற்கனவே 50 கட்டி இருக்கிறோம். இன்னும் 7-வது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாக முனைப்பாக இதைச் செய்து முடிக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஜனத்தொகை அடிப்படையில் செயல்படுத்தப்படுவது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு செயல்படுத்தப்படுகின்றபோது ஒரு நகரம் என்று சொன்னால் அது அந்த நகரத்தினுடைய மக்கள் தொகையை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்வதா அல்லது சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற கிராமங்களும் சேர்த்து கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். இந்த அடிப்படையில் வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் கூடுதலாக எத்தனை சேர்க்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஜனத்தொகையைப் பொறுத்தவரையில் கிராமப் பகுதிகளில் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய ஜனத்தொகையை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் நான் அந்தக் கணக்கைச் சொன்னேன். இன்னொரு குறிப்பையும் சொல்ல விரும்புகிறேன். மலைப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் 30 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்தக் கருத்தையும் கொடுத்திருக்கிறார்கள்.

## தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல்

113—(*வினா எண் 135)—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் [illegible] நெல் எடுத்துச் செல்லாமல் தேங்கியிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்களில் தேங்கி இருக்கும் நெல்லை அந்த மாவட்டத்தில் சேமித்து வைப்பதற்கு போதிய கிடங்கு வசதி இல்லாமையால் மேற்படி நெல்லை அடுத்த மாவட்டங்களுக்கு லாரிகள் மற்றும் வேகன்கள் மூலமாக எடுத்துச் சென்று சேமித்து வைக்கப்படுகிறது. மேலும் போதிய கிடங்கு வசதிகளை ஏற்படுத்த தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலமாகவும், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் மூலமாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வியைப் போட்ட காலம் நெல்லிலே தண்ணீர் தேங்கி இருந்த காலம். இப்போது ஜூன் மாதம் தண்ணீர் வருமா என்று எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இந்தக் கேள்வி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே, கடந்த காலம் எப்படி இருந்தாலும் ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகள் குறுவை அறுவடை செய்கிறபோதும் சரி, சம்பா அறுவடை செய்கிற காலத்திலும் சரி, நெல் கொள்முதல் செய்கின்றபோது ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான மூட்டை நெல் தேங்கியிருப்பதால் வியாபாரிகளாலும் நெல் கொள்முதல் செய்ய முடியவில்லை : மழை வந்தால் அரசு கொள்முதல் செய்த நெல்லுக்கும் சேதம் ஏற்படுகின்றது. இப்படி விவசாயிகளுக்கும் நஷ்டம் ; அரசினுடைய பணத்திற்கும் நஷ்டம் ஏற்படுகின்றது. இந்த நிலைமைகளை முழுமையாகப் போக்க வேண்டும் என்றால் அடுத்த ஆண்டிலிருந்தாவது நெல்லை சேமிக்கக்கூடிய கிடங்குகளை ஏற்படுத்த வேண்டும். கீழ்த் தஞ்சைப் பகுதியில் அதிகமாகப் பாதிக்கப்படுகின்ற நிலை வளர்ந்துகொண்டு வருகிறது.

(முற்பகல் 10-20)

ஆகவே, தஞ்சை மாவட்டம் முழுவதிலும் நெல்லை பாதுகாக்கக் கூடிய கிடங்குகளில் அரசு அதிகமாக கவனம் செலுத்தி ஒரு யூனியனுக்கு ஒரு கிடங்கு வீதம் கட்டி, எதிர்காலத்திலாவது பாதுகாக்க வேண்டும். விவசாயிகள் நெல்லைக் கொண்டு வந்தால் உடனுக்குடன் நெல்கொள் முதல் பண்ணக் கூடிய அளவுக்கு அரசு துரிதமாக இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் எதிர்காலத்தில் ஈடுபடுவார்களா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல இப்பொழுது அந்தப் பிரச்சினை இல்லை. என்றாலும், [illegible] 1985-86-வது ஆண்டில் 5 இடங்களில் ஒவ்வொன்றும் [illegible] வீதம் 10 இலட்சம் ரூபாய் [illegible] சேமிப்பு வசதி [illegible] கொள்முதல் நிலையங்களை [illegible] மாவட்டத்தில் [illegible] கட்ட இருக்கிறது. அது தவிர [illegible] 7-வது ஐந்தா[illegible] [illegible] 24 ஆயிரம் [illegible]

டன் கொள்முதல் திறன் கொண்ட சேமிப்பு நிலையத்தை தமிழ் நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் 2 கோடியே 23 லட்ச, ரூபாய் மதிப்பீட்டிலே பல இடங்களில் தஞ்சை மாவட்டத்திலே கட்டயிருக்கிறது.

திரு. பொ. உ.த்திராபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன வரைக்கும் சந்தோஷம். ஆனால் இப்பொழுது கட்டப்படுகின்ற கட்டிடங்கள் கூட, இந்த குறுவை பருவ காலங்களில் விவசாயிகளின் தேவைக்கு ஏற்ற அளவிற்கு இருக்காது என்றும், இந்த 1985-86 ஆம் ஆண்டில் பூரணமாக பாதுகாக்க முடியாத நிலைதான் இருக்கும் என்றும் நினைக்கிறேன். இந்த நிலையில் அரசு சம்பந்தப்பட்ட மார்க்கெட்டிங் சொசைட்டி அல்லது அரசுத் துறையின் பல பிரிவினர்கள் கட்டி வைத்திருக்கின்ற கட்டிடங்கள் சும்மா தான் இருக்கின்றன. அப்படிப்பட்ட கட்டிடங்களிலே உடனடியாக தேவை ஏற்படும்போது, முழுமையான அளவு நெல்லை சேமித்து வைப்பதற்கு அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திடம் ஏறக்குறைய 66,549 மெட்ரிக் டன் கொள் அளவு வைக்கக் கூடிய கிடங்குகள் இருக்கின்றன. தமிழ்நாடு சேமிப்புக் கழக நிறுவனத்திடம் 10 ஆயிரம் மெட்ரிக் டன் கொள் முதல் அளவு கொள்ளக்கூடிய கிடங்குகள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையிலே 68,365 மெட்ரிக் டன் அளவுக்கு சேமித்து வைக்க இடம் இருக்கிறது. இது தவிர, மத்திய சேமிப்பு கிடங்குகளில் 1 இலட்சத்து 31,649 மெட்ரிக் டன் அளவுக்கு சேமிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் 4 இலட்சம் மெட்ரிக் டன் லெவி ஒவ்வொரு ஆண்டுக்கும் டார்ஜெட் ஆகும். கூடுதலாக வருகிறபோது மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல பல வசதிகள் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கின்றன. தேவைப்படும்போது கோவில்களில் கூட சேமித்து வைக்கப்பட்டு கெட்டுப் போகாமல் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். தொடர்ந்து அந்த நடைமுறைகள் பின்பற்றப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் உள்ள உணவு தானிய சேமிப்புக் கிடங்குகளில் நெல்லை வைத்து பாதுகாப்பதற்கு போதுமான இடம் இல்லாமல் மேல்நிலை பள்ளிக் கட்டிடத்தில் கீத்துக் கொட்டகை போட்டு வைத்திருந்தார்கள். அது கடந்த பிப்ரவரி மாதம் பெய்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, இப்போழுது தார்பாய் போட்டு மூடப்பட்டு ஒரு திடலில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளை தவிர்ப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தது போல வரவிருக்கும் 5 கிடங்குகளில் ஒன்றை, மதுக்கூர் ஒன்றியத்தில் கட்டித் தர ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னது போல தஞ்சை மாவட்டத்திலே பல இடங்களில் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட இருக்கின்றன. அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல அவருடைய கோரிக்கையும் கவனிக்கப்படும்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அரசே கொள்முதல் செய்வதால் அரசின் சார்பாக ஒரு கொள்முதல் நிலையம் ஒன்று வேண்டும் என்றும், அவைகளும் புதியதாக கட்டப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் வருகின்றன. குறிப்பாக தஞ்சை மாவட்டம் மழையால் பாதிக்கப்படுகிறபோது, இதற்கென்று சிறப்பாக பிரத்தியேகமாக மாநில அரசு, உலக வங்கியிடமிருந்து நிதி பெற்று இப்படிப்பட்ட சேமிப்புக் கிடங்குகளை கட்டுவதற்கு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற திட்டங்கள் எதுவும் அரசினுடைய பரிசிலனையில் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை அரசு கவனத்தில் எடுத்து பரிசீலிக்கும்.

## பாலிஸ்டர் கைத்தறித்துணி உற்பத்தி.

(113—*வினா எண் 102) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் " பாலிஸ்டர் " கைத்தறித் துணிகள் எங்கெங்கு உற்பத்தி செய்யப்படுகிறது ?

(ஆ) பாலிஸ்டர் ரகம் நெய்வதற்கு உள்ள கூலியை உயர்த்தும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) தமிழ்நாட்டில் மதுரை, காமராஜர் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் பாலியஸ்டர் சட்டைத் துணிகளும், கோவை மாவட்டத்தில் பாலியஸ்டர் சேலைகளும், சேலம் மற்றும் கன்னியாகுமரி பகுதிகளில் பாலியஸ்டர் வேட்டிகளும், பெரியார் மாவட்டத்தில் பாலியஸ்டர் சூட்டிங் ரகங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

(ஆ) பாலியஸ்டர் ரகத் துணிகளுக்கு கூலி ஆரம்ப காலத்தில் சட்டைத் துணி ரகங்களுக்கு மீட்டர் ஒன்றுக்கு ரூபாய் 2.25 என்று இருந்தது [illegible] தற்போது ரூபாய் 2.75-ம், சேலைத் துணிகள் ரகங்களுக்கு [illegible] ஒன்றுக்கு ஆரம்ப காலத்தில் ரூபாய் 3.00 [illegible] ரூபாய் 4.00 [illegible]

ரூபாய் 4.25 வரையும், வேட்டி ரகங்களுக்கு வேட்டி ஒன்றுக்கு முதலில் ரூபாய் 12.75 இருந்ததை தற்போது ரூபாய் 19.00 என்றும், சூட்டிங் ரகங்களுக்கு மீட்டர் ஒன்றுக்கு முதலில் ரூபாய் 5.00 இருந்ததை தற்போது ரூபாய் 7.30 வீதமும் அளிக்கப்படுகிறது. இப்போது கூலியை உயர்த்துவதற்கு உத்தேசமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, பாலியஸ்டர் ரகம் நெய்வதற்கு ஒரு தறிக்கு காசுக்கடன் என்று மத்திய வங்கியிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் தருகிறார்கள். பாலியஸ்டர் ரகம் நெய்வது நெசவாளர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிற காரணத்தால் மத்திய வங்கியிலிருந்து தறிக்கு கொடுக்கும் 10 ஆயிரம் ரூபாயை 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்துவதற்கும், இங்கே பாலியஸ்டர் நெய்வதற்கு நூல்கள் கிடைப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிற காரணத்தால் பாலியஸ்டர் நூல் தயாரிக்கும் நூற்பாலை ஒன்று தமிழகத்தில் நிறுவுவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சமீபத்திலே தான் பாலியஸ்டர் நூல்களுக்கு கொடுக்கிற கடனை உயர்த்தலாமா என்று யோசிக்கப்பட்டு, உயர்த்தத் தேவையில்லை என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. பாலியஸ்டர் இழை உற்பத்திக்காக தமிழகத்திலே புதியதாக ஒரு ஆலை துவங்க வேண்டுமென்று மத்திய அரசை கேட்கிற குறிப்பு அரசின் கவனத்திலே இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, பாலியஸ்டர் ரகம் எந்தெந்த ஊர்களில், எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த கூட்டுறவுச் சங்கங்களில் நல்ல முறையில் நெய்கிறார்கள் என்று டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ்லிருந்து சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் கோவாப்டெக்ஸ் அந்த ஊர்களுக்கும், அந்த நெசவாளர்கள் சங்கங்களுக்கும் இந்த ரகங்களை நெய்ய கொடுக்காமல், தரம் குறைந்து நெய்கிற ஊர்களுக்கும், தரம் குறைந்து நெய்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கொடுக்கிற காரணத்தால், அவர்கள் இழை குறைவாகவும், பாலியஸ்டர் நூல்களுக்கு பதிலாக வேறு நூல்களைப் போட்டும் நெய்வதால், பம்பாயில் புராசசிங் செய்யும்போது ஆரம்ப காலத்திலிருந்து லட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் கோவாப்டெக்சிற்கு நஷ்டமாகி இருப்பதை அரசு அறியுமா? இதைப் போக்க, வருங்காலத்தில் இவ்வாறு தவறு நிகழாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? பாலியஸ்டர் ரகம் புராசசிங் செய்வதற்கு தமிழ் நாட்டிலேயே வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு [illegible] அவர்கள் கூறுவதைப் போல குறைபாடுகள் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.



மாண்புமிகு உறுப்பினர் தக்க ஆதாரத்துடன் குறைகளைச் சொன்னால் சர்க்கார் நடவடிக்கை எடுக்கும். பாலியஸ்டர் துணிகளை புராசஸ் செய்வதற்கு ஈரோட்டில் புதியதாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், புதியதாக நவீனமான புராசசிங் ஆலை துவங்குவது நடவடிக்கையில் இருக்கிறது.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, பாலியஸ்டர் ரகத் துணிகளை நெய்வதற்கு ஆரம்பத்தில் கொடுத்த கூலியையும், தற்போது கொடுக்கிற கூலியையும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆரம்பகாலத்தில் என்றால் எந்தக் காலத்திலிருந்து அந்தக் கூலி கொடுக்கப்படுகிறது? தற்போது எப்போதிலிருந்து புதிய திருத்தப்பட்ட வீதத்தில் கூலி கொடுக்கப்படுகிறது? தற்போது இருக்கிற விலைவாசியை அடிப்படையாகக் கொண்டு இதை மாற்றிக் கொடுப்பதற்கு அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு பழைய கூலி வீதம் நிர்ணயிக்கப்பட்டது. இப்போது புதிய வீதம் நான் அறிவித்தபடி அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) அன்றாடம் குறித்தபடி அலுவல்களை எடுத்து முடிக்க ஒத்துழைப்புக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

இப்பேரவைக் கூட்டத் தொடர் சுமார் ஒரு மாத காலத்திற்கு தொடர்ந்து நடைபெறலாம். வினாப்பட்டியல்கள் முன்னதாகவே அச்சடித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர்களுக்கும், மற்றும் துறைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இன்று முதல் 7-6-1985 முடிய எந்தெந்த மானியக் கோரிக்கைகள் [illegible] எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்[illegible] அலுவல் ஆய்வுக் குழு[illegible] மற்ற மானியக் கோரிக்கைகள் [illegible] எடுத்துக் கொள்ளப் பெறும் என்பது தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பெறும்.

[பேரவைத் தலைவர்] [1985 ஜூன் 4

(முற்பகல் 10-30)

எனவே, பேரவைப் பணிகளுக்கு முதலிடம் கொடுத்து அந்தந்த நாட்களில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைத் தள்ளிப் போடாது எடுத்து முடிக்க மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**(ஆ) உறுப்பினர் திரு. பிரணவநாதன் கைது செய்யப்பெற்று விடுதலையானது.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ''18-5-1985-ஆம் தேதியன்று கைது செய்யப்பட்ட கடலாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினரான திரு. ஏ. பிரணவநாதன் அவர்கள், 1-6-1985-ஆம் தேதியன்று விடுவிக்கப்பட்டார் என்று இராமநாதபுரம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து, நேற்று (3-6-1985) மாலை செய்தி வரப்பெற்றுள்ளது''.

**(இ) பேரவை அலுவல்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| 4-6-1985 செவ்வாய் | .. | எண். 20— வேளாண்மை<br>எண். 45— குடிநீர் வழங்கல்<br>எண். 50— வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. |
| 5-6-1985 புதன் | .. | அரசினர் சட்ட முன்வடிவுகள்— ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |
| 6-6-1985 வியாழன் | .. | எண். 3— மோட்டார் வண்டிகள் சட்டங்கள்— நிர்வாகம்.<br>எண். 39— சாலைகளும் பாலங்களும்<br>எண். 40— சாலைப் போக்குவரத்துப் பணிகளும்— கப்பல் போக்குவரத்தும்.<br>எண். 54— சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.<br>எண். 55— சாலைப் போக்குவரத்துப் பணிகள்— கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. |



1985 ஜூன் 4] [பேரவைத் தலைவர்]

| | | |
|---|---|---|
| 7-6-1985 வெள்ளி | .. | எண். 5— முத்திரைத்தாள்கள் நிர்வாகம்.<br>எண். 6— பத்திரப் பதிவு<br>எண். 10— பால் வழங்கு திட்டங்கள்.<br>எண். 22— கால்நடை வளர்ப்பு. |
| 8-6-1985 சனி | .. | விடுமுறை. |
| 9-6-1985 ஞாயிறு | .. | விடுமுறை. |
| 10-6-1985 திங்கள் | .. | எண். 18 - மருத்துவம்.<br>எண். 19 - பொதுச் சுகாதாரம். |
| 11-6-1985 செவ்வாய் | | எண். 1 - நிலவரித்துறை.<br>எண். 11 - மாவட்ட நிர்வாகம்.<br>எண். 41 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.<br>எண். 42 - ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.<br>எண். 43 - பல்வகை.<br>எண். 46— இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.<br>எண். 58— பல்வகை மூலதனச் செலவு.<br>எண். 59— மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும். |
| 12-6-1985 புதன் | | எண். 28— சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். |
| 13-6-1985 வியாழன் | | எண். 12— தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.<br>எண். 25— சின்கோனா.<br>எண். 45— காட்டுவளத்துறை.<br>எண். 47— செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.<br>எண். 56— காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. |
| 14-6-1985 வெள்ளி | | எண். 24— தொழில்கள்.<br>எண். 51— தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. |



சென்னை-600 009.
13696
V211,31 N85
N85.6.1

15–6–1985 சனி .. விடுமுறை.

16–5–1985 ஞாயிறு .. விடுமுறை.

17–6–1985 திங்கள் .. எண். 35— நுகர் பொருள் வழங்கல்

18–6–1985 செவ்வாய் .. எண். 26— கைத்தறியும், நெசவுத் தொழிலும்.
எண். 27— கதர்த் தொழில்

19–6–1985 புதன் .. எண். 29— தொழிலாளர் நலனும், தொழிற் சாலைகளும்.

20–6–1985 வியாழன் .. ரம்சான் விடுமுறை.

21–6–1985 வெள்ளி .. பேரவைக் கூட்டம் இல்லை.

22–6–1985 சனி .. விடுமுறை.

23–6–1985 ஞாயிறு .. விடுமுறை.

மற்ற மானியக் கோரிக்கைகள் குறித்த அறிவிப்பு பின்னர் வரும். பேரவை வழக்கம்போல் காலை 9.00 மணிக்குக் கூடும்.

அரசு அலுவலகங்கள் வாரத்தில் 5 நாட்களே நடைபெறும் என்றும், எல்லா ஞாயிற்றுக்கிழமைகளைப் போல எல்லா சனிக்கிழமைகளும் அரசு அலுவலகங்களுக்கு விடுமுறை நாட்க ளாக இருக்கும் என்றும் அரசு அறிவித்துள்ளதையொட்டி, பேரவைக் கூட்டமும் வாரத்தில் 5 நாட்கள் மட்டுமே நடை பெறும், ஒவ்வொரு வாரமும் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் பேரவைக் கூட்டம் நடைபெறாது.

மேலும், தற்போது வினாப்பட்டியல்களை முன்னதாகவே அச்சிட்டுவிடுவதால், 8–6–1985-ஆம் நாளுக்கான வினாப் பட்டியல் அச்சடிக்கப்பட்டுவிட்ட காரணத்தால், அந்தத் தேதி யிட்ட 174 முதல் 193 முடிய எண்ணுள்ள வினாக்கள் 18–6–1985 அன்று எடுத்துக் கொள்ளப்பெறும்.



3. சட்டமன்றக் கட்சிகளுக்கு அரசினர் தோட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த அறைகளை சட்டமன்றச் செயலகம் கையகப் படுத்திக்கொண்டது.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நேற்றைய தினம் இந்த அவையிலே எதிர்க்கட்சி
வரிசையிலே உள்ள அணிகளுடைய உரிமை எப்படி பாதிக்கப்
பட்டு இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னோம். சட்ட
மன்ற அலுவலகம், எதிர்கட்சிகளுடைய அணிகளுடைய அறை
களை கையகப்படுத்த எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் கார
ணமாக அந்த உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை, இங்கே
உள்ள 4, 5 கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் வலியுறுத்திப்
பேசினார்கள். அவைமுன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித்
தலைவர் அவர்களும் இடையிலே சில கருத்துக்களை எடுத்துச்
சொன்னார்கள்.

சட்டமன்றப் பேரவையினுடைய அலுவல் ஆய்வுக் குழு கூட்
டத்திலே இதுபற்றி கலந்து பேசுவதன் மூலமாக ஒரு தகுந்த
முடிவை, ஏற்ற முடிவை எடுக்கலாம் என்று அவர்கள் சொன்ன
ஆலோசனையை தாங்களும் ஏற்றுக்கொண்டு, அலுவல் ஆய்வுக்
குழு கூட்டத்தை 11–30 மணியளவில் கூட்டினீர்கள். இந்த
அவை தொடர்ந்து நடைபெறவும், இடையில் அலுவல் ஆய்வுக்
குழுவில் இந்தப் பிரச்சனையைப் பற்றி பேசி முடிவு எடுக்கலாம்
என்றும் தாங்கள் அழைத்து, நாங்கள் அத்தனை பேரும் அலுவல்
ஆய்வுக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டோம். ஏறக்குறைய
30, 40 நிமிடங்கள் பல்வேறு கோணங்களில் எதிர்க்கட்சித் தலை
வர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும், இந்திய யூனியன்
முஸ்லீம் கட்சியினுடைய தலைவர் அப்துல் சமத் சாகிப் அவர்
களும் நானும், தாங்களுமாக விவாதித்தோம். இறுதியில்,
ஏற்கனவே இருந்த நிலை ‘ஸ்டேடஸ்கோ, நிரந்தரமாக நீடிக்
கப்படவேண்டும் என்று இல்லா விட்டாலும், தற்காலிகமாக
இரண்டு மூன்று மாதங்களுக்காவது ஸ்டேடஸ்கோ நீடிக்கப்படு
வது ஒரு சுமுக நிலையை உருவாக்க அவசியமாகும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று இந்தப் பிரச்
சினை முடிந்து விட்டது ; அலுவல் ஆய்வுக் குழுவில் என் முடி
வைத் தெரிவித்தவுடன் நீங்கள் வெளியே போய்விட்டீர்கள்.
இன்று அவைக்கு வந்து அதுபற்றி சொல்லியிருக்கலாம் ; அப்படிச்
செய்யவில்லை. வெளியே போய் தாங்கள் கொடுத்து இருக்கிற
அறிக்கைகளை எல்லாம் பார்த்தேன். நீங்கள் நேற்று மாலை
நிறைவேற்றியுள்ள தீர்மானங்களையும் பார்த்தேன். அதன்
பிறகு இங்கே என்ன வேலை? (கூச்சல்-குழப்பம்)

திரு. க. அன்பழகன் : இங்கே என்ன வேலை என்று கேட்க நீங்கள் யார் ? (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை குறித்து இங்கே என்ன வேலை என்று தான் கேட்டேன். (கூச்ச சல்-குழப்பம்) இதெல்லாம் அவைக்குறிப்பில் ஏறாது. எல்லோ ரும் அவரவர்கள் இடத்தில் உட்கார வேண்டும் ; (குறுக்கீடு) வேண்டாம் ; இதையெல்லாம் வேறு இடத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இங்கே பேசவேண்டாம் (குறுக்கீடு) Don't force me. இந்த மாதிரி ஆயிரம் பேரைப் பார்த்தவன் இந்தப் பாண்டியன் (கூச்சல்-குழப்பம்). நீங்கள் இந்தப் பிரச்சினையை பிரஸ்டீக்கு கொண்டு போனதால் நான் அந்த வார்த்தையைச் சொன்னேன். எனக்கு உங்களைப் போல பேசிப் பழக்கம் கிடையாது. நீங் களே பேசுங்கள் : நான் உட்கார்ந்து கொள்கிறேன். (கூச்சல் குழப்பம்).

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் என்ன சொல்லியிருந்தாலும் கூட அந்த வருத்தத்தை நாங்கள் மறந்து விடத் தயாராக இருக்கிறோம். ஆனால் நேற்றையதினம் இதுபற்றிய விவாதம் நடந்து கொண்டி ருந்தபோது இவற்றை எல்லாம் அவைக்குறிப்பில் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று நீங்கள் சொன்னீர்கள் ; அவைக்குறிப்பில் ஏற்றாவிட்டாலும், எங்கள் உணர்ச்சியின் நியாயத்தை உணர்ந்து ஒரு நல்ல முடிவை எடுப்பீர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று நடைபெற்ற விவாதத்தை அவைக்குறிப்பிலிருந்து எடுக்கவில்லை.

திரு. கு. ரமணி : நீங்கள் 'அவைகள் எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது' என்று சொன்னீர்கள்.

திரு. க. அன்பழகன் : நான் பேசியதில் சட்டப்படி தவறு இருந்தாலோ அல்லது முறை தவறி பேசியிருந்தாலோ அல்லது அவைத் தலைவருக்கு குறை ஏற்படுத்துவதாக இருந்தாலோ அல்லது இன்னும் சொல்லப் போனால் இந்த அவையின் மரபுக்கு மாறாக இருந்தாலோ நான் பேசிய பகுதியை தாங்கள் நீக்கி இருந்தால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். தாங்கள் சொன் னது தவறாகவே இருந்தாலும் கூட, இறுதியில் தாங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆனால் இந்த அவையில் இருக்கிற ஏறத்தாழ 234 உறுப்பினர் கள் சார்பாக, அவர்களில் யார் எந்தக் கருத்தை உடையவர்களாக இருந்தாலும் கூட, ஏறத்தாழ 1 மணி 20 நிமிடங்கள் நேற்றைய தினம் திரும்பத் திரும்ப எங்களுடைய குறைகள் எடுத்து





வலியுறுத்தப்பட்டு எங்களுக்கு இழைக்கப்பட்டது எத்தனை வகை யில் அநீதி ஆகிறது என்று இங்கே பேசப்பட்டு, ஒரு வகையில் தாங்களும் அதை ஏற்றுக்கொண்டு, நமக்குள் பேசி ஒரு நல்ல முடிவு காணலாம் என்று சொன்ன அடிப்படையில் தான், அலு வல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு நாங்கள் வர நேர்ந்தது. இல்லை என்றால் நேற்றைய தினம் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் நாங்கள் கலந்து கொள்ள விரும்பவில்லை. பேசி ஒரு நல்ல முடிவுக்கு வரலாம் என்று சொன்னதால் நாங்களும் வந்தோம். அலுவல் ஆய்வுக் குழுவில் எந்தெந்த வகையில் எங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பது குறித்து, 20, 30 நிமிடங்கள் பேசினோம். எதிர்க்கட்சித் தலைவர் திரு. உ. சுப்பிரமணியம் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் ஒரு சுமூக நிலை ஏற்பட சில கருத்துக்களைச் சொன்னார்கள். நிரந்தரமாக என்று இல்லாவிட்டாலும் பர்மனென்டு அரேஞ் மெண்டு இல்லை என்றாலும் டெம்பரரியாக தற்காலிகமாக ஒரு இரண்டு மாதத்திற்கு மூன்று மாதத்திற்கு ஏற்கனவே இருந்த நிலை ஸ்டேடஸ்கோ நீடிக்கப்படலாம் என்கிற கருத்து உரு வானது. பின்னர் மறுபடியும் கலந்து பேசி, கட்டளை என்ற முறையில் அல்ல, எல்லாத் தரப்பினருக்கும் இசைவான ஒரு முடிவை எடுக்கலாம் என்ற முடிவுக்கு நாம் வந்தோம்.

(முற்பகல் 10-40.)

அந்த முடிவைத் தாங்கள் எடுத்து எங்களுக்கு அறிவிக்க முன் வந்த நேரத்தில் தங்களுக்கு ஒரு யோசனை சொல்லப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம் அறையில் இருக்கிறார். அவரைப் போய்க் கேட்டுக் கொண்டு வந்து தெரிவிப்பது நல்லது என்ற யோசனையை சில மாண்புமிகு அமைச்சர்கள் தெரிவித்தார் கள்.

எங்களுக்கு அதிலே மாறுபாடு இருப்பதற்கு அவசியம் இல்லை. ஒரு ஆளுங்கட்சி அவை முன்னவரைக் கேட்பதைப் போல, முதல் வரைக் கேட்பதை, ஆளுங்கட்சி சார்பிலே கேட்பதை மறுக்க எங்களுக்கு காரணம் இல்லை. அதன் பின்னர் தாங்கள் இது பற்றி முதலமைச்சர் அவர்களைக் கேட்கச் சென்றீர்கள் ; சென்று 10 நிமிடம் கழித்து வந்து ஏற்கனவே எடுத்த முடிவுகளை மாற்றிக் கொள்வதற்கில்லை என்று அலுவல் ஆய்வுக் குழு விலே தாங்கள் தெரிவித்தீர்கள். எப்படி மாற்றிக் கொள்வது. எடுத்த முடிவை மாற்றிக் கொண்டால் எங்கள் சபாநாயகருடைய அலுவலகத்தின் [illegible] என்ன ஆவது என்று கேட்டீர்கள். சபாநாயகருடைய அலுவலகத்தினுடைய உரிமை என்ன [illegible] என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் [illegible] கேட்கிறார் என்று தாங்கள் [illegible] பின்னால் [illegible] கம் எடுத்த முடிவை மாற்ற முடியாது என்றீர்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொஞ்சம் நடந்
ததைச் சிந்தித்துப் பேசுங்கள். அலுவல் ஆய்வுக் குழுவைக்
கூட்டிப் பேசலாம் என்றீர்கள். நீங்கள் சொல்லித்தான்
அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்ட நான் இசைந்தேன். பேசி
னோம். அலுவல் ஆய்வுக் குழுவில் நான் முதலிலேயே சொல்லி
விட்டேன். இது சட்டமன்ற அலுவலகத்தின் நடவடிக்கை.
என்னுடைய ஆணை ; அரசுக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை ;
என்பதைப் பலமுறை தெளிவுபடுத்தினேன். இப்பிரச்சினையில்
அரசை இழுக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அத
னுடைய நோக்கம் எனக்குத் தெரியவில்லை.

அரசுக்கும், இந்தப் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை ;
அலுவல் ஆய்வுக் குழுவிலேயே நான் எனது அலுவலகம் எடுத்த
நடவடிக்கையை மாற்றத் தேவையில்லை என்று நான் சொன்ன
வுடன், நீங்கள் தான் முதலமைச்சரும் இன்று இங்கே இருக்கிறார்.
அவரையும் கலந்து கொள்ளுங்கள் என்று சொன்னீர்கள். 'நீங்
கள் சொல்வதால் முதலமைச்சரிடம் கலந்து பேச நான்
போகிறேன். என்று சொல்லித்தான் சென்றேன்.
நீங்கள் சொன்னதால்தான் போய்க் கேட்டேன். இல்லை
யென்றால் அவரை கன்சல்ட் பண்ணுவதாக இல்லை. இப்பிரச்
சினை எனது அதிகாரத்தின் எல்லைக்குட்பட்டது.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,
தங்களுடைய அதிகாரத்தை எங்களிடத்திலேயாவது நிலை
நாட்டியதற்கு நான் தங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன், பாராட்டு
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பாண்டியன் எங்
கும் நிலை நாட்டுவான். நிலை நாட்டி வருவதனாலேதான்
இன்றைக்கு வீரனாக இருக்கிறான்,

திரு. க. அன்பழகன் : தயவு செய்து அந்தமாதிரி வார்த்
தையைச் சொல்வதனாலேயே, நாங்கள் பதில் சொல்ல
முடியாது என்று அர்த்தம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில பேர் பாண்டியன்
என்று பெயர் தான் வைத்திருப்பார்கள். அதற்கேற்ற குணங்கள்
இருக்காது. (குறுக்கீடு).

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நேற்றைய
தினம் அலுவல் ஆய்வுக் குழுவிலே நடந்த நிகழ்ச்சியைத் தான்
சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் அங்கு என்ன
நடந்தது என்பதைத் தான் சொன்னேன். தயவுசெய்து இதை
நீங்கள் அரசியலாக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள்,



இது நம்முடைய சட்டமன்றக் கட்சி அலுவலகம். அதற்காகப்
பேரவைத் தலைவருக்கும், அவர் ஆளுகைக்குட்பட்ட சட்டமன்ற
அலுவலகத்திற்கும், நீங்கள் மதிப்பளிக்க வேண்டும் ; உறுப்பி
னர்களது உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களுக்கு வேண்டிய
வசதிகள் அனைத்தையும் அளிப்பவர்கள் நாங்கள் தான்.
எங்களுடன் நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். நீங்
கள் பாதிக்கப்பட்டது. போன்ற நினைப்பிலேயே இருக்கிறீர்
கள்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,
நாங்கள் பாதிக்கப்பட்டோம் என்பதையாவது ஒப்புக் கொண்ட
தற்கு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகி
றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வார்த்தைகளை வைத்
துக் கொண்டு இப்படிப் பேசவேண்டாம். நான் என்ன தமிழ்ப்
பேராசிரியரா ? நான் வக்கீல். குறுக்குக் கேள்வி கேட்டுத் தான்
பழக்கம். சாதுர்யமாகப் பதில் சொல்லிப் பழக்கமில்லை.

திரு. கு. ரமணி : அலுவல் ஆய்வுக் குழுவில் என்ன நடந்
தது என்பதைத் தான் சொன்னோம் ; இட்டுக் கட்டி நாங்கள்
எதுவும் சொல்லவில்லையே.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, பேரவையில் பலவற்றைப் பேச
முடியாது என்பதால் தான் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசப்
படுகிறது. அலுவல் ஆய்வுக் குழுவில் என்னென்ன பேசினோம்
என்பதை எல்லாம் அவையில் மீண்டும் பேசுவது என்று ஆரம்
பித்தால் அதன் விளைவுகள் வேறு எங்கோ போய்ச் சேரும் என்
பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, அலுவல் ஆய்வுக் குழுவைப் பற்றிச் சொல்
லும்போது, பேராசிரியர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்.
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு முதல்வர்
அவர்களைக் கலந்து [illegible] வேண்டும் என்று கருத்துத் தெரி
வித்தபோது [illegible] அவர் வர மறுத்தார். இதுதான் உண்மை.
ஆனால், [illegible] சொன்ன பிறகு தான் அவர்கள் முதல
மைச்சரிடம் சென்று [illegible] வர ஒப்புக் கொண்டாரே தவிர,
அவராகப் போக [illegible]. உண்மை இதுதானே தவிர
வேறு அல்ல என்பதை [illegible] தெளிவாக்க விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நடைபெற்ற
நிகழ்ச்சி எதுவாக இருந்தாலும் முதலமைச்சர் அவர்கள் முதல
மைச்சராக இருக்கிற அந்த நிலையில் அவரை மதிப்பது தவறு
என்று கருதுகிறவன் நான் அல்ல. முதலமைச்சருக்கு ஏதோ
உரிமை இல்லாததைப் போலவும் அவர் ஆலோசனை சொல்
வதற்கு உரிய இடத்தில் இல்லாததைப் போலவும் இந்த
அவையிலே நடக்கிற அலுவல் தனியாக நடந்துவிடுவதைப்
போலவும் அவருக்கு அப்பாற்பட்டு ஒரு அவை இங்கே நடை
பெறுவதைப் போலவும் எண்ணிக் கொள்கிற அந்த நிலைக்கு
நான் ஆளாகத் தயாராக இல்லை.

மற்றொன்று. சட்டமன்றத்தை அரசியல் கட்சி அடிப்படை
யில் அணுகாதீர்கள். அதனுடைய தனித் தன்மையை எண்ணிப்
பாருங்கள் என்று சபாநாயகர் ஆகிய தாங்கள் தெரிவித்தீர்கள்.
அது ஒரு தத்துவம். தத்துவமே தவிர நடை முறையில் அப்படி
யில்லை என்பதை நான் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன்.
இருக்க முடியாது என்பதும் நாளும் இந்த அவையிலே இருக்கிற
பலரும் உணர்ந்த ஒன்று. அரசியல் கட்சிகள், கட்சி என்ற
ஒன்றின் பேரால் நடவடிக்கை எடுக்க முடியாதே தவிர சட்ட
மன்றத்தின் உரிமைகளுக்குட்பட்டு நடவடிக்கை எடுக்க எல்லா
அரசியல் கட்சிகளுக்கும் உரிமை உண்டு. எனவே நான் வாதம்
செய்ய நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. திட்ட
வட்டமாக நான் தங்களிடத்திலே தெரிவிக்க விரும்புவது அலுவல்
ஆய்வுக் குழு எந்த நோக்கத்தோடு கூடியதோ அந்த நோக்கம்
அந்த அலுவல் ஆய்வுக் குழுவால் நிறைவேற்றப்படவில்லை.
பாதிக்கப்பட்டவர்கள் என்று சொல்லக்கூடிய நிலையில் உள்ள
எதிர்க் கட்சி வரிசையில் உள்ள எங்களுக்கு எந்த நியாயமும்
தரப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால் கட்சி அலு
வலகம் தரப்படும் என்ற வாக்குறுதியும் தரப்படவில்லை. கட்சி
அலுவலுக்கு எப்படி இடம் தருவதாகச் சொன்னீர்கள் என்பதை
இந்த அவை தெரிந்து கொள்ள வேண்டும். எழுதப்பட்ட
கடிதத்தில் என்ன இருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க
விரும்புகிறேன். அணிகளாக இருக்கிற, திராவிட முன்னேற்றக்
கழகத்தைத் தவிர, மற்ற சிறு கட்சிகளாக இருக்கிற, மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதாக் கட்சி
மற்றக் கட்சிகள் அந்தக் கட்சிகளுக்கு அவர்கள் என்றென்
றைக்கும் கூட விரும்புகிறார்களோ அன்றைக்கு 24 மணி நேரத்
திற்கு முன்னர் செயலாளருக்குக் கடிதம் எழுதினால் அவர்கள்
கூடுவதற்கு இடம் தருவார்கள் என்று சொல்லப்பட்டதே தவிர
அலுவலுக்கு இடம் தரப்படும் என்று கூறப்படவில்லை....



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திரு. ரமணிக்குச்
சொல்ல விரும்புகிறேன். மேற்கு வங்கத்திலே உள்ள நிலைமை
யைச் சொல்லிவிடுகிறேன்.

There is no rule for allotment. Allotment of rooms to differrent parties of this Assembly — Rooms are allotted to parties for use as office of their MLAs on specific request subject to availability and approval of Speaker. One room has been allotted to main Opposition Party of present Assembly and one room for R.P.T. and one room for Leader of Opposition.

இதுதான் அங்கே உள்ள நிலைமை.

அடுத்து கர்நாடக மாநிலத்தில் உள்ள நிலைமையைச் சொல்ல
விரும்புகிறேன்.

With reference to your Telex dated 16th May 1985 I am directed to state that in the precincts of Legislative Assembly one well furnished room each is earmarked to the ruling Legislature Party and the largest Opposition Legislature Party. No other Legislature Parties have been provided rooms. There are no rules for allotment of rooms for the Legislature parties.

அங்கே எந்தக் கட்சிக்கும் கிடையாது.

அடுத்து, மேற்கு வங்கத்திலே உள்ள பார்ட்டி ஸ்ட்ரெங்த்
பற்றிச் சொல்லி விடுகிறேன்.

திரு. க. அன்பழகன் : [illegible] கர்நாடகம், மேற்கு வங்கம்
[illegible] சட்டமன்றப் பேரவையில் [illegible] கட்சிகளுக்கு [illegible]
இடம் தரப்பட்டு இருக்கிறது என்று சொன்னீர்கள். [illegible]
எப்படி இருக்கும் என்று நான் [illegible]
எப்படி சட்டமன்ற வளாகத்திலே எதிர்க் கட்சித் [illegible]
அறை ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அதைப் [illegible]
இருக்கக் கூடும். தாங்கள் சொல்வது உண்மையென்றே நான்
[illegible] பாராளுமன்றத்தில் [illegible] நிலை
என்ன ? என்பதைத்தான் [illegible] பாராளுமன்றத்தில்
இருக்கிற முறையை நாம் ஏற்றுக்கொள்வதுதான் முறை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : [illegible]
இருந்தால் இப்படிச் சொன்னீர்கள்.

(முற்பகல் 10-50)

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தாங்கள் இந்த மன்றத்தில் ஏற்கனவே துணைச்சபாநாயகராக இருந்த பொழுது இன்னும் நல்ல நிலைமைகள் எங்களுக்கு இருந்தன. ஆனால் தாங்கள் சபாநாயகர் ஆனவுடன் எங்களுடைய நிலைகளே மாறி யிருக்கின்றன. இதைத்தான் தாங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கேரளத்தையும், கர்நாடகத்தையும் மேற்கோளாகக் காட்டுகிறீர்கள், என் றைக்குமே நாங்கள் அங்கே போய்த்தேர்தலுக்கு நிற்கப் போவ தில்லை.

இரண்டாவதாக, அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தி லிருந்த நிலைமை, இன்னும் சொல்லப் போனால் கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்த நிலைமை, மாண்பு மிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலிலே ஐந்தாண்டுக் காலம் முதல மைச்சராக இருந்த காலத்திலே இருந்த நிலைமை பெரும்பாலும் நீடிக்கப்பட வேண்டும்; நூற்றுக்கு நூறு அப்படியே நீடிக்க வேண்டுமென்று நான் சொல்லா விட்டாலும், பெரும்பாலும் நீடிக்கப்பட வேண்டுமென்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

It is in the discretion of the Speaker and there is no rule to prevent the Speaker to provide any room for any Party. சட்டத்திலே அப்படி ஒன்றும் இல்லை. நீங்கள் தீர்மானிக்கலாம். தாங்கள் எங்களிடம் நடந்து கொண்ட முறை நியாயம் அல்ல என்று திட்டவட்டமாக என்னுடைய மனசாட்சியின்படி வலி யுறுத்தி, நடந்து விட்ட அநீதிக்குத் தாங்கள் தக்க நியாயம் வழங்க வேண்டுமென்று பணிவன்போடு இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் அலுவல் ஆய்வுக் குழு எந்த நோக்கத்திற் காகக் கூட்டப் பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. அதற்கு நேர் மாறாக, இழைக்கப்பட்ட அநீதி—நியாயம் என்று [illegible] எங்கள் வருத்தத்தையும், கண்டனத் தையும் தெரிவித்துக் கொள்ள வேண்டிய கட்டத்திற்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை நான் தங்களுக்குத் தெரிவித் துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, நானும் ஒன்றிரண்டு [illegible] சொல்ல வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பேச முடியாது. அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதித்ததை எல்லாம் திரும்ப [illegible] முடியாது.



திரு. கு. ரமணி: நாங்கள் உங்கள் கஸ்டடியில் இருக்கி றோம். எங்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டியவர் தாங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அனை வருக்கும் எப்பொழுதும் தக்க பாதுகாப்பு கிடைக்கும்.

திரு. கு. ரமணி: மேற்கு வங்கத்திலுள்ள நிலைமையைப் பற்றி நீங்கள் சுட்டிக் காட்டினீர்கள். அங்குள்ளதைவிட மேலான நிலை இங்கு உள்ளது என்ற கருத்தையும் சொன்னீர் கள். லெப்ட் பிரண்ட் அரசாங்கம் மேற்கு வங்காளத்தில் இருக்கிறது. பல கட்சிகள் சேர்ந்து ஒரு அமைப்பை உருவாக்கி அதற்கு வேண்டிய நடவடிக்கையை அங்கே எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிஷம் இருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். அதாவது, மேற்கு வங்க சட்ட மன்றத்தில்

| | |
|---|---|
| | .. 295 |
| Total strength. | .. 57 |
| Congress | 178 |
| C.P.I. (M). | 7 |
| C.P.I. | 28 |
| Forward Block. | 18 |
| Revolutionery Socialist Party | 3 |
| West Bengal Socialist Party | 2 |
| Democratic Socialist Party. | .. 2 |
| Revolutionery Communist Party of India. | 2 |
| Forward Block (Marxist). | 2 |
| Socialist Unity Centre of India. | 2 |
| Nominated. | 23 |
| Independents | |

[illegible] தவிர வேறு எத்தக் கட்சிக்கும் [illegible] இப்பொழுது [illegible] பட்டியலையும் [illegible]

திரு. [illegible] அந்தப் பட்[illegible] இவ்வளவு [illegible] பேர்களும் சேர்ந்து [illegible] வரவில்லை.

[திரு. கு. ரமணி] [1985 ஜூன் 4

பிரண்ட் கவர்மெண்டிலே இந்தக் கட்சிகள் முழுவதும் மினிஸ்ட்ரி
யிலே இருக்கக் கூடியவை. அப்படி மினிஸ்ட்ரி சபையில் இருந்து
அந்தக் கட்சிகள் ஆட்சி புரியும்பொழுது சட்டசபைக் கட்சிக்கு
என்று ஒரு இடம் ஒதுக்கவில்லை என்று மட்டும் நீங்கள் எங்க
ளுக்குச் சொன்னால்,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகச் சொல்ல
வில்லை. பேரவைத் தலைவரின் டிஸ்கிரிஷனில்தான் செய்யப்
படுகிறது என்று சொன்னேன்.

திரு. கு. ரமணி : என்னைப் பேசுவதற்குக் கொஞ்சம் விடுங்
கள். அங்கே மற்ற கட்சிகள் பரிபூரணத் திருப்தியோடுதான்
இருக்கிறார்கள். அது ஒரு பக்கம் இருக்கட்டும்.

நாங்கள் இப்பொழுது என்ன சொல்ல விரும்புகிறோம்
என்றால், பாராளுமன்றத்தினுடைய நடவடிக்கைகளை நீங்கள்
ஒவ்வொன்றுக்கும் கோட் செய்து, உதாரணமாகக் காட்டுகிறீர்கள்.
அது கரெக்ட். அதை நாங்கள் ஒத்துக்கொள்ளக் கடமைப்பட்ட
வர்கள். இங்கே இருக்கும்படியான உங்களுடைய ரூல்ஸ் கமிட்டி
யினுடைய ரிப்போர்ட் பிரசென்டேஷன் பண்ணியதிலேயே சில
விஷயங்கள் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. அங்கே,
பாராளுமன்றக் கட்டிடத்திற்குள்ளேயே பார்ட்டி ஜெனரல்பாடிக்
கூட்டம் நடத்துவதற்கு ஒவ்வொரு கட்சிக்கும் தனி அறை
கொடுக்கப்பட்டுள்ளது. அதை இன்றைக்கும் அனுபவிக்கிறார்கள்.
நானும் பாராளுமன்றத்தில் இருக்கின்றபொழுது அதை
அனுபவித்திருக்கிறேன்.

அதற்குப் பிறகு வெளியிலே, வித்தல் பாய் பட்டேல்
பவனிலே ஒவ்வொரு கட்சிக்கும் தனியாக அறை கொடுக்கப்பட்
டிருக்கிறது. மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வீடுகள்
வேறு. அங்கு அறையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சரண்சிங்
அவர்கள் கட்சியிலே அவர் மட்டும்தான் இருக்கிறார். அவருக்கு—
நான் கேள்விப்பட்டது தவறாக இருந்தால் திருத்திக் கொள்ளத்
தயார்—4 இடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன ஏற்கனவே
ஒரு உயர்ந்த அந்தஸ்திலே இருந்தவர் என்ற முறையிலே.
குறுகிய காலத்திலே அவர் இந்திய நாட்டினுடைய பிரதமராக
இருந்தவர். அந்த முறையிலே அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்
கிறது. எதற்காகச் சொல்கிறேன் என்றால் , நீங்கள் ரூல்களை
குறிப்பிட்டீர்கள். பார்லிமெண்டினுடைய விதிகள் எல்லாம்
எப்படி இருந்தாலும், அந்த விதிகள் எல்லாம் புத்தகங்களிலே
இருந்தாலும், மரபுகள் அடிப்படையிலே கட்சிகளை மதித்து
எப்படி அவர்கள் நடந்து கொண்டார்கள்? அதையே இங்கே நாம்
கணக்கிலே எடுத்துக் கொள்ளக் கூடாதா? தமிழ்நாட்டிலே
அப்படி இல்லையே.



1985 ஜூன் 4]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு
உறுப்பினர் திரு ரமணி அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்
கள். தாங்கள் மேற்கு வங்காளம், கர்நாடகம் ஆகிய இரண்டு
மாநிலங்களுடைய நிலைமைகளையும் சுட்டிக் காட்டினீர்கள்.
அவர்கள் மேற்கு வங்காளத்திற்காக மட்டும் வாதாடிவிட்டு
கர்நாடகத்தை இப்படிக் கைவிட்டு விடலாமா?

திரு. கு. ரமணி அமைச்சர் திரு. காளிமுத்து போன்றவர்கள்
வெகு தீவிரவாதிகளாக இருக்கிறவர்கள், காப்பாற்றுவார்கள்
என்று நினைக்கிறேன். ஒரு மாநிலம் என்கிற முறையில் அந்த
மாநிலத்திற்கு பினான்ஷியல் அண்டு அதர் டிபிகல்ட்டீஸ் வருகிற
பொழுது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பதிலே
உங்களைவிட முன்னணியில் இருந்து நாங்கள் போராடுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று $1\frac{1}{2}$ மணி நேரம்
இதுபற்றிப் பேசியாயிற்று. இன்று $\frac{1}{2}$ மணி நேரம் பேசியாயிற்று.
(குறுக்கீடுகள்)

திரு. கு. ரமணி : நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள். அதை
நீங்களே சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாதிக்கப்பட்டவர்கள்
என்று நினைத்துப் பேசாதீர்கள் என்றேன். நீங்கள் எத்தனை
பேர்கள் இந்த அவையில் இடம் பெற்றிருக்கிறீர்களோ,
அந்த எண்ணிக்கைக்கேற்ப கொடுத்திருக்கிறேன். அதற்கு மேல்
எப்படிக் கொடுப்பது? நான் உங்களது உரிமையைப் பறித்துவிட்ட
தாகப் பேசாதீர்கள்; உங்கள் உரிமைகளை எல்லாம் பாதுகாத்துக்
கொடுப்பவன் நான்தான்; நான் எல்லாக் கட்சிகளையும் கட்சி
உறுப்பினர்களையும் மதிக்கிறவன்; எல்லா தரப்பினரையும்
மதிக்கிறவன். நமது விதிமுறைகளின்படி செயல்பட வேண்டியவ
னாகவும் இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மக்கள் தேர்தலில் வழங்குகின்ற தீர்ப்பை மையமாக
வைத்து கட்சிகளுக்கு அறைகள் ஒதுக்குவது என்ற தங்களுடைய
முடிவைத் தாங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். காரணம்
ஒரு அரசியல் இயக்கம் தேர்தலில் வெற்றி பெறலாம். தோல்வி
அடையலாம். உங்களுடைய கட்சியே கூட சென்ற முறை
பார்லிமெண்டில் இரண்டு இடங்களைத்தான் பெற்றது. பாண்டிச்
சேரியில் ஒரு இடம் கூடப் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னைப் பார்த்து
உங்களுடைய கட்சி என்று சொல்கிறீர்கள். முதலிலேயே இது
போன்ற வாதம் வேண்டாம் என்றுதான் சொன்னேன். நடுநிலை
யில் இருந்து பாருங்கள். இதை அரசியலாக்க வேண்டாம்;

உங்கள் எல்லோரிடமும் தனிப்பட்ட மதிப்பு இருக்கிறது. அது
வேறு. ரூம்ஸ் அலாட்மென்ட் என்கிறபோது ஒரு கிரைட்டீ
ரியா வேண்டும். அவ்வளவுதான்.

திரு. அ. ரகுமான்கான். தேர்தல் முடிவுக்கும், அலாட்
மெண்டுக்கும்........(குறுக்கீடுகள்)

MR. SPEAKER : Yesterday itself I made it clear that only under direction this was carried out.

இதில் அரசாங்கத்தினுடைய 'ஹாண்டு' இல்லை; வேறு யாரும்
சொல்லி நான் செய்ததும் இல்லை. இதை மன்றம் வகுத்துத்
தந்துள்ள விதிமுறைகளின்படி நான் சொன்னதால்தான் எனது
அலுவலகம் இந்த நடவடிக்கையை எடுத்தது. இதை ஒரு
பிரச்சினையாக ஆக்க வேண்டாம். (குறுக்கீடுகள்)

(முற்பகல் 11—00)

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தேர்தலில்
எங்கள் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை இந்த மன்றத்தில்
குறைந்த காரணத்தால் இந்த நடவடிக்கை எடுத்தேன் என்று தாங்
கள் தெரிவிக்கிறீர்கள். கடந்த முறை சட்ட மன்றத்தில் இருந்த
அத்தனைக் கட்சிகளின் பட்டியலையும் எடுத்துப் பாருங்கள்,
இரண்டு பேர் இருந்த கட்சிகளுக்குக் கூட எப்படி இடம் ஒதுக்கித்
தரப்பட்டிருந்தது என்பதைப் பாருங்கள். 3 பேர் இருந்த கட்சிக்
கும் இடம் தரப்பட்டிருக்கிறது (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதுள்ள விதிமுறை
களையும் பாருங்கள். வெளியே அரசியலுக்குப் பேசினால் இந்த
வாதம் பயன்படலாம்.

திரு. க. அன்பழகன் : நான் விவாதம் செய்ய வேண்டுமென்று
ஆசைப்படவில்லை. தாங்கள் சொல்லுகிற கருத்து நியாயத்தின்
அடிப்படையில் இல்லை. கடந்த முறை இதே சட்டமன்றத்தில்
2 பேர், 3 பேர் இருந்த கட்சிகளுக்குக் கூட இடம் தரப்பட்டி
ருக்கிறதா இல்லையா என்பதைப் பாருங்கள். அப்படி இருக்கும்
போது, 2 பேர் இருந்த கட்சிக்கு 1980 முதல் 1984 வரை இடம்
தரலாம், 1985-ல் தரக்கூடாது என்பது எந்த விதியிலும் இல்லை.
அப்படிச் சொல்வதற்கு விதிமுறைகள் எதுவும் இல்லை. அது
உங்களுடைய உரிமை. அது தேர்தல் தீர்ப்பின் விளைவு என்று
சொல்லுகிறபோது தாங்கள் அளித்த தீர்ப்பினால் பாதிக்கப்
படுகிறபோது, ஏன் அதை மறுபரிசீலனை செய்யக்கூடாது ?
முறை தவறாகச் செய்த காரணத்தால் மறுபரிசீலனை செய்ய
வேண்டுமென்று கேட்டோம். தாங்கள் மறுபரிசீலனை செய்து
எங்களுக்கு நியாயம் வழங்குவது தங்கள் கவுரவத்திற்கும்



அந்தஸ்துக்கும் பாதகமாகக் கருதவில்லை எனினும்,
தாங்கள் எடுத்த முடிவை, கொடுத்த தீர்ப்பை மாற்றிக்கொள்ள
விரும்பாததால் இதனால் எங்களுக்கு ஏற்பட்ட அநீதியை
எடுத்துக்காட்ட எங்களுடைய ஆழ்ந்த கண்டனத்தைத் தெரி
வித்து, அவையைவிட்டு வெளியேறுகிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச்
செய்தனர்)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,
சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய கட்சிகள், சட்டமன்றம் சம்பந்த
மாக தங்கள் அலுவல்களை ஆற்றுவதற்கு தாங்கள் அறைகளை
ஒதுக்கித்தருகிறீர்கள். பெரிய கட்சியாக இருந்து இயங்குகிறபோது
பெரிய இடமும், அவர்களுடைய எண்ணிக்கை குறைகிறபோது
அதற்கேற்ப குறைந்த இடமும் தாங்கள் வழங்குவது தர்மத்தின்
பாலும் நியாயத்தின்பாலும் தங்களுக்கு இருக்கிற உரிமையாகும்.
ஏனென்றால் உறுப்பினர்களுடைய வசதிக்கேற்ப அறைகள்
வழங்கப்படுகின்றன. ஏற்கனவே எங்களுக்கு நிரம்ப இடம்
இருந்தது. அதே இடம்தான் இப்போதும் வேண்டும் என்று
வற்புறுத்துவதால்தான் இத்தகையப் பிரச்சனைகள் எழுகின்றன.
இருந்ததை இழக்கின்றபோது யாருக்கும் எரிச்சல் ஏற்படுவது
இயற்கைதான். ஆனால் அந்த எரிச்சலுக்கு பேரவைத் தலைவரை
இழுப்பது எந்தவகையில் நியாயம் என்பதுதான் அவை முன்னால்
இருக்கிற பிரச்சினை. முன்னால் திராவிட முன்னேற்றக் கழகம்
பெரிய கட்சியாக இருக்கும்போது பெரிய இடத்தை வைத்திருந்
தார்கள். இன்று சின்ன கட்சியாக ஆகியிருக்கிறார்கள். ஆகவே
அவர்கள் சின்ன இடத்திற்குப் போவதுதான் நியாயம். இதிலே
ஏன் வீண் பிடிவாதம் காட்டுகிறார்கள் ? (குறுக்கீடுகள்)

திரு. கு. ரமணி : எங்களது நியாயமான கோரிக்கையை
ஏற்காத காரணத்தால் எங்களுடைய கண்டனத்தைக் தெரிவித்து
நாங்களும் வெளியேறுகிறோம்.

(மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளி
நடப்புச் செய்தனர்) (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், ஜனதா கட்சி
உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது 1985–86 ஆம்
ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்
கெடுப்பும் தொடரும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. ஹுகோ
பால் அவர்கள் பேசுவார்கள்.

4. வரவு-செலவுத் திட்டம் 1985-86—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 20.—வேளாண்மை—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 49.—குடிநீர் வழங்கல்—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண் 50.—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி.

*திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழக அரசு குடிநீர் வடிகால் வாரியத்தின் அறிக்கையைச் சமர்ப்பணம் செய்திருக்கிறது. அதனை இந்த அவையிலே மிகத் திறமையோடு சமர்ப்பித்திருச் கிறார்கள். ஆனால் அவ்வாறு சமர்ப்பிக்கின்ற நேரத்தில்தான் தமிழகத்தின் முதல்வர் அவர்கள் சுதந்திர தின அறிவிப்பு என்ற வகையில் மிகச் செம்மையாக நல்லதொரு அறிக்கையைச சமர்ப்பித்து இருகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சென்னையிலும், தமிழகத்தின் பல பகுதிகளிலும் இருந்து வருகின்ற குடிநீர்ப்பிரச்சினையை ஆழ்ந்த அக்கறையோடு கவனித்து, அந்த உள்ள உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற வகையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தின் அரசு குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கின்ற வகையில் அறிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது அமைச்சர் அவர்களுடைய திறமையும், நிர்வாகத்திலுடைய திறமையும் பின்னிப் பிணைந்து இந்த குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்த்து வைப்போம் என்று அறிக்கை தந்திருக்கிறார்கள். அதை மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனாலும் நமது முதல்வர் அவர்களும், மற்றும் அமைச்சர்களும் இவ்வாறு பல நல்ல திட்டங்களைத் தாக்கல் செய்தாலும் நிர்வாக இயந் திரம் சரியாக இயங்குகிறதா என்று எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் அந்த நிர்வாக இயந்திரம் சரியாக இயங்கவில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ஏன் இப்படிச் சொல் கிறேன் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். நாங்கள் தோழ மைக் கட்சியிலே இருக்கிறோம் என்று சொன்னாலும் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லித்தான் வாக்குகளை சேகரித் திருக்கிறோம். ஆனால் இன்று சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் தண்ணீர் இல்லாமல் சென்னை வாசிகள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல. தமிழகத்திலே சென் னைக்கு கிருஷ்ணா நதித் திட்டத்தின் மூலமாகக் [illegible] றோம் என்று சொல்லி ஒரு திட்டத்தை [illegible] அந்தத் திட்டத்தின் செயல்திறன் [illegible] என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.





என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் உள்ள தண்ணீர்ப் பஞ்சத்தைப்பற்றி பலமுறை அமைச்சரிடம் அன்பாகச் சொல்லியிருக்கிறேன். அவ்வாறு அவரிடம் சொல்லிய நேரங் களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் நிர்வாக இயந்திரத்தில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கிறார் களா என்றால் இல்லை என்று தான் சொல்ல முடிகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பேரவையின் உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கையில், விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது அதற்கு உதவு கின்ற வகையில் அமைதியாக அமர்ந்திருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு எஸ். வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர் களே, நான் இதற்கு முன்னாலே இருந்த அந்த வாரியத்தின் இயக்குநர் திரு. ஆவுடையபிள்ளை அவர்களை அழைத்துக் கொண்டு என்னுடைய தொகுதியிலே வீதி, வீதியாகத் திரிந்து நிலவரங்களை விளக்கினேன். ஆனால் உரிய வகையில் காரியங் கள் நடைபெற்றதா என்றால் நடைபெறவில்லை.

(முற்பகல் 11-10)

இன்றைக்கு நம்முடைய குடிநீர்த் திட்டங்களிலே பல திட்டங் களைப் போட்டிருக்கிறார்கள். சென்னை நகர மேம்பாட்டுத் திட்டத்திலே ராயபுரத்திலே இருக்கிற ராபின்சன் அண்ணா பூங்காவிலே, நீர்த் தொட்டியிருக்கிறது. அங்கேயிருக்கிற நிலவரங்களை பார்க்கும் போது, குடிநீர்த் திட்டங்களைப் பார்க்கும்போது, அங்கே குடிநீர் என்னவோ இருக்கிறது. ஆனால் அது விணியோகம் செய்யப்படுகிறதா, முறையாக பொது மக்க ளுக்குக் கொடுக்கப்படுகிறதா என்றால் ஒன்றும்முறையாகஇல்லை. சென்னை நகரத்திற்கு என்று 42 லாரிகள் ஒதுக்கப்பட்டிருப்ப தாகச் சொல்லப்படுகிறது. அந்த 42 லாரிகளிலே எத்தனை இயங்குகின்றன என்று சொல்லப்படவேயில்லை. எப்பொழுது பார்த்தாலும் அந்தப் பகுதியில் லாரிகள் ரிப்பேர் என்றுதான் சொல்லுகிறார்கள்.

சென்னை நகரத்திலே மிகச்சாதாரணமாக இருக்கிற, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களின் குடியிருப்புகளில் 560 தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக் கிறது. ஆனால் அந்த 560 தொட்டிகளும் எங்கே எப்படி என்று யாராலும் சொல்ல முடியவில்லை. தொட்டிகள் சரிவர இயங்கு கிறதா என்றும் சொல்ல முடியவில்லை. எப்பொழுது பார்த்தா லும் மக்கள் மத்தியிலே நாங்கள் போகிறபோது குடிநீர் பிரச்னை தான் பிரதானமாக எழுகிறது. நான் ஆளும் கட்சியைச் சார்ந்த வன் என்று எண்ணிக் கொண்டிருக்கிற காரணத்தாலும், தோழ மைக் கட்சிக்காரன் என்று சொல்வதினாலேயும், எந்தவித்

[திரு. எஸ். வேணுகோபால்] 1985 ஜூன் 4

ஆர்ப்பாட்டமோ, ஆர்ப்பரிப்போ, அரசுக்கு களங்கத்தை ஏற்
படுத்தக்கூடாது என்று போராட்டத்தை நடத்தவோ முடியாத
காலக் கட்டத்திலே இருக்கிறேன்.

நேற்றையதினம் கூட என்னுடைய அருமை நண்பர்
திருவண்ணாமலை தொகுதியிலிலேருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட
உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள் இதையே சொன்னார்கள்.
சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ள வேண்டிய கால
கட்டத்திலே இந்த அரசினால் நான் உந்தப்பட்டிருக்கிறேன்.
மக்கள் என்னைப் புறக்கணித்து விடுவார்கள். ஆகவே அமைச்சர்
அவர்கள் தயவு கூர்ந்து பரிகாரம் காண வேண்டும் என்று கேட்டுக்
கொண்டார்கள். இப்படி அவர் சொன்னது மாதிரி தான்
நிலைமை இருக்கிறது. சென்னை நகரத்திலேயும் எங்கே பார்த்
தாலும் தண்ணீர்ப்பஞ்சம் இருக்கிறது. ஆனால் அப்படித்தண்ணீர்
பஞ்சம் அதிகமாகி இருக்கிறது என்பதை நிர்வாகத்தினர் ஏற்றுக்
கொள்கிறார்களா என்றால், ஏற்றுக் கொளவதில்லை. திட்டங்
களைப் பார்த்தாலே மிகத் தெளிவாக அது தெரியும். சென்னை
நகர குடிதண்ணீர்த்திட்டத்தில் 1984-85-ல் 9லட்சமும் 1985-86-ல்
500 லட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றையதினம்
வழக்கமாக சென்னை நகரத்திற்கு கொடுக்கப்படும் குடி
தண்ணீர் கூட கிடைக்காமல் இருக்கும் சூழ்நிலைதான் ஏற்பட்
டிருக்கிறது. சென்னை நகரத்திற்கு இந்த நிலையிலே 12
ஊராட்சிகளை வேறு புதிதாகச் சேர்த்திருக்கிறார்கள். இதனால்
சென்னை நகரத்திலே நல்ல தண்ணீர்ப் பஞ்சம் மிகமிகக் கடுமை
யாக இருக்கிறது.

ஏன் இந்தக் கொடுமை? இதற்குக் காரணம் என்ன?
எப்படி இந்தக் கொடுமை நாட்டில் உருவாக்கப்பட்டது? சுதந்திர
தின விழாவிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லி
யிருக்கிறார்கள். இந்தத் தமிழகத்திலே குடிதண்ணீர் இல்லாத
இடம் இனி இருக்காது, எல்லோருக்கும் குடிக்கத் தண்ணீர்
கிடைக்கும். யாருக்குமே, குடிப்பதற்கு தண்ணீர் இல்லை என்ற
எண்ணம் வரக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். முதல
மைச்சர் அவர்களுடைய நல்ல எண்ணத்தின் விளைவாக நல்ல
பல திட்டங்கள் சிறப்பான திட்டங்கள் உருவாகியிருக்கின்றன.
ஆனால் அவைகள் செயல்படும்போது, சிறப்பாக, செம்மையாக
செயல்படுகிறதா என்றால் அதுதான் இல்லை. மத்திய அரசும்
நிறைய பணம் கொடுக்கிறது. மாநில அரசும், அதன் அமைச்சர்
களும், மத்திய அரசுக்கு உடந்தையாக இருந்துதான் திட்டங்
களைச் செயல்படுத்துகிறார்கள். ஆனாலும் நிர்வாக இயந்திரம்
ஒழுங்காகச் செயல்படாத காரணத்தால் இப்படிப்பட்ட நிலை
நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

1971-72 ஆம் ஆண்டிலே மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து
1.05 கோடி ரூபாய் மானியமாகக் கொடுக்கப்பட்டது. அது
மட்டும் அல்ல, வெளிநாட்டிலிருந்து 20 கோடி ரூபாய் மதிப்புள்ள



1985 ஜூன் 4] [திரு. எஸ் வேணுகோபால்]

துளை போடுகிற இயந்திரங்கள் திறப்பான்கள் வரவழைத்துக்
கொடுக்கப்பட்டன. ஆனால் அவைகள், 1982-83 வரை ஒழுங்
காக இயங்கியதற்கு தேவையான சான்றிதழ்களை சம்பந்தப்பட்ட
நிர்வாகத்தினரால் கொடுக்க முடியாமல் போன காரணத்தினால்,
தொடர்ந்து அதற்கான சாத்தியக் கூறுகளை, உதவிகளை நம்
மால் உருவாக்க முடியவில்லை. நிர்வாக அதிகாரத்தில் இருப்
பவர்கள் செம்மையாகப் பணியாற்றுவதில்லை. 9 லட்சம் என்று
முதலிலே போட்ட திட்டத்திற்கு 500 லட்சமாக உயர்த்தியிருந்
தாலும், அவைகள் எல்லாம் அதிகாரிகள் தங்களுடைய நிர்வாகத்
திலே இருக்கிற அலுவலர்களுக்கு அதிகமான சலுகைகளைக்
காட்டி, வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொண்டே போக
செலவிடுகிறார்களே தவிர, திட்டங்களை நிறைவேற்றும் வகை
யில் யாரும் எதையும் சரியாக செய்வதாக தெரியவில்லை.

அதேபோல எல்.ஐ.சி.யிலே கொடுக்கிற லோன்களுக்குக் கூட
அவைகளை சரியாக முறைப்படுத்த முடியாத நிலை இருக்கிற
காரணத்தாலே தேவையானவர்களுக்கு அது சரிவர கிடைப்ப
தில்லை. அடுத்தபடியாக உலக வங்கியிலேயிருந்து கொடுக்கின்ற
பணத்திற்கு இப்போது தனிக் கணக்கு வேண்டும் என்று சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரம் மட்டும் அல்ல,
சென்னை நகரத்திற்கு அப்பால் இருக்கிற தமிழகத்தைச் சுற்றிப்
பார்த்தால் கூட நன்றாகத் தெரியும், குடிதண்ணீர் எவ்வளவு
விரயமாகிக் கொண்டிருக்கிறது என்று. நெய்வேலியிலே இருக்
கிற தண்ணீர் வீணாகிக் கொண்டிருக்கிறது. ஏன் வீணாக
வேண்டும்? பக்கத்திலே இருக்கிற தென்னாற்காடு மாவட்டத்
திற்கோ அல்லது அருகாமையில் உள்ள ஊர்களுக்கோ அந்த
தண்ணீரைப் பயன்படுத்தக் கூடாதா? அப்படி அந்தத் தண்ணீரை
பயன்படுத்தும் வகையில் தக்க முயற்சிகளை அரசு உருவாக்கித்
தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.
இன்னொன்றையும் நான் சொல்ல வேண்டும். நாங்கள் சாலை
யில் வந்துக் கொண்டிருக்கும்போது, வீராண திட்டத்திற்காக
வரவழைக்கப்பட்ட பைப்புகள் ஆங்காங்கே இருப்பதைப் பார்க்
கிறோம்.

அந்த பைப்புகளை இந்தத் தமிழகத்திலே இருக்கிற சில
சமூக விரோதிகள் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். கள்ளச்
சாராயம் காய்ச்சுபவர்களும், இழிவான தொழிலில் இருப்பவர்
களும் அதை முறையாக வரையறுத்தி பயன்படுத்திக் கொள்
கிறார்கள். இந்த நிலைமை தடுக்கப்பட வேண்டும் என்றால்,
அந்த பைப்புகளை நெய்வேலியில் உள்ள தண்ணீரை தமிழகத்
திலே உள்ள தென்னாற்காடு மாவட்டத்திற்கும், அருகில் உள்ள
பகுதிகளான திருவண்ணாமலை, செஞ்சி போன்ற இடங்களுக்கு
கொண்டு வருவதற்குப் பயன்படுத்த அரசு ஆலோசனை செய்ய
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே வறட்சி
நிவாரணத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதிலே புதிய
ஆழ்துளை கிணறுகளை வாடிகள் போட்டிருப்பதாகவும், கை
பம்புகளையும், கை இறைப்பான்களையும் போட்டிருப்பதாகவும்
சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்லும்போது,
நான் கேட்க விரும்புகிறேன்., அன்றைக்கு போட்ட அத்தனை
பைப்புகளும் செயலில் இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க
வேண்டும். எங்கேயாவது செயலாற்றுகிறதா என்பதை எண்ணிப்
பாருங்கள். சென்னை நகரத்தில் எத்தனை பைப்புகள் இயங்கிக்
கொண்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பாருங்கள். எங்கேயும்
பைப்புகள் இயங்கவில்லை. ஏன் இதையெல்லாம் சுட்டிக்காட்டு
கிறேன் என்றால், நாம் தோழமை கட்சியாக இருக்கிற காரணத்
தால் எங்கே போனாலும் மக்கள் என்னை கேட்கிறார்கள்.
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நண்பர்கள் என்ற
முறையில் எங்களைக் கேட்கிறார்கள். ஏழைகளுக்கு வாக்குறுதி
கொடுத்தீர்களே, முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்
தார்களே, நாங்கள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறோமே
என்று கேட்கிறார்கள். ஆகவே தமிழகத்தின் எல்லாப் பகுதி
களிலும் தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது. சென்னை நகரம் மட்டு
மல்லாமல் சுற்றி இருக்கிற எல்லாப் பகுதிகளிலும் தண்ணீர்ப்
பஞ்சம் இருக்கிறது. திண்டிவனத்தில் தண்ணீர் இல்லை. பாது
காக்கப்பட்ட தண்ணீர் என்று சொல்கிறார்கள். அங்கே
கொடுக்கப்படுவது பாதுகாக்கப்பட்ட தண்ணீர் அல்ல. கழிவு
நீரும், குடிதண்ணீரும் கலந்து பின்னிப் பிணைந்து ஓடிக்கொண்
டிருக்கிற காட்சியை நாம் பார்க்கிறோம்.

அடுத்தபடியாக வடிகால் வாரியம். வடிகால் வாரியத்தை
நினைத்தாலே சிரிப்பு தான் வருகிறது. இந்த நகரத்திற்காக
50 ஆண்டுகளுக்கு முன்னால் எப்படி திட்டமிட்டார்களோ, அந்த
அடிப்படையில் போடப்பட்ட குழாய்கள் தான் கீழே இருக்
கின்றன. குழாய்கள் புதியதாக போடப்பட்டதாக எனக்குத்
தெரியவில்லை. தெருக்களில் சிறு மழை தூறினாலும் தண்ணீர்
தேங்கி நிற்கிறது. இந்தக் காட்சியைப் பார்த்து யாராவது
அதிகாரிகளிடம் சொன்னால் அதிகாரிகள், ஏ.ஈ. இல்லை, ஜே.ஈ.
இல்லை என்று சொல்கிறார்களே தவிர, சரியான நடவடிக்கை
கள் எதுவும் எடுப்பதில்லை. இப்போது சாதாரண மக்கள்
எல்லாம் அரசியலில் விழிப்புணர்ச்சி பெற்று இருக்கிறார்கள்.
ஓட்டு போட்டோமே, ஓட்டு வாங்கியவர்கள் எங்கே என்று தெருக்
களில் அவர்கள் வந்து போடுகிற சத்தம் இந்த அரசை பாதிக்
கிறது என்பதாலே தான் இவைகளை எல்லாம் நான் சொல்
கிறேன்.

சென்னை நகரம் மிகமிக சீரழிந்து இருக்கிறது. சென்னை
நகரம் மிகமிகக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது.
ஆங்காங்கு அடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இதனை
யாரும் மறுக்க முடியாது. சென்னை நகரத்தில் மாடிக் கட்டி





டங்கள் அதிகமாகி இருக்கின்றன. ஆனால் கழிவு நீரை வெளி
யேற்றுவதற்கு வேண்டிய போதுமான வசதிகள் செய்யப்பட
வில்லை. இன்றைக்கு இப்படிப்பட்ட நிலைமைகள் சென்னை
நகரத்தில் இருக்கின்றன. ஆனால் அதிகாரிகள் தங்களுடைய
அறிக்கையில் ஒன்றை மட்டும் சொல்லி இருக்கிறார்கள். ஜார்ஜ்
டவுன் பகுதியில் 21 தெருக்களில், 47 ஆயிரம் மக்கள் வசிக்கிற
இடத்தில் வடிகால் வாரியம் சிறப்பாக செயலாற்றுகிறதாம்.
சென்னையைச்சுற்றிப் பார்க்கிற அதிகாரிகள், சிங்காரச்சென்னை
என்று சொல்கிற அதிகாரிகள், பரந்து விரிந்து இருக்கிற சென்னை
யில் ஒரே ஒரு இடத்தை மட்டும் காட்டி தங்களுடைய எண்ணங்
களை அங்கே முத்தாய்ப்பாக வைத்திருக்கிறார்கள். அங்கே
சாக்கடை நீர் தேங்கவில்லை என்று அவர்கள் சொல்கிறதைப்
பார்க்கிறபோது ஏதோ வானத்தில் ஒரே ஒரு நிலவு என்பதைப்
போல சொல்கிறார்கள். மீதி இடமெல்லாம் கறுப்பாக இருக்க
வானத்தில் ஒரேஒரு நிலவு இருக்கிறது என்பதைப் போல அறிக்கை
சொல்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணி
வாக கேட்டுக் கொள்வேன். இப்படிப்பட்ட நிலைமைகளை
உருவாக்க வேண்டாம். இந்த அரசு ஏழை, எளிய மக்களின்
அரசு, புனிதமான அரசு என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.
ஆகவே இருக்கிற நிலைமைகளை மாற்றி மக்களுக்கு வசதிகளைச்
செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருமங்கலம் நகரத்திற்கு சோழவந்தானிலிருந்து
குடிதண்ணீர் கொண்டுவருவதற்கு 80 லட்சம் ரூபாய் செலவில்
திட்டம் வடிகால் வாரியத்தில் செயல்பட்டு வருகிறது. சோழ
வந்தான் ஆற்றில் கிணறு தோண்டப்பட்டு, திருமங்கலம்
வரையில் சுமார் 30 கிலோ மீட்டர் தூரம் குழாய்கள் பதிக்கப்
பட்டு, தண்ணீர் கொண்டு வரப்படவுள்ளது. ஆனால் மேல்
நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி இன்னும்
துவங்கப்படவில்லை. திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இது
வரையில் மூன்று ஆண்டுகளாகியும் மேல்நிலை நீர்த்தேக்கத்
தொட்டிகள் கட்டாத காரணம் என்னவென்று புரியவில்லை.
வாரியம் ஏன் அந்தப் பகுதியில் அசட்டையாக இருக்கிறது
என்பது எனக்குப் புரியவில்லை. உடனடியாக மேல்நிலை நீர்த்
தேக்கத் தொட்டிகள் கட்டும் பணியை வாரியம் துவங்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி பல பிரச்சனைகள் இருக்கின்றன. சென்னை
நகரத்தில் இருக்கிற பிரச்னைகள் மிகவும் கடுமையாக விமர்
சிக்கப்படுகின்றன. நாம் தோழமை கட்சிகளாக இருக்கிறோம்.
இப்போது பார்த்தீர்கள் அல்லவா? தி.மு.க. அணி என்று
சொன்னார்கள். அவர்கள் வெளியேறிய உடன் பின்னாலேயே
மற்றவர்களும் போய்விட்டார்கள். ஒரே அணி என்பதால்
மனசாட்சியை இழந்துவிட்டார்கள். நாமும் ஒரே அணி
என்று சொல்கிறபோது நாங்கள் சொல்கிற காரியங்களை இந்த
மாமன்றத்திலே இருக்கிற அமைச்சர்கள் அவற்றைச் செய்தாக

வேண்டும். அப்போது தான் நம்முடைய தோழமை அணி ஒத்து,
நின்று நிலைக்கிற நிலைமை இருக்குமென்பதை எண்ணிப்
பார்க்க வேண்டும். ஆகவே தான் கேட்டுக் கொள்கிறேன்.
இலக்கியத் தென்றலாக இருக்கிற நம்முடைய வேளாண்மைத்
துறை அமைச்சர் அவர்கள், நாங்கள் எழுப்புகிற பிரச்சனை
களுக்குத் தீர்வு காண்கிற வகையில், வேளாண்மை துறையிலும்,
வடிகால் வாரியத்திலும் இருக்கிற அதிகாரிகளை இயக்கி,
முறைப்படுத்தி, எங்கெங்கே பிரச்னைகள் இருக்கிறதோ,
எங்கெங்கே ஏழைகள் தண்ணீர் இல்லாமல் வாடுகிறார்களோ
அங்கெல்லாம் தண்ணீர் ஊற்ற வேண்டும். அப்படி ஊற்றுகின்ற
தண்ணீரிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தெரி
வார்கள். அங்கே அமைச்சர் காளிமுத்து அவர்கள் தெரிவார்கள்

(முற்பகல் 11-20)

ஆகவே அமைச்சர் அவர்கள் சரியாக வேலை செய்கிறார்கள்
என்று சொல்வார்கள். அதிலே நமக்கும் மரியாதை; நம்முடைய
அணிக்கும் மரியாதை. எனவே தயவு செய்து சென்னையை
சிரமக்குங்கள். தண்ணீர் இல்லாத இடங்களுக்கு தண்ணீர்
கொடுங்கள். அதற்கான செலவினங்களை மத்திய அரசு,
அதிகமாகத் தருகிறது. ஆகவேதான் அன்போடு கேட்டுக்
கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து
இதிலே அதிகமான கவனம் செலுத்தி, இதைச் செயல்படுத்த
வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு என் உரையை
முடிக்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, ''உழுவார் உலகத்தார்க்கு
ஆணி அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து'' என்று
வான்புகழும் வள்ளுவன் தெளிவாகச் சொல்லியிருக்கிறான்.
அந்தக் குறிக்கோளை தன்னகத்தே தேக்கி வைத்துள்ள
புரட்சித்தலைவர் அவர்களின் இனிய அரசு இன்றைய தினம்
வேளாண்மைத்துறை பற்றிய மானியக் கோரிக்கையை இங்கே
வைத்திருக்கிறது. 1985-86 ஆம் ஆண்டில்பல் வேறு நல்ல இட்டங்
கள், புதிய திட்டங்கள், வேளாண்மைத்துறையைச் செம்மைப்
படுத்துவதற்கு, சீர் படுத்துவதற்கு, சரி செய்வதற்கு அவர்கள்
கொண்டு வந்திருக்கிறார்கள். மானாவரிதில் பாகுபாடு மேம்பாடு
இட்டம், சான்றிதழ் பெற்ற பயிர் வகைகளை மானிய உதவி
யுடன் உற்பத்தி செய்கின்ற திட்டம், 1985-86 ஆம் ஆண்டில்
சாக்கோடு மற்றும் பாப்பான்குளம் பகுதியில் விதைப் பண்
ணையை செம்மைப்படுத்துகின்ற திட்டம், விதை சேகரிப்பு
மற்றும் தரம் பிரிக்கும் 56 இயந்திரங்களை வாங்குகின்ற
திட்டம், தஞ்சை மாவட்டப் பகுதியிலே உப்பு படிந்த நிலமாக
இருக்கின்ற நிலங்களை ஆண்டு ஒன்றுக்கு 500 ஹெக்டேர்
நிலங்களை தரம் பிரித்து ரசாயன உரங்களைக் கொண்டு
சீர் செய்கின்ற திட்டம், என்று இப்படி பல்வேறு திட்டங்களை





எதிர்வரும் காலங்களில் நிறைவேற்ற இந்த மானியக் கோரிக்கை
யிலே அனுமதி கோரியிருக்கிறார்கள். தஞ்சை, திருச்சி,
ஆற்காடு, புதுக்கோட்டை, பகுதியில் விவசாயத்தை சீர்
செய்வதற்கும், கடந்த வெள்ளச் சேதக் காலங்களில் பாதிக்கப்
பட்ட நிலப் பகுதிகளை சீர் செய்யும், பொருட்டு 24.8
லட்சத்திற்கு திட்டம் தீட்டி, அதிலே 1,200 ஹெக்டேர்
நிலங்களை புல் டோசர் வைத்து சமன் செய்கிற திட்டம் என்று
இப்படி பல்வேறுதிட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன.

குடிநீர் வாரியத்தைப் பொறுத்தவரை, ரூ. 128.5 கோடிக்கு
உலக வங்கி உதவியுடன் குடிநீர் மற்றும் குறைந்த செலவில்
சுகாதார திட்டத்தின் கீழ், எனது தொகுதியான, பட்டுக்
கோட்டை நகரத்திற்கு ரூ. 64.5 லட்சத்திலே ஒரு திட்டத்தை
இந்த அரசு தீட்டியிருக்கிறது. இப்படி பல்வேறுபட்ட நல்ல
திட்டங்களை தீட்டி இருக்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அரசு, மேலும் பல நல்ல திட்டங்களை தீட்டித் தரவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில்
நிலமகளைக் குளிர்விக்கும் மலைமகள் உலர்த்தும் மாநெடும்
கூந்தல் காவிரித்தாய். அந்தப் படுகையிலே இருக்கின்ற
தஞ்சை மாவட்டத்தில் வாழ்கின்ற விவசாயப் பெருங்குடி
மக்கள், வேளாண் பெருங்குடி மக்கள் நன்மை பெறுகின்ற
வகையில், இன்றைய தினம் அரசு 102 கோடி ரூபாயிலே ஒரு
திட்டத்தை வைத்து, ஆறுகளைப் புதுப்பிக்கின்ற பணிகளை
மேற்கொண்டிருக்கிறார்கள். அப்படி மேற்கொண்டிருக்கிற
அந்தப் பணியில், இந்த ஆண்டு ஜி.ஏ. கனால் பகுதி
மட்டும் சேர்க்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாக கீழ்த்தஞ்சைப்
பகுதியில் உள்ள இடங்கள் இதிலே சேர்க்கப்பட்டு இருக்கின்றன.
ஆனால் மேல் தஞ்சையிலே இருக்கின்ற ஒரத்தநாடு, திரு
வோணம், பட்டுக்கோட்டை, பேராவூரணி, திருத்துறைப்
பூண்டி போன்ற பகுதிகள் விடுபட்டுப் போய் இருக்கின்றன.
அதையும் அரசு கவனித்துப் பரிசீலிக்க வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, காவிரிப் பிரச்சனையில் பல்வேறுபட்ட ஆட்சி
யாளர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் இந்த மன்றத்தில்
கூறப்பட்டு இருக்கின்றன. எத்தனையோ வாதங்கள் எடுத்து
வைக்கப்பட்டு இருக்கின்றன. முந்தைய ஆட்சியாளர்கள் சரியாக
செயல்படவில்லை என்ற காரணத்தால்தான் பிறந்த மண்
ணுக்குச் சொந்தம் கொண்டாடியவர்களை புறம் தள்ளிவிட்டு,
தஞ்சை மக்கள் வளர்ந்த மண்ணுக்கு உரியவரை இன்றைய
தினம் ஆட்சியிலே அமர்த்தி இருக்கிறார்கள் என்பதை நான்
பெருமையோடு கூறிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.
''Yes. It is a land of M. G. R.'' என்று சொல்லுகின்ற
வகையிலே தஞ்சை மாவட்டம் முழுவதும் ஆளும் கட்சி
வெற்றி பெற்றுள்ள இந்த நேரத்தில் இங்கே இருக்கின்ற
வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு

[திரு. ப. ந. இராமச்சந்திரன்] [1985 ஜூன் 4

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும்,
நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை
மக்களின் நெஞ்சம் கொஞ்சுகின்ற வகையில், அவர்கள் வாட்டம்
போக்குகின்ற வகையில், நாட்டம் கொண்டு, கர்நாடக அரசோடு
உரிய தொடர்பு கொண்டு விரைவான நல்ல நடவடிக்கையை
எடுத்து, தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைத் துறையில்
ஈடுபடுகின்ற அந்த விவசாய, பெருங்குடி மக்களின் வாட்டம்
போக்குகின்ற வகையில், வருவாய் பெறுகின்ற வகையில், நல்ல
திட்டமான அந்த காவேரி நீர்த் திட்டத்தை அவர்கள் உடனடி
யாக கர்நாடக அரசோடு தொடர்புகொண்டு நிறைவேற்றித் தர
வேண்டும் என்று, ஒரு சுமுகமான தீர்வு காணவேண்டும் என்று
இந்த இனிய நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டும் அல்லாது, கோவை மாவட்டத்தை
நீங்கள் எடுத்துக்கொள்வீர்களானால், அங்கே இருக்கின்ற
மண் வள பாதுகாப்பு, விவசாயிகள் உழைப்பு போன்ற வகை
களினால் ஒரு ஏக்கருக்கு 40 மூட்டைகளுக்கு மேல் நெல் அறு
வடை செய்வார்கள். அவர்களுக்கு விலையும் அங்கே அதிகமாக
இருக்கிறது. விளைச்சலும் அதிகமாக இருக்கிறது. ஆனால்
தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே இருக்
கின்ற மண் தரத்தைப் பொறுத்த வரையில், எவ்வளவு தான்
விவசாயிகள் சிரமம் எடுத்து உழைத்தாலும் கூட, ஒரு ஏக்கருக்கு
25 மூட்டைக்கு மேல் எந்த விவசாயியும் சாகுபடி செய்ய
முடியாத நிலை இருக்கிறது. இதைச் கருத்தில் கொண்டு தஞ்சை
மாவட்டத்தில் இருக்கின்ற வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்கு
குவிண்டால் ஒன்றுக்கு வழங்கப்படுகின்ற 145 ரூபாய் என்ற
தொகையை—அண்மையில் கர்நாடக மாநில அரசு கூட 193
ரூபாய் என்று தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்
கிறார்கள்—அதிகமாக்கி அந்த அளவுக்கு எங்களுக்கு 200 ரூபாய்
குவிண்டாலுக்கு என்று உயர்த்தித் தரவேண்டும் என்று மாண்பு
மிகு அமைச்சர் பெருந்தகையை கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டும் அல்லாது, தஞ்சையில் வேளாண்மைக்
கல்லூரி ஒன்று அமைக்கப்படும் என்று கடந்த சட்டமன்ற
கூட்டத்தின் போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து
இருந்தார்கள். அந்த வேளாண்மைக் கல்லூரியை விரைவில்
தஞ்சையில் அமைத்துத் தரவேண்டும். காலம் கடத்தாமல்
அதை சீக்கிரமாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே இன்னும் ஒன்றையும் குறிப்பிட்டுக் கூற கடமைப்
பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயி
களுக்கு, குறிப்பாக காவேரி நீர் பாசனத்தை நம்பி விவசாயம்
செய்பவர்களுக்கு, 6 மாதம் நிச்சயமாக வேலை இல்லாத
சூழ்நிலை இருக்கிறது. அந்த 6 மாதத்திற்கு ஏதேனும் ஒரு
தொழில் செய்கின்ற வகையில் தென்னை வளர்ச்சியிலும்,



1985 ஜூன் 4] [திரு. ப. ந. இராமச்சந்திரன்]

எண்ணெய் வித்துக்கள் வளர்ச்சியிலும் ஈடுபடுத்தி அண்மையில்
நடந்த மாவட்ட கவுன்சில் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்
தலைவர் அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, பட்டுக்
கோட்டை சரகத்தில் ஒரு தென்னைத் தொழிற்சாலை, தென்னை
யின் உப பொருட்களில் இருந்து கிடைக்கின்ற பொருள்களை
வைத்து ஒரு தொழிற்சாலை 10 கோடி ரூபாய் செலவில்
நிறுவுவதற்கு அரசுக்கு கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள்.
அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீர்தூக்கி பரிசீலித்து
உதவி செய்து, அதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று
இந்த இனிய நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாது, வறட்சிப் பணிகளின் போது 1982—83-
ஆம் ஆண்டில் பழைய டெல்டாவில் 2000 வடிமுனை குழாய்
கிணறுகள் போட வேண்டும் என்று அரசுக்கு ஒரு கோரிக்கை
கொடுக்கப்பட்டது. அது இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்
கிறது. அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந்த இனிய நேரத்
தில் கேட்டுக் கொள்கிறேன். சி. எம். பி. பாசன வசதியில் 1750
குழாய் கிணறுகள் போடப்பட வேண்டும் என்று இதுவும் அந்த
வறட்சித் திட்டத்தில் ஒத்துக் கொண்ட ஒன்று—இதை 2 தினங்
களுக்கு முன்னால் ஒரு கருத்தரங்கில் பேசுகின்றபோது, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். இதையும்
நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
இன்னும் ஒன்றையும் இந்த இடத்தில் எடுத்துச் சொல்லக் கடமை
பட்டிருக்கிறேன். "நடவு செய்த உழவர் கூலி 4 அணா ஏற்பதும்
உடல் உழைப்பு இல்லாத செல்வர் உலகை ஆண்டுலாவுவதும்" என்று
பாரதிதாசனார் அவர்கள் ஒரு கவிதையில் எடுத்துச் சொல்லி
யிருக்கிறார்கள். குறிப்பாக கூட்டுறவு கடன் பெற்ற தஞ்சை
மாவட்ட விவசாயிகள் பிரச்சினை பற்றி ஒரே ஒரு கருததை
மட்டும் இந்த இடத்தில் சொல்லி என்னுடைய உரையை
முடித்துக் கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். தஞ்சை மாவட்
டத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கு கடந்த 10 ஆண்டு காலமாக
கூட்டுறவுக் கடன்கள் தள்ளி வைக்கப்பட்டக் காரணத்தால் வட்டி,
அபராத வட்டி, பல்வேறு வட்டிகள் எல்லாம் கூடி அன்றையதினம்
ஆயிரம் ரூபாய் கூட்டுறவு கடன் பெற்ற ஒருவர் 1,420 ரூபாய்
வட்டியாக சேர்த்து மொத்தம் 2,420 ரூபாய் செலுத்துகின்ற அள
வுக்கு, அந்தச் சுமையை அந்த விவசாயிகள் தாங்கமுடியாத அளவுக்கு
அது சென்று இருக்கிறது. இதை அருள் கூர்ந்து வேளாண்மைத்

(முற்பகல் 11–30)

துறை அமைச்சர் அவர்களும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்
களும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்
டுக்கொண்டு, தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகள் ஆறு
ஏக்கர், ஏழு ஏக்கர் நிலம் உள்ள நடுத்தர விவசாயிகள் எல்லாம்
இன்றையதினம் ஆழ்துளைக் கிணறுகள் போடுகின்ற பணியிலே
தீவிரமாக தங்களை அர்ப்பணித்துக் கொள்கிற நேரத்தில், தினசரி
வாடகை டிரில்லர்களுக்கு 75 ரூபாயாக இருந்ததை இன்றைய

தினம் வேளாண்மைத் துறை 250 ரூபாய் ஆக உயர்த்தி இருக்கிறது.
டெபாசிட் 1300 ரூபாயாக இருந்ததை 3,000 ரூபாயாக
உயர்த்தி இருக்கிறார்கள். அந்தத் தொகையினை அருள்
கூர்ந்து பரிசீலித்து குறைத்துக் கொடுக்க வேண்டும்.
விவசாயிகள் ஏறத்தாழ 8 நாள் 10 நாள் கூட
போர் போடுவதற்கு ஒரு மாதம் கூடப் பிடிக்கின்றது.
அந்த டிரில்லர் வாடகை அதிகப்படியாக இருக்கின்
றது. அருள் கூர்ந்து சிந்தித்து குறைத்துக் கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இனிய நேரத்தில் வேளாண்மை
மானியத்தில் என்னுடைய கருத்துக்களையும் எடுத்துச் சொல்ல
வாய்ப்பினை நல்கிய சட்டப் பேரவைத் துணைத்தலைவருக்கு
என்னுடைய நன்றியறிதலைக் கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. வே. கு. சின்னசாமி : சட்டமன்றப் பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்
சரால் கொண்டுவரப்பட்டு, அறிவிக்கப்பட்ட வேளாண் துறை
மற்றும் குடிநீர் வழங்கல் சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களை
கூற நான் ஆசைப்படுகிறேன். காலையிலே மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்கள், சட்டமன்றத்தைத் துவக்குகின்ற நேரத்தில்
'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு
பின்செல்பவர்' என்ற ஒரு அருமையான வள்ளுவன் கருத்தை
இங்கே எடுத்துரைத்தார்கள். அதற்காக அவர்களுக்கு நான்
நன்றியினைத்தெரிவித்துக் கொண்டு, குறிப்பாக, புரட்சித் தலைவர்
அவர்கள் இந்தத் தமிழகத்தினுடைய முதலமைச்சராக
பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தான் விவசாயப் பெருங்குடி
மக்களுடைய வாழ்க்கைத் தரம் அந்த அளவுக்கு உயர்ந்துள்ளது
என்பதை நான் எடுத்துக்கூற கடமைப்பட்டுள்ளேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் இன்றையதினம் சினிமாத்
துறையிலே இருந்த நேரத்தில் அவர் 'விசவாயி' என்ற படத்திலே
நடித்திருக்கின்றார். அந்தப் படத்திலே கூட, 'கடவுள் என்னும்
முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி' என்ற தன்னு
டைய கொள்கையை, விளக்கமாக சினிமாத்துறையிலே எடுத்துக்
காட்டினார்கள். ஆனால், அப்படிச் சொன்னவர் இந்த நாட்டி
னுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றதற்குப் பின்னால்,
முதலமைச்சராகப் பொறுப்பேற்ற புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்.
அவர்களைப் பார்த்து எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லாம் விவசாயி
என்ற படத்திலே நடித்த புரட்சித் தலைவர் விவசாயிகளுக்கு
என்ன செய்தார் என்று கேட்டவர்களும் வெளியிலே உண்டு,
உள்ளேயும் உண்டு. ஆனால் அந்த லட்சியத்திற்கேற்ப கொள்கை
விளக்கமாகத்தான் இன்றையதினம் விவசாயிகளுக்கு இலவச மின்
சாரம் என்ற திட்டத்தை அறிவித்தார். இந்தியத் துணைக்
கண்டத்திலேயே பெருமைக்குரிய முதல்வர் தமிழக முதல்வர் என்று
நான் மனம் திறந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.





அதேபோல் கோடிக்கணக்கான ரூபாய்களை வரி தள்ளுபடி
யாக விவசாயத் துறையிலே செய்திருக்கிறார், கூட்டுறவுக் கடன்
சங்கத்தின் மூலமாக என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்
போடு தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியான
பவானிசாகர் பகுதியிலே கீழ்பவானி அணைக்கட்டு தண்ணீர்
பாய்ந்து கொண்டிருக்கிறது. அங்கே வாழ்கின்ற விவசாயிகளுக்கு
இரண்டாம் போகத்திற்கு முறை வைத்து விடுகின்ற சிஸ்டம்
கடைப்பிடிக்கப்பட்டது. அப்படி விடும்போது அங்கே இருக்கின்ற
விவசாயிகள் தங்களுடைய சொந்த பூமியிலே உள்ள சொந்தக்
கிணறுகளிலே தண்ணீரை இறைத்தும், அங்கே எல்லோருக்கும்
விடப்படுகின்ற முறைவைத்து பாய்ச்சுகின்ற தண்ணீரை வைத்தும்,
நெல், கரும்பு, போன்ற சாகுபடிகளைச் செய்து வந்தார்கள்.
அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு தற்சமயம் வரி அதிகமாக விதித்
திருப்பதாக எங்களிடத்திலே கூறியிருக்கிறார்கள். ஆனால்
விவசாயிகள் எல்லோருக்கும் என்ன தண்ணீர் வரி விதிக்கிறீர்
களோ அதைத்தான் போடவேண்டும் என்பதை இந்த நேரத்திலே
வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

அதோடு, அங்கே விவசாயிகளுக்கு என்று கிளை வாய்க்கால்களை
சீரமைக்கின்ற பணியானது துரிதமாக நடைபெற்று வருகிறது.
அந்தப் பணி நடைபெறுகின்ற நேரத்தில் ஒரு சில விவசாயிகளுக்கு
அந்த சுலூஸ் வைக்கின்ற நேரத்தில் பல பிரச்சினைகள் ஏற்பட்டு
எத்தனை நம்பர் சுலுஸிலிருந்து தண்ணீரை எடுத்துக் கட்டுவது
என்ற நிலைமை தெரியாத நேரத்தில் சரியான தகவல் கொடுக்கப்
படாமல் சில பூமிகளில் இந்த முறை தண்ணீர் கூட பாயாமல்,
மறண்டுள்ளது என்று தெரிவிக்கக் காரணம் இதுதான்.
காரணம் அங்கே இருக்கிற வருவாய்த்துறை அதிகாரிகளும், நீர்ப
பாசனத் துறை அதிகாரிகளும் ஆலோசித்து ஜாயின்ட் ரிப்போர்ட்-
ஆகக் கொடுக்கிற நேரத்திலேதான் அந்தப் பணிகள் துவங்கப்
படுகின்றன. இப்படிப்பட்ட முறையிலே காலதாமதம் தவிர்க்கப்
படுகின்ற நிலையிலே பணிகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் திரு எம். ஜி. ஆர். ஆட்சிப் பொறுப்பை
ஏற்றுக் கொண்டதற்குப் பின்னர் தான் குடிநீர்ப் பிரச்சினை
முழுமையாகத் தமிழகத்திலே தீர்க்கப்படவேண்டுமென்ற முறை
யிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் பெருமை
யோடு சொல்லிக் கொள்ள வேண்டும். வறட்சி ஏற்பட்ட காலத்
திலே லட்சக்கணக்கான கிராமங்களிலே ஆழ் குழாய்க் கிணறுகள்
போர்க்கால அடிப்படையிலே அமைக்கப்பட்டன. அதே போன்று
இந்த ஆண்டும் நிறுவப்பட வேண்டும். சத்தியமங்கலத்திலே,
பவானிசாகரிலே, காடுகளிலே இருக்கிற மிருகங்கள் கூட குடிப்ப
தற்குத் தண்ணீர் இல்லாமல் இறந்துபோன நிலைமையை
நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம், பத்திரிகைகளிலே படித்து
இருக்கிறோம். அதனால் வனத் துறை மூலமாகத் தண்ணீர்த்
தொட்டிகள் கட்டப்பட்டு, அந்த மிருகங்களுக்குத் தினந்தோறும்

[திரு. வே. கு. சின்னசாமி] [1985 ஜூன் 4

தண்ணீர் கிடைக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அதே நிலைமை பொதுமக்களுக்குச் செய்யப்பட வேண்டும். புஞ்சைப் புளியம்பட்டிக்கு பவானிசாகரிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தின் அடிப்படையிலே பழங்காலத்திலிருந்து நீர் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பக்கத்திலே இருக்கிற கிராமங் களுக்குத் தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டு அவர்கள் கஷ்டப் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற குழாயிலி ருந்து இணைப்பை ஏற்படுத்தி தண்ணீரை அந்தக் கிராமங்களுக்கு வழங்கலாம் என்றால் புஞ்சைப் புளியம்பட்டி நிர்வாக அதிகாரி களும், பொதுமக்களும், அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கிறார்கள். எங்களுக்குப் போதுமான தண்ணீர் இருக்கிறது. அதிலிருந்து தண்ணீர் எடுத்தால் எங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற நியாயமான காரணத்தைச் சொல்கிறார்கள். ஆகவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பவானிசாகரிலே இன்னொரு சுத்தகரிப்பு நிலையத்தை அமைத்து, இன்னொரு லைன் போட்டு அது மூலமாக பக்கத்திலே உள்ள கிராமங்களுக் குத் தண்ணீர் கொடுப்பதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டு மென்றும் இது மிக மிக அவசியம் என்றும் நான் இந்த நேரத் திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து புரட்சித் தலைவர் அரசு ஏற்பட்டதற்குப் பிறகு நம்பி யூருக்கும், 5 பஞ்சாயத்துக்களுக்கும் 1979–80-ஆம் ஆண்டிலே உத்திரவைப் போட்டு 45 லட்சம் ரூபாய் செலவிலே திட்டத்தை ஏற்படுத்தி தண்ணீர் கொடுக்கப்பட்டது. வெள்ளியபாளையம், கிடாறை, கிளியம்பாளையம் ஆகிய பகுதிகள் மேடான பகுதிகளிலே இருப்பதால் தண்ணீர் கிடைக்கவில்லை. குடிநீர் வாரியமும் ஆழ்குழாய்க் கிணறுகளை போட்டும் அங்கே இருக்கிற நொருக்குக் கற்கள் கீழே இறங்கி அது மூடப்பட்டு விட்டது. அவர்களுக்கு எந்தவிதமான முயற்சியும் வாரியம் எடுக்கவில்லை. தண்ணீர் கொடுக்கப்படாத நிலைமை இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நம்பியூர் ஸ்கீமில் 3,4 லட்ச ரூபாய் சர்ப்ளஸாக இருப்பதாக அறிகிறேன். அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு வறட்சி நிவாரணக் கிணறு என்ற முறையிலே, பெரிய கிணறைத் தோண்டி இருக்கிறார்கள். அந்தக் கிணற்றிலே தண்ணீர் போதுமான அளவுக்கு இருக்கிறது. நான் சென்று பார்த்தேன். வாரியத்தின் அதிகாரிகளும் பார்த்து இருக்கிறார்கள். அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு கிணற்றி லிருந்து மோட்டார் மூலமாகத் தண்ணீர் எடுத்து அந்த ஊர் களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியோடு, கோவை பெரியார் மாவட்டங்களிலே புளுரைடு வாட்டரை சீராக்கி வழங்கும் திட்டத்தை 15 கோடி ரூபாய் செலவிலே நிறை வேற்ற இருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே இலத்தூர் போன்ற



1985 ஜூன் 4] [திரு. வே. கு. சின்னசாமி]

கிராமங்கள் அதிலே சேர்க்கப்படவில்லை. அங்கே நல்ல நீராகத்தான் இதுவரையிலே இருந்தது. என்ன காரணத்தி னாலோ உப்புத் தண்ணீராக மாறியிருக்கிறது. ஆகவே விட்டுப் போன கிராமங்களையும் இந்தத் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டம் முடிவதற்கு 2½ ஆண்டுக்காலமாகும் என்று சொல்லியிருக்கிறார் கள்.

அவர்களுக்குக் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட முக்கியமான இடங்களில் வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–40)

தற்சமயத்திலே ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்ட இடங்களிலே மின்சார மோட்டார்கள் வைக்கப்பட்டிருக்கின் றன. அவைகள் ஊராட்சி ஒன்றியங்களால் கட்டப்பட்டிருக்கின் றன. குடிதண்ணீருக்காக வைக்கப்பட்டிருக்கின்ற கிணறுகளில் உள்ள மோட்டார்கள் பழுதடைந்துவிட்டால் குறிப்பிட்ட சில தனி நபர்களிடத்தில் கொடுத்து ரிப்பேர் செய்யச் சொல்கி றார்கள். அவர்கள் 15 நாட்கள், 20 நாட்கள், ஒரு மாதம் என்று எடுத்துக்கொண்டு பழுது பார்த்துக் தருகிறார்கள். இப்படி அவர்கள் சரி செய்து கொடுப்பதற்குக் காலதாமதம் ஆகிறது. அந்த ஒரு மாத காலத்தில் அந்தப் பகுதி மக்கள் குடிதண்ணீருக்காக மிகவும் அவஸ்தைப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அரசாங் கத்தின் மூலமோ அல்லது குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமோ, தனியாகப் பணி மையங்கள் ஏற்படுத்த வேண்டும். இப்பொழுது போக்குவரத்துக் கழகங்களுக்கு என்று தனியாகப் பணி மனை கள் அமைக்கப்பட்டு, வண்டிகளைச் சரி செய்கிறார்கள். அன்றன்றைக்கு ஏற்படுகின்ற ரிப்பேர்களை அன்றிரவே ரிப்பேர் செய்து காலையிலே வண்டிகள் ஓட்டத்திற்கு வருகின்றன. எனவே இப்படிப்பட்ட நிலையில் ஒவ்வொரு டிவிஷனிலோ, அல்லது ஒவ்வொரு மாவட்டத்திலோ, அல்லது ஒவ்வொரு எக்சிகியூட்டிவ் என்ஜினியர் உள்ள பகுதிகளிலே பணி மையங்களை அமைத்து, மோட்டாரில் பழுது என்று தொலை பேசி மூலமோ அல்லது ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் மூலமோ அல்லது பொது மக்கள் மூலமோ பணிமனைகளுக்கு தகவல் வந்தால் கூடிய விரைவில் அந்த மோட்டார்களைச் சரி செய்து கொடுக்கும் வகையில், அத்தகைய பணிமனைகளை உருவாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய மின்சார மோட்டார்கள் பழுதடைந்து விட்டால் ஒரே நாளில் அல்லது ஒரே இரவிற்குள் சரி செய்து விடுகிறார்கள். ஆனால் குடிதண்ணீருக்காக இந்த மோட்டார்கள் பழுதடைந்து விட்டால் மாதக் கணக்கில் ஆகிறது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. வே. கு. சின்னசாமி] [1985 ஜூன் 4

குடிநீர் வடிகால் வாரியத்தின் மின்சார மோட்டார்களை
வைத்திருக்கிறார்கள். குழாய்க் கிணறுகளில் உள்ள மின்சார
மோட்டார்கள் பழுதடைந்துவிட்டால், உடனடியாக அவர்கள்
வேறு மோட்டார்களைத் தயாராக வைத்திருந்து அந்த
இடத்தில் தற்காலிகமாகப் பொருத்தி, பழுதடைந்த மோட்
டார்களைப் பழுது பார்க்கின்ற வரையில் தண்ணீர் கிடைப்ப
தற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில்
தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரூராட்சி மன்றங்கள், அதாவது டவுன் பஞ்சாயத்துகள்
என்று சொல்லப்படுபவைகளுக்கு மத்திய நிதி உதவி கிடைப்
பதில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், பேரூராட்சி
கள் என்பதற்கு மற்ற மாநிலங்களில் மத்திய அரசின் நிதி
உதவி கிடைக்கிறது. ஆனால் தமிழ்நாட்டிலே உள்ள டவுன்
பஞ்சாயத்துக்களுக்கு மட்டும் மத்திய அரசின் நிதி உதவி
கிடைக்காமல் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில்
தெரிவித்துக்கொள்கிறேன். நாம் ஒரே இயக்கமாக இருக்க
வேண்டுமென்று விரும்புகின்ற தோழமைக் கட்சியான இந்திய
தேசிய காங்கிரஸ் நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.
மற்ற மாநிலங்களில் கிடைப்பதைப்போல, நம்முடைய மாநிலத்
தில் உள்ள பேரூராட்சிகளுக்கும் நிதி உதவி கிடைக்க வேண்டு
மென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இதைத் தெரி
விப்பதற்கான காரணம் என்னவென்றால், மற்ற மாநிலங்களில்
பேரூராட்சிகளை மேஜர் பஞ்சாயத்து என்றும், மைனர் பஞ்
சாயத்து என்றும்தான் அழைத்து நிதி உதவி கேட்கிறார்கள்.
ஆனால், நம் மாநிலத்திலே மட்டும் டவுன் பஞ்சாயத்துக்கள் என்று
ப்ரப்போசலை அனுப்புகின்ற நேரத்தில், டவுன் பஞ்சாயத்துக்கள்
என்றால் அவர்களுக்கு நிதி உதவி தேவையில்லை என்று
கருதி அவர்கள் தள்ளி விடுகிறார்கள். எனவே, டவுன் பஞ்
சாயத்துக்களுக்கும் உதவி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டு
மென்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், பவானிசாகர் தொகுதி
என்றால் குறிப்பாக அணைகளிலிருந்து தண்ணீர் பாய்கிற
பகுதி என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். ஆனால், புளியம்
பட்டி, அதைப்போன்று நம்பியூர் பகுதிகள் மிகவும் வறட்சிக்
குரிய பகுதிகள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சின்னராசு
அவர்கள் பேசுகின்ற நேரத்தில், மேற்கு நோக்கிப் பாயும்
ஆறுகளில் வீணாகப் போகும் தண்ணீரை அவினாசி வரையில்
நீட்டித்துத் தரவேண்டுமென்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.
நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால்,
புஞ்சைப் புளியம்பட்டி, நம்பியூர் ஆகியவற்றையும் அந்தத்
திட்டத்தை அமல்படுத்தும் நேரத்தில் சேர்த்துக் கொள்ள
வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டி
ருக்கிறேன்.



1985 ஜூன் 4] [திரு. வே. கு. சின்னசாமி]

வேளாண்மைத் தொழில் துறையிலே, நம்முடைய தொழில் கழகத்திலே மரியாதைக்குரிய லியாகத் அலிகான் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருந்த அந்தக், கழகம் இன்றைக்கு இலாபத்திலே ஓடிக்கொண்டு இருக்கின்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, வேளாண் தொழில் கழகம் பல விவசாயத் தொழில்கள் துவங்குவதற்கு இன்றையதினம் உறுதுணையாக இருந்து வருகிறது. அதேபோல், வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு இணையம் மற்றும் கரும்புப் பண்ணைக் கழகம் போன்ற கழகங்களுக்குப் பொறுப்பாளர்களாக, தலைவர்களாக, சட்ட மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், விவசாயிகள் போன்றவர்களை நியமித்தால், அந்த நிறுவனங்களும் இலாபத்திலே இயங்குவதற்கு உறுதுணையாக இருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

*திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் விவசாயத் துறைக்கு மானியம் ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவைமுன் வைத்திருக்கிறார். அந்தக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

விவசாயம் இன்றைக்கு தமிழகத்திற்கு மாத்திரம் அல்ல, இந்தியாவிற்கே முதுகெலும்பு போன்றது. விவசாயம் நாட்டிலே முதன்மையான ஒரு தொழிலாக இருக்க வேண்டும். அது சிறப்பாக இருக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடில்லை. தமிழகத்திலே, இன்றைக்குப் பல நவீன முறைகளிலே, புதுமைகளைப் புகுத்தி, நல்ல வீரிய வித்துக்களை எல்லாம் கண்டு பிடித்து, நல்ல முறையிலே பணியாற்றி, விவசாயத் துறையிலே ஒரு மறுமலர்ச்சி தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதை நாமெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக, நம்முடைய மாநிலத்திலே மாவட்டத்திற்கு மாவட்டம் பலதரப்பட்ட முறைகளிலே விவசாயிகள் நிலைமை இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். வறட்சிப் பகுதி, நீர்ப்பாசனப் பகுதி, தஞ்சை போன்ற டெல்டா பகுதிகள் என்று பலதரப்பட்ட பகுதிகள் இருக்கின்றன. இன்றைக்கு நாம் விவசாயத்திலே வளமாக இருந்தாலும், பெரும்பாலும் நம்முடைய தமிழகம் வறட்சிப் பகுதி. வானம் பார்த்த பூமியை நம்பி வாழக்கூடிய விவசாயிகள் பெரும்பான்மையான மக்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் உணர்கிறோம். இந்த நிலைமையிலே பார்த்தால், இன்றைக்கு அப்படி வறட்சி நிலவி இருக்கக்கூடிய இடங்களிலே விவசாயம் செழிப்பாக இருக்க வேண்டுமானால், நிலவளம், நீர்வளம், பரந்து

[திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்] [1985 ஜூன் 4

இருந்தால்தான் விவசாயம் சிறப்பாக இருக்க முடியும். நீர்
வளம் இல்லாத இடத்திலே, நிலத்தடி நீரைக் கொண்டு வந்து,
அதிலே விவசாயம் செய்து, ஓரளவு தோட்டப் பயிர்கள் செய்து,
விவசாயிகளுடைய நிலைமைகளை வளர்க்கக்கூடிய அளவுக்கு,
அவர்களுடைய நிலைமைகள் இருந்துகொண்டு இருக்கின்றன.

எங்களுடைய தர்மபுரி மாவட்டத்திலே, சின்ன அணைகள்
இருக்கின்றன. கே. ஆர். பி. கிருஷ்ணகிரி அணை 10,000
ஏக்கருக்குப் பாய்கின்றது. ஈச்சம்பாடி அணை, முள்ளிக்
காட்டு அணை என்று 3000, 4000 ஏக்கர்களுக்குப் பாயக்கூடிய
சின்னச் சின்ன அணைகளைக் கட்டியிருக்கிறார்கள். வேறு நீர்ப்
பாசனம் இல்லை என்றால், நிலத்தடி நீரைத்தோண்டித்தான்
பெரும்பாலான விவசாயிகள் விவசாயம் செய்ய வேண்டிய
நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலே, மின்சார
மோட்டார்கள், ஆயில் இன்ஜின்கள் வைத்துத்தான் நீரை
எடுத்து விவசாயம் செய்ய வேண்டிய நிலைமையிலே நாம்
இருக்கிறோம். மின்சார மோட்டார் அமைக்க வேண்டுமென்
றால், விவசாயிகளுக்கு எளிதாக மின்சாரம் கிடைப்பதில்லை.
மின்சாரம் வேண்டுமென்று கேட்டு ஒரு விவசாயி மனு செய்தால்
10 ஆண்டுகள் இணைப்பு கிடைக்காமல் காத்துக் கொண்டிருக்க
வேண்டிய நிலைமை இருக்கிறது. மாண்புமிகு விவசாயத் துறை
அமைச்சர் சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளை அணுகி,
எப்படித் தொழில் துறைக்கு மின்சாரம் முன்னுரிமை அடிப்படை
யில் கொடுக்கப்படுகிறதோ, அதேபோல், விவசாயத்திற்கும்
முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட ஏற்பாடு செய்ய
வேண்டும். ஒரு விவசாயி மனு செய்தால் 3 ஆண்டுக்காலத்திற்
குள்ளாக மின்சாரத் தொடர்பு கிடைக்கின்ற நிலைமையை
அமைச்சர் அவர்கள் உண்டாக்க வேண்டும். அப்படி உண்டாக்கு
வதற்கு நம்முடைய அமைச்சருக்குத் தகுதி இருக்கிறது என்று
நான் நினைக்கிறேன். வேளாண்மைத் துறை அமைச்சர்
திரு. காளிமுத்து—காளி என்றால் வைராக்கியம் பொருந்தியவர்,
வீரம் பொருந்தியவர்—அந்த வகையிலே அமைந்திருக்கிறார்.
அவர் தற்போதுள்ள முறையை மாற்றி; ஒருவிவசாயி மனு கொடுத்
தால் 3 ஆண்டுகளுக்குள்ளாக அந்த விவசாயிக்கு மின்சாரம்
கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வர சட்ட
மாக வைத்தால்கூட நல்லது என்று கருதுகிறேன். நமது
மின்சாரத் துறை அமைச்சர், மற்றுமுள்ள அதிகாரி
களை எல்லாம் கலந்து, விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்க
வேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்துவார்கள் என்று
நம்புகிறேன்.

(முற்பகல் 11-50).

அடுத்து இன்றைக்கு 'பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்'
என்ற ஒரு முறையை விவசாய இலாகா மேற்கொண்டிருக்கிறது.
அதிலே பல வழிமுறைகளைச் சொல்லிவருகிறார்கள். என்னு



1985 ஜூன் 4] [திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்]

டைய சொந்த அனுபவம் என்னவென்றால் இப்போது
சொல்லுகிற முறையைவிட பழைய முறையே சிறந்தது என்
பது. எப்படி என்றால் முன்பு ஊராட்சி ஒன்றியத் தலைவர்
களுடன் அங்கே இருக்கிற கிராம சேவக்குகள் விவசாயிகளுக்கு
வேண்டிய அறிவுரைகளைச் சொல்லிவந்தார்கள். இப்போதும்
ஊராட்சி ஒன்றியத் தேர்தலை நடத்தவிருக்கிறோம். எனவே
விரைவிலே ஒன்றியத் தலைவர், உறுப்பினர்கள் இருந்து
செயல்படும் வாய்ப்பு ஏற்படவிருக்கிறது. கிராம சேவக்குகள்
இருக்கிறார்கள். முன்பு கிராம சேவக்குகள் விவசாய நடை
முறைகளில் பெரும் பொறுப்பு வகித்தார்கள். விவசாயிகளுக்குத்
தேவையான பொறுக்கு விதை, உரம்; எந்த எந்த பருவத்தில்
என்ன என்ன பயிர் செய்ய வேண்டும் என்பன போன்ற விவரங்
களை சொல்லிவந்தார்கள்; நேரிலும் கவனித்து வந்தார்கள்.
அந்தந்த ஊராட்சி ஒன்றியத் தலைவருடன் கலந்து பேசி காரியம்
செய்து வந்தார்கள்.

இந்த பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் என்பது முன்னைப்
போல விவசாயிகளுக்கு அவ்வளவு பயனளிப்பதாக இல்லை.
இது ஏதோ பேப்பர் அளவிலே இருக்கிறதே தவிர பிராக்டிக்
கல்லாக நல்ல பயன் கொடுப்பதாக இல்லை என்பது ஆராய்ந்து
பார்த்தால் தெரியவரும். அவ்வளவு சிறந்ததாக இல்லை என்
பது என்னுடைய கருத்து. ஆகவே, முன்னைப்போல ஊராட்சி
ஒன்றியங்களுக்கும் கிராம சேவக்குகளுக்கும் பொறுப்புகளைக்
கொடுத்து, அவர்கள் முன்னைப்போல விவசாயிகளோடு
தொடர்பு கொண்டு காரியங்கள் செய்ய ஏற்பாடு செய்ய
வேண்டும்.

அதுமட்டுமல்ல, பயிற்சி வழித் தொடர்பு திட்டத்தினால்,
பல பிரச்சனைகள் வருகின்றன. விவசாய நடைமுறைகளில்
திருப்தி அளிப்பதாக இல்லை. ஒரு விஸ்தரிப்பு அதிகாரி
இருந்த இடத்தில் இன்றைக்கு 10 பேர் இருக்கிறார்கள். ஒவ்வொரு
ஒன்றியத்திற்கும் ஒரு விஸ்தரிப்பு அதிகாரியைப் போட்டு,
அதற்கு மேலே ஒரு ஏ. இ. (அக்ரி.), அதற்கு மேலே டிவிஷன்
என்ஜினீயர் (அக்ரி.) என்று போட்டு இன்றைக்கு நிர்வாகச்
செலவு ஒன்றுக்கு பத்தாகப் பெருகியிருக்கிறதே தவிர விவசாயி
களுக்கு பலன் பெருகவில்லை. நிர்வாகம் பெருகியிருப்ப
தற்கு ஏற்ப விவசாயம் பெருகவில்லை. வேலைகள் திருப்தி
கரமாக நடக்கவில்லை. ஆகவே, முன்னால் இருந்த நிலைமை
யில் காரியங்களைச் செய்தால் பயனுடையதாக இருக்கும்
என்று கருதுகிறேன்.

முன்பெல்லாம் ஏழை விவசாயிகளுக்கு விதை வழங்குவதிலே
மானியம் உண்டு; அவர்களுடைய பிளான்டேஷனுக்கு மானி
யம் உண்டு; கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கு மானியம்
உண்டு; கம்போஸ்ட் உரத்திற்கு மானியம் உண்டு. இப்படி

பல்வேறு வகைகளில் ஏழை விவசாயிகளுக்கு அரசாங்க
மானியம் கொடுக்கப்பட்டது. இன்றைக்கு அந்த மானியங்
கள் எல்லாம் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்
றன என்று நான் அறிகிறேன். அது சரியல்ல. விவசாயிகளுக்கு
முன்போலவே இந்த மானியங்களை வழங்கி வந்தால் ஏழை
எளிய விவசாயிகள் பயனடைவார்கள்.

நம்முடைய மாநிலத்திலே குறைந்த நிலம் உள்ள விவசாயி
களும் நடுத்தர விவசாயிகளும்தான் அதிகமாக இருக்கிறார்கள்.
மிராசுதார விவசாயிகள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலே
தான் இருக்கிறார்கள். குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் இன்
றைக்கு பருவமழை பொய்த்து அங்கு பெரும் வறட்சி ஏற்பட்டி
ருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவ
னத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய தொகுதி
யில் இராமநாதஹள்ளி, கர்த்தானூர், குருமனஹள்ளி
கிராமங்கள் மிகவும் செழிப்பான பகுதி. பாக்கு, தென்னை,
வாழை பயிர்கள் நிறைந்த பகுதி. இன்றைக்கு பெரும் வறட்
சிக்கு உள்ளாகி பாக்குமரங்கள் எல்லாம் காய்ந்துவிட்டன.
தென்னை மரங்கள் காய்ந்துவிட்டன, வாழை எல்லாம் கருகி
விட்டன. இன்றைக்கு குடிநீருக்கே பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது.
மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் பார்த்து அரசாங்கத்திற்கு
அறிக்கை அனுப்பியிருப்பதாக நான் அறிகிறேன்; அதை
கவனிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கி
றேன்.

இப்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை எல்லாம்
நிவாரணப் பகுதியாக அறிவிக்க வேண்டும். எங்கள் மாவட்
டத்தில் வறட்சி அதிகமாக இருக்கிறது. எனவே தர்மபுரி
மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும்.

இந்த அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் தர்மபுரி
மாவட்டத்திலுள்ள 16 ஒன்றியங்களில் 10 ஒன்றியங்களை
வறட்சிப் பகுதியாக அறிவித்துவிட்டோம் என்று சொல்லி
யிருக்கிறார்கள். மீதியுள்ள 6 ஒன்றியங்களை விட்டுவிடுவது
சரியல்ல. அவற்றையும் சேர்த்து வறட்சிப் பகுதியாக அறி
விக்க வேண்டும். வறட்சிப் பகுதியாக அறிவித்து, தேவையான
நிவாரணப் பணிகளையும் வறட்சி உதவியையும் அரசாங்கம்
செய்ய வேண்டும்.

ஏனென்றால், இன்றைக்கு விவசாயிகள் மிக மோசமான
அளவுக்கு கஷ்ட நிலையில் இருக்கிறார்கள். அவர்களால் வாங்
கிய கடனைக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது.
மாடுகள், பசுமாடுகள் போன்ற கால்நடைகளுக்குக்கூட
தீவனம் கொடுக்க முடியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை
யில் மாடுகளை வெளியிடங்களுக்கு ஓட்டிக்கொண்டு போய்விட்
டார்கள். அந்த அளவுக்குக் காய்ந்து இருக்கின்றது. ஹோசூர்





போன்ற பகுதிகளிலே ஒருசில இடங்களில் மழை கொஞ்சம்
பெய்து இருக்கின்றது. பரவலாக மழை எங்கள் மாவட்டத்தில்
இல்லை. எனவே விவசாயிகள் வாங்கிய கடன்களைக் கொடுக்க
முடியாத நிலையில் இருக்கிறார்கள். அரசாங்கக் கடன், கூட்டு
றவு வங்கிக் கடன், நிலவள வங்கிக் கடன் போன்றவற்றை
அவர்களால் செலுத்த முடியவில்லை. அந்தக் கடன்களுக்கு
இன்றைக்கு பீனல் இண்டரஸ்ட் போட்டு வசூலிக்க முற்பட்டு
அரசாங்கம் கெடுபிடி நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கி
றது என்று நான் அறிகிறேன். மூன்று நான்கு வேன்களையும்
ஜீப்புகளையும் வைத்துக் கொண்டு, சுமார் 20, 30 அதிகாரிகள்
சேர்ந்துகொண்டு போய் விவசாயிகளை மிரட்டி வசூல் செய்வ
தாகப் பலபேர் புகார் சொன்னார்கள். இதன் காரணத்தால்
விவசாயிகள் மிகவும் பயந்துபோய் இருக்கிறார்கள். எனவே
கடுமையாக அதை வசூலிக்காமல் ஓரளவுக்கு முறையாக வசூ
லிக்கின்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதனை அமைச்சரின் கவனத்
திற்கு நான் கொண்டு வருகிறேன். கடன் வசூலிப்பதைப்
பொறுத்தவரையில் பீனல் இண்டரஸ்ட் போட்டு வசூலிப்பது
சரியில்லை. நமது அரசாங்கத்தின் சார்பில் விவசாய உயர்
மட்டக்குழு என்று ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. விவ
சாயிகளின் நிலைமைகளை அந்தக் குழு உணர்ந்து, விவசாயி
களிடம் பீனல் இண்டரஸ்ட் போட்டு கடனை வசூலிக்கக்கூடாது;
ஜப்தி நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றெல்லாம் பரிந்துரை
செய்திருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படி அர
சாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கின்ற அந்த உயர்மட்டக்
குழுவின் பரிந்துரைக்கு அரசாங்கம் செவிமடுத்து அதற்குரிய
வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயி
களுக்கு ஓரளவுக்கு வருமானம் தரக்கூடிய பயிர் கரும்பு, பருத்தி
இரண்டும்தான். எங்களுடைய மாவட்டத்தில் கரும்பைப்
பொறுத்தவரையில் $10\frac{1}{2}$ சதவீதம், 11 சதவீதம் என்று
சர்க்கரைச் சத்து இருப்பதன் காரணத்தால் ஒரு டன்னுக்கு
ஏறக்குறைய 249 ரூபாய் என்ற அளவுக்கு வருவாய் கிடைக்
கிறது. அது இன்றைக்கு ஓரளவுக்கு விவசாயிகளுக்கு இலாபகர
மாக இருப்பதால் விவசாயிகள் எல்லோரும் கரும்பு சாகுபடி
செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். பாலக்கோடு கூட்டுறவு
சர்க்கரை ஆலை என்று ஒன்று அங்கே இருக்கின்றது. அந்த
ஆலையில் அங்கே உற்பத்தி ஆகக்கூடிய கரும்பு அனைத்தையும்
எடுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே, அவர்கள் வடாற்காடு
மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் ஆலைக்கும், சேலத்தில்
இருக்கக்கூடிய மோகனூர் ஆலைக்கும் ஈரோட்டில் உள்ள
பொன்னி ஆலைக்கும் கரும்பை அனுப்புகிறார்கள். எனவே,
அரூர் தாலுக்காவிலே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை ஏற்படுத்த

வேண்டும் என்று அங்கேயுள்ள விவசாயிகள் எல்லாம் கோரிக்கை வைத்து அது அரசாங்கத்தின் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டு இருக்கின்றது. அதற்கு தக்க நடவடிக்கை எடுத்து அங்கு ஆலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகள் நிலத்தை உழவு ஓட்டுவதற்கும், கிணற்றை ஆழப்படுத்துவதற்கும் போர்வெல் போடுவதற்கும் உரிய இயந்திரங்களை விவசாயப் பொறியியல் இலாக்காவில் வாடகைக்கு கொடுக்கிறார்கள். ஆனால், அவற்றுக்கெல்லாம் முதலிலே இருந்த வாடகையை விட இப்போது, இரண்டு மடங்கு மூன்று மடங்கு அதிகமாக வாடகை வாங்கப்படுகிறது என்று விவசாயிகள் சொல்கிறார்கள். எனவே, இதைப் பொறுத்தவரை யில் அரசாங்கத்திற்கு ஓரளவுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் கூட இந்தக் கருவிகளை எல்லாம் குறைந்த வாடகைக்கு விவசாயி களுக்கு கொடுக்கத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரூர் பகுதியிலே அக்ரோ சர்வீஸ் என்று இருந்தது. அங்கே உழவு ஓட்டக்கூடிய கருவி போன்றவற்றை வாடகைக்கு எடுத் திருந்தார்கள். அந்த அக்ரோ சர்வீஸ் எல்லாம் இப்போது நடை பெறவில்லை. தர்மபுரியில் அதாவது அம்மாவட்டத்தின தலை நகரில்தான் அது இருக்கின்றது. அங்கே ஒரு விவசாயி போய் அதாவது 30மைல் தூரத்திற்குச் சென்று கொண்டு வரவேண்டும் என்றால் செலவு அதிகம் ஆகின்றது. எனவே, ஒவ்வொரு தாலுகா தலைநகரிலும் அக்ரோ சர்வீஸ் இருந்தால் விவசாயி களுக்கு வேண்டிய உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். அந்த வகையில் உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இந்தச் சமயத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் இந்த நிலைமைகளை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு விவசாயி களுக்கு இருக்கும் பல பிரச்சினைகளையும், குறைகளையும் நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்தபடியாக, குடிதண்ணீர் பிரச்சினை என்பது எங்க ளுடைய மாவட்டத்திற்கு வாடிக்கையாக இருக்கிறது. எங்க ளுடைய மாவட்டத்தில் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய பகுதி மேட்டுப் பாங்கான பகுதியாகவும், வறண்ட பகுதியாகவும் இருப்பதால் அங்கே போர்வெல் போடவேண்டு மென்று நிறைய பேர்கள் கேட்கிறார்கள். கலெக்டர் அவர்களும் எந்தெந்தப் பகுதிகளில் போர்வெல்கள் போட வேண்டுமென்று அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பி இருக்கிறார்கள். ஆனால் குடி நீர் வாரியம் தாங்களாக திட்டம் போட்டு தேவையில்லாத இடங் களில் எல்லாம் போர்வெல்கள் போட்டு விடுகிறார்கள்.



தேவையிருக்கிற கிராமங்களில் போர்வெல்கள் போடாமல் தங்களுக்குத் தோன்றிய இடங்களில் போட்டு விடுகிறார்கள். வாரியம் இப்படி செய்வது கலெக்டருக்கும் தெரிவதில்லை. குடி நீர் வாரியம் தாங்களாக பணிகளைச் செய்வது பொதுமக்களின் தேவைகளை உணர்ந்து செய்வதாகத் தெரியவில்லை. ஆகவே வாரியம் பொதுமக்களின் தேவைகளை உணர்ந்து பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் வாரியத்தில் '' ரிக்ஸ் '' போன்ற கருவிகளை விவசாயிகளுக்கு கொடுக்கிறார்கள். அவற்றின் வாடகை மிக அதிகமாக இருக்கிறது. ஆகவே, அவற்றிற்கான வாடகையை குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனியார்கள் தூளை போடுவதற்காக எங்களுடைய பகுதியில் ரிக்கை கொண்டு வந்தார்கள். போர் பாயிண்ட் போட்டதில் பில்கள் தவறாக உள்ளதாக எங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறார்கள். பில் போடுவதிலே பில் தொகைக்கும் அவர்கள் போடக்கூடிய தொகைக்கும் வித்தியாசமாக போட்டு, அதிலே தவறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று சொல்கிறார் கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தக் குறைகளை நீங்கள் போக்கு வதற்கு தக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அதோடு அரசாங்க போர்வெல்கள் அதிகமாக பழுதடைந்து விடுகின்றன. பழுதடைந்த போர்வெல்களை ரிப்பேர் பார்க்க வேண்டுமென்றால், இயந்திரங்கள் அடங்கிய ரிப்பேர் யூனிட் அங்கே எங்கள் ஜில்லாவில் ஒன்றே ஒன்று தான் இருக்கிறது. அதுவும் இரண்டு, மூன்று மாதங்களாக ரிப்பேராகி இருக்கிறது. இப்போது அவசரமாக கலெக்டர் அவர்கள் எழுதி அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து திருச்சியிலிருந்து ஒன்றை அனுப்பி இருக்கிறார்கள். அதையும் தற்காலிகமாக உபயோகத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அதையும் கூட வடார்க்காட்டிற்கோ அல்லது வேறு ஏதோ பகுதிக்கோ ஒரு வாரம் உபயோகித்துக் கொண்டு அனுப்ப வேண்டுமென்று மேலிடத்திலிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக ஆட்சித்தலைவர் அவர்கள் சொன் னார்கள். ஆகவே, முழுமையாக எங்களுடைய தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு அந்தக் கருவிகள் பயன்பட வில்லை. தர்மபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். குடிதண்ணீரிலே, விவசாயத்திலே, பொருளாதாரத்திலே, தொழில் துறையிலே இப்படி எல்லா துறைகளிலும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது எங்கள் மாவட்டம். ஆனால் அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டங்களுக்கும் அதிகமாக நிதியை ஒதுக்கி விட்டு, எங்களுடைய மாவட்டத்திற்கு குறைவாக ஒதுக்கி இருக்கி றார்கள்.

எங்களுடைய மாவட்டத்தில் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இரண்டு, மூன்று கோரிக்கைகளை விடுத்திருக்கிறோம், குறிப்பாக கடத்தூருக்கு குடிதண்ணீர் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. கடத்தூர் ஒரு நகர பஞ்சாயத்தாக இருக்கிறது. குடிதண்ணீர் பிரச்சினைக்காக திட்டம் போட்டு, இலாக்கா அதிகாரிகள் அரசாங்கத்தின் அனுமதிக்காக அனுப்பி இருப்பதாக அறிகிறேன்.

ஆக அந்த திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி அந்தப் பிற்பட்ட பகுதியிலே இருக்கிற குடிதண்ணீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இந்தச் சமயத்திலே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல பாப்பிரெட்டிபட்டிக்கு, டிரையினேஜ் போன்ற வசதிகள் இல்லாதது அங்குள்ள மக்களுக்கு பெரும் குறையாக இருக்கிறது. பாப்பிரெட்டிபட்டி மட்டும் அல்ல என்னுடைய தொகுதியிலே பல இடங்களில் டிரையினேஜ் இல்லாத குறை பெரும் பிரச்சினையாக இருந்துக் கொண்டிருக்கிறது. இவற்றிற்கு எல்லாம் அரசாங்கம் தக்க கவனம் செலுத்தி உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களின் அன்றாட அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளான டிரையினேஜ் சிஸ்டம், குடிதண்ணீர் பிரச்சினை போன்றவைகளையெல்லாம் நிறைவேற்றித் தரும் வகையில் விரைவில் ஆணை பிறப்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல என்னுடைய மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த பல விவசாயக் கிடங்குகள் இருக்கின்றன. விவசாயிகள் உற்பத்தி பண்ணக் கூடிய விவசாயப் பொருள்களை எல்லாம் இந்தக் கிடங்குகளிலே வைத்து நல்ல விலைக்கு விற்று, அவர்களுக்கு கூடுதல் இலாபம் ஈட்டித் தருவதற்காக இந்தக் கிடங்குகள் வசதி செய்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கிடங்குகளிலே விவசாயிகள் கொண்டு போய் வைக்கின்ற போது, அங்கே சில குறைகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அங்கு வைக்கப்படும் பொருள்களுக்கு தவறாக விரயம் ஏற்படுவதாகச் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட குறைகளை எல்லாம் சரி செய்து, விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க, நல்ல இலாபம் கிடைக்க தக்க கண்காணிப்பு நடவடிக்கைகளை எடுத்து நிர்வாக சீரமைப்புகளைச் செய்து, விவசாயிகளுக்கு எல்லாவித மான பாதுகாப்பும் கிடைக்கச் செய்யவேண்டும் என்று இந்தச் சமயத்திலே அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது).

ஆக என்னுடைய மொரப்பூர் தொகுதி மக்களின் சார்பாக நான் எடுத்து வைத்த கோரிக்கைகளையும், அந்த மக்களின் தேவைகளையும் கவனித்து, அரசாங்கம் எங்களுடைய பிற்பட்ட





பகுதிக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தர ஆவனச் செய்ய வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். எல்லோருக்கும் வணக்கம்.

திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் : மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, 7½ கோடி தமிழ் மக்களின் நெஞ்சத்திலே நீங்காத இடத்தைப் பெற்றுவிட்ட சுமார் 83 இலட்சம் ஏழை குழந்தைகளுக்கு இலவச உணவு, இலவச உடை, இலவச பள்ளிப் புத்தகங்கள் வழங்கி உலக வரலாற்றிலேயே இமாலய சாதனை நிகழ்த்தி விட்ட, எங்கள் இதயத் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் பொற்பாதங்களில் முதலில் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, திருச்செந்தூர் சட்டமன்றத் பேரவைத் தேர்தலிலே எனக்கு வாக்கு அளித்த வாக்காளப் பெருமக்களுக்கும், எனக்கு மகத்தான வெற்றியைத் தேடித்தரப் பாடுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும், எங்கள் எம். ஜி. ஆர். மன்ற ரசிகப் பெருமக்களுக்கும், இந்திரா காங்கிரஸ் நண்பர்களுக்கும், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸை சார்ந்த சகோதரர்களுக்கும் என்னுடைய நன்றியைத் காணிக்கையாக்கி விட்டு, என்னுடைய முதல் பேச்சை இந்த சட்டமன்றப் பேரவையில் நான் துவக்குகிறேன்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களுடைய இலாகாவின் சார்பாக இந்த அவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை நான் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

கடந்த 35 ஆண்டுகள் அரசியல் வாழ்விலே இந்த உணவுத் துறையிலே ஒரு மாபெரும் சாதனையை புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான் நிகழ்த்தியிருக்கிறது. அதை நாம் கண்கூடாகக் கண்டுகொண்டு வருகிறோம். ஒரு காலத்திலே உணவுத் துறையிலே பெரிய பஞ்சத்திலே இருந்த தமிழகத்தை, மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் வழி காட்டியாக விளங்குகிற வகையில் மாற்றி அதை சாதித்துக் காட்டியிருக்கிறோம். இன்று உணவுப் பற்றாக்குறை என்ற பேச்சே இல்லை. இந்த அதிசயத்தை நடத்திக் காட்டிய மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், அவருடைய கட்டளையை ஏற்று செயலாற்றும் எங்களுடைய அமைச்சர் மாண்புமிகு டாக்டர் காளிமுத்து அவர்களுக்கும், நாட்டு மக்களின் சார்பாக இதற்காக நான் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே நல்ல பல திட்டங்களையெல்லாம் இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அந்த வகையிலே நம் தமிழக மக்கள் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் நன்றி தெரிவித்து பாராட்டி வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும்

என்னுடைய தொகுதியினைச் சார்ந்த ஒரு சில கோரிக்கைகளை
யும், ஒரு சில குறைகளையும், செய்ய வேண்டிய சில நடவடிக்கை
களைப் பற்றியும் நான் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு
தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கொண்டு, சொல்ல
விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

குறிப்பாக விவசாயம் என்று எடுத்துக் கொண்டால், அவற்றில்
சம்பந்தப்பட்ட 4 துறைகள் பின்னிப் பிணைந்து இருக்கின்றன.
ஒன்று விவசாயம், இரண்டு மின்சாரத் துறை, மூன்று ரெவின்யூ
துறை, கடைசியில் நீர்பாசன துறை. இந்த நான்கு துறைகளையும்
சேர்த்து நல்லதொரு வகையில் ஒரு உயர் மட்டக் குழு ஒன்று
மாவட்ட அளவிலே அமைத்தால் நல்ல பல திட்டங்களையெல்லாம்
மிகவும் சிறப்பாக செயல்படுத்துவதற்கு அது வாய்ப்பாக
இருக்கும் என்கிற ஒரு கருத்தை முதலில் இந்த மாமன்றத்திலே
வைக்க விரும்புகிறேன்

(பிற்பகல் 12-10)

ஏன் என்றால் இப்போது பெரும்பாலான விவசாயிகள் எல்லாம்
மின்சாரத்தை நம்பி, மின்சார மோட்டார் பம்பு செட்டுகளை
நம்பியிருக்கிறார்கள், எங்கள் பகுதியில். எனவே அவர்களுக்குத்
தேவையான மின்சார இணைப்பு கொடுப்பது மட்டுமல்லாமல்,
குறைந்த மின் அழுத்தத்தோடு, பகலிலே மின்சாரம் கொடுக்க
வேண்டும் என்ற கோரிக்கையை அநேகமாக தமிழகத்திலே உள்ள
அத்தனை விவசாயிகளும் விடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.
புஞ்சை விவசாயம் செய்கிற எங்கள் பகுதியிலே மிகவும் தீவிரமாக
வேண்டப்படுகிறது. அமைச்சர் அவர்கள் இதை மனதில் கொண்டு
அதற்கான சாதகமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்று
நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீகண்டத்திலே எங்கள்
பகுதியில், தென்கால், வடகால் என்று இரண்டு கால்கள் தனித்
தனியாக இருக்கின்றன. அதிலே தென்கால் பகுதியில் எப்போதுமே
நீர் வரத்து மிகவும் குறைவாக இருக்கிறது. அதன் காரண
மாக அந்த கடம்பாகுளம் என்ற குளத்திலே இருந்து சுமார் 11
குளங்களுக்கு எங்கள் பகுதியிலே உள்ள கீழ் பகுதிக்கு என்று தனி
யாக ஒரு திட்டம் சுமார் 80 லட்சம் ரூபாய் செலவிலே அமுல்
படுத்த அரசினுடைய மேலான பரிசீலனையில் இருந்து வருகிறது.
அந்த நல்ல திட்டத்தை, சர்ப்ளசாக இருக்கும் தண்ணீரை தேக்கி
வைத்து, வேண்டப்பட்ட காலங்களில் விவசாயிகளுக்கு தேவைப்
பட்ட காலங்களில் அந்த தண்ணீரை பயன்படுத்தும் அந்த நல்ல
திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன். இது 10, 15 ஆண்டுக் காலமாக அரசினுடைய பரி
சீலனையில் இருந்து வருகிறது. கடந்த ஒரு ஆண்டு காலமாகத்
தான் இது அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து இப்போது செயல்
படுத்துவதற்கான ஒரு நிலைமையில் இருப்பதாக நான் அறிகிறேன்
எனவே இந்த திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
கொண்டுவர வேண்டும் என்று எங்கள் பகுதி விவசாய மக்களின்





சார்பாக அன்போடு வேண்டிக்கொள்கிறேன். அப்படி இந்தத்
திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தால் அது எங்கள் பகுதி மக்
களுக்கு ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாக இருக்கும். எனவே
இதை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான்
அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக மெய்ஞானபுரம் பகுதியிலே செம்மறிக்குளம்
என்ற ஒரு பகுதியில் படுகை என்று ஒரு இடம் இருக்கிறது.
சுமார் 500 ஏக்கர் நஞ்சை நிலங்கள் விவசாயம் செய்கிற இடம்.
ஆண்டுதோறும் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டு, நல்ல பயிர்கள்
எல்லாம் மிகவும் சேதத்திற்கு ஆளாகின்றன. எனவே அந்தப்
பகுதியிலே நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால்
கீழ் பகுதியிலே தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறபோது, தேக்கி
வைத்த இந்த தண்ணீரின் மூலமாக பாசனத்திற்கு வேண்டிய
தண்ணீரை சப்ளை செய்ய முடியும். எனவே இந்த திட்டத்தை
செயல்படுத்த ரூ. 25 லட்சம் செலவில் ஒரு திட்டம் அரசின் பரி
சீலனையில் இருக்கிறது. அந்த திட்டத்தையும் அரசு மிக விரை
வில் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக எங்கள் பகுதியிலே முக்கியமான விவசாயம்
என்று கருதப்படுவது 'பனைத் தொழில். இந்தத் தொழிலின்
மீது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தனிக் கவனம்
செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன்
என்றால் இப்போது இந்தத் தொழில் மிகவும் சீரழிந்து கொண்டு
இருக்கிறது. எனவே இந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தொழிலுக்காக
எவ்வளவோ ஆராய்ச்சிகள் செய்தபோதிலும் பதநீர் இறக்கும் ஒரு
இயந்திரத்தை மக்கள் மத்தியிலே இன்னும் பரவலாக்க முடிய
வில்லை, எனவே இந்த ஆராய்ச்சியை அரசாங்கமே மேற்
கொண்டு, நல்லதொரு கருவியைக் கண்டு பிடித்தால் அது எங்கள்
பகுதியில் மட்டுமல்லாது, நெல்லை மாவட்டம், ராமநாதபுரம்
மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், மற்றும் மதுரை மாவட்
டம் போன்ற மாவட்டங்களில் உள்ள மக்கள் இந்தக் கருவியைப்
பயன்படுத்தி, அதனால் பலன் அடைய முடியும். எனவே அர
சாங்கத்தின் சார்பிலே ஆராய்ச்சி செய்து நல்ல 'பிராக்டிகலாக
ஒரு கருவியைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்குத் தேவையான பூச்சி மருந்துகள்
கொடுக்கப்படுகின்றன. அந்த பூச்சி மருந்துகள் வெளி மார்க்
கெட்டில் வாங்கினாலும் சரி, அல்லது அரசாங்கத்தின் மூலமாக,
பஞ்சாயத்து யூனியன் மூலமாக வாங்கினாலும் சரி, அவைகள்
தரமானவைகளாக இல்லை. ஆங்காங்கு போலியான மருந்து
கள் வருவதால், விவசாயிகள் அதை நம்பி வாங்கி உபயோகிக்கும்
போது, பயிர்களுக்கு மிகவும் சேதம் ஏற்படுகிறது. எனவே,
அரசாங்கம் ஒட்டுமொத்தமாக மருந்து அடிக்கும் திட்டத்தை

[திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்] [1985 ஜூலை 4

கிராமங்கள்தோறும் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக கொண்டு
வந்து நல்லமுறையில் செயல்படுத்த வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன். உரங்கள் வாங்குவதற்கு அரசாங்கம்
மானிய உதவி செய்கிறது. அப்படி இருந்தபோதிலும், இன்று
இருக்கிற கூலி மற்றும் விவசாயம் செய்வதற்கான அனைத்து
செலவினங்களும் மிக அதிகஅளவில் கூடிவிட்ட காரணத்தினால்,
விவசாயப் பொருள்களுடைய விலை ஏறிவிட்ட காரணத்தால்,
அதற்கான மானியங்கள் எல்லாம் கூடுதலாக்கிக் கொடுக்க வேண்
டும், அப்போதுதான் நம்முடைய விவசாயிகளுக்கு அது ஊக்கத்
தைக் கொடுக்கும் என்பதை நான் அன்போடு சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். என்னுடைய பகுதியில் ஆத்தூர் பகுதியில்
வெற்றிலை கொடிக்கால் விவசாயம் மிகவும் பிரதானமாக
செய்யப்படுகிறது. அதுவும் இந்தியாவில் மட்டும் அல்ல வெளி
நாடுகளுக்கு எல்லாம் இந்த வெற்றிலை ஏற்றுமதி ஆகிறது.
சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள், அந்த வெற்றிலை விவசாயிகள்
அந்த விவசாயத்தை நம்பியிருக்கிறார்கள். அந்த வெற்றிலை
விவசாயிகளுக்கு எல்லாம் வருடம் முழுவதும் தண்ணீர் கிடைப்
பதற்கான உதவியை நீர்ப்பாசன துறையை கலந்து மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதிக்கு
செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவன்போடு
வேண்டுகோள் வைக்கிறேன். ஏன் என்றால் ஆண்டாண்டுதோறும்
அந்த வெற்றிலை விவசாயிகள் தண்ணீருக்கு படும் அல்லல்
கொஞ்சம் நஞ்சம் அல்ல. நல்லதொரு சிறந்த விவசாய தொழி
லான இந்த வெற்றிலை கொடிக்கால் இன்னும் சொல்லப்போனால்
சிறப்பாகச் செய்தால் அன்னிய செலாவணியை சம்பாதித்துக்
கொடுக்கும் அளவுக்கு அந்தப் பகுதியில் இந்த வெற்றிலை
விவசாயம் வளரும் என்ற ஒரு குறிப்பு இருக்கிறது. எனவே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குவருடம் முழுவதும்
நீர்ப்பாசனத்திற்கு வழி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் கான்கிரிட் நஞ்சை என்று
ஒரு நஞ்சை எங்கள் பகுதியில் இருக்கிறது. இது தமிழ் நாட்டி
லேயே எங்கள் பகுதியில்தான் இருக்கிறது. அதாவது இந்த
தேரி பாங்கான மணல் பாங்கான இடங்களில் காங்கேய
குளம் என்று இருக்கிறது, அந்த குளத்தில் உள்ள களிமண்ணை
எல்லாம் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று சுற்றி காங்கிரிட்
கட்டிக் கொண்டு அதிலே இந்த மணலைப்போட்டு அதன் மூலமாக
நல்ல ஒரு நஞ்சை நிலமாக செய்து விவசாயத்தை பிராக்டி
கலாக செய்துவிட்டார்கள். எங்கள் பகுதியில் சுற்றிப் பார்த்
தால், தெரியும். நிறைய விவசாயிகள், சாதாரண விவசாயிகள்
எல்லாம் அந்த நஞ்சைப் பகுதியில் விவசாயத்தை மிகவும் சிறப்
பான முறையில் செய்து வருகிறார்கள். ஒரு மாபெரும் புரட்சி
யைச் செய்கிறார்கள். உண்மையாகச் சொல்லப்போனால் ஒரு
பசுமைப் புரட்சி என்றால் அதுதான் உண்மையான புரட்சி. தேரி
பாங்கான இடத்திலே கூட நஞ்சையை விளைவிக்கின்ற ஒரு
மாபெரும் புரட்சியை அந்தப் பகுதி விவசாய பெருங்குடி மக்கள்



1985 ஜூன் 4] [திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்]

இன்று உலகத்திற்கும் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இந்
தத் திட்டத்தை இன்னும் நல்ல முறையில் விரைவுப் படுத்த ஏழை
ஆதி திராவிட விவசாய பெருங்குடி மக்களுக்கு அரசுக்குச் சொந்த
மான நத்தம் நிலமாக இருந்தாலும் வனத்துறைக்கு சொந்தமான
நிலமாக இருந்தாலும் சரி அந்த நிலத்தை பங்கிட்டுக் கொடுத்து
ஒரு குறிப்பிட்ட தொகையை மானியமாக வழங்கினால் அந்தப்
பகுதி மக்கள் எல்லாம் அந்த விவசாயத்தை செய்ய வாய்ப்பு இருக்
கும். அதோடு நமக்கு எல்லாம் உணவு வழங்குகின்ற இந்த நெல்
உற்பத்தியும் மிகப் பெரிய அளவில் நமக்குக் கிடைக்க வாய்ப்பு
இருக்கிறது.

அடுத்து, விவசாய கூலி சம்பந்தமாக இங்கே பேசிய மாண்புமிகு
சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொன்னார்கள்.
விவசாயக் கூலிக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பு இல்லை. அவர்
களுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பை இந்த அரசு செய்ய
வேண்டும். நல்ல பல இன்சூரன்ஸ் திட்டங்கள் இருந்தபோதி
லும் அவர்களின் வாழ்க்கையினுடைய பிடிப்புக்கு ஒரு ஆதாரமான
பொருளாதாரம் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

விவசாயத்தில் ஈடுபட்டுக்கொண்டு இருப்பவர்கள் இறந்து
விட்டால் அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும்
என்ற யோசனையை இந்த மாமன்றத்தில் பல உறுப்பினர்கள்
சொல்லி இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தையும் நான் வர
வேற்கிறேன். அந்தத் திட்டத்தை விரைவில் கொண்டு வந்தால்
தமிழகத்தில் இருக்கின்ற லட்சக்கணக்கான விவசாயிகளுடைய
எதிர் காலத்திற்கு ஒரு நம்பிக்கை ஏற்படும் என்ற நல்ல கருத்தை
நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, என் தொகுதியான திருச்செந்தூரில் மக்கள்
அதிகமாக முக்கால் பகுதி மக்கள் கடற்கரைப் பகுதியி
இருக்கிறார்கள். முக்கால் பகுதி நீர் உப்பு நீராக இருக்கிறது.
குடிநீர் வடிகால் வாரிய அமைச்சர் அவர்கள் எங்கள் திருச்
செந்தூரின் மீது தனிக் கவனத்தை செலுத்தி எங்கள் பகுதி
மக்களுக்கு குடிநீர் பற்றாக்குறையை இப்போது நல்ல முறையில்
தீர்த்து வருகிறார்கள். இருந்தாலும் கூட இன்னும் சில கோரிக்கை
கள், சில தேவைகள் எங்கள் பகுதியில் இருந்து கொண்டு இருக்
கிறது. எனவே திருச்செந்தூர்-புன்னக்காயல் குடிநீர் திட்டத்தை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல்படுத்த வேண்டும்
என்று அன்போடு பணிவோடு கேட்டுக் கொண்டு இன்னும் எங்கள்
பகுதியில் பல குடிநீர் திட்டங்கள் எல்லாம் இந்த அரசின் ஆய்வில்
இருக்கிறது. சேதுக்-கால்வாய் குடிநீர் திட்டம், புன்னக்காயல்
குடிநீர்த் திட்டம், திருச்செந்தூர் குடிநீர் திட்டம் ஆகிய
இந்த மூன்று திட்டங்களின் மீதும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
நல்ல கவனம் செலுத்தி அவைகளை சீரிய முறையில் செயல்படுத்
திக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு, பணிவோடு வேண்டிக்

[திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்] [1985 ஜூன் 4

கொண்டு எனக்கு பேச வாய்ப்புக் கொடுத்த பேரவைத் துணைத்
தலைவர் அவர்களுக்கும், மாற்றுத் தலைவருக்கும் நன்றி தெரி
வித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, ''கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்று
ஆங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை'' என்று கூறிச் சென்று
இருக்கிறார் வள்ளுவர். இன்றைக்கு இங்கே பேசப்படுகின்ற
மானிய கோரிக்கைகளில் முக்கியமான பிரச்சினையாக நீர்ப்
பாசனம் இருக்கின்ற காரணத்தாலோ என்னவோ இன்றைக்கு
விவசாயத்தை குடிநீர் பிரச்சினையோடு இணைத்து இங்கே பேசப்
படுகிறது என்று நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 12-20)

விவசாய மானியக் கோரிக்கையைப் பற்றிப் பேசுகின்றபோது,
முதற்கண், நடந்து முடிந்த ஊட்டி ப்ளவர் ஷோவிலே இந்தத்
தமிழக அரசு, அங்கே இருக்கக் கூடிய பொட்டானிகல் கார்ட
னுக்கு எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, அன்னை
இந்திரா காந்தியின் பெயரை வைத்ததற்காக தமிழக அரசுக்கு
என்னுடைய மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரி
வித்துக் கொண்டு பேச்சைத் தொடங்குகிறேன்.

தோட்டக் கலையைப் பற்றி பேசுகின்ற போது, தோட்டக்
கலையினுடைய தலைமையகமானது, சென்னையிலே இல்லாமல்
இன்றைக்கு சென்னையிலே இருந்து வெகு தூரத்திலே தர்மபுரி
மாவட்டத்திலே இருக்கிற காரணத்தால் போடுகின்ற திட்டங்
களும், செயல்களும், சிறப்பாக செயல்பட முடியாமலும், ஒதுக்கப்
படுகின்ற பணங்கள் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் சென்னைக்கு
வருவதற்கும், தங்குவதற்கும், தொலைபேசிக்கும்தான் அதிகமாக
செலவு ஆகிற காரணத்தால் உடனடியாக போடுகின்ற
திட்டங்களும், தீட்டுகின்ற விளக்கங்களும் மக்களைச் சென்று
அடைய அந்தத் தலைமையகத்தை உடனடியாக தர்மபுரியில்
இருந்து சென்னைக்கு மாற்ற வேண்டிய சரித்திர அவசியம் இருப்
பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த ஹார்டிக்கல்ச்சர் துறையைப் பற்றிப் சொல்கிற போது,
இன்றைக்கு 66 அசிஸ்டென்ட் டைரக்டர் பதவியிலே 56 பதவிகள்
காலியாக இருக்கின்றன. விவசாயத் துறையிலிருந்து தோட்டக்
கலைத்துறை பிரிக்கப்பட்டதனால் பணியாளர்களிடத்திலே ஏற்
பட்ட சலசலப்பின் காரணமாக, பணியாளர்களின் பதவி இடங்கள்
காலியாக இருப்பதால் வேலைகள் முடக்கப்பட்டிருக்கின்றன
என்று நான் அறிகிறேன். ஒன்றாக இருந்து வேலை பார்த்துக்
கொண்டிருந்த, ஒரே விவசாயத் துறையிலே ஒரே அமைச்சரின்
கீழே இருந்து வேலை பார்க்கின்ற ஒரே துறையிலே இன்றைக்கு
இரண்டு பிரிவுகளாகப் பிரிந்த காரணத்தால், அதிகாரிகளிடத்
திலே ஏற்பட்டுள்ள மனக்கசப்பை நீங்கள் தயவு செய்து ஒன்
றாகக் கூடிப் பேசி குறைந்தபட்சம்-என்றைக்கு விவசாயத் துறை



985 ஜூன் 4] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

யிலிருந்து தனியாக தோட்டக் கலை பிரிக்கப்பட்டதோ, அன்றைய
தேதியிலிருந்து ஒரு கட்-ஆஃப் டேட் என்று சொல்வார்களே,
அதைப் போன்று ஒரு தேதியை எடுத்து வைத்துக் கொண்டு,
அங்கே ஏற்கனவே வேலை பார்த்த பி.எஸ்.சி. அக்ரிகல்சுரிஸ்ட்ஸ்,
பி.எஸ்.சி. ஹார்ட்டிகல்சுரிஸ்ட்ஸ்க்கும் எந்தவிதமான பாதிப்பும்
ஏற்படாத வகையில் வேலைகளைப் பிரித்து தருவதற்கு இந்த
அரசு உடனடியாகச் செயல்பட வேண்டும் என்று மிகுந்த அன்
போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இதை நான் சொல்கிற போது, இன்றைக்கு
இந்த விவசாயத் துறையிலேயே ஒரு கோ-ஆர்டினேஷன் இல்
லையோ அல்லது லேக் ஆப் கோ-ஆர்டினேஷன் இருக்கிறதோ
என்ற அச்சத்தை எனக்கு ஏற்படுத்துகிறது. மிகச் சிறப்பான
ஒரு பொறுப்பு விவசாயத் துறையிலே உள்ளது. நாம் உண்ணு
கின்ற உணவை பெற்றுத் தருவதிலே, அன்றைக்கு நாம் கையிலே
பாத்திரங்களை வைத்துக் கொண்டு வெளி நாடுகளுக்கு உணவுக்
காக அலைந்த நிலை மாறி இன்றைக்கு செல்ஃப்-சபிஷியன்ஸி-யை
யும் தாண்டி, உணவுப் பொருளை உற்பத்தி செய்து வெளி நாடு
களுக்கு ஏற்றுமதி செய்கிற அளவுக்கு உயர்த்தி விட்ட அதிகாரி
களிடத்திலே இன்றைக்கு ஒரு ஒற்றுமை இல்லாவிட்டால் அது
நம்மைத்தான் பாதிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டி, உடனடியாக
இந்தப் பிரச்சினைக்கு இந்த அரசு தீர்வு காண வேண்டும் என்று
அன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தொடர்ந்து தோட்டக் கலையைப் பற்றிச்
சொல்கிறபோது, தோட்டக் கலைக்கு இப்போது ஒதுக்கப்படு
கிற பணங்களும் அதுபோன்று மேற்கு மலை தொடர்ச்சியினு
டைய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மத்திய அரசிலிருந்தும்,
மாநில அரசிலிருந்தும் வருகின்ற பணங்கள் எல்லாம் நீலகிரி
மாவட்டத்திற்கு மட்டுமே அதிகமாக செலவழிக்கப்படுகின்றன
என்ற ஒரு கருத்து, நான் இந்த பட்ஜெட்டினுடைய டாகு
மென்ட்லை எல்லாம் படிக்கின்ற போது அதிகப்படியான பணம்
நீலகிரிக்கு மட்டும் ஒதுக்கப்படுகிறது என்பதை சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். ஏன் மற்ற மாவட்டங்களிலே மலைகள் இல்
லையா? நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்ப்
பற்று அதிகம் கொண்டவர். 'வானரங்கள் கனி கொடுத்து மந்தி
யொடு கொஞ்சி' என்ற குற்றால மலையும், பொதிகை
மலையும் மலைகளாக உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா?
உடனடியாக இந்த மாற்றான்தாய் மனப்பான்மையை மாற்றி,
நீலகிரி மாவட்டத்தை மட்டும் மலைப் பிரதேசமாக எடுத்துக்
கொண்டிருக்கிற அந்தக் கருத்தை மாற்றி, தமிழ்நாட்டிலுள்ள
அனைத்து மலைப்பகுதிகளையும், குறிப்பாக நெல்லை மாவட்
டத்திலே இருக்கின்ற பொதிகை மலையினையும், அந்த மலை
மேம்பாட்டுத் திட்டத்திலேயும், மேற்கு மலைத் தொடர்ச்சி
யுடைய மேம்பாட்டுத் திட்டத்திலேயும் நீங்கள் எடுத்துக்கொள்ள
வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1985 ஜூன் 4

நீரினுடைய வாட்டர் மானேஜ்மென்ட் என்று சொல்கிற,
சிறப்பான முறையிலே தண்ணீரை வயல்களுக்குஎடுத்துச்
செல்வதற்காக, போடப்படுகின்ற அந்த வாய்க்கால்
திட்டங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் இன்றைக்கு ஒரு இடந்
தில் கூட செயல்படுத்தப் படவில்லை. பொன் விளையும் பூமி
யாம் பொருணை நதியின் பூமியிலேயும் சரி, சித்திரா நதி பாயும்
தென்காசி பகுதியிலேயும் சரி, ஒரு இடத்திலே கூட ஆற்று
மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை என்று
மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன். உடனடியாக
இந்த திருநெல்வேலி மாவட்டம் பொதுவாக மேற்கு மலை
திட்டத்திலும், ஆற்றுப் படுகை திட்டத்திலேயும் சற்று புறக்
கணிக்கப்படுகிறதோ என்ற அச்சத்தை மாற்றி எல்லா
மாவட்டங்களும், எல்லா மலைத் திட்டங்களும் இந்த அரசுடைய
கண்காணிப்பிலே ஒன்றாகத்தான் செயல்படுகிறது என்ற உத்தர
வாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுக்கு தர
வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயத்தைத் திரும்பிப் பார்க்கிறபோது
காங்கிரஸ் ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்களின் அடிப்படை
யில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி அவைகளையெல்லாம்
நம்முடைய விவசாயத் துறை சிறப்பாகச் செயல்படுத்தியதன்
காரணமாக இன்றைக்கு நாம் வளத்தோடு இருக்கிறோம். இன்
றைக்கு நம்முடைய சிந்தனையும் செயலும் இரசாயன உரத்திலே
போய் அதிலே அதிகப்படியான கவனம் செலுத்தப்பட்டதின்
காரணமாகவோ என்னவோ புதிய புதிய நோய்களும், சிக்கல்
களும் ஏற்பட்டு விவசாயிகளுக்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டுக்
கொண்டிருக்கின்றன. அதற்காக நான் பண்டைக்கால முறை
களைத்தான் கையாளவேண்டுமென்றோ புதிய முறைகளை கை
விடவேண்டுமென்றோ சொல்லவில்லை. பையலாஜிக்கல் கம்ப்
போஸ்ட் என்ற முறையிலே தாவர இயல் சார்ந்த உரங்களுக்கு
முக்கியத்துவம் கொடுத்துச் செயல்பட வேண்டும்.

அந்த வகையிலே இந்த அரசு நீல பச்சைப் பாசிக்கு முக்கி
யத்துவம் கொடுத்து வந்திருக்கிறது. அந்த முறையிலே தான்
1980—81 ஆம் ஆண்டிலே ஒரு லட்சம் ஹெக்டேர் அளவுக்கு நீல
பச்சைப் பாசியை விரிவுபடுத்தவேண்டுமென்ற குறியீட்டை நிர்ண
யித்து 1.11 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு அந்தக் குறியீட்டு
அளவை மிஞ்சி இருக்கிறது என்று நம்மால் காணமுடிகிறது.
ஆனால் அதற்காக 1983—84, 1984—85, 1985—86 ஆகிய ஆண்டு
களிலே அந்தக் குறியீட்டு அளவைக் கூட்டாமல் ஒரு லட்சம்
ஹெக்டேர் என்ற அளவுக்கே வைத்திருக்க வேண்டுமா அதை
உயர்த்தாமல் அப்படியே வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல,
குறியீட்டளவை ஒரு ஆண்டிலே எட்டி அதை மிஞ்சிவிட்டோம்
என்பதற்காக வருகிற ஆண்டுகளிலே அந்த குறியீட்டு அளவை
உயர்த்தாமல் இருப்பது வேதனைக்குரியதாகும். எல்லா நாடு
களிலுமே இந்த நீலபச்சைப் பாசி உரம் விவசாயிகளுக்கு



1985 ஜூன் 4] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

நன்மை அளிக்கிறது நல்ல பலனை அளிக்கிறது என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கமும் அதை ஏற்று கொண்டு செயல்பட்டு வந்திருக்கிறது, அப்படியிருக்கிறபோது இப்போது அதை விஸ்தரிக்கவில்லை என்பது சரியல்ல. அதை விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே கொடுக்கப்பட்டுள்ள பாலிசி மேட்டர்களில் குறிப்பாக அர்பன் கம்ப்போஸ்ட்டுக்கு புதிய அணுகுமுறைகளைச் செய்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். டிரை லெட்ரின் முறைகளை மாற்றி பிளஷ் அவுட் லெட்ரின் முறைகளைக் கொண்டு வருகிறார்கள். பில்த் சக்கிங் மெஷின் என்பதன் மூலமாக அதை அகற்றுகிறார்கள். ஒவ்வொரு நகராட்சிக்கும் அதை விஸ்தரிக்கவேண்டும். சென்னை நகரம், மற்றும் உள்ள பெருநகரங்களிலே அர்பன் கம்ப்போஸ்ட் என்ற வகையிலே பணிகள் நடைபெற அவைகளை அகற்றுவதற்கு மோட்டார் வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றை நகராட்சிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டும். அதன் மூலமாக அர்பன் கம்ப்போஸ்ட் என்ற முறையிலே சிறப்பாக செயல் படுத்த முடியும்.

அடுத்து தென்காசி பகுதியிலே ஒரு கோடி ரூபாய் செலவிலே [illegible]ஸ்மின் எக்ஸ்ட்ராக்ஷன் பிளாண்ட் ஏற்படுத்த இருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அதற்காக நான் இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தனை ஆண்டுக் காலத்திலே முதன்முதலாக இப்போதுதான் தென்காசி பகுதியிலே ஒரு தொழிற்சாலை வருகிறது என்பதால் நான் அந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே அதனை வரவேற்று, விரைவிலே அது அமைக்கப்படவேண்டும். அது விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட இருக்கிற தொழிற்சாலையாக இருப்பதால் என் பகுதியிலே மகத்தான முறையிலே முன்னேற்றம் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி, அதற்கான வேலைகளை விரைவுபடுத்தவேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இரசாயன உரத்தின் காரணமாக நோய்களும் பெருகியிருக்கின்றன என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். நோய்த் தடுப்புத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகிற மானியத் தொகைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பது வேதனைக்குரியதாகும். நோய்கள் பெருகிவருகிறபோது நோய்கள் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக ஒதுக்கப்படுகிற தொகை அதிகப்படுத்தப்பட வேண்டும்.

நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களிலே தென்னை மரங்கள் நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கேரள வெக்கை நோய் அங்கே உள்ள தென்னை மரங்களையெல்லாம் கபளீகரம் செய்யக்கூடிய துர் பாக்கியமான நிலைமை இருக்கிறது.

மானியம் கொடுத்து அந்தத் தென்னை மரங்களையெல்லாம் வெட்டி எரித்துவிடச் சொல்கிறார்கள். இப்படி மானியம் கொடுத்து, வெட்டச் சொல்வதன் மூலமாக இந்தப் பிரச்சினை யைத் தீர்த்துவிட முடியாது. ஆகவே நோய் வராமல் இருக்கச் செய்கின்ற முறையிலே ஆராய்ச்சியை முடுக்கிவிட்டு அந்தத் தென்னை மரங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட் டுக் கொள்கிறேன்.

டிரிப் இரிகேஷன் என்பதற்கு இன்றைக்குப் புதிய ஊக்கம் கொடுக்கப்பட்டுவருகிறது. நான் அதை வரவேற்கிறேன்.

(பிற்பகல் 12-30)

ஆனாலும்கூட மிகப்பெரிய அளவிற்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய எல்லோரும் மின்சார உற்பத்திக் குறைவின் காரணமாக விவசாயிகள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார் கள் என்று கூறிச் சென்றார்கள். எப்படி நீரினால் ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியுமோ அதைப் போலவே காற்றினா லும் ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும் என்ற அளவிற்குக் காற்றிற்கும் சக்தி இருக்கிறது. என்னுடைய பகுதியில் காற்றினால் வாழைகள் சாய்ந்து விடுகின்றன. காற்றின் காரணமாக வாழை மகசூல் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. இதற்குப் பொது வான, நிலையான ஒரு பாதுகாப்பை ஏற்படுத்துகின்ற முறையில் தடுப்புச் சுவர் போன்ற திட்டங்களை அரசு கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே சமயத்தில், காற்றின் மூலமாக இயங்கக் கூடிய காற் றாடிகளை அமைத்து, அந்த காற்றாடிகள் அசைகின்ற பொழுது ஏற்படுகின்ற சக்தியின் மூலமாக நிலத்தடி நீரை மேலே கொண்டு வருவதற்கான திட்டங்களையும் தீட்ட வேண்டும். காற்று நீர் தூக்கிகளின் மூலமாக உலகமெங்கிலும் விவசாயிகளுக்குத் தேவையான நீர் இறைக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் பத்து நாட்களுக்கு முன்னால் கோயம்புத்தூருக்குச் சென்ற நான் அங்கே யுள்ள விவசாயப் பல்கலைக் கழகத்திற்கும் சென்றேன். காற் றழுத்த நீர் தூக்கிகளைக் காணச் சென்றேன். ஆனால் அப் பொழுது அங்கேயுள்ள மூன்று காற்றழுத்த நீர் தூக்கிகளும் வேலை செய்யாமல் உடைந்து போய் மூன்று வருஷங்களாக வீணாகக் கிடக்கின்ற நிலைமையைத்தான் பார்த்தேன். ஒரு ஆராய்ச்சிக் கூடத்தில், விவசாயத்திற்கு முக்கியமான தேவை யான அடிப்படைகளை ஆராய்ச்சி செய்வதற்காக இருக்கின்ற இடத்தில் இப்படி காற்றழுத்த நீர் தூக்கிகள்--விண்ட் மில்கள் வேலை செய்யவில்லை, அதற்காக எந்தவிதமான நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை என்பதை அறிந்து நான் மிகுந்த வேத னைப்பட்டேன். தென்காசி பகுதியில் காற்று வேகம் அதிகமாக





இருக்கிறது. எனவே, நம்முடைய பகுதிக்கு அந்த விண்ட் மில் களின் மூலம் பலன் கிடைக்கும், அதைப்பற்றி அறிந்து வர லாம் என்று அங்கே உள்ள ஆராய்ச்சி கூடத்திற்கு சென்றால் அங்கேயே இப்படிப்பட்ட அவலநிலை இருப்பதை கண்டு வேதனை யோடு திரும்பி வந்தேன். ஆகவே, உடனடியாக இப்படிப்பட்ட யூனிட்டுகள் மூலம் தண்ணீர் இறைக்கின்ற திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். இலவசமாக மின்சாரம் கொடுப்பதில் எத்தனை யோ துஷ்பிரயோகங்கள் நடக்கின்றன என்றெல்லாம் பேசப் படுகின்ற இந்தக் காலக்கட்டத்திலே, ஒவ்வொருவருக்கும் இப்படிப் பட்ட யூனிட்டுகளைத் தனித்தனியாக அமைத்துக் கொடுத்தால், குறிப்பாக, எங்கள் தென்காசி பகுதி, திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் போன்ற இடங்களில் அதிகமான காற்றழுத்தம் இருப்பதால், அங்குள்ள மக்கள் யாருடைய தயவும் இல்லாமல் அதிக நாட்களுக்குத் தண்ணீரை இறைத்து விவசாயத்தை முன்னேற்றுகின்ற வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தற்பொழுது தென் மாவட்டங்களில் புதிதாக ஒரு ஆபத்து உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குளங்களிலும், நீர்த்தேக்கங் களிலும், நதிகளிலும் ஆகாயத் தாமரை என்ற விஷச் செடி மிகவும் வேகமாகப் பரவி வருகிறது. நான் கூட முதலில் நினைத்தேன், ஆகாயத் தாமரை படர்வதால் தண்ணீர் ஆவியாவது குறையும் என்றுதான் நினைத்தேன். ஆனால் பிறகு விஞ்ஞானிகளிடத்தில் கலந்த பொழுது, சூரிய வெப்பத்தால் தண்ணீர் ஆவியாவதை விட அதிக அளவிற்கு 40 சதவீத அளவிற்கு இந்த ஆகாயத் தாமரை கள் தண்ணீரை உறிஞ்சுவதால் தண்ணீரின் கொள்ளளவு குறை கிறது என்று தெரிவித்தார்கள். ஆகாயத் தாமரைகள் படர்வதால் தண்ணீரிலே சூரியக் கதிர்கள் படாமல் போகின்றன. அதனால் தண்ணீரில் உள்ள மீன்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, ஆகாயத் தாமரை இருக்கின்ற இடங்களில் மீன் வளம் அடியோடு பாதிக்கப் படுகிறது. அந்த தண்ணீரில் குளிக்க முடியவில்லை. அந்த தண்ணீரில் குளிப்பவர்களுக்கு புது வகையான ஊறல் நோய் தோன்றுகிறது; சுகாதாரக் கேடுகள் வருகின்றன என்றெல்லாம் அங்கேயுள்ளவர்கள் கூறுகிறார்கள். இது குறித்து நான் அப்படிப்பட்ட அதிகாரிகளிடத்திலே கேட்டேன். நீங்கள் ஆகா யத் தாமரையை அகற்றினால் என்ன என்று கேட்டேன். அதற்கு அவர்கள், இது விஞ்ஞான சம்பந்தப்பட்ட விஷயம், ஆகாயத் தாமரைகளை அடியோடு அகற்ற வேண்டும். களைகளைப் போல் அவைகள் முளைத்து இருக்கின்றன. ஆனால் அவற்றை அழிக்கின்ற சக்தி எங்களுக்கு இல்லை என்று பி.டபிள்யூ.டி.யில் உள்ளவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, விவசாயத் துறையைச் சேர்ந்தவர்கள் [illegible] [illegible] வகை யில் அதற்கான திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று [illegible] போது கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1985 ஜூன் 4

சுந்தரபாண்டியபுரத்தில் வேளாண்மைக் கிடங்கு பல ஆண்டு
களாகக் கட்டி முடிக்கப்படாமல் பாதியிலே இருக்கிறது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீரைப் பொறுத்தவரையில், தென்காசி முனிசிபாலிட்டி
யில், 1977 ஆம் ஆண்டு 50,000 ரூபாய் பொதுத் திட்டத்திற்
காக கட்டப்பட்டு, இன்வெஸ்டிகேஷன் எடுக்கப்பட்டும்கூட,
மீண்டும் 40,000 ரூபாய் கட்ட வேண்டுமென்று கேட்கிறார்கள்.
முதலில் கட்டப்பட்ட 50,000 ரூபாய்க்கு 15 சதவீதம்
வட்டி என்றாலும் கூட ஏழு ஆண்டுக் காலத்திற்கு 72,000 ரூபாய்
வரும். ஆகவே நீங்கள் கேட்டும் பணத்தை எங்கள் பணத்திற்கு
உண்டான வட்டியின் மூலமே சம்பாதித்துக் கொள்ள முடியும்.
எனவே, இந்தத் திட்டத்தை நீங்கள் முடுக்கிவிட வேண்டும்
என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தைப் பற்றி விவாதிப்பதற்காக மதுரையில்
உள்ள 'ட்வாட்' போர்டு அதிகாரிகளைச் சந்திக்க சென்றேன்.
அப்பொழுது நான் பெற்ற அனுபவத்தைச் சொல்கிறேன்.
மதுரையில் 'ட்வாட்' போர்டு அதிகாரிகள் எவ்வளவு பேர்கள்
இருக்கிறார்கள் என்று அறிந்து கொண்டேன். Urban, Rural,
Project formation, Execution, World Bank Scheme, Chief Engineer's
Office, T.K. Circle, Designs Office,........
இப்படி எட்டு ஆபீஸ்கள் மதுரை மாவட்டத்திற்கு இருக்கின்றன.
இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் இப்படி இருக்கிறது. கிட்டத்
தட்ட 16 ஆபீஸ்கள் இருக்கின்றன. நான் இந்த ஆபீஸ்களில்
ஏறி இறங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இங்கே நாங்கள்
தண்ணீர் இல்லை என்று தவித்து, திட்டங்கள் தீட்ட வேண்டு
மென்று ட்வாட் என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தினால், அங்கே
அது ஆலமரம் போல் வளர்ந்து, இன்றைக்கு ஏகப்பட்ட கிளை
களாகப் பிரிந்து, பாட்டில் நெக் என்ற சொல்லத்தக்க அளவிலே,
ஒவ்வொரு திட்டமும் ஒவ்வோரிடத்திலே தேங்கி வந்திருக்கிறது.
அது மட்டுமல்ல, சுண்டைக்காய் கால் பணம், சுமைக்கூலி முக்கால்
பணம் என்பது போல், திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகிற பணம்
எல்லாம் அதிகாரிகள் எல்லாம் அதிகமான அளவில் ஏற்படுத்தப்
படுவதன் மூலமும், அரசு அலுவலகங்கள் அதிகமான அளவில்
ஏற்படுத்தப்படுவதன் மூலமும் செலவிடப்படக்கூடிய துர்பாக்கிய
மான சூழ்நிலை இன்றைக்கு ட்வாட் பொறுத்தவரையில் ஏற்
படுகிறதோ என்று நான் அச்சப் படுகிறேன். இன்றைக்கு
அதிகாரிகளே வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால்
அமைச்சர் அவர்கள் ட்வாட் போர்ட் ஓரளவுக்கு மேல் அதிகமாக
விரிந்து விடாமல், இத்தனைப் பிரிவுகளாகப் பிரிந்து செயல்படு
வதைக் காட்டிலும் ஒரே பிரிவாகப் பிரித்து, செயல்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

11,850 குழாய் கிணறுகள் போடப்பட்டிருப்பதாகத் தகவல்
தரப்பட்டிருக்கிறது. ஆனால் எவ்வளவு குழாய் கிணறுகள்
வேலை செய்கின்றன என்ற தகவல் தரப்படவில்லை. போடப்



1985 ஜூன் 4] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

பட்ட குழாய்களிலே பாதி வேலை செய்யவில்லையென்பதுதான்
நிலைமை. காரணம் கேட்டால் மார்க் 1 பம்ப் போட்டோம்,
மார்க் 1 பம்ப் டெக்னிக்கல் பெயிலியர் என்று சொல்கிறார்கள்.
ஏற்கெனவே எத்தனை அதிகாரிகள் இருக்கிறார்கள் எத்தனை
அலுவலகங்கள் இருக்கின்றன என்று நான் குறிப்பிட்டேன். இவ்
வளவு தூரம் இருந்தும், கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிட்
டும் கூட, போடப்பட்ட குழாய்கள் நம்முடைய தமிழ் நாட்டிற்கு
ஏற்றதல்ல என்ற நிலைமையிலேதான் இன்றைக்கு சேலம்
மாவட்டத்திலும் வடாற்காடு மாவட்டத்திலும் மட்டும் ரூ. 1
கோடியே 1 இலட்சம் செலவிலே பம்புகளை மாற்றுவதாக
தகவல் தந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டங்களைச்
செயல்படுத்துகின்ற முறை சிறப்பாக அமைய வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டே இரண்டு நண்பர்கள் கூறிய கருத்துக்களை மட்டும்
இந்த நேரத்திலே கூறி, விடைபெறுகிறேன். சேந்தமங்கலம்
தொகுதியிலே இருக்கக்கூடிய தாளவாடி பகுதியிலே 8 நீர்த்
தேக்கங்களும், புழல் பகுதியிலே இருக்கக் கூடிய 9
மேல்நிலைநீர் தேக்கங்களும், கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னாலே
கட்டி முடிக்கப்பட்டு, அவற்றிற்குத் தேவையான பம்புகள் வைக்க
கப்பட்டு, குழாய்கள் போடப்பட்டு, புது மணப் பெண்ணைப்
போல் காத்துக் கொண்டிருக்கிறது என்றும் அமைச்சர் என்ற
திருமகனார் வந்து அவற்றைத் திறந்து வைக்க வேண்டும்மென்றும்
என்னிடத்தில் சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இது
போன்ற திட்டங்கள் தீட்டப்படாமல், தண்ணீர் இல்லாமல் வாடு
கின்ற பகுதியிலே மக்கள் ஒரு பக்கம் இருக்க, பல இலட்சம்
ரூபாய்களை செலவழித்து, திட்டங்கள் தீட்டப்பட்டு மேல்நிலை
நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டும்கூட அவற்றைத் திறந்து வைக்காத
காரணத்தினால் மக்கள் தண்ணீர் இல்லாமல் அவதிப்படுகின்ற
நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அது இனியாவது மாற
வேண்டுமென்று அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோன்று, சேலம் ஆத்தூர் நகரத்திற்கு 5 நாட்களிலே
1 நாள் மட்டும்தான் தண்ணீர் தரப்படுவதாக நம்முடைய
அன்பர்கள்—உறுப்பினர்கள்—என்னிடத்திலே தெரிவித்தார்கள்.
மிகுந்த வறண்ட பகுதியான, அங்கே மொத்தமுள்ள 4
பஞ்சாயத்து யூனியன்களிலே, மொத்தம் 10 ஆழ்குழாய்க்கிணறு
கள்தான் போடப்பட்டன என்று குறிப்பிட்டார்கள். நடிவு
செய்து 300 அடி ஆழத்திலே 6" அகலமுள்ள குழாய்கள் போட்டு,
அந்தப் பகுதிக்குத் தண்ணீர் கிடைக்க வாய்ப்புகளை ஏற்படுத்தித்
தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி
கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[1985 ஜூன் 4

திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இந்த மாமன்றத்தில் எனக்கு மீண்டும் பேச வாய்ப்
பளித்த முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் சேந்தமங்
கலம் தொகுதி மக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு
மக்களின் உயிர் நாடியாக விளங்குகின்ற வேளாண்மைத் துறை
யினைப் பற்றியும் குடிநீர் வழங்கு துறை பற்றியும் மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்
கின்ற மானியக் கோரிக்கையினை வரவேற்று என்னுடைய ஒரு
சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வேளாண்மைத்
துறையைப் பொறுத்த வரையிலும் நாட்டிலே பல்வேறு
வறட்சி நிலைமை இருந்த காலத்திலும், இந்த ஆண்டு
வேளாண்மைத் துறை சிறந்து விளங்குகின்ற துறையாக இருக்கிற
காரணத்தால்தான் ஓரளவு விலையேற்றத்தை தடுக்க முடிந்தது.
வேளாண்மைத் துறை விளை பொருள்களை உற்பத்தி செய்திருக்
கிற காரணத்தால்தான், இன்று நாடு விலையேற்றத்திலிருந்து
குறைந்து, மக்கள் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் முறை
யிலே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் மேன்
மேலும் வேளாண்மைத் துறையைச் சீராக வைக்க ஒத்துழைக்கின்ற
மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் என்
னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியைப் பொறுத்த வரையில் தோட்டக்
கலைத் துறை சிறந்து விளங்குகிறது. தோட்டக்கலைத்
துறையின் மூலம் எங்கள் பகுதியில் அன்னாசிப்பழ ஆராய்ச்சிப்
பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு
அங்கே மேலும் 16 ஏக்கர் எடுத்து இப்பணியை விரிவு
படுத்த அரசு நிதி ஒதுக்கியிருக்கிறது. அதை விரைவாகச்
செயல்படுத்த வேண்டும் என்றும் அந்தப் பகுதியிலே இருக்கிற
மலைவாழ் மக்களுக்கு மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத்
திட்டத்தின் கீழ் பல்வேறு உதவிகளைச் செய்து, புதிய புதிய
பயிர்களை அந்தப் பகுதிக்கு ஏற்ப உருவாக்கிக் கொடுத்து இந்தத்
துறை நல்லமுறையில் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்
கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40.)

கொல்லிமலையைப் பொறுத்தவரையில் மண்வள மேம்
பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்பட்டு
வருகின்றன. இந்தத் திட்டங்கள் மூலம் பல்வேறு பணிகள்
செயல் படுத்தப்பட்டு வந்தாலும் அவை ஒருசில கோளாறு
களினால் நல்லமுறையில் செயல்படாமல் இருக்கின்றன.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கருத்திற் கொண்டு,
நல்முறையில் திட்டங்கள் செயல்பட சம்மந்தப்பட்ட அதி
காரிகள் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கை
களை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 4] [திரு. சீ. சிவப்பிரகாசம்]

அடுத்து, இந்தத் துறையின் மூலம் கசிவுநீர்க் குட்டைகள்
அமைக்கப் பட்டிருக்கின்றன. இந்த கசிவுநீர்க் குட்டைகளைப்
பொறுத்த மட்டில் ஒவ்வொரு பகுதியாகத் தேர்ந்தெடுத்து
அமைத்து வருகிறார்கள். இது பயனுள்ள வகையில் அமைந்
திருக்கிறது என்பதைத் காண்கிறோம். எனவே தொடர்ந்து
இந்த கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் திட்டத்தை ஐ.ஆர்.
டி. பி. போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் நல்லமுறையில்
செயல்படுத்த வேண்டும்; அதன் மூலம் விவசாயத்திற்கு
3 மாதம் 6 மாதம் பாசன வசதிக்கு பயன் ஏற்படும் வகையில்
செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை மலைப்பகுதி பல்வேறு தரமாகப் பிரிந்து
இருக்கிற காரணத்தால் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொருவித
மாக இருக்கிறது. அதனால் அங்கே ஏர்க்காட்டில் உள்ளதைப்
போல ஒரு பல்கலைக் கழக ஆராய்ச்சி தோட்டக்கலைத்
துறையை உருவாக்கலாம்.

அதைப்போன்று கல்வராயன் மலைப் பகுதியில் தோட்டக்
கலைத் துறையின் மூலம் ஒரு பழப் பண்ணையை உருவாக்கிக்
கொடுக்க அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும். தோட்டக்
கலைத் துறையின் மூலம் கொல்லி மலையில் தேயிலை பயிர்
செய்ய 2.5 கோடி ரூபாய்ச் செலவிலான ஒரு திட்டம்
இருப்பதாக நான் அறிகிறேன். மலைவாழ் மக்கள் மேம்
பாட்டுத் திட்டத்தின் மூலம் மத்திய அரசு அனுமதி பெற்று
இப்பணி நிறைவேற்றப்படும் என்று தெரிகிறது. தேயிலை
பயிரிட நல்ல சூழ்நிலை இருக்கிறது. நீலகிரியில் தேயிலை
வளர்ச்சி பெற 8 மாதங்கள் ஆகும் என்றும் கொல்லிமலை
யில் 6 மாதத்தில் அதே வளர்ச்சியைப் பெற்றுவிடும் என்றும்
அங்கே இருக்கிற அதிகாரிகள் கூறுகிறார்கள். இந்தக்
கருத்தை ஆராய்ந்துபார்த்து, 2.5 கோடி ரூபாய்ச் செலவிலான
திட்டத்தை மத்திய அரசின் அனுமதி பெற்று, விரைந்து
செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும்
பணித்துறைப் பிரிவைப் பொறுத்தவரையில் மைய அரசும்
மாநில அரசும் விவசாயிகளுக்கு உதவி செய்யும் விவசாய சேவை
மையங்களை 72 இடங்களில் தொடங்கியிருக்கிறார்கள். இதன்
மூலம் விவசாயிகளுக்கு பல்வேறுபட்ட விவசாய நவீன
கருவிகளை 50 சதவீத மானியத்தில் கொடுக்கிறார்கள்.
மைய அரசு 25 சதவீதம் மானியமும் மாநில அரசு 25
சதவீதம் மானியமும் கொடுத்து மீதியுள்ள 50 சதவீதத்தை
பொறியியல் துறையில் கொடுக்கிறார்கள். இந்தத் துறையின்
மூலம் இயங்குகிற 72 மையங்களைப்போல் என்னுடைய
தொகுதியிலும் சில மையங்களைத் திறப்பதற்கு அரசு
முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சீ. சிவப்பிரகாசம்] [1985 ஜூன் 4

வேளாண்மையை பொறுத்தவரையில் இன்று நவீன உரங்கள் வருகிற காரணத்தால் புதிய ரக உரங்களைப் போட்டு பயிர் சாகுபடி செய்கிறார்கள். அதனால் மண் வளம் பாதிக்கப்படுகிறது. வேளாண்மைத்துறை இயற்கை எருக்களை முன்பு உற்பத்தி செய்ததுபோல இப்போது அதிகமாக உற்பத்தி செய்யவில்லை. இயற்கை உரங்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். நல்ல பலன் தரும் மரவகைகளை உற்பத்தி செய்து அதிகமாக தழை உரங்களை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவும், இந்த முறையை கற்றுக்கொடுக்கவும் அரசு முன்வர வேண்டும்.

குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்த மட்டில், தமிழ்நாட்டில் இந்த வாரியம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உள்ளாட்சித்துறையும் முனிசிபல் துறையும் சேர்ந்து இயங்கினால்தான் குடிநீர் வடிகால் வாரியம் சிறப் பாகச் செயல் படமுடியும். இந்தக் குடிநீர் வடிகால் வாரியம் ஒரு பணியைச் செய்து முடிக்கிற வாரியமாகத்தான் இருக்கிறது. செய்ய வேண்டிய பணியைப் பற்றி முடிவு எடுப்பது உள்ளாட்சித் துறையும் முனிசிபல் துறையும். எடுத்த முடிவைச் செயல்படுத்துவது குடிநீர் வடிகால் வாரியம். அதனால் இந்த வாரியம் ஓரளவு மக்களுக்குப் பணிகளைச் செய்து கொண்டிருந்தாலும் சிறப்பாகச் செய்ய முடியாமல் இருக் கிறது.

எங்களுடைய பகுதியிலே காலப்பநாயக்கன்பட்டி குடி யிருப்புக்குக் குடிநீர் வழங்க அரசு அனுமதி வழங்கியும் இது வரையில் அந்தப் பணி நிறைவேற்றப்படாமல் காலதாமதப்பட் டிருக்கிறது. ஏனென்றால் அதற்கான டெக்னிகல் எஸ்டிமேட் இது வரையில் செயல்படுத்தி முடிக்கப்படாத காரணத்தால் அந்தத் திட்டத்தை எவ்வளவோ கஷ்டப்பட்டு வாங்கியும் இதுவரை யில் அது செயல் படுத்தப்படவில்லை என்ற காரணத்தால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் மன நிறைவு அடைய முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே அதைச் செயல் படுத்தி அதற்குப் பக்கத்தில் இருக்கின்ற துத்திகுளத்தையும் அந்தத் திட்டத்தில் இணைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டத்தில் அது எடுத்துக்கொள்ளப் பட்டு அரசின் அனுமதிக்காக அந்தக் கோப்பு வந்திருக்கிறது. அந்தக் கோப்புக்கும் அரசு அனுமதி கொடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தில் முதல் கட்டமாக நிறைவேற்றப் பட்ட பகுதிகளில் ஒருசில பணிகள் பவர் பம்ப் மூலமாக நிறை வேற்றப்பட்டிருந்தாலும் அந்தப் பணிகள் சிறப்பாக இல்லை.



1985 ஜூன் 4] [திரு. சீ. சிவப்பிரகாசம்]

அந்தப் பவர் பம்ப் வைக்கப்பட்டிருக்கின்ற இடத்திற்குப் பக்கத்தில் விவசாயப் பெருமக்கள் இருப்பதாலோ என்னவோ ஒருசில பவர் பம்ப்கள் ஒருநாள் தான் இயக்கக்கூடியதாக இருக் கின்றது. ஒரு மாதம் இயங்கக்கூடிய அளவில் கூட பெரும் பாலான பவர் பம்ப்கள் இல்லை. எனவே அதனை யார் கோளாறு செய்கிறார்கள் என்பது பார்த்து உரியவர்கள் மீது நடவடிக்கை எடுத்து பொதுமக்களுக்கு நிரந்தரமாகக் குடிநீர் கொடுக்கக்கூடிய வசதி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதிகளைப் பொறுத்தவரையில் புதுச்சத் திரம் ஒன்றியம் மிகுந்த வறட்சிப் பகுதியாக இருப்பதால் அந்தப் பகுதியில் ஒரு தனி குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி அதற்காக 60 இலட்சம், 70 இலட்சம் செலவு செய்து நிறைவேற்றி இருந்தாலும் அந்தப் பகுதி மக்களுக்கு நிறைவு ஏற்படாத நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. அதைப் போக்க ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை மக்களைப் பொறுத்தவரையில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 9 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைத் தயாரித்து குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசினுடைய உதவியைப் பெற்று அந்தத் திட்டத்தை விரைவாகச் செயல் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆழ்துளை குழாய்க் கிணறு அமைப்பதைப் பொறுத் தவரையில் இன்று வரையில் குடிநீர் வடிகால் வாரியமும், உள்ளாட்சித் துறையும் சேர்ந்து செயல்படுகின்றன. அவ்வாறு சேர்ந்து செயல்பட்டாலும் அந்தப் பணியை அவர்களிடத்தி லிருந்து இன்று குடிநீர் வடிகால் வாரியம் பெற்றிருக்கின்றது. அவ்வாறு அமைகின்ற பணிகளைப் பொறுத்தவரையில் அவற்றை இவர்களாகவே உருவாக்கிக் கொடுத்து சிறந்த பிட்டர்களைக் கொண்டு நல்ல நிலைமையில் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வறட்சிக் காலத்திலே போடப்படுகின்ற குடி நீர் ஆழ் குழாய் கிணறுகளைப் பொறுத்தவரையில் பெய் [illegible] என்ற காரணத்தால் மிக மோசமான நிலைமை பல்வேறிடங்களில் நிலவுகின்றது. எனவே உடனடி யாக அந்தப் பகுதிகளை மாற்றி கிணறு அமைக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் [illegible] வெள்ளாளபட்டி, இராசி [illegible] விளாங்காடு வாழவந்திக் [illegible] சாலை, [illegible]

கோம்பையில் நாடார் தெரு, துத்திக்குளம், தேவேந்திரன்
தெரு, வடுகப்பட்டி அருந்ததியர் தெரு, புதுச்சத்திரம்-
ஒன்றியத்தில் ஏளூர்-அருத்ததியர் தெரு, எஸ்-உடுப்பம்
செங்கோடம்பிள்ளை அருந்ததியர் தெரு, கதிராநல்லூர்
குடிநீர்த் திட்டம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் தன்
னிறைவுத் திட்டத்தில் எடுக்கப்பட்டு நீண்டகாலமாக நிலுவை
யில் இருக்கின்றன. எனவே அதைச் சிறப்பாகச் செயல்
படுத்துகின்ற வகையில் தன்னிறைவுத் திட்டத்தில் மூன்றாம்
திட்டத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

உலக வங்கித் திட்டத்தில் இரண்டு மாவட்டங்கள்
மட்டும்தான் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அத்தோடு
சேலம் மாவட்டத்தையும் எடுத்துக் கொண்டு எங்கள் மாவட்
டத்தில் உள்ள பல்வேறு குடிநீர் பற்றாக்குறை உள்ள
பகுதிகளையும் சேர்த்துக்கொண்டு, அதனை அமல்படுத்த
வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த
மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களுக்கும் புரட்சித் தலைவர்
அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சருக்கும் நன்றி கூறி
விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவா
அவர்களே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்திருக்கும், விவசாயம், குடி தண்ணீர் ஆகிய இந்த
இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீதும், நான் சார்ந்திருக்கிற
காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரிரு
கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

(பிற்பகல் 12-50)

சமீபத்திலே ஏற்பட்ட வறட்சியின் காரணமாக அதுவும் சாத்
தான் குளம் தாலுக்கா மிகவும் பின் தங்கிய பகுதியாக இருப்பதன்
காரணமாக, அந்த வறட்சியின் கடுமை அங்கு மிகவும் பாதித்து
இருக்கிறது. எனவே சாத்தான்குளம் தாலுக்காவை வறட்சிப்
பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.

மேலும் விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு
வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையில் பேசுகையில், விவ
சாயப் பகுதியாக இருக்கிற என்னுடைய தொகுதியில், கருங்
குளம் ஒன்றியத்தைப் பொறுத்தவரை, அங்கு ஒரு பெரிய ஏரி,
பாசன ஏரியாக இருந்து வருகிறது. ஆனால் அந்தப் பாசன ஏரி
தூர்ந்து உள்ளதாகச் சொல்லப்படுகிறது. அதன் காரணமாக
கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக அந்தக் கருங்குளம் பகுதியில்
பாசன வசதி இல்லாமல் இருப்பதால், அந்த ஏரியை தூர்
எடுத்து ஆழப்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்





கிறேன். அதேபோல கடம்பா பாசனம் என்று ஒன்று. 28
ஆயிரம் ஏக்கர் கொண்ட பாசனமாக அமைந்திருக்கிற அந்தக்
குளம், வெள்ளம் வந்த போது கிட்டத்தட்ட 7 அடி தூர்ந்து
உள்ளதாக அங்குள்ள பெரியவர்கள் கூறுகிறார்கள். எனவே
அந்தக் கடம்பா பாசனக் குளத்தையும் ஆழப்படுத்த வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மணிமுத்தாறு பாசனம். இந்த மணிமுத்தாறு கால்
வாயை வெட்டுவதற்காக, எங்கள் பகுதி மக்கள், விவசாயப்
பெருங்குடி மக்கள் தாங்களாகவே டொனேஷன் செய்து உதவி
செய்து, இந்த கால்வாய் கட்டப்பட்டது. அதில் 4 வகையான
பாசனம் அடங்கியுள்ளது. எனது தொகுதியில் 3-வது பாசனமும்,
4-வது பாசனமும் வகுக்கப்பட்டு அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர்
வந்து கொண்டிருக்கிறது. மூன்றாவது பாசனம் என்று சொல்
லக்கூடிய இடத்திலே வரக்கூடிய கால்வாய் மூலக்கரைப்பட்டிக்கு
கிழக்கே கிட்டத்தட்ட 7 மைல் நீள அளவைக் கொண்டு வெட்டப்
பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கால்வாய் மிகவும் குறுகிய
கால்வாயாக இருக்கிற காரணத்தாலே, அங்கே தண்ணீர் வரக்
கூடிய நேரத்திலே 440 கியூசெக்ஸ் தண்ணீர்தான் வந்துக்
கொண்டிருக்கிறது. அதை 800 கியூசெக்ஸ் தண்ணீர் கொண்டு
வரக்கூடிய அளவிற்கு அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, சிமெண்ட்
கான்கிரிட் போட்டுக் கொடுத்தால் பழனியப்பபுரம் வரையில்
இருக்கக் கூடிய ஊர்களுக்குப் பாசன வசதிகளைக் கொடுப்பதற்கு
ஒரு வாய்ப்பாக அமையும்.

அதேபோல 4. வது ரிட்ஸ். சாத்தான் குளத்திற்குத் தண்ணீர்
வரும் கருமேனி ஆற்றுவழிப் பாசனமாக இருந்து கொண்டிருக்
கிறது. அங்கே தண்ணீர் வரும்போது பெரும்பத்துக் குளம் என்று
ஒரு குளம் இருக்கிறது. அங்கேயிருக்கக்கூடிய கருமேனி ஆற்றிலே
குறுக்கே அணையைக் கட்டி மழைக் காலங்களில் இந்த பெரும்
பத்து குளத்தில் நீர் விழச் செய்து தேக்கச் செய்தால், அந்தப்
பகுதி மக்களுக்கு கோடை காலம் வரை தண்ணீர் கிடைப்பதற்கு
வாய்ப்பாக அமையும். ஆகவே, இந்த 4வது பாசனப் பகுதியான
பெரும்பத்து குளத்தில் தண்ணீர் வரும் வகையில் அணையைக்
கட்டிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஆளங்கால் வடிகால் திட்டம் என்று ஒன்று ஆரம்
பிக்கப்பட்டு நீண்ட நாட்களாக ஆய்விலே இருப்பதாகச் சொல்லு
கிறார்கள். என்னுடைய தொகுதியிலே கோட்டூரிலேயிருந்து
கரார்விளை வரை அந்தக் கால்வாயை ஏற்பாடு செய்து அகோ
பாலபுரம் என்ற கிராமப் பகுதியில் கடலுக்குச் செல்வதாகச்
சொல்லப்படுகிறது. அந்த ஆளங்கால் வடிகால் திட்டத்தை உட
னடியாக கோட்டூர் பகுதியிலிருந்து கடல் வரை கொண்டு செல்
வதை அமல் செய்தால் மழைக் காலங்களில் அந்தப் பகுதியில்
உள்ள விவசாயிகள், பாதிக்கப்படாத அளவுக்கு அது நல்ல வாய்ப்
பாக அமையும். ஆகவே அந்த ஆளங்கால் வடிகால் திட்டத்தை
உடனடியாக ஏற்பாடு செய்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். என். இராமசாமி] [1985 ஜூன் 4

அடுத்து, குடிதண்ணீர் வசதிக்காக 130 கோடி ரூபாய் ஒதுக்கப்
பட்டிருப்பதாக செய்தி இருக்கிறது. ஆனால் குடிதண்ணீர்
என்பது இப்பொழுது எல்லாக் கிராமத்திற்கும் தேவைப்படுகிறது.
சமீபத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய
தொகுதிக்கு வந்து, 2, 3 குடிநீர் திட்டத்தைத் திறந்து வைப்பதாக
இருந்தது. ஆனால் அவசர வேலை காரணமாக அவர்கள் வந்து
அந்த அடிக்கல் நாட்டு விழாவிலே கலந்துக் கொள்ளவில்லை.
இருந்தபோதிலும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்,
இந்த அடிக்கல் நாட்டு விழாவிலே கலந்துக் கொண்டார்கள்.
அதேபோல ஏற்கெனவே நாசரேத் என்னும் இடத்தில் 68 இலட்
சம் ரூபாய் செலவிலே நீண்ட நாட்களாக போடப்பட்டு வந்த
அந்தக் குடிநீர் திட்டம் இன்று முடிவடையும் தருவாயில் இருக்
கிறது. ஆற்றுக்குள்ளே போடப்பட்டிருக்கிற கிணறு சரியான முறை
யில் பராமரிக்கப்படவில்லை. அந்தத் திட்டம் முடிவாகும்
நிலையில் இருந்தும், அங்கே ஆறு மோட்டார்கள் வைத்து தண்
ணீர் எடுப்பதாகச் சொல்லப்பட்டு, இப்போது இரண்டு மோட்
டார்கள் தான் வேலை செய்கிறது. மீதியுள்ள நான்கு மோட்
டார்கள் உடனடியாக அதற்கு மாற்றம் செய்து நாசரேத் குடி
தண்ணீர் திட்டத்தை முடிவுசெய்து தரும்படி அன்புடன் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, ஒரு தொகுதியிலிருந்து இன்னொரு தொகுதிக்குத்
தண்ணீர் கொண்டு செல்வதாகச் சொல்லப்படுகிறது. என்னு
டைய தொகுதியிலிருந்து தண்ணீர் எடுத்து நாங்குநேரி பகுதிக்கு
இட்டப்புளி மொழி வழியாக கொண்டு செல்வதாகச் சொல்லப்
படுகிறது. ஆனால் தண்ணீர் எடுக்கக் கூடிய பகுதியில் தண்ணீர்
அதிகமாக இருந்தாலும், அந்தப் பகுதியில் இருக்கிற சுற்றுப்புற
கிராமங்களுக்கு தண்ணீர் கொடுத்துவிட்டு மற்றப் பகுதிக்குத்
தண்ணீர் கொண்டு போக வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அதேபோல, அடி பம்புகள் பொறுத்தவரையில் ஒவ்வொரு
யூனியனுக்கும் 250 அடி பம்புகள் வரையில் இருக்கின்றன. அடி
பம்புகள் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன. அவற்றை ரிப்பேர்
செய்வதற்கு அங்கே ஒருவர் தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்.
அவரால் எல்லா பழுதுகளையும் சரிவர பார்க்க முடியாமல்
இருந்து வருகிறது. ஆகவே ஒவ்வொரு யூனியனுக்கும் இரண்டு
நபர்களை கட்டாயமாக அடி பம்புகளை ரிப்பேர் செய்வதற்கு
நியமித்தால் தான் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய முடி
யும். ஆகவே அடி பம்புகளை ரிப்பேர் செய்வதற்கு இரண்டு
நபர்களை நியமிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்
டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் செய்துங்கநல்லூர் குடி தண்ணீர்
பஞ்சத்தால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.
அது ஒரு பெரிய நகரம். அந்த நகரத்தைச் சுற்றி பல கிராமங்கள்



1985 ஜூன் 4] [திரு. எஸ். என். இராமசாமி]

இருக்கின்றன. அந்த கிராமங்களுக்கு குடி தண்ணீர் கொடுக்க
வேண்டுமென்று பொது மக்கள் 1981 ஆம் ஆண்டில் ஒரு
போராட்டத்தை நடத்தினார்கள். நான் சென்று உடனே தண்
ணீர் வாங்கிக் கொடுக்கிறேன், போராட்டத்தை கைவிடுங்கள்
என்று சொன்னேன். மூன்று, நான்கு ஆண்டுகள் ஆகியும் குடி
தண்ணீர் பிரச்சினை இன்னும் தீர்த்து வைக்கப்படவில்லை. செய்
துங்க நல்லூர் பகுதியில், வசவப்பபுரம் என்ற ஊரில் தாமிர
பரணி ஆற்றுப் பகுதியில் குடிநீர் வாரியத்தின் மூலமாக ஒரு
பெரிய 'போர்' போடப் பெற்று, அதிலே நிறைய தண்ணீர் உள்ள
தாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே உடனடியாக அந்த இடத்
திலே பெரிய குடி தண்ணீர் திட்டத்தை ஏற்பாடு செய்து செய்
துங்கநல்லூர் மக்களுக்கு குடி தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மிகவும் வறட்சியான தொகுதியாக
இருப்பதால் தாமிரபரணி ஆற்றிலிருந்து ஒரு கூட்டுக் குடி தண்
ணீர் திட்டத்தை ஏற்பாடு செய்து பேய்குளம் வழியாக கொண்டு
வந்து அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு குடி தண்ணீர்
கொடுத்து விட்டு, சாத்தான்குளம் பகுதியைச் சேர்ந்த மக்களுக்
கும் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு,
வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. கே. டுக்கி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,
தமிழகத்தின் முதலமைச்சர் மரியாதைக்குரிய புரட்சித் தலைவர்
அவர்களால் கொண்டு வரப்பட்டு, நம்முடைய மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்
பட்டிருக்கும் வேளாண்மைத்துறை, குடிநீர் வடிகால் வாரிய
மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச்
சொல்ல விரும்புகிறேன்.

தமிழகம் அரிசி உற்பத்தியில் இந்தியாவிலேயே இரண்டாவது
இடத்திலும், கரும்பு உற்பத்தியில் முதல் இடத்திலும் இருப்பது
நாம் நிச்சயமாக பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும். அதே
நேரத்தில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வேளாண் துறை
யில் அந்தந்தப் பகுதியில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு
முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்பதை தனித்து கவனிக்க
வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கே
எல்லா பகுதிகளிலும் தோட்டக் கலை துறை தான் உண்டு.
தோட்டக் கலையை தனித் துறையாக ஆக்கிய பெருமை மாண்பு
மிகு புரட்சித் தலைவர் அவர்களையே சாரும். அப்படி தனித்
துறையாக ஆக்கிய பிறகுதான் அங்கே பல்வேறு திட்டங்கள்
செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இங்கே எனக்கு முன்னாலே
பேசிய மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் நீலகிரி

மாவட்டத்தைப் பற்றி ஆரம்பத்திலே பரிவுடனும், பாசத்துட
னும் பேசினார்கள். நானும் அதை வரவேற்று அமர்ந்திருந்
தேன். ஆனால் திடீரென்று அவருக்கு அந்த மாவட்டத்தின்
மீது பொறாமை உணர்ச்சி வந்து விட்டதென்றே கருதுகிறேன்.
தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் எல்லாம் வேளாண்மைத்
துறை உண்டு. சில பகுதிகளில் தோட்டக் கலைத் துறையும்
உண்டு.

(பிற்பகல் 1-00)

ஆகவே, நீலகிரி மாவட்டத்தில் மாத்திரம் முழுமையானத்
தோட்டக்கலைத்துறை என்று இருப்பதால், அதற்குரிய பணத்தை
நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும்தான் ஒதுக்க வேண்டும். மற்றும்
சில பகுதிகளில், கொல்லி மலை போன்ற பகுதிகளுக்கு ஒதுக்கிக்
கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்
தில் தோட்டக்கலைத் துறையை இன்னும் அதிக அளவில் வளர்க்க
வேண்டும் என்று நாங்கள் போராடிக்கொண்டிருக்கிறோம்.
அமைச்சர் அவர்களோடு. அங்கே உள்ளவர்கள் தேயிலையை
மட்டும் அதிக அளவில் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். இதைத்
தவிர, உருளைக்கிழங்கு, முட்டை கோஸ், மற்றும் உள்ள காய்
கறிகளை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். மற்ற ஊர்களைப்
போல் அல்லாமல், அங்கே நாங்கள் இரண்டுவிதமான கஷ்டங்
களை சந்தித்தாக வேண்டும். ஒன்று மழை அதிகமாக பெய்யும்
போது, விளைபொருட்கள் எல்லாம் இந்த மழையினால் அழிந்து
விடும். மழை குறைவாகப் பெய்தாலோ அவைகள் கெட்டு
விடும். இது மட்டுமல்லாமல், பனியினாலும், அங்கே பல கஷ்
டங்கள் ஏற்படுகின்றன. எனவே, இவைகளை எல்லாம் அனு
சரித்து உருளைக்கிழங்குகளை எந்த அளவிற்குக் குறைக்க முடி
யுமோ, அந்த அளவிற்குக் குறைத்து, வாட்டர் ஷேட் பகுதியில்
அதிகமான அளவிலே தேயிலை வளர்க்க வேண்டும்; அதற்கு
10 ஆண்டுக் காலத்திற்கு ஒரு திட்டத்தைத் தயாரித்து, அதற்கு
பல கோடி செலவழிக்க முன்வந்திருப்பதை நான் பாராட்டு
கிறேன்.

அதே நேரத்தில் இந்த நீலகிரி மாவட்டத்திற்கு என்று தனி
யாக ஒரு டைரக்டரேட் ஒன்றை ஏற்படுத்தி, இந்த தோட்டக்
கலைக்கு என்று உண்டாக்க வேண்டும் என்று நான் அமைச்சர்
அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தைப்
பொறுத்தவரையில், எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும்,
தோட்டக் கலைத்துறையையும், விவசாயத் துறையையும் தவிர
வேறு எந்தத் தொழிலும் கிடையாது. எனவே, அங்கே ஒரு
விவசாயக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன்.





அதுமாத்திரம் அல்ல. விவசாயத்தைப் பொறுத்தவரையில், சமீபத்தில் என்னுடைய தொகுதியான சோளூர் பிர்க்காவும், தூனேரி பிர்க்காவும் கடுமையான வறட்சியினால் பாதிக்கப்பட்டு அங்கேயுள்ள பயிர்கள், அது தேயிலையானாலும் சரி, அல்லது உருளைக்கிழங்காக இருந்தாலும் சரி, அல்லது முட்டைகோஸ் போன்ற எந்தப் பொருள்களாக இருந்தாலும் சரி, எந்த உற்பத்தியும் இல்லை என்ற அளவிற்கு கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அவைகளை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக, அந்த சோளூர் பிர்க்காவையும், துனேரி பிர்க்காவையும் அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கவரட்டி என்ற கிராமத்திலும், தாவணி என்ற கிராமத்திலும் கல் மழை பெய்திருக்கிறது. இதனால் பச்சைப் பயிர்களை அது அழித்து விட்டது. எனவே, அந்தப் பகுதியையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்க வேண்டும் என்றும், அவர்களுடைய கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் கூடலூர் பகுதியை எடுத்துக் கொண்டால், அங்கே இஞ்சி ஏராளமாக விளைகிறது. அதே போல் குச்சிக் கிழங்கு என்று சொல்லக் கூடிய மரவள்ளிக் கிழங்கு விளைகிறது. இவைகளில் இருந்து நாம் எக்ஸ்ட்ராக்ட் தயாரிக்கலாம். எனவே, அங்கே ஒரு தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன், மேலும், அந்தக் கிழங்குகளில் இருந்து வற்றல், சவ்வரிசி போன்ற பொருட்களையும் உற்பத்தி செய்யலாம். எனவே, ஆங்காங்கு சிறு தொழில்கள் ஏற்படுத்தவும் வாய்ப்பிருக்கிறது. இதற்கு முதலில் அக்கறை காட்டிய அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன், அதற்குப் பிறகு இந்தத் துறைக்கு வந்த அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீரைப் பொறுத்த வரையிலும், கூடலூர் பகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். கூடலூர் தாலுக்காவாக இருந்தாலும் சரி, அல்லது பந்தலூர் தாலுக்காவாக இருந்தாலும் சரி, அங்கு கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு உண்டு. அந்தத் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்கத்தான் உலக வங்கி உதவியுடன் ஜெலன் திட்டம் என்ற ஒரு திட்டம் கடந்த பல ஆண்டுக்காலமாகச் சொல்லி, இதற்கு இப்போது 1 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை நான் வரவேற்கிறேன். ஆனால், இந்த ஜெலன் திட்டம் உடனடியாக செயல்பட வேண்டும்; அப்படிச் செயல்பட்டால், பல ஆண்டுகாலமாக இருந்து வரும் தண்ணீர்த் தட்டுப்பாட்டைக் குறைக்க முடியும். எனவே அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. உச்சி] [1985 ஜூன் 4

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்போது குடிநீர் வாரியத்தால் பல கிணறுகள் தோண்டப்
பட்டு உள்ளன. ஆனால், அதற்கு மின்சார இணைப்பு தரப்
படவில்லை. கிணறுகள் தோண்டப்பட்டு இருந்தும், மக்களுக்கு
அந்தத் தண்ணீரை வினியோகிக்க முடியவில்லை, அதற்குக்
காரணம் அந்தப் பகுதியில் .உள்ள அதிகாரிகள் சற்று அக்கறை
காட்டாததுதான் என்பதை நான் அரசுக்கு எடுத்துச் சொல்லக்
கடமைப்பட்டு இருக்கிறேன். எனவே, நம்முடைய அமைச்சர்
அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்து பேசி, அதி
காரிகளை விரைவுபடுத்தி, இந்தப். பிரச்சினையைத் தீர்க்க வேண்
டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால்,
தேவாளா, பந்தலூர் போன்ற இடங்களில் ஏராளமான கிணறு
கள் தோண்டப்பட்டும், மின்சார இணைப்பு இல்லாததன் காரண
மாக, மக்களுக்குத் தண்ணீரை வினியோகிக்க முடியவில்லை.
எனவே, இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டும்
என்றால், அந்தப் பகுதியில் .உள்ள அதிகாரிகள் அதிக ஒத்
துழைப்பு தருகிற அளவிற்கு .செயல்பட வேண்டும். சமீபத்தில்
அந்த வாரியத்தினுடைய தலைவர் அவர்கள் வந்திருந்தபோது
நான் அவர்களுக்கு அந்த இடங்களை எல்லாம் சுட்டிக் காட்
டினேன், எனவே, அங்குள்ள குறைகளை உடனடியாகத்
தீர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எந்த
அளவிற்கு நீலகிரி மாவட்டம் வளமாக இருக்க வேண்டும் என்று
இந்த அரசு விரும்புகிறதோ, அந்த அளவிற்கு அங்கே உள்ள
செயல்முறைகளை துரிதப்படுத்த வேண்டும். இதைச் சொல்லும்
போது அங்கேயுள்ள தாமதங்களைச் சுட்டிக்காட்டாமல் இருக்க
முடியவில்லை. அதில் நம்முடைய அதிகாரிகள் அதிகமான அள
வுக்கு அக்கறை காட்டும் அளவுக்கு நம்முடைய அமைச்சர் அவர்
கள் அவர்களை உசுப்பி விட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு
நீலகிரி மாவட்டத்தில் பல நீர்த்தேக்கங்களில் தண்ணீர்
தொடர்ந்து கிடைக்க ஆங்காங்கே வடிகால்களை கட்டித் தர
வேண்டும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறு
கிறேன், நன்றி. வணக்கம்.

*திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை
யின்மீது நானும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்
துள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தி பேச விரும்பு
கிறேன். நான் தஞ்சை மாவட்டம் குடந்தை தொகுதியைச்
சேர்ந்தவன். தஞ்சை மாவட்டம் தமிழக நெற்களஞ்சியம் என்று
கூறப்பட்டு வருகிறது. ஆனால், நான் கவர்னர் உரையில் குறிப்
பிட்டது போல் தஞ்சை மாவட்டம் ஒரு பஞ்சப் பிரதேசமாக
மாறி வருகிறது என்பதால் இப்போது இந்த வேளாண்மை,
மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விழை
கிறேன்.



1985 ஜூன் 4] [திரு. கி. கிருஷ்ணமூர்த்தி]

தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம் ஆகியவை காவேரி
யின் பாசனத்தை நம்பி இருக்கிறது. காவேரி டெல்ட்டா பிர
தேசம் ஆகும். அது கடந்த 1974ஆம் ஆண்டிலிருந்து கர்நாடக
அரசின் பிடிவாத போக்கினால் தங்களுக்கு கிடைக்க வேண்டிய
தண்ணீர் கிடைக்காமல் அதை நம்பிக்கொண்டு இருக்கிற தஞ்சை
மாவட்ட மக்கள் மிகவும் வாடுகிறார்கள். ஒரு துன்பமான,
துயரமான சூழ்நிலையில் நாங்கள் இருக்கிறோம். 1974ஆம்,
ஆண்டிலே தமிழகத்தை ஆண்டவர்கள் அலட்சியமாகவும், கவனக்
குறைவாக இருந்ததால் இன்று கூட 10 ஆண்டுகள் கழித்தும்
நாம் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறோம். இதற்கு
ஒரு பரிகாரமாக ஒரு தனி நபர் ஒரு விவசாயி சுப்ரீம் கோர்ட்டில்
ஒரு வழக்கை தொடர்ந்து இருக்கிறார். அந்த வழக்கில் தமிழக
அரசையும் கர்நாடக அரசையும், மத்திய அரசையும் பார்ட்டி
யாக சேர்த்து இருக்கிறார். தமிழக அரசு அந்த வழக்கை முறை
யாக பயன்படுத்தி தமிழகத்திற்கு நியாயமாக தேவையான அள
விற்கு தண்ணீர் கிடைக்க அந்த வழக்கில் நாம் பார்ட்டியாக
இருப்பதால் சட்ட பூர்வமாக, கோர்ட் மூலமாகவே தமிழகம்
தனக்கு நீதி பூர்வமாக நியாய பூர்வமாக கிடைக்க வேண்டிய
தண்ணீரைப் பெற்றுக் கொள்ளலாம். அதற்கு தமிழக அரசு
ஆவன செய்து தஞ்சை மாவட்ட விவசாயிகளை, தமிழகத்து
விவசாயிகளை காப்பாற்றுவதற்கு இந்த வேளாண்மைத் துறை
அமைச்சர் அவர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகள், தஞ்சை மாவட்ட விவசாயிகள் தற்
போது எதிர்நோக்கி உள்ள மிகப் பெரிய பிரச்சினை விவசாய
கூட்டுறவுக் கடன். முன்பு பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்
பினர் திரு. பி. என். இராமச்சந்திரன் அவர்கள் கூறியது போல்
ஆயிரம் ரூபாய் வாங்கிய விவசாயி 1,500 ரூபாய், 2,000 ரூபாய்
வட்டியாக கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள்.
அவர்கள் சொத்துக்களை ஜப்தி செய்யக்கூடிய சூழ்நிலையில்
இந்த நேரத்தில் அவர்கள் குறுவை எங்கே பயிரிடப் போகி
றார்கள். எப்படி பயிரிட அவர்களுக்கு ஊக்கம் எங்கேயிருந்து
வரும். விவசாயிகளை கடன்களிலிருந்து முதலில் மீட்க வேண்
டும். வட்டி, அபராத வட்டி, கூடுதல் வட்டி, மிஸிலெனியஸ்
எக்ஸ்பென்ஸஸ் என்று குறிப்பிடும் சில தவறான கணக்
கிலிருந்து அவர்களை விடுவித்து அவர்கள் நியாயமாக கொடுக்க
வேண்டிய அசலை மட்டும் பெற்றுக் கொண்டு விவசாயிகளை
ஊக்குவிக்க வேண்டும் என்றும் அதற்கு வேளாண்மைத் துறை
அமைச்சர் அவர்கள் ஆவன செய்து தஞ்சை மாவட்ட விவசாயி
களை காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 4, 5 ஆண்டுகளாகவே தஞ்சை மாவட்டம் புயல்,
வெள்ளம், வறட்சி என்று பலவிதமான இயற்கை சீற்றத்திற்கு
ஆளாகி விவசாயிகள் கஷ்டத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு
முறையான பாதுகாப்பு முறையான நீதி அளிக்கப்பட வேண்டும்.

[திரு. கி. கிருஷ்ணமூர்த்தி] [1985 ஜூன் 4

கடந்த ஆண்டு சம்பா தாளடிப் பயிர் மஞ்சள் நோயால் முற்றிலும்
பாதிக்கப்பட்டு விவசாயிகள் மிகவும் நஷ்டத்தோடு இந்த ஆண்டு
குறுவை பயிரிடுவதற்கு அனைத்தும் செய்து இருக்கிறார்கள்.
நியாயமாக கிடைக்க வேண்டிய நஷ்ட ஈட்டை வேளாண்மைத்
துறை அமைச்சர் அவர்கள் முயற்சி செய்து வாங்கித்தர வேண்
டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், 12-6-1985 அன்று மேட்டூரிலிருந்து நீர் திறந்து
விடப்படும் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் தற்போது
மேட்டூரிலிருந்து வருவதாக தெரியவில்லை. அதோடு கடந்த
ஆண்டு தஞ்சை மாவட்டத்திற்கு தனியாக விசேஷமாக ஒரு
நாளைக்கு 20 மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்பட்டது. அத
னால் அவர்கள் மிகவும் விரைவாக காவேரியில் இருந்து தண்ணீர்
வருவதற்கு முன்பாக குறுவை நாற்று விட்டு குறுவை பயிரிட
தயாராக இருந்தார்கள்.

(பிற்பகல் 1-10)

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்த ஆண்டு 6 மணிநேரம்தான்
மின்சாரம் கொடுக்கப்படுகிறது. மேட்டூர் தண்ணீரும் இல்லாத
சூழ்நிலையில் விவசாய அமைச்சர் அவர்கள் கவனித்து, ஒரு
நாளைக்கு 20 மணி நேரமாவது தண்ணீர் கிடைக்குமாறு மின்
சாரத் துறை அமைச்சர் மூலமாக ஏற்பாடு செய்ய வேண்டும்
என்று வேண்டிக்கொள்கிறேன். இல்லையேல், குறுவை நாற்று
நட முடியாது. மேட்டூரிலே தண்ணீர் வந்து விவசாயிகள் தண்
ணீரைப் பாய்ச்சி குறுவை நடுவதற்குள் குறுவை சீசனே போய்
விடும் அபாயகரமான சூழ்நிலை இருக்கிறது என்று அரசுக்கும்,
வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும்
கொண்டு வர விரும்புகிறேன்.

வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் மானியக்
கோரிக்கையில் குடிநீர் வடிகால் வாரியத்திற்கான கோரிக்கை
களைப் பார்க்கும் போது, தஞ்சை மாவட்டத்திற்கு நியாயமாகக்
கிடைக்க வேண்டிய பல சலுகைகள் கிடைக்கவில்லையோ என்று
அஞ்சுகிறேன். வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்
தஞ்சை மாவட்டத்திற்கு நீதி கிடைக்குமாறு செய்ய வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆடுதுறையிலே உள்ள விவசாய ஆராய்ச்சிப் பண்ணையை
ஒரு பல்கலைக் கழகமாக மாற்றி அதை விரிவுபடுத்த வேண்டும்.
சாக்கோட்டை விதைப் பண்ணையை பெரிய அளவில் விரிவு
படுத்த வேண்டும். தஞ்சை மாவட்டம் ஆழ்துளைக் கிணறு
களைப் பொறுத்தவரை மிகவும் கவனிக்கப்படாமல் உள்ளது.
தஞ்சை மாவட்டத்திலே உள்ள நிலத்தடி நீர் தாழ்ந்து போய்
விட்டதால், வாட்டர் லெவல் இறங்கிவிட்டதால், ஆழ்துளை
குழாய் கிணறுகள் போட வேண்டிய சூழ்நிலை தஞ்சை மாவட்
டத்திற்கு வந்து விட்டது. ராமநாதபுரம், மதுரைக்கு உள்ள



1985 ஜூன் 4] [திரு. கி. கிருஷ்ணமூர்த்தி]

சூழ்நிலை தஞ்சை மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில், முக்கிய
மாக கீழ்த்தஞ்சைமாவட்டத்தில் இருந்து வருகிறது. இதே நிலை
காவிரியில் தண்ணீர் இல்லாததால், குளம் குட்டைகள் இல்லாத
தால் மேலத்தஞ்சை, கும்பகோணம், திருப்பனந்தாள், திருவிடை
மருதூர் போன்ற பகுதிகளிலேயும் வாட்டர் லெவல் மிகவும்
இறங்கிவிட்டதால் ஆழ்துளைக் கிணறுகள் அதிகமாக நிறுவ
ஏற்பாடு செய்ய வேண்டும். கசிவு நீர்க் குட்டைகளும் அமைக்க
வேண்டும். வாட்டர் மானேஜ்மென்ட் என்று கூறுவதிலே, தண்
ணீரை முறையாகப் பயன்படுத்துவதிலே தமிழகம் ஓரளவுக்குப்
பின் தங்கியிருப்பதாக மற்ற இடங்களிலே கூறுகிறார்கள். காவிரி
யில் எப்போதோ வரும் ஒரு குறிப்பிட்ட தண்ணீரின் பெரும் பகுதி
கடலிலே கலக்க விட்டுவிடப்படுகிறது என்ற குற்றச்சாட்டு இருக்
கிறது. அதைப் போக்குவதற்கு, மினி டாம், நீர்த்
தேக்கங்களை ஏற்படுத்தித் தண்ணீரைச் சேமித்து விவசாயிகள்
உபயோகப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். தண்ணீரைத்
தேக்கி வைத்தால், மினி டேம் மூலமாக தேக்கி வைத்தால்
அவற்றிலிருந்து மின்சார உற்பத்தியும் செய்து நமக்கு இரண்டு
விதத்தில் பர்ப்பஸ் சர்வ் ஆகும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே
கூறிக்கொள்ளுகிறேன்.

டிரெயினேஜ் மற்றும் வாட்டர் சப்ளை ஸ்கீமிலே பார்த்தால்,
குடந்தை நகரம் மிகவும் தண்ணீர் இன்றி பாதிக்கப்பட்டுள்ளது.
அதற்கு நிலத்தடி தண்ணீரோ, ஆற்றுத் தண்ணீரோ இல்லாதது
காரணம் அல்ல. அரசு அதிகாரிகளிடையே ஒற்றுமை இல்லா
மல், கோ-ஆர்டினேஷன் இல்லாதது தான். குடந்தைக்கு 6 மணி
நேரம் கரண்ட் கொடுக்கிறார்கள். தண்ணீர் சப்ளை கொடுக்கக்
கூடிய குடிதாங்கிக்கு 6 மணி நேரம் கொடுக்கிறார்கள். இரண்டு
இடங்களுக்கும் ஒரே நேரத்தில் கரண்ட் கொடுத்தால், குடந்தை
யைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு குடிதண்ணீர் பஞ்சம் வராது.
ஆனால் அதிகாரிகள், இரண்டு இடங்களிலேயும் ஒரே நேரத்தில்
தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய, ஒத்துழைக்க மறுக்
கிறார்கள். அதை அரசு கவனித்து, குடிநீர் வடிகால் வாரியத்
தின் மூலமாக குடந்தைக்கு குறைந்தபட்சம் 14 மணி நேரம் தண்ணீர்
கிடைக்குமாறும், மின்சாரம் கிடைக்குமாறும், குடந்தையிலும்,
கொள்ளிடத்தில் குடிதாங்கியிலும் ஒரே நேரத்தில் பவர்
சப்ளை இருக்குமாறு ஏற்பாடு செய்தால், குடந்தையில் குடி
தண்ணீர் இன்றி அவதிப்படும் சூழ்நிலை இருக்காது. தமிழகத்
திலேயே மிக அதிகமாக குடிதண்ணீர் சப்ளை செய்த குடந்தை
நகரில் 3 மணி அல்லது 2 மணி நேரம்தான் தண்ணீர் சப்ளை
செய்யப்படுகிறது. இதற்கு இயற்கையோ அல்லது நம்முடைய
வாய்ப்புக் குறைவோ காரணம் அல்ல. அரசு அதிகாரிகள் ஒருவ
ரோடொருவர் ஒத்துழைக்க மறுப்பதுதான் காரணம். இப்படி
சில காரியங்களினால் இந்த அரசுக்கும், இந்த அரசின் கூட்டணி
யாக இருந்து, இந்த அரசு வர முயற்சித்த எங்களுக்கும்
அவப் பெயர் வருகிறது. அரசு அதிகாரிகளின்கவனக்

குறைவு, புரியாத போக்கு இவற்றை அமைச்சர் அவர்கள் தலையிட்டு குடந்தைக்கு தண்ணீர் கிடைக்குமாறு, முதலில் ஏற் பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கைப் பம்புகள் 100-க்கு 75 சதவீதம் வேலை செய்வதில்லை. மாவட்டக் கவுன்சில் கூட்டத்திலேயும் கூறியுள்ளோம். அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி களிலும் மோட்டார் இல்லை, கரண்ட் இல்லை, டவுன் பஞ்சா யத்து, மேஜர் பஞ்சாயத்திலே தண்ணீர் கிடைப்பதில்லை. இதற் கும் மாவட்ட கவுன்சிலிலே கூறி உள்ளோம்.

அதைப்பற்றி நாங்கள் மாவட்ட வளர்ச்சிக் கவுன்சிலில் கூறி யுள்ளோம். இன்றுவரை அவர்களுக்கு விடிவுகாலம் ஏற்பட வில்லை. நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதிலே தலையிட்டு கிராம மக்களுக்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து உதவிட வேண் டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கசிவு நீர்க்குட்டைகள் ஏற்படுத்தி, வீணாகின்ற தண்ணீரைச் சேமித்து விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

கும்பகோணத்தைப் பொறுத்தவரையில், பல சட்டமன்ற உறுப்பினர்களும் கூறியபடி, கொசுவுக்குப் பெயர்போனது, கொசு உற்பத்தியைத் தடுக்கவும், கொசுக்களிடமிருந்து மனிதர் களைக் காப்பாற்றவும் வியாதிகளிலிருந்து மனிதர்களைக் காப் பாற்றவும் கும்பகோணம் நகராட்சியும் அரசும் திட்டம் தீட்டி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தும் கொசுக்கள் முன்பு தோற்று விட்டன. காரணம் குடந்தையிலே 25 ஆண்டுக்காலத்திற்கு முன்பாக ஏற்பாடு செய்யப்பட்டு இன்றுவரை முடியாமல் இருக்கிற பாதாள சாக்கடைத் திட்டம்தான். அந்தத் திட்டத்திற்கு 5 கோடி ரூபாய் வேண்டுமென்று அந்த நகராட்சியிலிருந்து எழுதி யிருக்கிறார்கள். வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் பொறுப்பாக இருக்கிற காரணத் தினால் அவர்கள் தலையிட்டு அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய அறிக்கையைப் படிக்கிற போது பல மாவட்டங்களிலே பல்வேறு நகரங்களிலே பணிகளைச் செய்கிறது என்று தெரிகிறது. ஆனால் தஞ்சை மாவட்டத்திலே அது எந்தத் திட்டத்தையும் எடுத்துக்கொள்ளவில்லை. தஞ்சை மாவட்டத்திலே குடந்தை மிக முக்கியமான கேந்திரமான இட மாகும். அந்தப் பகுதியிலே பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து தஞ்சாவூர் மாவட்டத்திலே உள்ள அனைத்துக் கிரா மங்களும் என்று ஒட்டுமொத்தமாக நான் சொல்லவில்லை, 75 சதவீதம் கிராமங்களிலே கைபம்புகள் வேலை செய்யவில்லை. அவைகள் வேலை செய்வதற்காகப் பிடுங்கிப் போடப்பட்டன. போட்டது போட்டபடியே இருக்கின்றன. அவைகளை உடனடி யாகப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்குப் பேசுவதற்குத் தந்த வாய்ப்பிற்காக நான் நன்றியைத் கூறி நாங்கள் ஆளுங் கட்சியினுடைய கூட்டணித் தோழர்கள். உங்களுடைய கஷ்டநஷ்டங்களில் எங்களுக்கும் பங்கு உண்டு, உங்களுடைய நல்ல பெயரில் எங்களுக்கும் பங்கு உண்டு. குறைகள் இருந்தால் உங்களைக் குறைகூறும் மக்களை எங்களை யும் தான் குறைசொல்வார்கள். இந்த அரசுக்கு அவப்பெயர் ஏற்படக்கூடாது குறைகளைச் சொல்கிறபோது நாங்கள் இந்த அரசையோ அமைச்சரையோ தனிப்பட்ட முறையிலே எதையும் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்து நாங்கள் கூறுவது எல்லாம் உங்களுடைய நன்மைக்காகத்தான், நம்முடைய நன்மைக்காகத் தான் என்பதைத் தெரிவித்து உங்கள் மீது குறைகூறுவதாக எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொண்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேர மாண்புமிகு வைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, குடிநீர் வழங்கல் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வழங்கியிருக்கிற பண்பும் பயனுமிக்க கருத்துக்களுக்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் வழங்கியிருக்கிற ஆலோசனைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டி யிருக்கிற குறைபாடுகள் நீக்கப்படுவதற்கு முறையான நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

வேளாண்மையைப் பொறுத்த அளவில் அதிகமான விளைச் சல் கிடைக்கவேண்டும் என்பது மட்டுமல்ல, அதனை உற்பத்தி செய்து தரக்கூடிய விவசாயப் பெருமக்கள் நல்ல வருவாய் பெற வேண்டும் நல்ல வாழ்க்கையைப் பெறவேண்டும் என்பதுதான் இந்தத் துறையின் அடிப்படையான நோக்கம் என்பதை நான் [illegible] விரும்புகிறேன். [illegible] உள்ளத்திலே புயல் [illegible] முடியாது என்று பேரறிஞர் இருந்தால் வயலில் [illegible] கூறுவார்கள். வயலில் இருக்கிற அண்ணா அவர்கள் அடிக்கடி [illegible] வாழ்விலேயும் நிலவவேண்டுமென்ற பசுமை அவர்களுடைய [illegible] வேளாண் விளைவிலே இந்தத் [illegible] இருக்கிறது என்பதைப் பெருமக்களுக்கு வழங்கி [illegible] விரும்புகிறேன். நான் தெரிவிக்க

[டாக்டர் கா. காளிமுத்து] [1985 ஜூன் 4

கடந்த ஆண்டைப் பொறுத்தவரையில் நாம் எதிர்பார்த்த
அளவிற்கு உரிய தருணத்திலே தென்மேற்குப் பருவ மழை
பெய்யவில்லை; வடகிழக்குப் பருவ மழை 33 விழுக்காடு
குறைவாகத்தான் பெய்தது; மேலும், துங்ரோ வைரஸ்,
மஞ்சள் நோய் போன்ற நோய்த் தாக்குதல்கள் பரவலாகத்
தமிழகத்திலே காணப்பட்டது. என்றாலும் இந்த இயற்கை
சோதனைகளை எதிர்த்துச் சாதனை செய்திருக்கின்ற ஆண்டாகக்
கடந்த ஆண்டு இருந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

நெல்லைப் பொறுத்த அளவிலேயும் சரி, பயிறு, பருத்தி,
எண்ணெய் வித்துக்கள் இவைகளைப் பொறுத்த அளவிலேயும்
சரி, நல்ல உற்பத்தியை வேளாண் பெருமக்கள் வழங்கியிருக்
கிறார்கள்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் எடுத்துக் தெரிவித்ததைப்
போல, கரும்பு உற்பத்தியிலே. இந்தியாவிலேயே முதலிடம்
தமிழகத்திற்குக் கிடைத்தது இருக்கிறது. இந்தியாவிலே மட்டும்
அல்ல, உலகத்திலேயே கரும்பு உற்பத்தியிலே நாம் முதலிடத்தை
பெற்றிருக்கிறோம் என்பதையும், அதைப்போல ராகி உற்பத்தி
லேயும்கூட நாம் முதலிடத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதை
யும், நெல் உற்பத்தியிலே இரண்டாவது இடத்தைப் பெற்றி
ருக்கிறோம் என்பதையும் நான் இங்கே தெரிவிக்கின்றபொழுது
இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகம் வேளாண்மையிலே
ஒரு முன்னணி மாநிலமாகவே விளங்குகிறது என்பதைத் தன்
னடக்கத்தோடும், பணிவோடும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புகு பேரவைத் தலைவர் தலைமை)

வேளாண்மைத் துறைக்கும் வேளாண் பெருமக்களுக்கும்
இடையிலே தூதுவர்களாக விளங்குகின்ற வகையிலேதான்
பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தினுடைய அலுவலர்கள்
இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களால் ஏற்படும் பலன்கள்
நேரடியாக நமக்குத் தெரியவில்லை என்றாலும்கூட, வேளாண்
பெருமக்கள் விளைவித்துத் தருகின்ற அந்த உற்பத்தியைக் காணு
கின்றபொழுது அந்தப் பயன்களை நாம் புரிந்து கொள்ள
முடிகிறது. உலக வங்கியின் சார்பாக இங்கே வந்து பார்த்த
நிபுணர்கள் நம்முடைய வேளாண் துறை செயலாளருக்கு எழுதிய
கடிதத்தில், இந்தியாவிலே இந்தத் திட்டத்தைத் தமிழகம்
சிறப்பாகச் செயல்படுத்துகிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்
கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

ஹெக்டேருக்கு ஐந்து டன் விளைவிக்க வேண்டுமென்பதை
நாம் இலக்காக நிர்ணயித்திருந்தோம். சிலயிடங்களிலே ஹெக்
டேருக்கு ஆறு டன், பத்து டன் என்கின்ற அளவிற்குக்கூட விளை
வித்துக் காட்டியிருக்கிறார்கள். தஞ்சை திருச்சி மாவட்டப் பகுதி



1985 ஜூன் 4] [டாக்டர் கா. காளிமுத்து]

களிலே. அந்த அளவிற்கு கூட நாம் மகிழ்ச்சியடையத்தக்க அள
விற்கு விளைச்சல் கிடைத்திருக்கிறது. என்றாலும், பரவலாகப்
பார்க்கின்றபொழுது ஹெக்டேருக்கு ஐந்து டன் என்பதை
28 விழுக்காடு நிலப்பரப்பிலேதான் எய்திருக்கிறோம் என்பதை
யும், இந்த ஆண்டு 50 விழுக்காடு நிலப்பரப்பிலே அதனைப்
பெற்றாக வேண்டும் என்ற வகையிலேயும் நாம் முயற்சிகளைச்
செய்யவிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன்
இங்கே மாண்புமிகு பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை
அவர்கள் பேசுகின்றபொழுது பயிர்ப் பச்சைகளைப்
களுக்காக, நோய்த் தாக்குதலிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கின்ற
பாதுகாக்கின்ற நடவடிக்கைகளுக்காக குறிப்பிட்டார்கள். எப்பொழு
பணம் குறைவாக இருக்கிறது என்று வரும், ஆகவே அவைகளை
துமே இன்னின்ன நோய்கள் எல்லாம் வேண்டும், அதற்காக
எதிர்க்க நாம் நடவடிக்கை எடுக்க முதலிலேயே திட்ட
இவ்வளவு பணம் செலவாகும் என்று நாம் வருவதை நாம்
மிடுவது இல்லை. அப்படிப்பட்ட நோய்கள் விரும்புகிறோம்.
விரும்பவில்லை; வரக் கூடாது என்றுதான் அதை எதிர்க்கின்ற
ஆனால் அப்படி வரும்பொழுது முழுமையாக நிச்சய
அளவிற்கு நாம் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை, ரூபாய்தான்
மாக எடுப்போம். கடந்த ஆண்டிலேகூட 4 கோடி எதிர்பாராமல்
அதற்காக ஒதுக்கீடு செய்திருந்தது என்றாலும், வேண்டுமென்ற
ஏற்பட்ட இந்த நோய்த்தாக்குதலைச் சமாளிக்க செலவிட்டிருக்கிறது
வகையில் 8 கோடி ரூபாய் அதற்காக அரசு ஆகவே, வரக்கூடிய
என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். வருமேயானால் அதை
காலத்திலே, அப்படிப்பட்ட நிலைமைகள் பணத்தை அரசு
எதிர்த்துச் சமாளிப்பதற்கு, உரிய அளவிற்குப் தெரிவித்துக்கொள்ள
செலவிடும் என்பதை நான் நம்பிக்கையோடு
விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற பெருமக்கள் இன்றைக்
இருக்கின்ற சூழ்நிலையில் குறுவை சாகுபடி செய்வார்களா என்ற
அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்
திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள்.
அவர்களுக்கு உற்சாகப்படுத்தும் வகையில், கடந்த ஆண்டு
தந்ததைப்போலவே இருபது மணி நேரத்திற்கு மின்சாரம் தரு
கின்ற அளவிற்கு ஏற்பாடு இந்த ஆண்டும் செய்யப்படும் என்
பதை நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதை
மின்சார அமைச்சரோடு கலந்து உரிய வகையில் அரசு அறிவிப்பு
தரும்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உரிய விலை
கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைத்தால்தான் விவசாயிகள்
மகிழ்ச்சி அடைவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அப்படி
விலைகளை நிர்ணயிக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை
என்பதையும், மைய அரசினிடத்தில் அந்த அதிகாரம் இருக்கிறது

[டாக்டர் கா. காளிமுத்து] [1985 ஜூன் 4

நெல்லை, குமரி மாவட்டங்களுக்கு மேற்கு தொடர்ச்சி மேம்பாட்டு அடிப்படையில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது.

நம்முடைய தோட்டக் கலைத் துறையின் சார்பாக ரூ. 50 இலட்சம் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே அவர்கள் குறை காண்பதற்கு எதுவும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களே, இங்கே சொன்னதைப் போல அவர்கள் மகிழக்கூடிய அளவுக்கு ஒரு மணமுள்ள செய்தியாக தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் சார்பாக மல்லிகைப் பூ வாசனைத் தைலம் எடுக்கிற அந்தத் தொழிற்சாலை அவருடைய பகுதியிலே, அவருடைய வட்டாரத்திலே நிறுவப்பட இருக்கிறது. என்பதை அவர்கள் இங்கே சுட்டிக்காட்டி நன்றி தெரிவித்தார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளிலே உரிய அளவுக்கு விவசாயப் பெருமக்கள் மகிழ்ச்சி அடையத்தக்க அளவுக்கு நிலைமையை நாம் மேற் கொள்வோம்.

தோட்டக் கலைத் துறையின் சார்பாக சிறுமலைப் பகுதியிலே 200 ஹெக்டேரிலே பழப் பண்ணை அமைக்கப்பட இருக்கிறது என்பதையும் கீழ் பழனிப் பகுதியில் 75 ஹெக்டேரில் ஆரஞ்சுப் பழப் பண்ணைத் தொடங்கப்பட இருக்கிறது என்பதையும் நீலகிரி மாவட்டத்தில் 800 ஹெக்டேரிலே பழங்கள், வாசனைப் பொருட்கள் உரிய ஒரு பண்ணைத் தொடங்கப்பட இருக்கிறது என்பதையும் மதுரை அடிவாரப் பகுதியில் 450 ஹெக்டேரில் தோட்டக் கலைப் பயிர்கள் வளர்க்கக்கூடிய திட்டம் மேற்கொள் ளப்பட இருக்கிறது என்பதையும் ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 3,000 குடும்பங்களுக்கு 50 விழுக்காடு மானிய விலையிலே இடுபொருள் வழங்கப்பட இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விதைச் சான்றுத் துறையைப் பொறுத்த அளவில் கடந்த 1984—85-லே 49,500 ஏக்கர் நாம் பதிவு செய்திருந்தோம். இந்த ஆண்டிலே 51,850 ஏக்கர் பதிவு செய்யப்படுகிறது என்ப தையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விதைச் சான்றுப் பணியாளர்கள் விதை உற்பத்தி செய்யக் கூடியவர்கள், ஆகியோருக்கு ஒரு பயிற்சி நிலையமும் தொடங்கப் பட இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

விற்பனைத் துறையைப் பொறுத்த அளவில் நம்முடைய தமிழகத்திலே 13 விற்பனைக் குழுக்கள், 271 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. பெரியார் [illegible]ட்டம், கோவை மாவட்டம் இரண்டும் ஒரே விற்பனைக் [illegible]ப்பாட்டின் கீழ் இருக்கிறது. இந்த ஆண்டு பெரியார் [illegible]னி விற்பனைக் குழுவைப் பெறத்தக்க அளவுக்கு [illegible]மேற்கொள்ளப்படும். அதிலே 21 ஒழுங்குமுறை [illegible] இணைக்கப்படும் என்பதையும் நான் இங்கே [illegible]கிறேன்.



1985 ஜூன் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1—30)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: 89 ஊரகக் கிட்டங்கிகள் கிராமப்புறங்களில் விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய விளைபொருள்களைச் சேமித்து வைக்கக்கூடிய கிட்டங்கிகள் கட்டப்பட்டு வருகின்றன. அவற்றிலே பல கிட்டங்கிகள் வேலை முடியும் நிலைமையில் இருக்கிறது. [illegible] பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இந்த ஆண்டு 15 ஊரகக் கிட்டங்கிகள் புதிதாகக் கட்டு வதற்கும் திட்டங்களை வகுத்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம் புறக்கணிக்கப்படுகிறதா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கவலை தெரிவித்தார்கள். நிச்சய மாக புறக்கணிக்கவில்லை. விரைவில் தஞ்சை மாவட்டம் காட்டுத் தோட்டப் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி தொடங் கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கிள்ளிகுளத்திலே இந்த ஆண்டிலே கல்லூரி தொடங்கப்பட்டிருக் கிறது. [illegible] பகுதியிலே கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது.

அதோடு விவசாயப் பெருமக்கள் இந்த விவசாயக் கல்வியைப் பெறத் தக்க அளவுக்கு, அவர்களும் முடிந்தால், பட்டம் பெறத்தக்க அளவுக்கு தொலைக்காட்சி கல்வித் திட்டம் என்ற திட்டத்தை நாம் பல்கலைக் கழகத்தில் இந்த ஆண்டு கொண்டு வர இருக்கிறோம்.

வேளாண்மை பல்கலைக் கழகம் 16 புதிய ரகங்களை இந்த ஆண்டிலே அறிமுகப்படுத்தியிருக்கிறது. அங்கு இருக்கிற ஆராய்ச் சியாளர்கள் திறம்பட செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன்.

பொறியியல் துறையைப் பொறுத்த வரையில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 578 இலட்சம் ரூபாய் [illegible] நீர்ப்பிடிப்புப் பகுதியில் மண் வளம், நீர் வளம் ஆகியப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட இருக்கிறது. காவிரி, பெரியாறு, [illegible] ஆகிய பகுதிகளில் 19,[illegible] ஹெக்டேரில் கடந்த ஆண்டில் வேளாண்மை மேம்பாட்டுப் பணி செய்யப்பட்டது. இந்த ஆண்டு [illegible],000 ஹெக்டேரில் மேம் பாட்டுப் பணிகளைச் செய்ய இருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு [illegible] [illegible] சோலைராஜ் [illegible] கவிழ்நீர் [illegible] பட்டதால் ஏற்பட்டிருக்கிற நல்ல பயன்களை [illegible] நன்றி கூறினார்கள். அதனால் [illegible] நீர் கூட [illegible] நிலைமை இருக்கிறது என்பதையும் அவர்கள் தெரிவித்தார்கள்.

[டாக்டர் கா. காளிமுத்து] [1985 ஜூன் 4

நெல்லை, குமரி மாவட்டங்களுக்கு மேற்கு தொடர்ச்சி மேம்பாட்டு அடிப்படையில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

நம்முடைய தோட்டக் கலைத் துறையின் சார்பாக ரூ. 50 இலட்சம் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே அவர்கள் குறை காண்பதற்கு எதுவும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களே, இங்கே சொன்னதைப் போல அவர்கள் மகிழக்கூடிய அளவுக்கு ஒரு மணமுள்ள செய்தியாக தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் சார்பாக மல்லிகைப் பூ வாசனைத் தைலம் எடுக்கிற அந்தத் தொழிற்சாலை அவருடைய பகுதியிலே, அவருடைய வட்டாரத்திலே நிறுவப்பட இருக்கிறது. என்பதை அவர்கள் இங்கே சுட்டிக்காட்டி நன்றி தெரிவித்தார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளிலே உரிய அளவுக்கு விவசாயப் பெருமக்கள் மகிழ்ச்சி அடையத்தக்க அளவுக்கு நிலைமையை நாம் மேற்கொள்வோம்.

தோட்டக் கலைத் துறையின் சார்பாக சிறுமலைப் பகுதியிலே 200 ஹெக்டேரிலே பழப் பண்ணை அமைக்கப்பட இருக்கிறது என்பதையும் கீழ் பழனிப் பகுதியில் 75 ஹெக்டேரில் ஆரஞ்சுப் பழப் பண்ணைத் தொடங்கப்பட இருக்கிறது என்பதையும் நீலகிரி மாவட்டத்தில் 800 ஹெக்டேரிலே பழங்கள், வாசனைப் பொருட்கள் உரிய ஒரு பண்ணைத் தொடங்கப்பட இருக்கிறது என்பதையும் மதுரை அடிவாரப் பகுதியில் 450 ஹெக்டேரில் தோட்டக் கலைப் பயிர்கள் வளர்க்கக்கூடிய திட்டம் மேற்கொள்ளப்பட இருக்கிறது என்பதையும் ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 3,000 குடும்பங்களுக்கு 50 விழுக்காடு மானிய விலையிலே இடுபொருள் வழங்கப்பட இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விதைச் சான்றுத் துறையைப் பொறுத்த அளவில் கடந்த 1984–85-லே 49,500 ஏக்கர் நாம் பதிவு செய்திருந்தோம். இந்த ஆண்டிலே 51,850 ஏக்கர் பதிவு செய்யப்படுகிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விதைச் சான்றுப் பணியாளர்கள் விதை உற்பத்தி செய்யக்கூடியவர்கள், ஆகியோருக்கு ஒரு பயிற்சி நிலையமும் தொடங்கப்பட இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விற்பனைத் துறையைப் பொறுத்த அளவில் நம்முடைய தமிழகத்திலே 13 விற்பனைக் குழுக்கள், 271 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. பெரியார் மாவட்டம், கோவை மாவட்டம் இரண்டும் ஒரே விற்பனைக் குழு [illegible]ப்பாட்டின் கீழ் இருக்கிறது. இந்த ஆண்டு பெரியார் மாவட்ட[illegible]னி விற்பனைக் குழுவைப் பெறத்தக்க அளவுக்கு நிலை[illegible] மேற்கொள்ளப்படும். அதிலே 21 ஒழுங்குமுறை விற்பனை[illegible]ள் இணைக்கப்படும் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட [illegible]புகிறேன்.



1985 ஜூன் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1—30)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: 89 ஊரகக் கிட்டங்கிகள் கிராமப்புறங்களில் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருட்களைச் சேமித்து வைக்கக்கூடிய கிட்டங்கிகள் [illegible] கட்டப்பட்டு வருகின்றன. அவற்றிலே பல கிட்டங்கிகள் வேலை முடியும் நிலைமையில் இருக்கிறது. [illegible] நடந்துகொண்டிருக்கின்றன.

இந்த ஆண்டு 15 ஊரகக் கிட்டங்கிகள் புதிதாகக் கட்டுவதற்கும் திட்டங்களை வகுத்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம் புறக்கணிக்கப்படுகிறதோ என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கவலை தெரிவித்தார்கள். நிச்சயமாக புறக்கணிக்கவில்லை. விரைவில் தஞ்சை மாவட்டம் காட்டுத் தோட்டப் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கிள்ளிகுளத்திலே இந்த ஆண்டிலே கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. [illegible] பகுதியிலே [illegible] கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது.

அதோடு விவசாயப் பெருமக்கள் இந்த விவசாயக் கல்வியைப் பெறத்தக்க அளவுக்கு, அவர்களும் முடிந்தால், பட்டம் பெறத்தக்க அளவுக்கு தொலைக்காட்சி கல்வித் திட்டம் என்ற திட்டத்தை நாம் பல்கலைக் கழகத்தின் இந்த ஆண்டு கொண்டுவர இருக்கிறோம்.

வேளாண்மை பல்கலைக் கழகம் 16 புதிய ரகங்களை இந்த ஆண்டிலே அறிமுகப்படுத்தியிருக்கிறது. அங்கே இருக்கின்ற ஆராய்ச்சியாளர்கள் திறம்பட செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன்.

பொறியியல் துறையைப் பொறுத்த வரையில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 318 இலட்சம் ரூபாய் [illegible] நீர்ப்பிடிப்புப் பகுதியில் மண் வளம், நீர் வளம் ஆகிய பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட இருக்கிறது. [illegible], பெரியாறு, சிறுப்பவானி ஆகிய பகுதிகளில் [illegible] ஹெக்டேரில் கடந்த ஆண்டில் வேளாண்மை மேம்பாட்டுப் பணி செய்யப்பட்டது. இந்த ஆண்டு [illegible] ஹெக்டேரில் மேம்பாட்டுப் பணிகளைச் செய்ய இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு [illegible] சொன்னதாக [illegible] சோலையாறு [illegible] கசிவு நீர் குட்டைகள் அமைக்கப்பட்டதால் ஏற்பட்டிருக்கின்ற நல்ல பயன்களை எடுத்துச் சொல்லி, நன்றி கூறினார்கள். அதனால் நிலத்தடி நீர் கூட உயரும் நிலைமை இருக்கிறது என்பதையும் அவர்கள் தெரிவித்தார்கள்.

கடந்த ஆண்டு 926 கசிவுநீர்க் குட்டைகளை 7.13 கோடி ரூபாய் செலவிலே நாம் நிறைவேற்றினோம். இந்த ஆண்டு இதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் ஆயிரம் கசிவு நீர்க் குட்டைகளையும் 500 தடுப்பணைகளையும் நாம் வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பாக கட்ட இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளுக்குக் கருவிகளை வழங்கக் கூடிய வகையிலும் அவர்களுக்கு பயிற்சி தரக்கூடிய வகையிலும் வேளாண்மைப் பொறியியல் பயிற்சி திருச்சியில் இருக்கிற அந்த மையத்தை விரிவுபடுத்த நாம் திட்டமிட்டிருக்கிறோம். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று 'என்கோபெட்' நிறுவனம் மூலமாக மதுரை, தஞ்சை மாவட்டங்களில் வேளாண் சிறப்பங்காடிகள் படிப்படியாக நிறைவேற்றப்பட இருக்கின்றன என்பதையும் எல்லாவகை தெளிப்பான்களையும் இலவசமாகப் பழுதுபார்க்கக் கூடிய வகையிலே திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேளாண்மை தொழில் கழகத்தின் சார்பாக சூரியகாந்தி விதைகளை 3,402 டன் கடந்த ஆண்டு கொள்முதல் செய்து, உற்பத்தி செய்யக்கூடிய பெருமக்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்தோம். இந்த ஆண்டு 6,000 மெ.டன் அளவுக்கு கொள்முதல் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குடிநீர் பிரச்சினையைப் பொறுத்த வரையில் இங்கே பல பிரச்சினைகளை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர், திருவண்ணாமலை சட்ட மன்ற உறுப்பினர் குடிநீர் தேவையை எடுத்துச் சொல்லி, அது கிடைக்காவிட்டால் நான் உண்ணாவிரதம் இருப்பேன் என்று தெரிவித்தார்கள். அவர்கள் தற்போது அவையிலே இல்லை என்றாலும் இங்கே இருக்கிற நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவருக்கு தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். 474 இலட்சம் ரூபாயில் திருவண்ணாமலை குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதையும், அதனால் அவர்கள் நிச்சயமாக உண்ணாவிரதம் இருக்கக்கூடிய அவசியம் வராது என்பதையும், அதைத் தடுத்து நிறுத்துகிற பொறுப்பை அந்தக் கட்சி ஏற்றுக்கொள்ளும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போன்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணிய ஆதித்தன் அவர்கள் திருச்செந்தூரைக் குறிப்பிட்டுச் சொல்லி, அங்கே குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். திருச்செந்தூர் நகருக்கு 60,60,000 ரூபாய் செலவில் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதையும் அதைப்போன்று புன்னக்காயலுக்கு





9,40,000 ரூபாய் செலவில் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே உருக்கமாகத் தெரிவித்து, வடலூர் வள்ளலார் பிறந்த ஊர், அந்த ஊருக்கு குடிநீர்த் திட்டம் இல்லையே என்று குறைபட்டார்கள். வள்ளலார் பிறந்த ஊருக்கு வள்ளல் ஒருவர் முதலமைச்சராக இருக்கிற காலத்திலே குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்காது என்பதையும் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அங்கே குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் போன்றவர்கள் இந்த குடிநீர்த் திட்டத்தினுடைய அமைப்புப் பணிகளில் இருக்கிற சில சிக்கல்களைச் சுட்டிக்காட்டினார்கள். அந்தச் சிக்கல்களை நாங்களும் உணர்ந்திருக்கிறோம். அதைப் பற்றி ஆய்வு செய்த பெர்க்குஷன் கம்பெனி அந்தப் பணிகளிலே சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று தெரிவித்திருக்கிறது.

இப்போது இந்த குடிநீர்வாரியத்தில் மூன்றுதலைமைப் பொறியாளர்கள் இருக்கிறார்கள். ஒருவர் நகர அமைப்புப்பணிகளைக் கவனிக்கிறார் , ஒருவர் ஊரக குடிநீர் பணியைக் கவனிக்கிறார், ஒருவர் திட்ட வரைவினைக் கவனிக்கிறார். இந்த மூன்று பேர்களும் சென்னையில் இருக்கிறார்கள். அலுவலகம் ஒரே இடத்தில்தான் இருக்கிறது. ஆனால் மூவருக்கும் இடையில் இருக்கிற பணி வெகு தொலைவில் இருப்பதைப்போல் முறையாக சில திட்டங்களை நிறைவேற்றுவதில் பெருத்த தாமதம் ஏற்படக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே இதை மாற்றியமைக்க அரசு கருதுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான்கு மண்டலங்களாகப் பிரித்து மதுரை, திருச்சி, கோவை, வேலூர் இவைகளைத் தலைமையிடங்களாகக் கொண்டு நான்கு தலைமைப் பொறியாளர்கள் இனிமேல் அந்தந்த இடங்களில் இருந்து பணிகளைச் செய்வார்கள் வேலைகள் துரிதமாக நடக்க அந்த ஏற்பாடு வகை செய்யும் என்பதையும் இவைகளை எல்லாம் மொத்தமாக ஒருங்கிணைத்து கவனிக்கக்கூடிய வகையில் இனிமேல் சூழ்நிலை உருவாகும் என்று இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1976–77 இல் தான் நாம் எத்தனை கிராமங்களுக்கு, குடியிருப்புகளுக்கு குடிதண்ணீர் தேவை இருக்கின்றது என்பதைக் கண்டறிந்து அந்த வகையிலே பெருந் தொகையைச் செலவிட்டோம். முதலமைச்சரின் தன்னிறைவுத் திட்டம் என்கிற திட்டத்தின் அடிப்படையில் ஏறத்தாழ 90 கோடி ரூபாயை நாம் குடிதண்ணீருக்காக மட்டும் செலவழித்து இருக்கிறோம். பல இடங்களில் அந்தத் தேவைகள் நிறைவேறி இருக்கின்றன. என்றாலும் ஒருமுறை நாம் ஒரு இடத்திற்குக் குடிதண்ணீர் வழங்கிவிட்டால் அது நிரந்தரமான ஏற்பாடாக

காலம், காலமாக இருக்கும் என்கிற நிச்சியம் இல்லை. நல்ல
தண்ணீராக இருப்பது உவர் நீராக மாறக்கூடும்; அல்லது கிடைத்
துக்கொண்டிருக்கிற குடிதண்ணீர் அதற்குப் பிறகு கிடைக்காமல்
வறண்டு போகக்கூடிய நிலைமை இருக்கக்கூடும். ஆகவே இவை
களை எல்லாம் கருத்தில் கொண்டு இவற்றை மறு ஆய்வு செய்ய
வேண்டும் என்ற வகையில் நாம் முடிவு செய்திருக்கிறோம் 50
ஆயிரம் குடியிருப்புக்கள் அப்படிப்பட்ட மறு ஆய்வு செய்யப்
பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

உலகவங்கி உதவியோடு கோவை மதுரை, சேலம் ஆகிய
குடிநீர்த் திட்டங்கள் இந்த ஆண்டிலேயிருந்து தொடங்கப்பட
இருக்கின்றன என்பதை நான் இந்தநேரத்தில் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் அதற்காக
கிருஷ்ணா நதி நீர்த்திட்டத்தைக் கொண்டுவருகிற முறையிலே
முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன. இதிலே நம்முடைய அரசின் சார்பாகவும்
பணிகள் துரிதமாக நடைபெறுகின்றன. ஆந்திரா அரசிலும்
கூட அவர்கள் இரண்டு தலைமைப் பொறியாளர்களை இதற்காக
நியமனம் செய்து, 11 கண்காணிப்பு பொறியாளர்களை நியமனம்
செய்து 48 நிர்வாகப் பொறியாளர்களை நியமனம் செய்து
அவர்களும் பணிகளை விரைவு படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.
7-வது ஐந்தாண்டுத்திட்ட காலத்திற்குள் இந்தத் திட்டத்தை
எப்படியும் முடிக்கவேண்டும் என்று நாம் முனைப்போடு செயல்
பட்டுக்கொண்டிருக்கிறோம். எவ்வப்போது தேவையோ அந்த
நேரத்தில் எல்லாம் நம்முடைய அலுவலர்கள் ஆந்திரா அரசு
அலுவலர்களோடு தொடர்பு கொண்டு தக்க பரிமாற்றத்தைச்
செய்துகொண்டிருக்கிறார்கள்.

எனவே இதிலே பணிகள் விரைவாக நடக்கும் என்ற நம்
பிக்கையை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
என்றாலும் ஒரு இடைக்கால ஏற்பாடு தேவை என்ற வகையில்
இந்த ஆண்டிலே 15 கோடி ரூபாய் செலவில் 12 மில்லியன்
காலன் தண்ணீர் சென்னை நகருக்குக் கிடைக்கக்கூடிய வகையில்
ஒரு ஏற்பாட்டை நாம் செய்திருக்கிறோம். சென்னையைச்
சுற்றியிருக்கக்கூடிய பகுதிகளில் நிலத்தடி நீர் ஏராளமாக கிடைக்
கின்றது என்பதை ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவனம் ஆராய்ந்து
நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த நிறுவனத்தினுடைய
கருத்தை ஏற்று நாம் பூண்டி, கொடுகலையாறு, வெள்ளப்படுகை
ஆகிய இடங்களிலிருந்து நிலத்தடி நீரை நாம் முழுமையாகப்
பயன்படுத்தக்கூடிய வகையில் இந்தத் திட்டம் இருக்கும். 12
மில்லியன் காலன் என்பது சென்னை மாநகர மக்கள்பயன்படுத்திக்
கொண்டிருக்கின்ற தண்ணீரை விட அதிகமாக இன்னும் 23
விழுக்காடு அவர்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நான்
தெரிவிக்க விரும்புகிறேன். இது 18, 19 மாதங்களுக்குள்ளாக





நிச்சியமாகக் கிடைக்கும் என்பதையும் அதற்கான ஆணைகள்
இன்னும் இரண்டொரு நாட்களில் பிறப்பிக்கப்பட இருக்கின்றன
என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

சென்னை மாநகரத்தினுடைய குடிதண்ணீர் வழங்கல் துறை
தொடங்கப் பட்டகாலத்திலிருந்த மக்கள் தொகை ஏறத்தாழ
31 இலட்சம். ஆனால் இன்றைக்கு மக்கள் தொகை வளர்ந்திருக்
கின்றது. வளர்ந்திருக்கின்ற மக்கள் தொகையினுடைய தேவை
யைக் கவனித்து அதை ஈடுசெய்யவேண்டும் என்ற வகையில்
முன்பு நான்கு பகுதி அலுவலகங்களாக இருந்ததை இப்போது
6 பகுதி அலுவலகங்களாக நாம் மாற்றுகிறோம் என்பதையும்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே சென்னைமாநகரத்
திற்கும் சரி, தமிழகத்திற்கும் சரி நாம் குடிதண்ணீர் தேவை
களை உரிய வகையில் கவனித்து ஏற்பாடு செய்வதற்கு விரை
வான நடவடிக்கைகள் மேற்கொள்வோம். அதற்கு சட்டப்
பேரவை உறுப்பினர்கள் ஒத்துழைக்கவேண்டும். ஆங்காங்கு
இருக்கின்ற சிக்கல்களை அவர்கள் எடுத்துக்கூறி அந்தச் சிக்கல்
களை உடனடியாகத் தீர்க்கத்தக்க அளவுக்கு மக்களுக்கும்
அரசுக்கும் இடையிலே பாலமாக அவர்கள் திகழவேண்டும்
என்று நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே வேளாண்மைத் துறையில் ஏற்பட்டிருக்
கின்ற இந்தச் சாதனைகளும் தனியாக இந்தத் துறைக்கு மட்டுமே
பெருமை அளிக்கக்கூடியதல்ல என்பதையும் வேளாண் பெரு
மக்களுக்கே பெருமை அளிக்கக்கூடியது என்பதையும் கடந்த
காலத்தில் நிலவிய கொதிப்பும், குமுறலும் அடங்கி இப்போது
நல்ல சூழ்நிலை நிலவுகிறது என்பதையும், ஆகவே அரசினுடைய
பெரும்பாலான துறைகள் விவசாயப் பெருமக்களைக் கவனிக்கக்
கூடிய துறைகளாக இருக்கின்றன என்பதையும், மின்சாரமா
னாலும், கூட்டுறவுத்துறையானாலும், உணவுத்துறையானாலும்
வேளாண் துறைக்குத்தான் அவை முதலிடம் தருகின்றன என்
பதையும் அந்த வகையில் ஒட்டுமொத்தமாக அரசினுடைய
ஒத்துழைப்பு பெற்ற வேளாண்மைத் துறையைப் பெருமைப்
படுத்தத் தக்க அளவிற்கு நல்ல சூழ்நிலை நிலவுகிறது என்
பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அனைத்து உறுப்பினர்களும் தெரிவித்திருக்கின்ற அனைத்து
கருத்துக்களுக்கும் நான் இந்த நேரத்தில் பதில் சொல்ல இயலா
விட்டாலும் அவைகளை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு
உரிய நடவடிக்கை அரசின் சார்பாக எடுப்பேன் என்பதை இந்த
நேரத்தில் தெரிவித்து வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கின்ற
உறுப்பினர் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக்
கோரிக்கைகளை முழுமனதாக, ஏகமானதாக நிறைவேற்றித்
தரவேண்டும் என்று நான் கேட்டு அமைகிறேன்.

[டாக்டர் கா. காளிமுத்து] [1985 ஜூன் 4

(பிற்பகல் 1-40)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவமழை பொய்த்த காரணத்தாலே தமிழகத் திலே பல்வேறு இடங்களிலே இன்றைக்கு கடுமையான குடி தண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது என்பதை நாம் அறி வோம். பொதுவாக கிராமங்களிலே ஊராட்சி ஒன்றியங்களிலே குடிதண்ணீருக்காக வேண்டி கை இறைப்பான்களை அதிகமாகப் போடவேண்டும் என்ற கோரிக்கை அதிகமாக வந்திருந்தாலும் கூட, அரசு தரப்பிலே வடிகால் வாரியத்தின் மூலமாக எடுத்துக் கொண்ட முயற்சி மிகக் கொஞ்சமாக இருக்கிறது. குடிதண்ணீர் தட்டுப்பாட்டின் நிலைமையை உணர்ந்து மிக அதிகமாக கை இறைப்பான்களை போடுவதற்கான முயற்சிகளை அரசு யுத்த கால அடிப்படையில் எடுக்குமா என்று அறியவிரும்பு கிறேன். இதேப் பிரச்னையை இதே மாமன்றத்திலே 2, 3 மாதங் களுக்கு முன்னாலே நான் சொன்னேன் வருகிற மாதங்களிலே குடிதண்ணீர் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கும். அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண் டிருந்தும் கூட இன்றைக்கு கிராமங்களுக்கு அந்த திட்டங்கள் போய்ச் சேரவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வளவு கோடி ரூபாயை அதற்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன் னாலும் கூட அந்த திட்டங்கள் கிராமங்களுக்குப் போய்ச் சேர வில்லை. ஆகவே உடனடியாக எங்கெங்கே தேவையிருக்கிறதோ அந்தந்த, கிராமங்களிலே கை இறைப்பான்களை அதிகமாக போடுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் உடனடியாக எடுத்துக் கொள்ளுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கடுமையான வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று கண்டு அறியப்பட்ட பகுதிகள், அரசு அலுவலர்கள் ஆங்காங்கே சென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு சேர்ந்துபேசி முடி வெடுத்து தெரிவித்திருக்க கூடிய பகுதிகள் என்ற வகையிலே 25 வட்டங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு அதிலே 660 ஆழ்துளை கிணறுகள் இப்போது நாம் போட்டிருக்கிறோம். அதிலே பாதிக்கு மேல் இப்போது முடிந்து விட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்தின் அடிப்படை யில் யுத்த கால அடிப்படையில் நாம் புதியதாக செய்ய இருக்கும் கை இறைப்பான்களை ஆழ் துளை கிணறுகளை போட வேண்டும் என்ற வகையிலே அரசு முயற்சிகளை செய்யலாம். ஆனால் இருக்கிற சூழ்நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு வறட்சி வருகிற நேரத்திலும் நாம் பெரும்பா லான அளவுக்கு ஆழ்துளை கிணறுகளைப் போடுகிறோம். அதற்குப் பிறகு அந்தக் கிணறுகள் என்ன ஆயிற்று என்று தெரியாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டு அடுத்த வறட்சி வருகிற காலத்திலே மறுபடியும் யுத்த கால அடிப்படையில் அதிகமான ஆழ்துளை கிணறுகளை போடுவது என்பது அரசாங்கத்திலுடைய



1985 ஜூன் 4] [டாக்டர் கா. காளிமுத்து]

நிதியை விரயம் செய்யக் கூடிய அளவுக்கு கொண்டு வந்துவிடும். ஆகவே நான் தெரிவிக்க விரும்புவது 68 ஆயிரம் ஆழ் துளை கிணறுகள் ஏற்கெனவே போடப்பட்டிருக்கின்றன. அதிலே இயங்க முடியாத சூழ்நிலை சில கிணறுகளுக்கு ஏற்பட்டு இருக் கலாம். அங்கே தண்ணீர் இல்லாமல் போய் இருக்கலாம். அல்லது பெரிய அளவிலே ஏதாவது பழுது ஏற்பட்டு இருக்கலாம் அப்படி ஏற்பட்டு இருந்தாலும் கூட எஞ்சிய கிணறுகளில் எந்த அளவுக்கு பயன்படுகின்றன, செயல்படுகின்றன, அதிலே ஏற்பட்டிருக்கிற பழுது என்ன என்பதை முழுமையாக கண்டு அறிந்து அவைகளை முழுமையாக இந்த நேரத்திலே பயன்படுத்தினாலேயே எவ்வளவு கடுமையான வறட்சி வந்தாலும் அந்த வறட்சியை சமாளிக்கலாம் என்கிற அளவிற்கு சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே அதையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு தேவைப் பட்டால் புதிய ஆழ் துளை கிணறுகளைப் போடுவதற்கும் உரிய வகையிலே அரசாங்கம் முயற்சி எடுக்கும். அந்த வகையிலே நாங்கள் செயல் திட்டத்தை வகுத்திருக்கிறோம், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் விவாதம் முடிந்தது. இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 20—வேளாண்மை.

திரு. சி. பழனிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,03,24,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல்

திரு. கே. எம். தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர் மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள் ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி

:" மானியக் கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,28,51,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

[1985 ஜூன் 4

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.**

திரு. கே. எம். தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,23,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (5–6–1985) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–43 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



சென்னை-600 008
136396

### (5) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்,

#### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

195. இராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் தீவில் காரைக்குடியிலுள்ள திருவாளர்கள் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தினரால் நடத்தப்படும் சிறிய சக்கரங்களைக் கொண்ட ஏழு பேருந்துகளுக்கு செலுத்தப்பட வேண்டிய வரியினை குறைப்பது குறித்து உள் துறையின் 25–3–1985 ஆம் நாளிட்ட 731 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

196. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 7–3–1985 ஆம் நாளிட்ட 229 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

197. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 24–8–1984 ஆம் நாளிட்ட 1875 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

198. வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் அறிவிக்கைகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 16–4–1985 ஆம் நாளிட்ட 333 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

#### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

80. தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு (நகலும், இணைப்பும்).

81. தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (நகலும், இணைப்பும்).

82. தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம்) சட்ட முன்வடிவு (நகலும், இணைப்பும்).